# அச்ச மாளிகை

## நுழையும் முன்:

## காட்சி-1

"**சா**ந்தினி."

"ம்?"

"ஏண்டா எதுவுமே பேசமாட்டேங்கிற?"

"பேசப்பிடிக்கல."

"ஏன்? எங்கிட்ட பேசுறது வெறுத்துப்போச்சா?"

உணர்வுகள் உறங்குவதில்லை ....



**சுபா**

"அப்படியில்லை பிரமோத். பேசாம மௌனமா இருக்கும்பொழுது மனசில இருக்கிறதெல்லாம் சொல்லிட்ட மாதிரி ஒரு சின்ன சந்தோஷம் வருது. இப்படி உங்க கையைப் பிடிச்சு அழுத்தினா போதும். எனக்குள்ள இருக்கிற எல்லாத்தையும் உங்ககிட்ட கொடுத்திட்ட மாதிரி இருக்கு. ஆனால் பேசினா எல்லாம் தரையில இறங்கி விழுந்துடுது."

"அப்படின்னா கல்யாணத்துக்கப்புறமும் மௌன விரதம்தான் இருக்கப்போகிறயாக்கும்?"

சிரித்தாள்.

"எவ்வளவோ புருஷங்க, பொண்டாட்டி பேசாம இருக்கமாட்டாளான்னுதான் ஏங்கிகிட்டு இருக்காங்க."

"நான் அப்படியில்லை. எனக்கு எப்பவும் உன் குரல் கேட்டுக்கிட்டே இருக்கணும். நீ பேசிகிட்டே இருக்கணும். தொண தொணன்னு பேசிகிட்டே இருக்கணும். எனக்கு வெறுப்பு வந்தாலும் பரவாயில்லே. நீ பேசிகிட்டே இருக்கணும்."

"ஏன் பிரமோத்? எதுக்காக இருக்கறவங்களெல்லாம் விட்டுட்டு என்னை பிடிச்சீங்க?"

"எம்மா நான் என்னவோ வலையெடுத்துக்கிட்டு மீன் பிடிக்கப்போறமாதிரி கடல்கடலா அலைஞ்சி உன்னை பிடிச்சி இழுத்துட்டு வந்த மாதிரி பேசுற. பார்த்தேன். பார்த்த உடனே பத்திகிச்சு."

"சரி. பார்த்த உடனே பத்திகிச்சு. ஆனா பழகின உடனே விட்டுப் போயிருக்கணுமில்ல பிரமோத்."

"எதுக்காக விட்டுப்போகணும்?"

"உங்கள மாதிரி நான் மென்மையானவள் இல்லை."

"யார் சொன்னது? இதோ பட்டு மாதிரிதானே இருக்கே."

"சீ... கையெடுங்க. நான் சொல்றது அந்த அர்த்தத்தில இல்லை."

"பின்னே?"



"எனக்கு சட்டு சட்டுன்னு கோபம் வரும்."

"அது உங்கப்பாக்கிட்டே இருந்து வந்துருக்கு."

"வேண்டாம். இதுக்குத்தான் நான் பேச மாட்டேன்னு சொன்னேன். பேசினா எப்படியும் அப்பாவப்பத்தி பேச்சு வந்துரும். என்னோட சந்தோஷமான மூடே கெட்டுப்போயிரும்."

"சாரிடா... சாரிடா... பேச வேண்டான்னா பேசலே."

"அப்படியில்லை பிரமோத். எனக்கு பயமா இருக்கு"

"என்ன பயம்?"

"நான் உங்கள சந்தோஷமா வச்சிருப்பேனான்னு பயமா இருக்கு."

"என்னடா? மூணு வருஷத்துக்கப்புறம் இந்த திடீர் பயம்."

"இல்லே. நீங்க ரொம்ப நல்லவரு. அம்மா, தங்கை, குடும்பம் அப்படின்னு சொல்லிட்டு பாசம் நிறைய வச்சிருக்கவரு. என்ன கல்யாணம் பண்ணிக்கிட்டீங்கன்னா உங்க வாழ்க்கை நிம்மதியா இருக்குமான்னு எனக்கு பயமா இருக்கு"

"உன்னைக் கல்யாணம் பண்ணிக்கலேன்னா என் வாழ்க்கை நிம்மதியா இருக்கும்னு நீ நினைக்கிறியா?"

"அப்படியில்லை பிரமோத். கிராமத்திலேர்ந்து உங்களுக்குன்னு ஏத்த ஒரு பொண்ண உங்க அம்மா செலக்ட் பண்ணி கொடுத்தாங்கன்னா... பொண்ணுடைய அப்பாவுக்கும் அம்மாவுக்கும் உங்கள பார்த்தா மஹா விஷ்ணு மாதிரி இருக்கும். மாப்பிள்ளையைக் கூப்பிட்டு வீட்டுக்கு விருந்து வச்சி மரியாதை பண்ணி உங்களை தெய்வம் மாதிரி கொண்டாடுவாங்க. ஆனா என்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டா?"

"ஏய்... அழ ஆரம்பிச்சிட்டியா?"

"வேற என்ன செய்றது? எனக்கு தெரியலையே."

"முட்டாள். நான் கல்யாணம் பண்ணிக்கப்போறது

உன்னையா? உங்க அப்பாவையா? நீ முரடா இருந்தா அது எனக்குப் பிடிக்கும். உங்க அப்பா முரடா இருந்தா அவரை எப்படி சமாளிக்கறதுன்னு யோசிக்கணும். உனக்கு உங்க அப்பாவைவிட்டு வர்றது கஷ்டமா இருந்துதுன்னா சொல்லு. நாம இப்படியே இருந்துடலாம்."

"அப்படி சொல்லல பிரமோத். எங்க அப்பாவைப்பத்தி உங்களுக்குத் தெரியாது?"

"தெரியும்டா... தெரியும். அரசியல்ல பெரிய செல்வாக்கு இருக்கற ஆளு. திமிர திமிர ஏதோ இருக்கிற ஆளு. அதெப்படி எ எங்கேயோ மெட்ராஸ்ல இருக்கற ஒரு பையன் சாஃப்ட் வேர் இன்ஜினியர். அவன் அங்கிருந்து வந்து என் பொண்ண கொத்திட்டு போய்ட்டதா? அப்படின்னு ஒரே கோபம். வேற எதுவுமே கிடையாது. அவர் பார்த்து எத்தனையோ குழந்தை களுக்கு பெயர் வச்சிருக்காரு. எத்தனையோ ரிப்பன வெட்டி கடைகளை திறந்து வச்சிருக்காரு. எத்தனையோ பேரோட வாழ்க்கையிலே விளக்கேத்தினதா நினைச்சிட்டிருக்காரு. அவருடைய சொந்த பொண்ணு அவர மதிக்காம யாரோ ஒருத்தனோட வாழணும்னு ஆசைப் படறாளே அப்படின்னு ஒரு கோபம். அந்த முரட்டுத் தனம்தான்டா. ஆனா உன்னை அடிச்சி, உதைச்சி இழுத்துட்டு போயிடுவாரோன்னு பயமா இருக்கா?"

"எனக்கு பயமா இருந்தா எனக்கு ஒண்டிக்கறதுக்கு ஒரு முதுகு இருக்கு பிரமோத். நான் யாருக்காக பயப்படணும்? யார் என்னை பயமுறுத்தினாலும் அப்போ எனக்கு ஆதரவா இருக்கிற துணையா இருக்கிற உங்க கூட ஒட்டிக்கிவேன்ல. அந்த சந்தோஷத்துக்கு பயமுறுத்துனாக் கூட பரவாயில்லேன்னுதான் நினைக்கிறேன். இது என்னைப் பத்தின பயமில்லை பிரமோத், உங்களைப் பத்தின பயம். என் பேர்ல இருக்கற கோபம் உங்க பேர்ல திரும்பிடக் கூடாது. என்னால உங்களுக்கோ உங்க குடும்பத்துக்கோ எந்த இழப்பும் வந்திரக்கூடாதே என்கிற பயம்."

"இதப்பாரு சாந்தினி. பயந்தோம்னா கடைசி வரைக்கும் பயந்துக்கிட்டேதான் இருக்கணும். அப்பா, அம்மா இரண்டு பேரும் சம்மதிச்சி கல்யாணம் பண்ணி வச்சாலும் வாழ்க்கையிலே வேறு பயங்களே இல்லையா? தினம் தினம் எந்த லாரி எங்கே இருந்து திரும்பும், எப்போ நம்மை இடிச்சிட்டு போவும்னு தெரியாது. அந்த பயத்தோட வாழ ஆரம்பிச்சோம்னா ஒவ்வொரு அடியுமே நமக்கு நரகமாயிடும். உனக்கு நான் இருக்கேன். எனக்கு நீ இருக்கே! நாம ஒரு பக்கம் நிக்கிறோம். இதை ஒத்துக்காம உலகமே இன்னொரு பக்கம் போய் நின்னாக்கூட அந்தப் பக்கத்தை விட நம்ம பக்கந்தான்டா ஸ்ட்ராங்கு. அந்த தைரியம் எனக்கு இருக்கு. எந்தக் கவலையும் படாதே. உனக்கு என் மேல நம்பிக்கை இருந்தா போதும். வா... நாம எதுவா இருந்தாலும் தைரியமா சமாளிக்கலாம்."

"நம்பிக்கை இல்லாமலா எல்லாத்தையும் உதறிட்டு இங்கே வந்து இப்போ உட்கார்ந்திருக்கேன். அவங்கவங்க பார்க்குல தைரியமா காத்தாட மரத்தடியிலே உட்கார்றாங்க. ஜாலியா ஊஞ்சலாடிட்டு போறாங்க. நாம ரெண்டு பேரும் ஏதோ கள்ளக்காதல்ல ஈடுபட்ட மாதிரி ஒதுக்குப்புறமா, மரத்துக்கு பின்பக்கமா சுவருக்கும் மரத்துக்கும் நடுவுல இப்படி ஒண்டி உட்கார்ந்து பேசிக்கிட்டு இருக்கோம்னா எங்க அப்பாவுக்கும் அவருடைய ஆட்களுக்கும் பயந்துதான். ஆனாலும் அந்த பயத்த தாண்டி உங்களப் பாக்கறோம் அப்படின்னு ஒரு சந்தோஷம் இருக்குல்ல. அந்த சந்தோஷம் எப்படி வந்துது பிரமோத்? உங்க பேர்ல இருக்குற நம்பிக்கையாலதான். அதனால உங்க பேர்ல நம்பிக்கையிருந்தா...? அப்படின்னு சொல்லி இன்னொரு தடவை சொல்லாதீங்க..."

"ரைட். நாம பேசினா இந்த மாதிரி ஒருத்தருக் கொருத்தர் விட்டுக்கொடுக்காம பேசிட்டேதான் இருப்போம். இப்பத் தெளிவான முடிவுக்கு வருவோம். சாந்தினி பிரமோத் இருவரும் திருமணம் செய்து கொள்ளப் போகிறார்கள். சாந்தினியின் வீட்டில் எதிர்ப்பு இருந்தாலும் பிரமோத்தின் வீட்டில் இதற்கு சம்மதம்

தெரிவித்து விட்டார்கள். அதனால் பிரமோத் வேலை செய்யும் ஊருக்கு அவனோடு புறப்பட்டு போய் வாழ்க்கையை தொடங்க சாந்தினி தைரியமாகி விட்டாள். கரெக்டா?"

"என்னப்பா? என்னவோ டிவியிலே நியூஸ் படிக்கிற மாதிரி படிக்கிறீங்க."

"இது நியூஸா வந்தாலும் வரும். தைரியமா இரு. நாம எங்கே எப்போ பார்க்கறோம்?"

"இன்னிக்கு நைட்டு நீங்க வீட்டுப்பக்கம் நீங்கன்னா நான் சத்தம் போடாம ராத்திரி ஒரு 12 மணிக்கு மேல மாடியிலே என் ஜன்னல் வழியா என துணியெல்லாம் மூட்டைகட்டி தூக்கிப் போட்டுர்றேன். அதை நீங்க எடுத்துட்டுப் போயிடுங்க. நாளைக்கு காலையிலே நான் கம்ப்யூட்டர் க்ளாஸ் போறதா வீட்ல சொல்லிட்டு கை வீசி நடந்து வந்துட்டேன்னா நாம ஸ்டேஷன்ல மீட் பண்ணலாம்."

"சாந்தினி எப்போ என்னை நம்பி நீ புறப்பட்டு வர்றதா சொல்லிட்டியோ, அப்புறம் எதுக்கு இந்த துணி மூட்டை, வெங்காய மூட்டையெல்லாம்? நாளைக்கு நமக்கு பொறக்கப் போற குழந்தைக்கு இன்னைக்கே நாம ஏதாவது துணி வாங்கி வச்சிட்றோமா... பாஞ்சாலிநாத னோட பொண்ணா இருந்த வரைக்கும் நீ அவர் வாங்கிக் கொடுத்த ட்ரெஸ் எல்லாம் போட்டுட்டிருந்தது போதும். ப்ரமோத்துடைய பொண்டாட்டியா மாறின பிறகு அவன் வாங்கிக் கொடுக்கற ட்ரெஸ்ஸ போட்டுக்கோ. போதும். சரியா? அதனால கையை வீசிட்டு கிளம்பி வா..."

சாந்தினி பதில் சொல்லாமல் மெல்ல பக்கவாட்டில் நகர்ந்து அவனுடைய தோளில் தலை சாய்த்து கொண்டாள். கண்களை மூடிக் கொண்டாள். இமையை கண்ணீர் ஒட்ட வைத்தது.

பிரமோத் தன்னுடைய இடது கையை அவள் தோளில் சுற்றி வளைத்துப் போட்டு அவளை தன்னுடன் இறுக்கிக் கொண்டான். இருவருடைய மூச்சுக் காற்றும் ஒரே லயத்தில் ஒலிக்க ஆரம்பித்தன.



# காட்சி-2

"இருபது லட்சமா?" கூடி இருந்த எட்டு பேரில் யாரோ ஒருத்தர் ஆச்சரியக் குரல் கொடுத்தார்.

குரல் வந்த திசை பார்த்து குமரன் திரும்பி நின்றான்.

முகம் நிறைய புன்னகையும் கண்களில் ஒளிரும் ஒரு திருப்தியுமாக தலையசைத்தான்.

"ஆமாம். 20 லட்சம்தான். சொன்னால் நம்புவதற்கு கஷ்டமாக இருக்கும். ஆனால் இருபத்திநான்கே மணி நேரத்தில் இருபது லட்சம் சம்பாதித்து நான் திரும்பி இருக்கிறேன். இன்னொரு ஆச்சர்யம் என்னவென்றால் இருபது லட்சம் என்பது உச்சபட்ச தொகை அல்ல. நாம் தம் பிடித்து முயற்சித்தால் இருபத்தினான்கு மணி நேரத்தில் மூன்று கோடி ரூபாய்... எவ்வளவு? மூ..ன்..று.. கோ..டி.. ரூபாய் சம்பாதிக்க முடியும். ஆறு பேர். மொத்தம் மூன்று கோடி. பிரித்துக் கொண்டால் ஆளுக்கு ஐம்பது லட்சம். இருபத்தினான்கு மணி நேரத்தில் ஐம்பது லட்சம் சம்பாதிக்க வேறு ஏதாவது வழி இருக்கிறதா?" குமரனுடைய கேள்வியில் சற்று நேரம் அந்த அறையில் அமைதி நிலவியது.

ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர். மீண்டும் பார்வைகள் குமரன் பக்கம் திரும்பின.

"எங்கே? இன்னொரு முறை உன்னுடைய அனுபவத்தைப்பற்றிச் சொல்" என்றார் மாயன்.

அவருடைய குரலிலேயே ராணுவத்தின் மிடுக்கு இருந்தது. நாற்பது வயது என்பதை தெரிவிக்காத கருத்த முடி. கூர்மையான முக அங்கங்கள். தெளிவான, துணிவான பார்வை. எழுதப்படாமலேயே அந்த அறையில் இருந்த மற்றவர்களை விட மாயனுக்கு தானாகவே கூடுதலான ஒரு மரியாதை கிடைத்தது.

குமரன் செருமிக் கொண்டுபேசலானான்.

"இந்த மூன்று கோடி பணத்தை அடைவதற்கு

நாம் ஏதோ இமயமலை ஏற வேண்டும் என்றோ கைலாவிலிருந்து ஒரு புத்தர் சிலையை எடுத்து வரவேண்டும் என்றோ நினைத்து விடாதீர்கள். இது ஒரு விளையாட்டு. டெலிவிஷனில் எவ்வளவோ விளையாட்டுக்களை ஒளிபரப்புவதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். கிரிக்கெட் மாதிரியோ, ஃபுட் பால் மாதிரியோ இது மைதானத்தில் ஆடப்படும் ஆட்டம் அல்ல. ஒரு குறிப்பிட்ட இடத்திற்குள் நம்முடைய தைரியத்திற்கும் புத்திசாலித்தனத்திற்கும் வைக்கப்படும் ஒரு விளையாட்டுப் போட்டி. 'கேம் ஷோ' என்று டிவியில் காட்டுகிறார்களே, அந்த வகை. ஒரு மாபெரும் கோடீஸ்வரர் பொழுது போகாமல் இந்த விளையாட்டிற்கென்று ஒரு மாளிகையையே அமைத்திருக்கிறார். அந்த மாளிகைக்கு பெயர் அச்ச மாளிகை. பெயருக்குத் தகுந்தாற்போல் அந்த மாளிகையில் ஆட்களை பயமுறுத்தும் விஷயங்கள் நிறைய உண்டு. அத்தனையையும் தைரியமாக சந்தித்து அந்த விளையாட்டில் வெற்றி பெற்றால் மூன்று கோடி ரூபாய் பரிசு. இதை தனியாக ஒற்றை மனிதனாக செய்ய வேண்டும் என்று கூட விதி இல்லை. ஒரு குழுவாக இதில் பங்கு கொண்டு வெற்றி கொள்ளலாம் என்பது இதில் ஒரு கூடுதலான சலுகை. ஆறு பேர் சேர்ந்தால் அது ஒரு குழு. இதைப்பற்றி கேள்விப்பட்டு என் நண்பன் சொன்னபொழுது கல்லூரிப் படிப்பை முடித்து நாங்கள் பிரியும் முன் ஐந்து நண்பர்களாக சேர்ந்து அந்த மாளிகைக்கு போனோம். அங்கேயே அந்த விளையாட்டில் பங்கு கொண்டோம். ஒவ்வொரு கட்டமாக வெற்றி பெற்று தாண்டிக் கொண்டு வந்தோம். ஆனால் ஒரு கட்டத்தில் எங்களை முந்திக் கொண்டு இன்னொரு குழு சென்று விட்டதால் எங்களுடைய பரிசுத் தொகை குறைந்து விட்டது. கிடைத்த பணத்தை பிரித்ததில் ஆளுக்கு நான்கு லட்சம் கிடைத்தது. இப்பொழுது சொல்கிறேன். நாம் முயற்சி செய்தால் மூன்று கோடியையும் நம்மால் ஜெயிக்க முடியும். அந்த அளவிற்கு கலபமான விளையாட்டுக்கள்தான் அங்கே



இருக்கின்றன. எப்படியும் அந்த விளையாட்டில் கலந்து கொள்வது என்று நான் தீர்மானித்து விட்டேன். நம்முடைய மனிதர்கள் கூட இருந்தால் பரவாயில்லையே என்பதால்தான் உங்களிடம் இதுபற்றி பேசிக் கொண்டிருக்கிறேன். உங்களால் வர முடியாது என்றால் எனக்கான குழுவை நானே செலக்ட் பண்ணிக் கொள்ளவும் எனக்குத் தெரியும்."

குமரன் இப்படிச் சொன்னதும் செந்தில் தன் கையை உயர்த்தி குறுக்கிட்டான்.

"ஏனப்பா? இவ்வளவு கோபப்படுகிறாய். ஐம்பது லட்சம் வருகிறது என்றால் யாருக்குத்தான் ஆசை இருக்காது. அந்த விளையாட்டு என்ன? பணம் கிடைத்தால் பணம். ஒரு வேளை விளையாட்டில் தோற்றுவிட்டால் அந்த பரிசு கிடைக்காமல் போகும், அவ்வளவுதானே! அல்லது அதைத்தாண்டி வேறு ஏதாவது ஆபத்து இருக்கிறதா?"

கேள்வி கேட்டவனைப் பார்த்து குமரன் புன்னகைத்தான்.

"அதாவது அந்த விளையாட்டில் உயிர் போய்விடுமோ என்று பயந்து கேட்கிறாயா? அப்படியெல்லாம் எந்த ஆபத்தும் இல்லை. ஏதோ ஒரு கட்டத்தில் மேற்கொண்டு விளையாட வேண்டாம் என்று நமக்குத் தோன்றினால் அந்தக் கட்டத்திலேயே விலகி வெளியே வந்து விடவும் நமக்கு வாய்ப்பு கொடுக்கப்படுகிறது. என்ன? இதய நோய் உள்ளவர்கள் படபடப்பு தாங்காதவர்கள் இந்த விளையாட்டில் ஈடுபட்டால் அவர்களுக்கு ஆபத்து. மற்றபடி நம்மைப் போன்ற தைரியசாலிகளுக்கு எந்த வித ஆபத்தும் கிடையாது."

"சரி நான் வருகிறேன்"என்று செந்தில் கை உயர்த்தினான்.

"நானும்... நானும்..." என்று அடுத்தடுத்து கைகள் உயர்ந்தன.

கூடி இருந்த எட்டு பேரில் ஒரே ஒரு கை மட்டும்

மட்டும் உயரவில்லை.

"வேண்டாம்ப்பா,.. பணம் ஆசையாத்தான் இருக்கு. ஆனா போன மாசம்தான் நெஞ்சுவலி வந்து டாக்டர்கிட்ட போய் சிகிச்சை எடுத்துக் கொண்டேன். எந்த வித ஆபத்தான விளையாட்டிலும் ஈடுபட நான் தயாராக இல்லை" என்று விலகிக்கொண்டான் முருகவேல்.

குமரன் சொன்னான். "என்னையும் சேர்த்து இப்பொழுது ஏழு பேர் இந்த விளையாட்டிற்குத் தயாராக இருக்கிறோம். ஆனால் ஆறு பேர்தான் ஒரு குழுவாக செல்ல முடியும். யாராவது ஒருவர் இதிலிருந்து விலக வேண்டும்." சொல்லிவிட்டு அவன் சுற்றுமுற்றும் [illegible]த்தபொழுது எந்தக் கையும் தழையவில்லை.

"ஒன்று செய்வோம்" என்றார் மாயன். "ஆறு பேரில் [illegible]ப்படியும் உண்டு. மீதி ஐந்து பேரை சீட்டுக் குலுக்கிப்போட்டு தேர்ந்தெடுப்போம்." உடனே அது ஒப்புக் கொள்ளப்பட்டது. சீட்டுகள் குலுக்கிப் போடப்பட்டன. ஒவ்வொரு பெயராக குமரன் தெரிவிக்க ஆரம்பித்தான்.

'மாயன்' கைதட்டல் விழுந்தது. 'அழகப்பன்' கைதட்டல். 'இந்துமதி' மீண்டும் கைதட்டல். 'செந்தில்' அதற்கும் கைதட்டல். 'தன்வீர்' அதற்கும் கைதட்டல்.

தன்னுடைய பெயர் அறிவிக்கப்படாதது முகத்தில் கூடுதலான ஒரு வருத்தத்தை பிரதிபலிக்க பார்த்திபன் தலையை குனிந்து கொண்டான்.

"சாரி பார்த்தி. இந்தமுறை நீ இல்லாவிட்டால் என்ன? நாம் இந்த முறை ஜெயித்தபின் மீண்டும் மீண்டும் இதே விளையாட்டில் ஈடுபடத்தான் போகிறோம். ஜெயிக்கத்தான் போகிறோம். அடுத்தமுறை நீ நிச்சயம் பங்கு கொள்ளலாம்" என்றார் மாயன்.

பார்த்திபன் முழு திருப்தி இல்லாமல் ஒரு வறண்ட புன்னகையை காட்டினான்.

"இட் இஸ் ஓ.கே." என்று மெலிந்த குரலில் சொன்னான்.



மாயன் இப்பொழுது தானாகவே தலைமை பொறுப்பை ஏற்றுக் கொண்டார்.

"இந்த அச்சமாளிகை எங்கே இருக்கிறது? இங்கிருந்து எவ்வளவு தூரம்? அதில் பதிவு செய்து கொள்வது எப்படி? எப்பொழுது நாம் புறப்பட வேண்டும்?" அடுக்கடுக்காக அவர் கேள்விகள் கேட்க குமரன் ஒவ்வொன்றுக்கும் பதில் சொல்ல ஆரம்பித்தான்.

# காட்சி-3

பாஞ்சாலிநாதன் அமைச்சருடன் ஃபோனில் பேசிக் கொண்டிருந்தார்.

"ஆமாங்கய்யா... நம்ம டூரிஸ்ட் பங்களாவையே புக் பண்ணியாச்சுங்க.... உங்களுக்குத் தேவையான எல்லா ஏற்பாடுகளும் செய்து விட்டேன்" எல்லா என்ற வார்த்தையில் அவர் கொடுத்த அழுத்தம் எத்தனையோ அர்த்தங்களைச் சொன்னது.

"ஒன்றும் பிரச்சினை இருக்காதைய்யா. அதற்கெல்லாம் நான் உத்திரவாதம். ஆமாங்கய்யா. நாளைக்கு காலையில் நானே ஸ்டேஷனுக்கு வந்து விடுகிறேன். வணக்கமய்யா" என்று சொல்லி ஃபோனை வைத்தார். நிமிர்ந்தார். எதிரில் கை கட்டியபடி அவருடன் பேசுவதற்காக காத்திருக்கும் முகிலனை பார்த்தார்.

என்ன? என்பது போல் புருவத்தை உயர்த்தினார்.

"ஐயா, ஒரு சின்ன தப்பு நடந்துவிட்டது... ஐயா..." முகிலன் தயங்கி சொன்னான்.

மீண்டும் புருவம் உயர்ந்தது.

"நம்ம கோபி சொன்னாங்கய்யா, அவன் வண்டியுடன் லெவல் க்ராஸிங்கில் காத்திருந்தபொழுது, மெட்ராஸ் ரெயில் கடந்து போயிற்றாம். அதில் தற்செயலாக பார்த்தபொழுது ஐயாவுடைய மகள் முகம் ஒரு ஜன்னல் வழியே தென்பட்டது' என்று [illegible]ான்னான். ஆனால் எக்ஸ்பிரஸ் ரெயில் என்பதால் அதை தூரத்திக்

கொண்டு போக வழியில்லை. ஒரு வேளை தப்பாக பார்த்துவிட்டோமோ என்று அவனுக்கு ஒரு சந்தேகம். எதற்கும் உங்களிடம் சொல்லிவிடலாமே என்றுதான் வந்தேன்."

முகிலன் சொல்லச் சொல்ல பஞ்சாலிநாதனின் கண்கள் இடுங்கின. நெற்றிப்பொட்டு கோபத்தில் சிவந்தது.

"யார், சாந்தினியா?" என்றார் கரகரத்தக் குரலில்.

"ஆமாங்கய்யா."

"கூட வேறு யாராவது இருந்தார்களாமா?"

"ஓடுகிற ரெயிலில் சரியாகத் தெரியவில்லை. ஆனால் அவள் பக்கத்தில் ஒரு இளைஞன் உட்கார்ந்திருந்தாற்போல இருந்தது என்று கோபு சொன்னான்."

"அந்த வண்டி அடுத்தது எங்கே நிற்கும்?"

"இங்கே விட்டால் அடுத்தது செங்கல்பட்டுதான்."


"என்ன செய்வீர்களோ, எது செய்வீர்களோ எனக்கு தெரியாது. செங்கல்பட்டில் ரெயில் போய் நிற்கும்போது அந்த பையனை இழுத்து தலை வேறு, கை வேறு, கால் வேறு என்று ஏதாவது சாக்கடையில் தூக்கி எறியுங்கள். சாந்தினி ஒரு கீறல் கூட இல்லாமல் முழுசாக இங்கே வந்திருக்க வேண்டும். என் பெயரை சொல்லிக் கொண்டு என்ன செய்ய வேண்டுமோ செய். ஆனால் ஊரில் வேறு யாருக்கும் இந்த விஷயம் போகக்கூடாது. காதும் காதும் வைத்தாற்போல சாந்தினி மீண்டும் இந்த வீட்டிற்குள் வந்து சேர வேண்டும். நிற்காதே கிளம்பு."

"சரிங்கய்யா" முகிலன் புயல் போல் அந்த இடத்தைக் காலி செய்தான்.

## காட்சி-4

அந்த டொயாட்டோ க்வாலிஸ் நெடுஞ்சாலையில் எண்ணெய் போல் வழுக்கிக் கொண்டு விரைந்தது. மாயன்தான் செலுத்தினார்.





அவருடைய கையிலிருந்த சிகரெட்டிலிருந்து புகையை நெஞ்சு நிறைய இழுத்துக் கொண்டாலும் அதை வெளிப்படுத்தும்பொழுது ஜன்னலுக்கு வெளியே முகத்தைத் திருப்பி அவர் ஊதியது மிலிட்டரியிலிருந்து கற்றுக் கொண்ட ஒரு கண்ணியம் என்று தோன்றியது.

"இன்னும் எத்தனை தூரம் போக வேண்டும் குமரன்?"

அவருக்கு பக்கத்து இருக்கையில் அமர்ந்திருந்த குமரன் சாலையிலிருந்து பார்வையை எடுக்காமலேயே "இப்பொழுதுதான் செங்கல்பட்டை நெருங்கிக் கொண்டிருக்கிறோம். இன்னும் முப்பது கிலோ மீட்டர் போக வேண்டும் அங்கிள்" என்றான்.

"அப்படியானால் ஒன்று செய்வோம். செங்கல்பட்டில் நிறுத்தி சாப்பிட்டு விட்டு பிறகு புறப்படுவோம்" என்றாள் இந்துமதி.

இந்துமதியை பார்ப்பவர்களுக்கு அவளுக்கு இருபத்தியெட்டு வயது ஆகிவிட்டது என்று சொன்னால் நம்புவதற்கு கஷ்டமாகத்தான் இருக்கும். அழகிப்போட்டியில் கலந்து கொள்பவர்கள் கூட பொறாமைப்படக் கூடிய அற்புதமான வளைவுகள் கொண்ட தேகம். முகத்தில் இன்னமும் குழந்தைத்தனம் பாக்கி இருந்தது. அவள் வாழ்க்கையில் சந்தித்த சங்கடங்கள் அவற்றால் ஏற்படுத்தப்பட்ட காயங்கள் எதையும் வெளிக்காட்டிக் கொள்ளாத இயல்பான முகம். அவளுடைய உள்ளத்திற்குள் அழுத்திவைக்கப்பட்ட சில கவலைகளும், அச்சங்களும் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் வெளிப்பட்டு விடாத அமைதியான குரல்.

இந்துமதி அந்தக் குழுவில் தனியான ஒரு பெண்ணாக இருந்த போதிலும் எந்தவித சங்கடமும் இல்லாமல் எல்லோருடனும் இயல்பாக பழகுவதிலேயே அவளுடைய தைரியமும், ஒரு தெளிந்த சிந்தனையும் புலப்பட்டன.

"ஓ.கே. சாப்பிட்டு விட்டே போகலாம்" என்று



தோள்களை குலுக்கினார் மாயன்.

"செந்தில், எந்த ஹோட்டலில் நிறுத்த வேண்டும் என்று நீயே சொல்லப்பா."

செந்தில் குமரனின் அண்ணன் கல்லூரிப் படிப்பை முடித்தவுடனேயே நண்பர்களுடன் போய் லட்சங்களை சம்பாதித்துக் கொண்டு விட்ட தம்பியின் சுறுசுறுப்பும் துடிப்பும் செந்திலை வெகுவாக கவர்ந்திருந்தன. இப்பொழுது இரண்டு பேருமாக சம்பாதிக்கப்போகிற பணத்தை நினைத்து உள்ளுக்குள் ஒரு படபடப்பு இருந்தது.

குழுவில் அதிகபட்சம் சம்பாதிக்கப்போவது அவனுடைய குடும்பம்தான் என்கிற நினைப்பு தொண்டையில், நெஞ்சில் தித்தித்தது. செந்தில் தனக்கு தெரிந்த ஒரு நான்-விஜிட்டேரியன் ஹோட்டலின் பெயரை மாயனிடம் சொன்னான்.

"எல்லோருக்கும் அந்த ஹோட்டல் ஓ.கே.தானே" என்றார் மாயன்.

"இல்லை, என்னை ஏதாவது விஜிட்டேரியன் ஹோட்டலில் விட்டுவிடுங்கள்" என்றாள் இந்துமதி.

"என்னையும்" என்றான் அழகப்பன்.

அழகப்பனுக்கு முப்பது வயது. இருபத்தி ஐந்து வயதில் அம்மா சொன்ன பெண்ணை கல்யாணம் செய்து கொண்டு இருபத்தி ஏழு வயதிலேயே அவளை இழந்தவன். ஏற்கனவே இதயத்தில் ஓட்டை இருக்கிறவள் என்று சொல்லப்படாமல் அவனுக்கு மனைவியாக்கப்பட்டு ஒரு குழந்தையைக் கூட பெற்றுத் தரும் முன் தன் வாழ்க்கையையே தொலைத்தவள் அவனுடைய மனைவி. அவனோடு வாழ்ந்த வாழ்க்கை பல நாட்கள் மருத்துவமனையிலும் மருத்துவர்களின் அறைகளிலும் கழிந்து விட்டதில் அவனுக்கு ஒரு மெல்லிய வருத்தம் இருந்தது. கல்யாணம் என்பது அந்த பெண்ணிற்கு இழைக்கப்பட்ட அநீதி என்றே அவனுடைய மனதில் ஆழமாக பதிந்து விட்டது. அவனால் அவனுடைய மனைவியைக் காப்பாற்ற

முடியவில்லையே என்ற குற்ற உணர்வும் நெஞ்சில் அறுத்துக் கொண்டு இருந்தது.

மனைவியை இழந்த பிறகு மூன்று வருடங்களுக்கு வறண்ட தொரு வாழ்க்கையை வாழ்ந்து வந்திருக்கிறான். காலை எழுந்திருப்பதும், அலுவலகம் போவதும், செய்தித்தாள்கள் படிப்பதும், உண்டு, உறங்கி மீண்டும் எழுவதும் என்று எந்த இலக்கும் இல்லாமல் ஒரு கூட்ஸ் வண்டியின் கடைசி பெட்டி போல அவன் உணர்ந்தான்.

அதிலிருந்து ஒரு மாற்றம் வேண்டும் என்று அவன் ஆவலுடன் தவித்துக் கொண்டிருந்த பொழுதுதான் குமரனின் இந்த அறிவிப்பு கிடைத்தது. மாயன்தான் அவனை அந்த சந்திப்பிற்கு அழைத்து வந்திருந்தார். அச்சம் ஊட்டப் போகிற ஒரு மாளிகைக்குள் நுழைந்து வெளிவருவது என்பது அவனுடைய வாழ்க்கையில் சற்று சுறுசுறுப்பான ஒரு அத்தியாயத்தை திறந்து வைக்கப்போகிறது என்ற துடிப்பு அவனுக்கு இருந்தது.

இந்த சந்திப்பிற்கு முன்பாகவே இந்துமதியை …று இரண்டு மூன்று சந்தர்ப்பங்களில் அவன் பார்த்திருக்கிறான். அவளுடைய அமைதியான பேச்சும், அடக்கமான நடத்தையும், அவள் பேரில் அவனுக்கு விளக்கம் சொல்ல முடியாத ஒரு ஈர்ப்பை ஏற்படுத்தியிருந்தன. அவள் மட்டும் விஜிட்டேரியன் ரெஸ்டாரண்டில் இறங்கிக் கொள்ளவேண்டாம் என்று முடிவு செய்துதான் அவனும் விஜிட்டேரியன் என்றான்.

அழகப்பனையும் தவிர குமாரும் விஜிட்டேரியன் சாப்பாட்டிற்கே பிரியப்பட்டதால் அவர்கள் மூவரையும் அப்படிப்பட்ட ஒரு ஹோட்டலில் இறக்கிவிட்டு அதே சாலையில் உள்ள இன்னொரு நான்-விஜிட்டேரியன் ஹோட்டலுக்கு மற்றவர்கள் போவதென்று தீர்மானம் ஆனது.

எந்த ஹோட்டல் என்று செந்தில்தான் தீர்மானித்தான். அப்படி தீர்மானித்தபொழுது அவனுடைய விதியையும் சேர்த்து அவன் தீர்மானித்துவிட்டது செந்திலுக்கு அப்பொழுது தெரியாது.



# காட்சி-5

வயல்வெளிகளின் ஊடே ரயில் வேகம் பிடித்திருந்தது. பிரமோத் வெகு தற்செயலாக ஜன்னலுக்கு வெளியே பார்வையை எறிந்தான். அவன் பார்த்த காட்சி திடுக்கிடலை கொண்டு வந்தது.

ரயில் பாதையை ஒட்டி ஐம்பது அடி தள்ளி இணையாக வந்து கொண்டிருந்த சாலையில் திறந்த ஜீப் ஒன்று ரயிலின் வேகத்தோடு விரைந்து கொண்டிருந்தது. அந்த ஜீப்பில் இருந்தவர்கள் ரயிலை சுட்டிக் காட்டி பேசுவது அவனுக்குத் தெரிந்தது.

அவன் தோளில் நிம்மதியாக சாய்ந்து கண்களை மூடியிருந்த சாந்தினியை தட்டி எழுப்பினான்.

"சாந்தினி, ஆபத்து!" என்றான்.

சாந்தினி உடனடியாக உயிர்த்து எழுந்து அவன் விரல் போன திசையில் பார்வையை செலுத்தினாள்.

உடனடியாக அவளுடைய உடல் குறுகியது. பிரமோத்தின் கையை எடுத்து தன் கைகளில் அழுத்தி அதில் ஆதரவு தேடிக் கொண்டு-

"ஆமாம்... பிரமோத்! அப்பாவின் ஆட்கள்தான்" என்றாள்.

பிரமோத் அவளை அணைத்து தைரியம் ஊட்டிக் கொண்டே "செங்கல் பட்டில் ரயில் நிற்கும்பொழுது நிச்சயம் நம்மை அவர்கள் வெளியே இழுத்து விடுவார்கள்" என்றான்.

"இப்பொழுது என்ன செய்யலாம்?"

பகல் நேர ரயிலாக இருந்ததால் பதிவு செய்யப்பட்ட அந்தப் பெட்டியில் அவர்களைத் தவிர அங்கங்கே ஒன்று இரண்டு பேர் உட்கார்ந்திருந்தார்கள். அவரவர் வேலையில் அவரவர் ஈடுபட்டிருக்க பிரமோத் மீண்டும் தன் பார்வையை வெளியே அனுப்பி அந்த ஜீப்பை பார்த்தான்.

ஒரு ஓடைக்கு மறுபுறம் இன்னும் சில நூறடிகள்

சென்ற பிறகு சாலை மீண்டும் ரயில் பாதையை நெருங்கி வந்து விடும் என்பதையும் கவனித்தான்.

"என்னை நம்பி வந்துவிட்டாய். உன்னை மறுபடியும் அவர்களிடம் நான் ஒப்படைக்க மாட்டேன். சற்று இரு" என்றான் பிரமோத்.

ஓடை குறுக்கிட்டது. சாலை ரயில் பாதையிலிருந்து விலகி விலகி பிரிந்தது. இடையில் மரங்களும் செடிகொடிகளும் குறுக்கிட்டபொழுது ஜீப்பிற்கும், ரயிலுக்கும் பார்வை பரிமாற்றம் தொலைந்து போனது.

பிரமோத் எழுந்தான். அபாயச் சங்கிலியை பிடித்து இழுத்தான். ரயில் ஒரு விநோதமான கூக்குரலை கொடுத்துக் கொண்டே நிறுத்தத்திற்கு வந்தது.

சாந்தினியை பிடித்துத் தாதரவென்று இழுத்துக் கொண்டு கம்பார்ட்மெண்டின் கதவை அடைந்து அதைத் திறந்தான். படிகளில் வேகமாக இறங்கினான். அந்த ரயில் பெட்டியில் இருந்த மற்றவர்கள் என்ன நடக்கிறது என்பதை உணர்ந்து சுதாரிக்கும் முன்னர் சாந்தினியும், பிரமோத்தும் ரயிலிலிருந்து உதிர்ந்தார்கள்.

## காட்சி-6

டொயாட்டோ க்வாலிஸ் சாலையோர மரங்களின் நிழலில் விரைந்துகொண்டிருந்தது. பின் இருக்கையில் உட்கார்ந்திருந்த செந்தில் திடீரென்று கை நீட்டி மாயனின் தோளை அழுத்தினான்.

"என்ன?" என்று மாயன் ரியர்வியூ மிர்ரரில் நிமிர்ந்து பார்த்து செந்திலின் பிம்பத்திடம் கேட்டபொழுது - காரை ஓரமாக நிறுத்தச் சொல்லி அவன் சைகை செய்வது புரிந்தது.

சாலையோரத்தில் வண்டி ஒதுங்கி நிறுத்தப்பட்டதும், கதவைத் திறந்து செந்தில் பரபரப்பாக இறங்கினான். இறங்கிய வேகத்தில் மரத்தடிக்கு போய் உட்கார்ந்தவன், வயிற்றில் இருந்து குமுறிக் கொண்டு



வந்ததுபோல் வாந்தி எடுக்க ஆரம்பித்தான்.

பதறிப்போய் மாயனும், குமாரும் மற்றவர்களும் இறங்கும்பொழுது செந்திலின் பக்கத்தில் உட்கார்ந்திருந்த தன்வீரும் வெகு அவசரமாக மற்றவர்களை ஒதுக்கிக் கொண்டு ஓடி இன்னொரு முனையில் உட்கார்ந்து வாந்தி எடுக்க ஆரம்பித்தான்.

மாயன் காரில் இருந்து தண்ணீர் பாட்டிலை எடுத்துக் கொண்டு விரைந்து வந்தார்.

"என்ன ஆயிற்று? செந்தில் என்ன ஆயிற்று?" என்று மாயன் கேட்டபொழுது பதில் கூட சொல்ல முடியாமல் செந்தில் அப்படியே உட்கார்ந்தான். சாய்ந்தான். கண்கள் இமைகளுக்குள் சென்று செருகிக் கொண்டன. அவர், முகத்தில் தண்ணீர் தெளித்து அவனை கவனிக்கும்பொழுது இன்னொரு புறம் வயிற்றை இறுகப் பிடித்தபடி தன்வீரும் சுருண்டு வலியில் துடிப்பது தெரிந்தது. இருவரையும் அடுத்தடுத்து கவனிக்கும்படியான சூழ்நிலை ஏற்பட்டது.

"எனக்கு அப்பொழுதே சந்தேகம். அந்தச்சிக்கன் கறியில் தேவையில்லாத ஒரு வாடை வந்தது. அதனால்தான் அதை நான் தவிர்த்து விட்டேன். ஆனால் இந்த இரண்டுபேரும் ஆசை ஆசையாக அதை அதிகமாக சாப்பிட்டார்கள். அந்த சிக்கன் கறி செய்யும் வேலைதான்."

மாயன் அவர்கள் இருவரின் மீதும் தண்ணீர் தெளித்தபடி பரபரப்பாக பேசினார். தன்னுடைய அண்ணன் திடீரென்று இப்படி படுத்தது பார்த்து குமரன் சிறு குற்ற உணர்வுடன் மாயனை நிமிர்ந்து பார்த்தான்.

"அங்கிள் இப்பொழுது என்ன செய்வது? மணி இரண்டரை ஆகப்போகிறது. நான்கு மணிக்குள் நாம் அச்சமாளிகைக்கு சென்றாக வேண்டும். இப்பொழுது இருக்கும் நிலைமையைப் பார்த்தால் செந்திலும், தன்வீரும் இந்த விளையாட்டில் பங்கு கொள்ள முடியுமா என்றே புரியவில்லையே."

"இரு. அவசரப்படாதே. பணம் பெரிதல்ல. இவர்களுடைய உடல் நலம்தான் முக்கியம்" என்றார் அழகப்பன்.

செந்திலின் இமையை பிரித்துப் பார்த்து அவன் கன்னத்தில் தட்டி மாயன் அவனை நினைவுக்கு கொண்டு வரப்பார்த்தபொழுது மீண்டும் வயிற்றைப் புரட்டிக் கொண்டு செந்தில் அப்படியே ஒருக்களித்து திரும்பி இன்னும் சற்று வாந்தி எடுத்தான். வயிற்றைப் பிடித்துக் கொண்டு மரவட்டை போல் சுருண்டு துடிக்க ஆரம்பித்தான்.

"முதலில் ஒரு டாக்டரைப் பார்க்க வேண்டும்" என்றாள் இந்துமதி.

"சரி, இருவரையும் காரில் தூக்கிப் போடுங்கள். செங்கல்பட்டுக்கே திரும்புவோம். அங்கே ஒரு டாக்டரிடம் காண்பிப்போம்" என்றார் மாயன்.

செந்திலையும், தன்வீரையும் மற்றவர்கள் தூக்கி[illegible]ந்தபடி வந்து க்வாலிசின் கதவைத் திறந்தவர் திறந்தவுடன் அதிர்ந்து நின்றனர்.

காருக்குள் ஒரு இளைஞனும் இளைஞியும் ஓரமாக ஒண்டிக் கொண்டிருந்தார்கள்.

"ஏய், யாரது? திறந்திருக்கும் காரில் ஏறி உட்கார்ந்து விடுவதா?" என்று மாயன் மிகக் கோபத்துடன் கேட்டார்.

அந்தப் பெண் கண்களில் கண்ணீருடன் கையெடுத்து கும்பிட்டாள். வெகுதூரம் ஓடி வந்தவள்போல அவளுடைய கூந்தல் கலைந்திருந்தது. அணிந்திருந்த புடவை முற்றிலுமாக மடிப்பு கலைந்து கசங்கி இருந்தது. அவளுடைய செருப்புகளும், செருப்புகளைத் தாண்டி பாதங்களும் மண்ணிலும் கல்லிலும் ஓடி வந்ததின் அடையாளமாக அழுக்காகி இருந்தன. நீண்ட தூரம் ஓடிவந்தவள் என்பதாலோ என்னவோ அவளுடைய நெஞ்சு ஏறி ஏறி இறங்கிக் கொண்டிருந்தது. மூச்சு முட்டிக் கொண்டிருந்தது.

"வாட் இஸ் ஆல் திஸ்?" என்று மாயன் மறுபடி கேட்டபொழுது கதவைத் திறந்து வெளியே



இறங்கினான் பிரமோத்.

"எங்களை மன்னிக்க வேண்டும் சார்" என்றான்.

"எங்களை எப்படியாவது பிடித்து விட வேண்டும் என்று ஆட்கள் துரத்திக் கொண்டு வந்தார்கள். ரயிலில் இருந்து இறங்கி கல்லிலும், மண்ணிலும், மரங்களின் நடுவிலும், வயலிலும் விழுந்து புரண்டு நாங்கள் தப்பித்து ஓடி வந்துகொண்டிருந்தோம். எங்களை துரத்துபவர்களின் ஜீப் கண் பார்வையில் பட்டதும் ஒளிந்து கொள்ள வேறு இடம் புலப்படாததால் நின்று கொண்டிருந்த இந்த காருக்குள் ஏறிவிட்டோம். தயவு செய்து எங்களை இங்கே இறக்கிவிட்டு விடாதீர்கள். இவளுடைய அப்பா பெரிய அரசியல் புள்ளி. மிகுந்த செல்வாக்கு உள்ளவர். நிச்சயம் என்னையும் இவளையும் வன்முறையாலேயே பிரித்து விடுவார். அதற்கு நீங்கள் இடம் கொடுத்துவிடாதீர்கள்" என்று கெஞ்சுவது போல் பேசினான்.

"ஓஹோ! ஓடி வந்தவர்களா?" என்றார் மாயன்.

அப்படிக் கேட்ட குரலில் எள்ளல் இல்லை. ஒரு கவலையும், அக்கறையும்தான் இருந்தன.

'ஆமாம்' என்பதுபோல் தலையை மேலும் கீழும் ஆட்டினான் பிரமோத்.

இந்துமதி காரில் ஏறி அங்கு ஓரத்தில் ஒண்டிக் கொண்டிருந்த சாந்தினியை தன் விரல்களால் நீவிக் கொண்டே "என்னம்மா ஆயிற்று?" என்றாள்.

பதில் சொல்லாமல் சாந்தினி அப்படியே உடைந்து அழ ஆரம்பிக்க, இந்துமதி மற்றவர்களை பார்த்து திரும்பி "முதலில் செந்திலையும், தன்வீரையும் டாக்டரிடம் அழைத்துப்போவோம். அதுவரை இவர்களும் இந்தக் காரிலேயே இருக்கட்டும். அப்புறம் என்ன என்பதை பேசித் தீர்மானித்துக் கொள்ளலாம்" என்று சொல்ல-

யாராவது ஒரு முடிவு எடுப்பதற்காக காத்திருந்தது போல, மற்றவர்கள் அத்தனை பேரும் உடனே ஆமோதித்து வண்டியில் ஏறிக் கொண்டனர்.

க்வாலிஸ் அந்த சாலையில் ஒரு 'யு' அரை வட்ட போட்டு திரும்பி செங்கல்பட்டை நோக்கி விரைந்தது.

# காட்சி-7

"மன்னிக்க வேண்டும்" என்றார் டாக்டர். "இவர்கள் இரண்டு பேருமே உடனடியாக கவனிக்கப்பட வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறார்கள். இவர்கள் சாப்பிட்ட உணவு ஒத்துக்கொள்ளாமல் ஃபுட் பாய்சனிங் ஆகி இருக்கிறது. இவர்களுடைய வயிறுகளை கழு செய்து சுத்தம் செய்ய வேண்டும். மிக அதிகபட்சமாக பாதிக்கப்பட்டிருப்பதால் ட்ரிப்ஸ் கொடுத்து டி-ஹைட்ரேஷன் ஆகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இந்த சூழ்நிலையில் அவர்கள் உடனடியாக பயணம் எதுவும் மேற்கொள்ள முடியாது."

மாயனும், குமரனும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

"இன்னும் ஒரு அரைமணி நேரம் காத்திருந்தால்?" என்றான் குமரன்.

டாக்டரின் முகம் சிவந்து போனது.

"உங்களுக்காக, அரைமணிநேரத்தில் இவர்களை நான் வெளியே அனுப்பினால், இவர்கள் உயிருக்கு ஆபத்து வந்தால் என்னை காரணம் சொல்லக்கூடாது. இதை எழுதிக் கொடுத்து விட்டு இவர்களை நீங்கள் அழைத்துப்போகலாம்" என்று கோபமான குரலில் சொன்னார்.

மாயன் குமரனின் தோளை அழுத்திஅமைதிப் படுத்தினார். "டாக்டர், நாங்கள் இன்னும் எத்தனை நேரம் இங்கே இருக்க வேண்டும்" என்று கேட்டார்.

"குறைந்த பட்சம் இன்று இரவு வரை இவர்கள் இங்கேயே தங்கியிருந்து ஓய்வு எடுத்துக் கொண்டால்தான் தொடர்ந்து இவர்களை கவனித்து இவர்களை முழுவதுமாக நார்மலுக்குக் கொண்டு வர என்னால் முடியும். இது என்னுடைய தனிப்பட்ட



கிளினிக். இங்கு எல்லா வசதிகளும் உண்டு. நீங்கள் எல்லோரும் இங்கேயே இருக்க வேண்டும் என்ற அவசியம் எதுவும் இல்லை. இவர்களை கவனித்துக் கொள்ள தேவையான அளவு நர்ஸ்கள் என்னிடமும் உள்ளார்கள். யாராவது ஒருவர் துணைக்கு இருந்தால்கூட போதும்."

"ஒன்மினிட் டாக்டர்" என்று சொல்லிவிட்டு குமரன், மாயனை கையைப் பிடித்து டாக்டரின் அறைக்கு வெளியே அழைத்து வந்தான்.

"அங்கிள், மணி இப்பொழுது மூன்றை தாண்டிவிட்டது. நாம் இங்கே நின்று பேசிக் கொண்டிருந்தால் நிச்சயம் நேரம் கடந்து விடும்."

"அதற்காக?"

"ஏதாவது ஒரு தீர்மானத்திற்கு வருவோம் அங்கிள். இன்று அச்சமாளிகைக்கு போவதா? வேண்டாமா? என்று முடிவு செய்து விட்டால் நாம் ஒரு தெளிவான முடிவெடுக்க முடியும்."

அப்பொழுது நர்ஸ் ஒருத்தி அறையிலிருந்து தலையை மட்டும் வெளியே நீட்டி எட்டிப்பார்த்தாள்.

"குமரன் என்பது யார்?" என்று கேட்டாள். "உங்களை பேஷண்ட் கூப்பிடுகிறார்."

குமரன் பரபரப்பாக மாயனையும் அழைத்துக் கொண்டு பக்கத்து அறைக்குள் நுழைந்தான். அங்கே படுக்கையில் அடுத்தடுத்து படுக்க வைக்கப்பட்டு இருந்த இரண்டு பேரில் செந்தில் தன்னுடைய இமைகளை திறந்து இருந்தான். குமரனை சைகை செய்து அருகில் கூப்பிட்டான்.

"குமரா, இதோ பார். என்னால் 'உங்களுடைய நிகழ்ச்சி கெட்டுப்போக வேண்டாம். நாம் ஏற்கனவே அந்த விளையாட்டில் பங்குகொள்வது என்று பதிவு செய்து கட்டணத் தொகையாக பத்தாயிரம் ரூபாய் கட்டியாகிவிட்டது. இந்த சமயத்தில் நாம் போகா விட்டால் அந்தப் பணம் வீணாகி விடும். நானோ, தன்வீரோ வரமுடியாவிட்டால் என்ன? அதிகபட்சம் ஆறு

பேர் என்றுதானே சொன்னாய். நீங்கள் நான்கு பேருமா
சேர்ந்து அந்த விளையாட்டில் ஈடுபட முடியாதா?"

குமரன் மாயனை நிமிர்ந்து பார்த்தான்.

"அங்கிள், உங்களுக்கும் சேர்த்துதா
சொல்கிறேன். இந்த கிளினிக்கை பார்த்தால் நல்ல
கிளினிக்காக தோன்றுகிறது. டாக்டரைப் பார்த்தாலு
திறமையான டாக்டராக தோன்றுகிறார். நீங்கள் அ
தனை பேரும் இருந்தாலும் கூட டாக்டரோ, நர்ஸோதா
எங்களை கவனித்துக் கொள்ளப்போகிறார்கள். நீங்க
உட்கார்ந்திருந்து நேரத்தை வீணடிப்பது என்ப
பைத்தியக்காரத் தனமாக எனக்குத் தோன்றுகிற
குறிப்பிட்ட நேரத்திற்குள் அச்சமாளிகைக்கு நீங்க
போங்கள். விளையாட்டில் ஈடுபடுங்கள். கிடைத்தா
பரிசுடன் நாளைக் காலை வாருங்கள். எங்களை பிக்
செய்து கொள்ளுங்கள். கடைசி நிமிடத்தில் இப்ப
காலை வாரி விட்டதற்காக எங்கள் இருவரையு
மன்னித்து விடுங்கள்."

"பரவாயில்லை" என்று மாயன் சொன்னார்.

"தம்பி, நீ என்ன நினைக்கிறாய்?"

தன்வீரும் அவர்களைப் பார்த்தான். "செந்தி
சொல்வதுதான் சரி. எங்கள் இருவருக்காக இவ்வள
தூரம் வந்துவிட்டு நீங்கள் திரும்பிப் போக வேண்டா
நான்கு பேர் மட்டுமே அச்சமாளிகைக்குப் போ
வாருங்கள். கிடைத்தால் பரிசு. கிடைக்கவில்லையெ
றால், இன்னொரு முறை நாம் ஆறு பேரும் சேர்ந்
முயற்சி செய்வோம்."

"நிச்சயம்தானே?"

"நிச்சயம்தான். இதில் தேவையில்லாத சென்டி
மெண்ட்ஸ் வேண்டாம்" என்றான் செந்தில். "எந்த வித
திலும் உங்கள் யார் பேரிலும் எங்களுக்கு வருத்த
வராது."

அவன் அட்டடி அழுத்தம் திருத்தமாக சொன்னவுடன்

"எனக்கும் அதுதான் சரி என்று தோன்றுகிறத
அங்கிள்" என்றான் குமரன்.



டாக்டரை பார்த்து சிகிச்சைக்கான பணத்தை முன்
கூட்டியே கொடுத்து விட்டு மறுநாள் காலையில் வந்து
அவர்களை அழைத்துப் போவதாகச் சொல்லிவிட்டு
மாயன் குமரனை அழைத்துக் கொண்டு வெளியில்
வந்தார்.

"என்ன சொல்கிறார்கள்?" என்றாள் இந்துமதி.

"அவர்கள் இருவரும் இன்று இரவு வரை
இங்கேயே இருக்க வேண்டும் என்று டாக்டர்
சொல்லிவிட்டார். நம் நான்கு பேரையும் போட்டியில்
கலந்து கொள்ளச் சொல்லி செந்தில் சொல்கிறான்.
அதுதான் சரி என்று எனக்கும் தோன்றுகிறது" என்று
சொல்லிக் கொண்டே நிமிர்ந்தவர் அப்பொழுதுதான்
அதே கிளினிக்கில் இன்னொரு மூலையில் ஒடுங்கி
உட்கார்ந்திருந்த சாந்தினியையும், பிரமோதவையும்
பார்த்தார்.

"இவர்களை என்ன செய்வது?"

"நாம் என்ன செய்ய முடியும்?" என்றான் குமரன்.

"வழியில் ஏதாவது பஸ் ஸ்டாப்பில இறக்கி
விடலாம். அல்லது கொஞ்சம் பணம் கொடுத்து ஒரு
டாக்ஸியில் ஏற்றி விடலாம். வேறு என்ன செய்வது?"

"எனக்கு ஒன்று தோன்றுகிறது" என்றாள்
இந்துமதி.

"அவர்கள் இருவருக்கும் கொஞ்சம் பாதுகாப்பு
தேவை என்று உணர்கிறார்கள். இன்று இரவு முடிய
அவர்கள் நம்முடன் இருந்துவிட்டால் நாளைக்கு
விடிந்தபிறகு என்ன செய்வது என்று அவர்களே
தீர்மானித்துக்கொள்ளட்டுமே."

"என்ன சொல்கிறாய் இந்து?"

"புரியவில்லையா அங்கிள்? எப்படியும்
செந்திலும், தன்வீரும் நம்முடன் வரப்போவதில்லை
என்று முடிவாகி விட்டது. அந்த இரண்டு பேருடைய
இடத்தில் இவர்கள் இருவரையும் அழைத்துக் கொண்டு
நாம் அச்சமாளிகைக்குச் சென்று விட்டால் இன்று இரவு

"நல்ல ஐடியாதான். ஆனால் அவர்களுக்கு இதில் சம்மதம் இருக்கிறதா என்று தெரிந்து கொள்ள வேண்டுமே."

"நான் கேட்கிறேன்" என்றாள் இந்துமதி.

தங்களை நோக்கி அந்தக் குழுவில் இருந்து ஒரு பெண் வருவதை பார்த்ததும் சாந்தினி பிரமோத்தின் கையை இறுகப் பற்றிக் கொண்டாள்.

இந்துமதி அவர்களுக்கு அடுத்த இருக்கையில் உட்கார்ந்து சிக்கனமான வார்த்தைகளில் நிலைமையை எடுத்துச் சொன்னாள்.

சாந்தினி பிரமோத்தை திரும்பிப் பார்த்தாள்.

"எனக்கு பயமாக இருக்கிறது" என்றாள்.

"நான் ஒன்று சொல்லட்டுமா?" என்றான் பிரமோத். "ரத்த வெறி பிடித்து அலையும் உன் அப்பாவின் ஆட்களை விடவா அந்த மாளிகையில் வேறு ஏதும் பயமுறுத்துவதாக இருந்து விடப் போகிறது. நான் இருக்கும் வரை உனக்கு எந்த ஆபத்தும் வராது என்ற தைரியம் உனக்கு இருந்தால் என்னுடன் வா. நமக்கும் இது ஒரு மாற்றமாக இருக்கட்டும். ஒரு வேளை வெற்றிபெற்றால் நமக்கும் ஒரு பரிசுத் தொகை கிடைக்கும். அது நிச்சயம் நம்முடைய எதிர்காலத்தை தீர்மானிக்க உதவும்" பிரமோத்தின் குரல் தெளிவாக உறுதியாக இருந்தது.

**ஒரு அன்பான எச்சரிக்கை:**

**பலவீனமான இதயமுள்ளவர்கள் இங்கேயே விலகி விடலாம்.**


**துணிச்சலானவர்கள் மட்டும் தொடர்ந்து அச்சமாளிகைக்குள் நுழையலாம்.**

**With Love,**

**சுபா**



## 1



க்வாலிஸ் கார் பிரதான சாலையில் இருந்து சற்றே விலகி செம்மண் நிறைந்த பாதையில் பயணப்பட்டது. அங்கங்கே நட்டு வைத்த அம்புக் குறிகள் அச்ச மாளிகைக்கு வழி காட்டின. நேரம் பிற்பகல் நான்கை நெருங்கிக் கொண்டிருந்ததால் சூரியன் மேற்கில் உக்கிரம் குறையாமல் தழைந்து கொண்டிருந்தது.

காரின் பின் இருக்கையில் அருகருகே உட்கார்ந்திருந்த பிரமோத்தும் சாந்தினியும் ஒருவர் கையை ஒருவர் விடவே இல்லை. வாழ்க்கையின் புதிய அனுபவத்தை தேடி புறப்பட்டு இருந்த அவர்களுக்கு முற்றிலும் எதிர்பாராத ஒரு அனுபவம் குறிக்கிட்டதில் கொஞ்சம் வியப்பும், கொஞ்சம் எதிர்பார்ப்பும், கொஞ்சம் படபடப்பும் கலந்திருந்தன.

குமரன் அந்த குழுவிலேயே மிகவும் துடிப்பானவனாக ஏற்கனவே பழகிவிட்ட ஒரு இடத்திற்கு போகிற பரபரப்புடன் காணப்பட்டான்.

"இன்னும் மூன்று நான்கு கிலோ மீட்டரில் அச்ச மாளிகை வந்து விடும்" என்று அவன் சொல்லிக் கொண்டு இருக்கும்பொழுதே அடுத்த திருப்பத்தில் தூரத்து மாளிகை கண்களுக்கு புலப்பட்டது. குன்றங்களின் பின்னணியில் மலையை ஒட்டி அமைக்கப்பட்டது போல் ஒரு அடர்ந்த காடு தெரிந்தது. நெருக்கமாய் நின்றிருந்த மரங்களை நகர்த்தி விட்டு நடுவில் எழுப்பப்பட்டதுபோல் செங்குத்தாக ஒரு கட்டிடம் தெரிந்தது.

"அதுதானா?" என்றார் மாயன்.

"அதுதான். இந்த வெளிச்சத்தில் ரொம்ப சாது போல் தோற்றமளிக்கும் இந்தக் கட்டடம் இருட்டானதும் தன்னுடைய விஷமத்தனங்கள் அத்தனையையும்

காட்டும்" என்றான் குமரன்.

இப்போது காரில் இருந்தவர்களுக்கு பொதுவான ஒரு எதிர்பார்ப்பு வந்துவிட்டது. எல்லோருடைய பார்வையும் அச்சமாளிகையை நோக்கிச் செல்லும் அந்தப் பாதையிலேயே நிலைத்தன.

விரைந்து கடக்கும் மரங்கள், புதர்கள், செடிகொடிகளுக்கு இடையே வளைந்து வளைந்து திரும்பிய அந்த பிரத்யேக பாதை சின்ன சின்ன மேடு பள்ளங்களுக்கு பின்னே அச்சமாளிகையின் அருகாமையில் கொண்டு விட்டது.

மாளிகையின் நெருக்கத்திற்கு வந்ததுமே எல்லோர் மூச்சிலும் ஒரு வேகம் கூடியது.

வெளியில் இருந்து பார்த்தால் ஒரு பழைய புராதன கோட்டை போலவே தென்பட்ட அந்த மாளிகையின் காம்பவுண்ட் சுவர் மூன்றாள் உயரத்திற்கு கருங்கற்களால் எழுப்பப்பட்டிருந்தது. அந்த சுவருக்கு மேலே மூன்றடி உயரத்திற்கு நெருக்கமான முள்வேலி வரிசைகள்.

"இந்த வேலியில் இரவு நேரத்தில் மின்சாரம் பாய்ச்சப்படுவதாக சொல்கிறார்கள்" என்றான் குமரன்.

கருங்கல் காம்பவுண்ட் சுவர் இடதும் வலதுமாக ...டு கண்ணுக்கு எட்டிய தூரம் வரை தொடர்ந்து சென்றது.

"கிட்டத்தட்ட ஒரு கிராமத்தையே நிர்மாணிக்கக் கூடிய அளவில் மிகப்பெரிய நிலப்பகுதியை வாங்கி இந்த அச்சமாளிகையை நிர்மாணித்திருக்கிறார் ஜான் கென்னடி" குமரன் இப்படிச் சொன்னதும் எல்லோரும் அவனை ஆச்சரியமாகத் திரும்பிப்பார்த்தார்கள்.

"ஜான் கென்னடி என்றதும், மறைந்து போன அமெரிக்க ஜனாதிபதி நினைவு வந்ததா? சாரி... அவர் அல்ல. இந்த ஜான் கென்னடி இந்தியாவைச் சேர்ந்தவர், அமெரிக்காவிலும் இருந்தவர். அங்கு கோடிக்கோடியான டாலர்களைத் தொழிலில் சம்பாதித்து மாபெரும் வெற்றி பெற்றவர். அவருக்கு என்று பிள்ளைகளோ, குழந்தைகளோ, வாரிசுகளோ கிடையாது. அவ்வளவு



நிறைய சொத்துக்களை வைத்துக் கொண்டு ராஜ்ஜியத்தை பெருக்கிக் கொண்டே போய் விட்டார். ஒரு கட்டத்தில் வாழ்க்கை சலித்து விட்டது. அவர் இல்லாமலும் தானாகவே அந்த பிஸினஸ் நடக்கும் என்று தீர்மானமான பின் அவருடைய பொழுதுபோக்கிற்காக இந்தியாவிற்கு வந்து தன் தந்தை பெயரில் ஒரு அறக்கட்டளை ஆரம்பித்து அந்த அறக்கட்டளையின் பெயரில் தீம் பார்க் என்ற அடிப்படையில் இந்த நிலப்பகுதியை வாங்கிப் போட்டார்."

"ஜான் கென்னடியின் முழு சரித்திரமும் உனக்கு தெரியும் போலிருக்கிறதே" என்றாள் இந்துமதி புன்னகைத்தபடி.

"போனமுறை வந்தபொழுதே அவரைப்பற்றி கேள்விப்பட்டுவிட்டேன். ஆனால் பார்க்கும் வாய்ப்பு கிடைக்கவில்லை. இந்த முறை பார்க்க முடியும் என்று நினைக்கிறேன்" என்றான் குமரன்.

அச்சமாளிகையின் கருங்கல் சுவர்களுக்கு நடுவில் இரண்டாள் உயரத்திற்கு எழுப்பப்பட்டிருந்த பெரிய இரும்பு கேட்டுகள் வழியை மறித்து நின்றன.

காரின் ஹாரன் ஒலிக்கப்பட்டதும் இரும்பு கேட்களில் ஒரு சின்ன சதுரம் திறக்கப்பட்டு அதன் வழியே ஒரு முகம் எட்டிப்பார்த்தது.

குமரன் காரில் இருந்து கேட்டை நெருங்கினான்.

"இன்றைக்கு இரவு நடக்கும் விளையாட்டில் பங்கு கொள்ள வந்திருப்பவர்கள் நாங்கள்" என்று சொன்னான்.

அதற்கான கட்டணத்தை கட்டிவிட்டதற்கான ரசீதை காட்டினான்.

எட்டிப் பார்த்த தலை எந்த பதிலும் சொல்லாமல் ஆமோதித்து சிறு அசைவை மட்டும் ஏற்படுத்தியது. கேட்கள் எந்த சப்தமும் இன்றி திறந்து விடப்பட்டன.

கார் ஒரு சின்ன மேட்டில் ஏறி உள்ளே நுழைந்ததும் கேட்கள் மீண்டும் மூடப்பட்டன.

"வீ ஆர் ஜஸ்ட் இன் டைம்" என்றார் மாயன்.

இப்பொழுது பாதை சிறப்பான தார் சாலையாக அமைந்திருந்தது. காரின் வேகத்தை கூட்டினார் மாயன்.

இரண்டு பக்கமும் அடர்ந்த மரங்கள். மரங்களின் ஆதாரவை நாடி வளர்ந்திருந்த செடிகள், கொடிகள், பூத்துக்குலுங்கிய மலர்கள், ததும்பி நிற்கிற கனிகள், காய்கள் வெளிச்சத்திற்கு பார்ப்பதற்கு எல்லாமே ரம்மியமாக இருந்தது. ஆனால் கேட்கள் மூடப்பட்டுவிட்ட சூழ்நிலையில் வெளி உலகத்திலிருந்து முற்றிலுமாக துண்டிக்கப்பட்டு ஒரு மாபெரும் சிறைக் கூடத்திற்குள் நுழைந்துவிட்டது போல் இருந்தது.

க்வாலிஸ் வெண்ணெய் போல் இருந்த பாதையில் வழுக்கிக் கொண்டு விரைந்தது. காருக்குள் இருந்த ஒவ்வொருவருக்கும் அவர்களை அறியாமலேயே ரத்தத்தில் ஒரு வேகம்.

சற்று தூரம் பயணம் செய்ததும் ஒரு ஆரஞ்சு பந்தை குறுக்கில் வெட்டி மேல்பாதியை வைத்ததுபோல் ஒரு சிறு கட்டிடம். அந்த அரைக்கோளக் கட்டிடத்திற்குள் நுழைந்ததும் சீருடை அணிந்த ஒரு பணியாளர் கை நீட்டி காரை நிறுத்தினார்.

"நீங்கள் இறங்கி உள்ளே பதிவு செய்ய போகலாம். இனி இந்த கார் உங்களுக்குப் பயன்படாது. விளையாட்டு முடிந்து நாளைக்கு திரும்பும்பொழுது இதே கட்டிடத்தில் உங்களுடைய கார் உங்களிடம் ஒப்படைக்கப்படும். காரில் நீங்கள் எத்தனை மதிப்பு மிக்க பொருட்களை வேண்டுமானாலும் விட்டுவிட்டுப்போகலாம். அதற்கு ஒரு பட்டியல் தயாரிக்கப்படும். அத்தனையும் பத்திரமாக உங்களிடம் திருப்பித் தரப்படும்."

எல்லோரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர். காரில் இருந்து இறங்கினர்.

மாயன் தன் கார் சாவியை அந்த பணியாளிடம் கொடுத்தார்.

மாயனும், குமரனும் முன்னே நடக்க சாந்தினியும்,



பிரமோத்தும் அடுத்து தொடர கடைசி இருவராக அழகப்பனும், இந்துமதியும் அந்த கட்டிடத்திற்குள் கை வீசி நுழைந்தார்கள்.

பிரமோத்தின் சிறு பயணப்பை மட்டும் காருக்குள்ளேயே இருந்தது.

கட்டிடத்திற்குள் நுழைந்ததுமே குளுமையான காற்று அவர்களை சூழ்ந்து கொண்டது.

ஒரு ஐந்து நட்சத்திர ஹோட்டலுக்குள் நுழைந்தது போல அந்த அறை கச்சிதமாக அலங்கரிக்கப்பட்டு இருந்தது.

"இந்தப் பக்கமாக வாருங்கள்" என்று எங்கிருந்தோ ஒரு பணியாளன் தோன்றி அவர்களை அழைத்துக் கொண்டு நடந்தான்.

பளபளப்பாக தீட்டப்பட்ட கிரானைட் தரைகளில் நோகாமல் நகர்ந்து அவர்கள் அடுத்த கதவைத் திறந்து நுழைந்தார்கள். அது ஒரு சின்ன ஆடிட்டோரியம் போல அமைக்கப்பட்டிருந்தது. சினிமா அரங்குகளில் இருப்பதைப் போன்ற இருக்கைகள். ஆனால் சினிமா அரங்கைப் போல நூற்றுக்கணக்கில் இருக்கைகள் கிடையாது. மொத்தமே இருபது இருக்கைகள்தான். இருக்கைகளிலிருந்து நிறைய இடைவெளி விட்டு ஒரு சிறு மேடை. அதன் பின்னால் சினிமாக்கள் காட்டக் கூடியது போன்ற ஒரு பரந்த வெள்ளைத் திரை.

இந்த அரங்கத்திற்குள்ளும் குளிர்சாதன பெட்டியின் அதீத முயற்சியால் அறை 'சில்'லென்று பனிவாசத்துடன் இருந்தது.

"நீங்கள் 'ஏ' வரிசையில் அமருங்கள்" என்று பணியாளன் சொன்னான்.

அந்த அரங்கத்திற்குள் நுழைந்ததும் 'பி' வரிசையில் ஏற்கனவே ஆறு பேர் அமர்ந்திருப்பதை அவர்கள் பார்த்தார்கள்.

"அவர்கள்தான் இரண்டாவது க்ரூப்" என்று குமரன் கிசுகிசுப்பாக மாயனிடம் சொன்னான்.

மாயன் அந்த இரண்டாவது குழுவை பார்வையால் அளந்து கொண்டு தங்களுக்கென்று ஒதுக்கப்பட்ட இருக்கைகளில் போய் அமர்ந்தார்.

வாட்சை திருப்பிப் பார்த்தான். மணி 4.27.

எல்லோரும் ஒரு எதிர்பார்ப்புடன் அமர்ந்திருக்க ஒருவரோடு ஒருவர் பேச வேண்டும் என்ற இச்சையே இல்லாமல் எல்லோரும் மௌனமாக மேடையையே ...த்துக் கொண்டிருந்தார்கள்.

மிகச் சரியாக நான்கு முப்பது ஆனவுடன் ...கத்திற்குள் எரிந்து கொண்டிருந்த விளக்குகள் அணைந்து இருள் சூழ்ந்தது. அந்த இருளில் மேடையில் ஒரு சிறுஒளிவட்டம் தோன்றியது. அதன் வெளிச்சம் மங்கலாக இருந்து கொஞ்சம் கொஞ்சமாக பிரகாசமாகிக் கொண்டே வந்து முழுப் பிரகாசத்தை அடைந்த போது மேடையில் இதற்கு முன் பார்த்திராத ஒரு நாற்காலியில் ஒரு மனிதர் அமர்ந்திருப்பது தெரிந்தது.

"எல்லோருக்கும் வணக்கம்" அந்த மனிதரின் குரல் கணீரென்று ஒலித்தது. நாற்காலியில் அமர்ந்திருந்த போதும் எழுந்து நின்றால் அவர் ஆறடிக்கும் மேலேயே இருப்பார் என்று புலப்பட்டது.

அகலமான தோள்கள், திடமான மார்பு, உறுதியான புஜங்கள், நேரான பார்வை. அவருடைய வயதை கணிக்க முடியாத தெளிவான உச்சரிப்பு.

"நண்பர்களே! என் பெயர் ஜான் கென்னடி அமெரிக்க அதிபர் கென்னடியின் பேரில் எனக்கிருந்த பிரியம் காரணமாக என்னுடைய ஒரிஜினல் பெயரை மாற்றி விட்டு ஜான் கென்னடியாக பதிவு செய்து கொண்டேன். இந்த அச்ச மாளிகை உங்களுக்கெல்லாம் மிகப்புதிய ஒரு அனுபவத்தை கொடுக்கும். அமெரிக்காவில் சில தீம் பார்க்குகள் வித்தியாசமானவை. அவற்றையெல்லாம் பார்க்கும்பொழுது நம்முடைய நாட்டிலும் இதைப்போன்ற ஒன்றை நிறுவ வேண்டும் என்று எனக்கு மிகுந்த ஆவல் இருந்தது. அதன் பேரிலேயே இதை ஆரம்பித்துவிட்டேன். இந்த



வெய்யில் கால
விற்பனையில்...
த்ரில்நாவல்



கின்னஸ் சாதனை நாயகன்
ராஜேஷ்குமாரின்
அனலடிக்கும் எழுத்தில்
மெகா ஹிட் நாவல்
படிக்கப் படிக்க
'ஓ' போடுவீர்கள்

மாளிகையில் மொத்தம் ஏழு மாடிகள் இருக்கின்றன. உங்களுடைய பயணம் ஏழாவது மாடியில் துவங்கும். குறிப்பிட்ட சில அறைகளில் சில வெள்ளி நாணயங்கள் வைக்கப்பட்டுள்ளன. எந்த எந்த மாடியில் எந்த எந்த அறையில் அந்த வெள்ளி நாணயங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன என்ற முழு விவரமும் உங்களுக்கு சொல்லப்படும். நீங்கள் செய்ய வேண்டியவை எல்லாம் உங்களால் முடிந்த வரை அந்த நாணயங்களை சேகரித்து இறுதிக் கட்டமாக கீழே வந்து சேர்ந்த பிறகு விடிந்தவுடன் என்னிடம் ஒப்படைக்க வேண்டும். ஒவ்வொரு நாணயத்திற்கும் ஒவ்வொரு மதிப்பு உண்டு. நீங்கள் கொண்டு வரும் நாணயங்களின் மதிப்பைப் பொறுத்து உங்களுக்கான பரிசு கொடுக்கப்படும். மொத்தம் இரண்டு குழுக்கள் தனித்தனியே இந்த விளையாட்டில் ஈடுபடும். இரண்டு குழுக்களில் முந்திக் கொள்பவர்களுக்கு பரிசுத் தொகை நிச்சயம் அதிகம் இருக்கும். எல்லா வெள்ளி நாணயங்களையும் சேகரித்து விட்டால் கிட்டத்தட்ட மூன்று கோடிரூபாய்க்கு மேல் உங்களுக்குப் பரிசு காத்திருக்கிறது.

இந்த விளையாட்டு நிச்சயமாக ஆரோக்கியமாக அமைய வேண்டும் என்பது என்னுடைய ஆசை. அதனால் இதை விளையாட்டாகவே எடுத்துக் கொண்டு உங்களுடைய சாமர்த்தியத்தால் தான் நீங்கள் முந்திச் சென்று வெள்ளி நாணயங்களை கவர வேண்டுமே தவிர ஏற்கனவே எடுத்து விட்ட ஒரு குழுவிடமிருந்து அடித்துப் பிடுங்குவதோ திருட்டுத்தனமாக பறிப்பதோ தவறாக முடியும். இந்த கட்டடத்தில் வெவ்வேறு பகுதிகளில் ரகசியக் கேமராக்கள் வைக்கப்பட்டுள்ளன. அது தொடர்ந்து இயங்கிக் கொண்டே இருக்கும். உங்களுடைய ஒவ்வொரு நடவடிக்கையையும் என்னுடைய அறையில் அமர்ந்தபடி நான் மற்றும் என்னுடைய நண்பர்கள் பார்த்துக் கொண்டிருப்போம்.

எனவே யாருக்கும் தெரியாது என்று நினைத்து எந்தத் தவறிலும் ஈடுபட வேண்டாம். இந்த விளையாட்டிற்குத் தேவையானதெல்லாம் நிறைய



நெஞ்சுறுதி. பரிசுத் தொகை மூன்று கோடி என்கிற போது அதற்குத் தகுந்தபடி இந்த விளையாட்டு சற்று கடினமாகத்தான் வைக்கப்பட்டுள்ளது. உங்களுடைய தைரியத்திற்கு சவால் விடும்படியான பல அறைகளை நீங்கள் திறக்க வேண்டியது வரும். முழு விவரங்களையும் இப்பொழுது ஒரு சிறு சினிமா மூலமாக உங்களுக்கு விளக்கப் போகிறேன். அந்த சிறு படம் இங்கே ஓடும் போது கவனமாக இந்த கட்டடத்தின் ஒவ்வொரு பகுதியும் காட்டப்படும்பொழுது அதை மனதில் குறித்துக் கொள்ளுங்கள். ஒருமுறைதான் இந்தப்படம் போட்டுக் காட்டப்படும். அதன் பின்னணியில் ஒவ்வொரு இடத்தைப் பற்றியும் கொடுக்கப்படும் விளக்கமும் மறுபடி சொல்லப்பட மாட்டாது. எனவே உங்கள் கண்கள் படத்தை கவனிக்கட்டும். காதுகள் பின்னணியில் ஒலிக்கும் குரலில் கவனம் வைக்கட்டும். ஏற்கனவே இந்த விளையாட்டில் ஈடுபட்டுவிட்டு இப்பொழுது ஒன்றிரண்டு பேர் மீண்டும் வந்திருக்கலாம். இந்த இடத்தில் ஒரு முறை விளையாடியது போல அடுத்த முறை விளையாட்டு இருக்காது. எனவே சென்ற முறை கிடைத்த அனுபவத்தை வைத்துக் கொண்டு நீங்கள் நடந்துகொள்ள முயன்றால் உங்களுக்கும் உங்கள் குழுவிற்கும் அது பெரிய தலைவலியாகப் போகக்கூடும். ஒவ்வொரு முறையும் விளையாட்டு புதியதாக மாற்றி அமைக்கப்படுவதால் நீங்கள் கவனமாக இருக்க வேண்டும்.

இந்த கட்டடம் முழுவதும் மின்சார மயமாக்கப் பட்டுள்ளது. நவீனமான பல கருவிகள் இங்கே உள்ளன. ஒரு வேளை மின்சாரம் நின்று போனாலும் உடனடியாக பயன்படுத்தக் கூடிய ஜெனரேட்டரும் இங்கே உள்ளது. சக்திவாய்ந்த ஜெனரேட்டர் காரணமாக இங்கு மின்சாரத் தடை என்பதே கிடையாது. இந்த விளையாட்டில் பல கருவிகள் மின்சாரத்தால் இயங்குபவை. இருந்தாலும் முற்றிலுமாக பாதுகாப்புடன் அமைக்கப்பட்ட சர்க்யூட்கள் என்பதால் யாருக்கும் மின்சாரத்தினால் எந்த ஆபத்தும் ஏற்படாது என்பதை உறுதியாக நான் சொல்வேன். இந்த

விளையாட்டு திட நெஞ்சுடையவர்களுக்கு மட்டு
என்று நான் சொன்னதற்கு காரணம் பல சந்தர்ப்பங்களி
உங்களுடைய துணிச்சலையும், தைரியத்தை
சோதித்து கிட்டத்தட்ட மயானக் குழியில் இழுப்ப
போல் பயமுறுத்தும் பல கட்டங்கள் இங்கே அமைக்க
பட்டுள்ளன.

விளையாட்டில் அதிகபட்சம் ஒரு குழுவிற்கு
ஆறு பேர் இருக்கலாம். குறைந்த பட்சம் ஒரு நபராவது
பெண்ணாக இருக்க வேண்டும் என்பது விதி. ஒரு
சமயத்தில் இரண்டு குழுக்கள் மட்டுமே பங்கு கொள்ள
முடியும். இப்பொழுது இங்கே 'ஏ' குரூப், 'பி' குரூ
இரண்டு குழுவும் ஆறு ஆறு பேர் இருப்பதை நா
பார்க்கிறேன். ஏ-குரூப்பில் இரண்டு பெண்க
கிறீர்கள். பி-குரூப்பில் ஒரு பெண் இருக்கிறார்.
இந்த விளையாட்டு மாலை வெளிச்ச
யவுடன் துவங்கும். அதுவரை நீங்கள் இந்
சிறுபடத்தை பார்த்தபின் உங்களுடைய சந்தேகங்களை
கேட்டுக் கொள்ளலாம். அதன்பின் ஓய்வெடுக்கலாம்
உங்களுக்குள் அறிமுகப்படுத்திக் கொள்ளலாம். இர
ஏழுமணிக்கு உங்களுக்கு ஒரு லைட்டான டின்ன
கொடுக்கப்படும். ஏழரை மணிக்கு விளையாட்டின் முத
கட்டம் ஆரம்பிக்கும்.

எந்தக் கட்டத்திலும் விளையாட்டிலிருந்து வெ
யேற நீங்கள் நினைத்தால் அதற்கான வழிமுறைக
என்ன? என்பது இந்த படத்தில் உங்களுக்கு சொல்ல
படும். பயம் அதிகமானால் விளையாட்டிலிருந்து எந்த
கட்டத்திலும் விலகி விடலாம். உங்களால் இந்
விளையாட்டில் முழு ஈடுபாட்டுடன் கலந்து கொள்
முடியுமா என்பதை நான் தெரிந்து கொள்வதற்காக இங்
ஒரு சிறந்த மருத்துவக் குழு காத்திருக்கிறது. அவர்க
உங்கள் ஒவ்வொருவருடைய இரத்த அழுத்தம், இதய
பற்றிய கணிப்பு இவற்றை செய்வார்கள். ஏற்கனவே இத
நோய் உள்ளவர்களோ அல்லது இதய வ
இருப்பவர்களோ அல்லது மருத்துவமனையில் சிகிச்ச
எடுத்துக் கொண்டவர்களோ இருந்தால் இந்த



கட்டத்திலேயே தயவு செய்து இந்த விளையாட்டிலிருந்து விலகி விடுங்கள். ஆரோக்கியமானவர்களுக்கு இந்த விளையாட்டில் உங்கள் உயிருக்கு எந்த ஆபத்தும் இல்லை என்ற உத்தரவாதம் என்னால் தர முடியும். தயவு செய்து உங்களைப் பற்றிய பொறுப்பை நீங்களே எடுத்துக் கொள்ளுங்கள்.

"இப்பொழுது அச்சமாளிகை பற்றிய படத்தை நாம் பார்க்கப் போகிறோம். மிகச் சிறந்த இரவு நேரம் உங்களுக்கு அமைவதற்காக நல்வாழ்த்துக்கள். நாளை காலையில் உங்களை சந்திப்பேன் இப்பொழுது விடைபெறுகிறேன், வணக்கம்."

வணக்கம் என்ற வார்த்தை சொல்லப்பட்டதும் மேடையில் இருந்த வெளிச்சம் சட்டென முற்றிலுமாக அணைந்து போனது. மீண்டும் அரங்கத்தில் விளக்குகள் மெல்ல விழித்துக் கொண்ட பொழுது மேடையில் யாரும் இல்லை.

ஆரம்பமே ஒரு சின்ன சலசலப்பாக அவர்கள் உணர்ந்தார்கள். மீண்டும் விளக்குகள் மங்கி மறைந்து திரையில் படம் ஓட ஆரம்பித்தது.

அச்சமாளிகையில் ஒவ்வொரு தளம் பற்றியும் அந்தப் படத்தில் விளக்கம் சொல்லப்பட்டது. ஒவ்வொரு தளத்திலும் எந்தக் குறிப்பிட்ட அறையில் வெள்ளி நாணயங்கள் வைக்கப்பட்டுள்ளன என்பதை படம் குறிப்பிட்டது.

தவிர, ஒரு பறவையின் பார்வையில் அச்சமாளிகைக்கு மேலிருந்து ஹெலிகாப்டர் மூலமாக எடுக்கப்பட்ட சில காட்சிகள் காட்டப்பட்டபொழுது அரங்கத்தில் இருந்தவர்களுக்கு பிரமிப்பால் நெஞ்சு விம்மியது.

ஒரு மாபெரும் கானகத்தை அப்படியே இடம் பெயர்த்துக் கொண்டு வந்ததுபோன்ற அமைப்பு அங்கு காணப்பட்டது.

மரங்கள். இடையில் ஒரு ஓடை. இன்னும் சில சிறு

கட்டிடங்கள். எல்லாவற்றையும் ஒருங்கே பார்த்தபோது அந்த முழு பிரதேசத்தையும் சுற்றி ஒட்டியாணம் போல எழுப்பப்பட்டிருந்த உயரமான கருங்கல் காம்பவுண்ட் சுவர் ஏதோ சைனாவின் கிரேட் வால் போல தோன்றியது.

படத்தில் ஒவ்வொரு காட்சியும் ஒவ்வொருவரும் உன்னிப்பாக பார்த்துக் கொண்டு வந்தார்கள். படம் முடிந்து மீண்டும் விளக்குகள் எரிந்தபொழுது ஒரு பயணத்திலிருந்து மீண்டது போன்ற உணர்வு எல்லோரிடமும் இருந்தது.

மேடையில் இப்பொழுது சீருடை அணிந்த ஒரு இளம்பெண் தோன்றினாள்.

"நண்பர்களே! அடுத்து உங்களுக்கெல்லாம் [...]த்துவ பரிசோதனை. இந்த அரங்கத்திற்கு அடுத்த அறையில் அதற்காக நீங்கள் கூட வேண்டும். தவிர, இந்த விளையாட்டில் பங்கு பெற சட்டப்படி பதினெட்டு வயதாவது நிரம்பி இருக்க வேண்டும். இந்த விளையாட்டில் முற்றிலுமாக ஒரு கேளிக்கைத் தொடர்பாக ஏற்படுத்தப்பட்டது என்ற முழு உணர்வுடன் நீங்கள் கலந்துக் கொள்வதற்கான ஒப்பந்தமும் எழுதப்பட வேண்டும். தவிர்க்க முடியாத ஏதாவது காரணத்தினால் உங்கள் உடல் நலனுக்கு தீங்கு ஏற்பட்டால் அதற்கு முழு பொறுப்பும் நீங்களே எடுத்துக் கொள்வதாக கையொப்பம் இட்டு உறுதி தர வேண்டும். எந்த விதத்திலும் நிர்வாகம் இந்த விளையாட்டில் நீங்கள் ஈடுபட வேண்டும் என்று உங்களை வற்புறுத்தவில்லை. முழு மனதுடன் சுய சிந்தனையோடு நீங்களே எடுக்கும் இந்த முடிவிற்கு எழுத்துப் பூர்வமாக உங்களுடைய உடன்பாடு தேவை. தயவுசெய்து எல்லோரும் பக்கத்து அறைக்கு வரும்படிக் கேட்டுக் கொள்கிறேன். வணக்கம்."

அவள் மேடையிலிருந்து மறைந்ததும், சின்ன சலசலப்புடன் அரங்கத்தில் கூடியிருந்த 12 பேர்களும் எழுந்து பக்கத்து அறைக்கு நடந்தார்கள்.





## 2

மருத்துவர்களின் பரிசோதனை வேகமாக நடந்து முடிந்தது.

12 பேருமே இந்த விளையாட்டில் ஈடுபடக் கூடிய தகுதி உடையவர்கள்தான் என்று சான்றிதழ்கள் கொடுக்கப்பட்டன. தவிர, நிர்வாகம் ஏற்கனவே சொன்ன விதிமுறைகளின் படி ஒவ்வொரு நபரும் இந்த விளையாட்டில் முழு சம்மதத்துடன் ஈடுபடுவதாகவும் எந்த அசம்பாவிதம் நேர்ந்தாலும் அதற்கு முழு பொறுப்பு எடுத்துக் கொள்வதாகவும் எழுதிக் கையெழுத்துப் போட்டார்கள்.

மற்ற 10 பேரை அனுப்பிவிட்டு சாந்தினியையும், பிரமோத்தையும் மட்டும் மருத்துவர் இருக்கச் சொன்னார்.

பிரமோத்தின் முகத்தில் ஒரு சின்ன குழப்பம். எதற்காக தங்களை மட்டும் நிற்கச் சொன்னார் என்று புரியாமல் பார்த்தான்.

டாக்டர் அவனை அருகில் அழைத்து "மற்றவர்களை விட உங்களுடைய இதய துடிப்பு சற்று வேகமாக இருப்பதாக எனக்கு தோன்றியது. நிச்சயமாக இந்த அச்சமாளிகைக்குள் வந்தபிறகு ஏற்பட்ட துடிப்பு இல்லை என்றும் எனக்குத் தெரிகிறது. உங்களுக்கு வேறு ஏதாவது கவலை, படபடப்பு உண்டா?"

பிரமோத் சாந்தினியின் முகத்தைப் பார்த்தான். சாந்தினி பிரமோத்தின் முகத்தைப் பார்த்தாள். இருவரும் தாமாக புன்னகைத்தனர். அந்தப் புன்னகை டாக்டரின் முகத்திலும் தொற்றிக் கொண்டது.

"நான் சொல்லட்டுமா?" என்றார் டாக்டர்.

பிரமோத் நிமிர்ந்து பார்த்தான்.

"நீங்கள் இருவரும் இன்னும் கல்யாணம் ஆகாதவர்கள். கல்யாணம் பண்ணிக் கொள்ளப்

போகிறவர்கள். இந்தக் கல்யாணத்திற்கு வீட்டில் எதிர்ப்பு இருக்கிறது. யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் தனியே புறப்பட்டு வந்து விட்டீர்கள். கரெக்ட்?"

"நீங்கள் டாக்டரா? ஜோசியரா?" என்று கேட்டாள் சாந்தினி.

டாக்டர் சிரித்தார்.

"உங்கள் இருவருக்கும் என்னுடைய நல்வாழ்த்துக்கள். இன்றைய மாலைப் பொழுதில் விளையாட்டு ஆரம்பிக்கும் வரை நீங்கள் இருவரும் மற்றவர்களை விட சற்று அதிகமாக ஓய்வு எடுத்துக் கொண்டால் நல்லது. இங்கு இருக்கும் அற்புதமான மரம், செடி, கொடி, இயற்கை இவற்றுடன் சற்று நேரம் செலவு செய்தால் தானாகவே உங்களுடைய படபடப்பு அடங்கி, மனம் ரிலாக்ஸ் செய்யும். ஆல் த பெஸ்ட்."

"தாங்க் யூ டாக்டர்" என்று சொல்லிக் கொண்டு இருவரும் கைகோர்த்தபடியே வெளியே வந்தனர்.

## 3



சுற்றிலும் பாதுகாவலர்கள் போல உயரம் உயரமாக மரங்கள் நிற்க, அவற்றுக்கு நடுவில் அந்த வட்ட வடிவமான திறந்த வெளி இருந்தது. திறந்த வெளியில் சவுகரியமான நாற்காலிகள் போடப்பட்டு அவற்றில் விளையாட்டு குழுவின் உறுப்பினர்கள் ஓய்வாக அமர்ந்திருந்தார்கள்.

அவர்கள் பேசிக் கொண்டே கொறிப்பதற்கு ஏற்றவகையில் முந்திரி, வறுவல், வேர்க்கடலை போன்ற பல நொறுக்குத் தீனிகள் அலங்காரமாக மையமான மேஜையில் வைக்கப்பட்டிருந்தன.

தவிர, ஒவ்வொரு நபரிடமும் தனிப்பட்ட முறையில் ஒரு பணியாளர் "ஏதாவது வேண்டுமா?"



என்று விசாரித்துக் கொண்டிருந்தார். அடுத்த இரண்டு மணி நேரங்கள் எடுக்கப்போகும் ஓய்வுதான். அதன்பிறகு இரவு முழுவதும் தூங்காமல் விழித்திருக்க வேண்டும் என்பது எல்லோருக்கும் தெரிந்திருந்தது.

"இந்த நேரத்தில் இரவு 7 மணிக்கு பிறகு இந்த அச்சமாளிகைக்குள் அங்கும் இங்கும் நடமாடிக் கொண்டிருக்கப் போவது நாம் பன்னிரண்டுபேர்தான். நாம் ஒருவரையொருவர் தெரிந்து கொள்வது தவறில்லை. பொதுவான அறிமுகங்களை செய்து கொள்வோம்" என்று மையத்தில் நின்று மாயன் குரல் கொடுத்தார்.

பன்னிரண்டு பேரிலும் அவர்தான் மூத்தவர் என்பதாலும் இயல்பிலேயே தலைமைப் பொறுப்பை எடுத்துக் கொள்ளும் மிடுக்கு அவருடைய குரலில் இருந்ததாலும் மற்ற பதினோரு பேரும் தாமாகவே அவரை கவனிக்க ஆரம்பித்தார்கள்.

மாயன் முதலில் பேசினார்.

"என் பெயர் மாயன். நான் இந்திய ராணுவத்தில் ஒரு கேப்டனாக பணியாற்றியவன். என்னுடைய 35வது வயதில் கணுக்காலில் ஏற்பட்ட ஒரு சிறு காயம் காரணமாக தொடர்ந்து ராணுவத்தில் நீடிக்க முடியாத நிலைமை. அதனால் ராணுவத்தில் இருந்து ஓய்வு பெற்று நகரத்தில் எனக்கென்று ஒரு பிசினஸ் ஆரம்பித்தேன். கணுக்காலில் சிறு காயம் என்று நான் சொல்வது ஏதோ வழுக்கி விழுந்து அல்லது தடுக்கி விழுந்து ஏற்படுத்திக் கொண்ட காயம் இல்லை., எதிரிக்கும் நமக்கும் கடுமையான போர் நடந்தபொழுது எதிரி சுட்ட ஒரு தோட்டா என்னுடைய கணுக்காலில் புகுந்து அந்த எலும்பை சிதைத்து விட்டது. அதனால் வேகமாக ஓடுவது என்பது அந்த சமயத்தில் இயலாமல் போனது. ஓய்வு பெற்றேன். அதோடு நிற்கவில்லை. அதன் பின் நான் வேறு பிஸினஸில் ஈடுபட்டாலும் விடாமல் உடற்பயிற்சிகள் செய்து என்னுடைய உடம்பை எப்போதும் 'கிண்' என்று வைத்து இருக்கிறேன். இப்பொழுது என்னுடைய காயம் எங்கே போனது என்று

எனக்குத் தெரியவில்லை. நம் பன்னிரண்டு பேருக்கும் ஓட்டப்பந்தயம் வைத்தால் நிச்சயம் அதில் முதலாவதாக வருவேன் என்று தைரியமாக என்னால் சொல்லிக் கொள்ள முடியும்."

மாயன் இப்படிச் சொன்னதும் கூடியிருந்த மற்றவர்கள் கைதட்டி அவரை உற்சாகப்படுத்தினார்கள்.

"என்னுடைய பிஸினஸில் அவ்வப்போது நான் சந்திக்கும் இளைஞன்தான் குமரன். அவனுக்கு என் மீது ஒரு ஈடுபாடு உண்டு. மரியாதை உண்டு. இந்த அச்சமாளிகை பற்றி அவன்தான் எனக்கு எடுத்துச் சொன்னான். வெகு நாட்கள் கழித்து மீண்டும் நான் போர் முனைக்கு போவதுபோல உணர்ந்தேன். ஆக்ஷன் எனக்கு மிகப்பிடித்த ஒரு விஷயம். சுறுசுறுப்பாக சூடாக இன்றைய இரவு அமையப்போகிறது என்பதில் எனக்கு பூரண நம்பிக்கை இருக்கிறது. திரு. ஜான் கென்னடி சொன்னதுபோல இதை முழுக்க முழுக்க ஒரு விளையாட்டாகவே நாம் பார்ப்போம். நமக்குள் எந்த சண்டை, சச்சரவும் வேண்டாம். ஓ.கே."

மாயன் அமர்ந்ததும் அழகப்பன் எழுந்தான்.

"என் பெயர் அழகப்பன். எனக்கு இப்போது வயது 30. என்னுடைய வாழ்க்கையில் ஒரு பூங்காற்று நுழைந்து விலகியதுபோல எனக்கென்று ஒரு குடும்பம் அமைந்தது. அமைந்த வேகத்திலேயே அது சிதைந்தது. அதனால் எதிலும் ஈடுபாடு இல்லாமல் சற்று சலிப்புடனேயே என்னுடைய வாழ்க்கை நடந்து கொண்டிருந்தது. அந்த சமயத்தில்தான் அச்ச மாளிகை பற்றி தெரிய வந்தது. இந்தப்போட்டியில் கலந்து கொள்ள வேண்டும். இதன் மூலம் சலிப்புற்று இருக்கும் என் வாழ்க்கையில் ஒரு சுறுசுறுப்பு வரும் என்ற நம்பிக்கையுடன் நான் வந்திருக்கிறேன்."

அடுத்ததாக இந்துமதி எழுந்தாள்.

"முதல் சந்திப்பிலேயே எல்லோரிடமும் எல்லா விஷயங்களையும் வெளிப்படையாக பேசி விட முடியாது. ஆனால் உங்களை எல்லாம் பார்க்கும்பொழுது



எனக்கென்னவோ தைரியமாக உங்களிடம் என்னுடைய பின்னணி பற்றி சொல்லலாம் என்று தோன்றுகிறது."

பலத்த பீடிகையுடன் அவள் ஆரம்பிக்கவும், எல்லோருடைய கவனமும் அவள் பக்கமே கூர்மையாக திரும்பின.

"சின்ன வயதிலேயே அப்பா, அம்மா இருவரையும் நான் இழந்து விட்டேன். என்னிடம் அன்பாக இருந்து என்னை வளர்த்தது என்னுடைய அண்ணன். ஆனால் அவனுக்கு கல்யாணம் ஆகி அண்ணி வந்தபொழுது என்ன காரணத்தினாலோ அவனுக்குள் ஒரு மனக்குழப்பம். அண்ணியை அடக்கியே வைத்திருக்க வேண்டும் என்று அவனாக தீர்மானத்தைப் போட்டுக் கொண்டு அண்ணியுடன் சண்டை போட்டுக் கொண்டு சச்சரவிட்டுக் கொண்டு அவளுடைய கண்களில் கண்ணீரை பார்த்துக் கொண்டு அதிலேயே சந்தோஷத்தை அனுபவித்துக் கொண்டு இருந்தான். தினந்தோறும் எழுந்ததிலிருந்து தூங்கப்போகும் வரை வெவ்வேறு காரணங்களுக்காக அவர்கள் சண்டை போட்டுக் கொள்வதும் அவன் தன்னுடைய ஆண் ஆதிக்கத்தை அவள் மீது செலுத்துவதும் அதை தட்டிக் கேட்பதற்காக குறுக்கில் நான் போனால் என் மீது எரிந்து விழுந்து கோபம் கொள்வதும் என்னை நிலைகுலையச் செய்து விட்டன. திருமணம் என்று ஒன்று ஆகிவிட்டால் ஆண் மகனுக்கு பேய் பிடித்து விடுகிறது. மனைவியை அடக்கி வைக்க வேண்டும் என்று ஒரு காம்ப்ளக்ஸ் அவசியம் இல்லாமல் வந்து விடுகிறது என்று எனக்குத் தோன்றியதால் திருமணமே வேண்டாம் என்று தீர்மானித்து விட்டு நான் தனியாக வாழ்ந்து கொண்டிருக்கிறேன். எனக்கும் வாழ்க்கையில் வித்தியாசமான சந்தர்ப்பங்களைத் தேடி அலையும் மனது உண்டு. அச்சமாளிகை பற்றி குமரன், மாயன் சாரிடம் சொன்னார். இந்த விளையாட்டில் பங்கு கொள்ள ஒவ்வொரு குழுவிலும் குறைந்த பட்சம் ஒரு பெண்ணாவது இருக்க வேண்டும் என்பது விதி. மாயன் சாருக்கு நான் பழக்கமாகியிருந்ததால், இந்த

விளையாட்டில் கலந்து கொள்ள வர முடியுமா?' என்று அவர் கேட்டார். வாழ்க்கையில் வித்தியாசமான ஒரு அனுபவத்திற்காக ஏங்கிக்கொண்டிருந்த நான் உடனே ஒப்புக் கொண்டேன். இதோ உங்கள் முன்னிலையில் நான்."

அடுத்ததாக குமரன் எழுந்தான்.

கல்லூரிப் படிப்பை முடித்தபிறகு நண்பர்களுடன் சேர்ந்து அச்சமாளிகைக்கு வந்து போன தன்னுடைய அனுபவத்தைப் பற்றிச் சொன்னான்.

அதற்கு அடுத்ததாக சாந்தினி எழுந்தபொழுது கூடவே பிரமோத்தும் எழுந்தான்.

"நாங்கள் தனித்தனியாக அறிமுகம் செய்து கொள்ள வேண்டாம் என்று நினைக்கிறேன். உண்மையில் அச்சமாளிகை விளையாட்டில் நாங்கள் பங்கு கொள்வது மிகவும் ஆச்சர்யமான ஒரு நிகழ்வு. இன்று மதியம் வரை இப்படி ஒரு விளையாட்டு இருக்கிறது என்றோ இதில் கலந்து கொள்வதற்காக ஒரு குழு வரப்போகிறது என்றோ எங்களுக்குத் தெரியாது. ஆனால் எங்கள் வாழ்க்கையில் சின்ன சின்ன சுறுசுறுப்பான சம்பவங்கள் துரத்திக் கொண்டே வந்து எங்களை மிக நல்ல மனிதர்களிடம் சேர்த்துவிட்டது. வேறு இரண்டு பேர் வந்திருக்க வேண்டிய இடத்தில் அவர்கள் உடல் நலம் சரியில்லாமல் போனதால் தற்செயலாக நாங்கள் சேர்ந்து கொண்டோம். அச்சமாளிகை விளையாட்டா, அல்லது அருவியின் உயரத்திலிருந்து குதிப்பதா? என்பது முக்கியமில்லை. நாங்கள் இருவரும் இணைந்தே இதில் ஈடுபடப் போகிறோம் என்கிற ஒரே ஒரு விஷயமே எங்களுக்கு பெரும் ஊக்கமாக இருக்கிறது."

சாந்தினியும் பிரமோத்தும் சேர்ந்து வணங்கியபொழுது கூடியிருந்த மற்றவர்கள் எல்லோருமே அவர்களை உற்சாகப்படுத்தும் விதமாக தங்களுடைய சந்தோஷத்தைக் காட்டினார்கள்.

முதல் குழு உட்கார்ந்த பிறகு இரண்டாவது



குழுவில் இருந்த ஆறு பேரும் தங்களை அறிமுகப்படுத்தக் கொள்ள ஆரம்பித்தார்கள்.

"எல்லோருக்கும் வணக்கம். என் பெயர் மோகன். நான் ஒரு கல்லூரி புரொஃபசர். ஆரம்ப காலத்தில் ஸ்கவுட் மூமெண்ட், அப்புறம் என்.சி.சி. என்று என்னை ஈடுபடுத்திக் கொண்டவன். ஆர்மியில் சேர வேண்டும் அல்லது போலீசிலாவது சேர வேண்டும் என்று ஆர்வப்பட்டு அதற்கு வாய்ப்பே இல்லாமல் போனவன். அச்சமாளிகை பற்றி தெரிந்ததும் என்னுடன் இன்னும் ஐந்து பேரை நானே குழுவாக சேர்த்து இந்த விளையாட்டில் ஈடுபடுவதற்காக வந்திருக்கிறேன்."

மோகன் கண்ணியமான தோற்றத்துடன் காணப்பட்டார்.

அடுத்ததாக இருந்தவர் மோகனின் ஒன்று விட்ட சகோதரன் போல் இருந்தார்.

"என் பெயர் ராமநாதன். மோகன் வேலை செய்யும் அதே கல்லூரியில்தான் நானும் இருக்கிறேன். எங்கள் இருவருக்கும் எவ்வளவோ விஷயங்களில் ஒற்றுமை உண்டு. எவ்வளவோ கருத்துக்கள் ஒத்துப்போவது உண்டு. அச்சமாளிகை பற்றி மோகன் சொன்னபொழுது அந்தக் குழுவில் என்னையும் ஒரு உறுப்பினராக சேர்த்துக் கொள்ளும்படி நான் கேட்டேன். வந்துவிட்டேன்."

அடுத்ததாக எழுந்தவர் பேச ஆரம்பித்தபொழுது குரல் தட்டுத் தடுமாறி திக்கி திக்கி வந்தது. ஆனால் அதற்காக கவலைப்படாமல் அவர் தொடர்ந்து பேசியது அவருடைய நம்பிக்கையைக் காட்டியது.

"என் பெயர் நாகப்பா... எனக்கு வயது 27. நான் ஒரு ஓவியன். ஓவியன் என்றால் இயற்கைக் காட்சிகளை வரைந்து பெரிய பெரிய எக்ஸிபிஷன்கள் நடத்தும் ஓவியன் அல்ல. நான் சினிமா பானர்கள் எழுதுவேன். அரசியல் தலைவர்களை சுவர்களில் வரைவேன். இதிலெல்லாம் கிடைக்கும் வருமானத்தில்தான் என் குடும்பம் நடந்து கொண்டிருக்கிறது. சின்ன வயதில்

இருந்தே எனக்கு தைரியம் அதிகம் என்று சொல்வார்கள். இரவு பதினோரு மணிக்கு மேல் எங்கள் வீட்டு அருகில் இருக்கும் மயானத்தில் போய் நான் உட்கார்ந்திருந்து வந்திருக்கிறேன். அந்த தைரியம் காரணமாகவே அச்சமாளிகையில் என்ன என்னை பயமுறுத்திவிட முடியும் என்று தெரிந்து கொள்ளும் ஆர்வத்தோடு நானும் வந்திருக்கிறேன்."

அடுத்ததாக எழுந்தவர் தன்னுடைய மார்புக்கு குறுக்கே ஒரு கூட்டல் குறி போட்டார்.

"என் பெயர் ராஜா பீட்டர். வயது 28. ஏசுநாதர் மீது ...ரமான நம்பிக்கை வைத்திருப்பவன். இந்த உலகத்தில் வாழும் ஒவ்வொரு உயிரையும் ரட்சிக்கும் என் ஏசு என்னையும் ரட்சிப்பார். அவர் என்னிடம் எனக்குத் துணையாக இருக்கும்பொழுது எந்த அச்சமும் என்னை நெருங்க முடியாது என்ற முழு நம்பிக்கையுடன் இந்த விளையாட்டில் ஈடுபடுவதற்காக நான் வந்திருக்கிறேன்."

அடுத்ததாக எழுந்தது ஒரு பெண். சிறு வயதிலிருந்தே சரியாக சாப்பிடாமல் வளர்ந்தவள் போல சற்று வற்றலான உடம்பு. அடர்த்தி இல்லாத கூந்தல். பெரிய பெரிய கண்கள். அந்த கண்கள் சதா அலைந்து கொண்டிருந்தன. அவள் முகத்தில் எப்போதுமே ஒரு புன்னகை இருப்பது போல உதடுகள் ஓரங்களில் மேல்நோக்கி மடங்கி இருந்தன.

"என் பெயர் சிந்தூரி" என்று அவள் அறிமுகப் படுத்திக் கொண்ட பொழுது அவளுடைய குரல் மிகவும் மெல்லியதாக 'கீச்' என்று இருப்பது ஒரு வித்தியாசமாக இருந்தது.

"எனக்கு குறிப்பிட்டு எந்தக் காரியமும் கிடையாது. மோகன் சார் என்னுடைய அம்மாவின் இரண்டாவது சகோதரர். 'என்னுடன் தைரியமாக அச்சமாளிகைக்கு வருகிறாயா?' என்று கேட்டதும் உடனே ஒப்புக் கொண்டு வந்திருக்கிறேன். வந்து விட்டேனே தவிர, எல்லோரும் சொல்கிற விஷயங்களையெல்லாம் கேட்டால் எனக்கு கொஞ்சம் பயமாகத்தான் இருக்கிறது.



ஆனால் விளையாட்டில் எந்தக் கட்டத்திலும் வெளியே வந்து விடலாம் என்று சொல்லப்பட்டது எனக்கு ஒரு ஆறுதலாக இருக்கிறது. நீங்கள் எல்லோரும் எனக்கு துணை இருப்பீர்கள் என்ற நம்பிக்கையும் எனக்கு இருக்கிறது."

சிந்தூரி உட்கார்ந்ததும் கடைசியாக எழுந்தவன் திடகாத்திரமான இளைஞனாகத் தெரிந்தான். தவறாமல் தினந்தோறும் உடற்பயிற்சி செய்தவன் போல அவனுடைய புஜங்களின் தசைகள் பனியனை தாண்டி திமிறி நின்றன. குறுகலான நெற்றியும், அடர்ந்த புருவங்களும் கூர்மையான கண்களும், நேரான நாசியும், அமைப்பான உதடும்,அளவான பற்களும் அவனுடைய முகத்தில் தனியாக ஒரு களை ஏற்படுத்தி இருந்தன.

"என் பெயர் அகமது. நான் சென்னையில் ஒரு பிரிண்டிங் பிரஸ் வைத்திருக்கிறேன். எனக்கும் சின்ன வயதில் இருந்தே போட்டிகளில் பங்கு பெறுவதும் பரிசுகளைத் தட்டி வருவதும் தீராத ஆசை. அச்சமாளிகைப் பற்றி மோகன் சார் சொன்னதும் உடனே ஒப்புக் கொண்டு நான் புறப்பட்டு வந்ததற்கு ஒரே காரணம் நூறு ரூபாயாக இருந்தால் கூட போட்டியில் பரிசாக ஜெயிக்கும் போது எனக்கு கிடைக்கும் அந்த சந்தோஷம்தான்."

அறிமுகங்கள் முடிந்து ஒருவருடன் ஒருவர் கை குலுக்கிக் கொண்டு கலந்து உட்கார்ந்து நொறுக்குத் தீனிகளை கொறித்துக் கொண்டிருந்த பொழுது அவர்களுக்குள் எந்தப் போட்டியும், பொறாமையும் வரப்போவதில்லை என்றே தோன்றியது.

## 4



தன்னுடைய அறைக் கதவை வன்முறையாகத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தவர்களைப் பார்த்து டாக்டர் திடுக்கிட்டார்.

உள்ளே நுழைந்தவர்கள் யாருமே சட்டத்திற்கு அடங்குபவர்களாக தோன்றவில்லை.

மையத்தில் இருந்தவன் டாக்டரின் மேஜையின் மீது வந்து ஓங்கி ஒரு தட்டு தட்டினான்.

'டாக்டர் வெலவெலத்து எழுந்தார்.

"இந்த க்ளினிக்குக்கு ஒரு க்வாலிஸ் 9192 வந்ததா?"

டாக்டர் திமிர்ந்து 'ஆமாம்' என்பது போல் தலையசைத்தார்.

"அவர்களோடு ஒரு இளைஞனும், பெண்ணும் வந்திருந்தார்களா?"

"எட்டு பேர்கள் இருந்தார்களப்பா. நீ சொல்வதுபோல் இரண்டு பெண்கள் இருந்தார்கள், இரண்டு மூன்று இளைஞர்கள் இருந்தார்கள். யாரை சொல்கிறீர்கள் என்று எனக்கு தெரியவில்லையே"

"அவர்கள் இங்கிருந்து எங்கே போனார்கள்?"

"அது எனக்கு தெரியாது. அவர்களில் இரண்டு பேர் இங்கே கிளினிக்கிலேயே அட்மிட் ஆகியிருக்கிறார்கள். அவர்களை விசாரித்தால் ஒருவேளை உங்களுக்கு தகவல்கள் கிடைக்கலாம்."

"எங்கே அந்த இரண்டு பேர்?"

டாக்டர், அவர்களை செந்தில் மற்றும் தனவீர் படுத்திருந்த அறைக்கு அழைத்துச் சென்றார்.

## 5



ஏழு மணி ஆனதும் எல்லோரையும் உள்ளே அழைத்தார்கள். இரண்டு குழுக்களையும் தனித் தனியே பிரித்தார்கள்.

"இந்த விளையாட்டில் கலந்து கொள்வதற்கு நீங்கள் உங்களுடைய தனிப்பட்ட உடைகளை அணிந்திருக்க முடியாது. கம்பெனி உடைகளைத்தான் அணிய வேண்டும். இதற்குக் காரணம் இருக்கிறது. இந்த உடையில் சிறப்பான சில ட்ரான்ஸ்மிட்டர்கள் பதிக்கப்பட்டிருக்கின்றன. ஒரு வேளை விளையாட்டில் நீங்கள் வழி தவறி எங்காவது தொலைந்து போனாலும் உங்களை மீட்பதற்கு எங்களுக்கு இந்த ட்ரான்ஸ்மீட்டர்களின் உதவி அவசியம். எல்லோரும் ஒரே மாதிரி உடை அணிந்திருந்தால்தான் விளையாட்டில் ஈடுபடுவதற்கும் சுலபமாக இருக்கும். ஏ-குழுவிற்கு நீல உடை. பி-குருப்பிற்கு பச்சை நிற உடை. இவற்றை அணிந்து கொண்டு எல்லோரும் லிஃப்ட் ஏறி ஏழாவது மாடிக்கு இன்னும் இருபது நிமிடங்களுக்குள் வந்து சேருங்கள்."

குழுக்கள் தனித்தனியே பிரிந்தன

மாயன் உடைகளை ஆராய்ந்தார். காலில் அணிவதற்கு சற்றே தளர்வான பேண்ட். மேலே அணிவதற்கு சற்றே இறுக்கமான சட்டை. கைகள், கால்கள் இரண்டையும் எல்லா கோணங்களிலும் சுலபமாக அசைக்க முடிகிற உடைகள்.

பன்னிரண்டு பேர்களும் அங்கிருந்த லிஃப்டில் ஏறி ஏழாவது மாடிக்கு வந்து சேர்ந்தார்கள்.

லிஃப்டில் இருந்து வெளிப்பட்டதும் அத்தனை பேருக்கும் ஆச்சர்ய பிரமிப்பில் மூச்சில் வேகம் சேர்ந்தது.

மொட்டை மாடி என்பது கடற்கரை போல பரந்து விரிந்து இருந்தது. இருள் முழுவதுமாக ஆக்கிரமித்து விட்ட நிலையில் அந்த உயரத்தில் இருந்து பார்த்தபொழுது கீழே மரங்களும், அடர்ந்த மரங்களின் உச்சிகளும், செடிகொடிகளும் ஒன்றோடு ஒன்று கலந்து பூமியையே காட்டாமல் மறைத்திருந்தன.

மேலே வானத்தில் பொத்தல் போட்டது போல ஆயிரக்கணக்கில் நட்சத்திரங்கள்.

"வணக்கம்" என்று மீண்டும் ஜான் கென்னடியின் கம்பீரமான குரல் அவர்களை வரவேற்றது.

ஜான் கென்னடி கைகளைத் தேய்த்துக் கொண்டு

அவர்கள் எல்லோருடைய கவனமும் திரும்புவதற்காக காத்திருந்தார்.

"உங்கள் இரண்டு குழுவிற்கும் என்னுடைய நல்வாழ்த்துக்கள்! இந்த விளையாட்டைப் பற்றி சில விஷயங்களை இங்கே சொல்லவேண்டியிருக்கிறது. இப்பொழுது ஏழாவது மாடியில் இந்த விளையாட்டின் முதல் கட்டம் துவங்குகிறது. ஒவ்வொரு மாடியாக இறங்கிப்போய் தரையில் வெளி வர வேண்டும் என்பதுதான் இந்த விளையாட்டின் உச்சக்கட்டம். இந்த விளையாட்டில் அதிகபட்சம் எட்டு மணி நேரம் ஆகலாம். [illegible]க விரைவாக செயல்படுபவர்களுக்கு குறைந்த பட்சம் [illegible]ன்று மணி நேரம் ஆகலாம். மிகச் சரியாக 7.30 க்கு [illegible]ளையாட்டு துவங்கும். இன்றைக்கு இரண்டு விசேஷங்கள். ஒன்று அமாவாசை. எனவே நிலாவின் வெளிச்சம் உங்களுக்கு துணை இருக்காது. இரண்டாவது சிறப்பு என்னவென்று கேட்பீர்கள். இந்தப்பகுதியை நான் வாங்குவதற்கு முன்னால் இந்த இடத்தைப் பற்றி நிறைய வதந்திகள் உலவின. இருநூறு ஆண்டுகளுக்கு முன் இங்கே நான்கு பேர் கொண்ட ஒரு குடும்பம் குரூரமான முறையில் எரித்துக் கொல்லப்பட்டதாக ஒரு சரித்திரம் உண்டு. அந்த நான்கு பேரும் அவ்வப்போது ஆவிகளாகவும் பேய்களாகவும் உருவெடுத்து இங்கு நடமாடிக் கொண்டிருப்பதாக பார்த்தவர்கள், நம்புபவர்கள் இருந்தார்கள். அதன் காரணமாகவே இந்த இடத்தில் பயிர் போடவோ, சாகுபடி செய்யவோ யாருக்கும் விருப்பமில்லாமல் இது தரிசாகவே கிடந்தது. இன்றைக்குத்தான் அந்த மரண நாள். எனவே பேய், ஆவி இவற்றில் நம்பிக்கை இருப்பவர்கள் ஒருவேளை உங்கள் விளையாட்டின் போது அவர்களையும் சந்திக்கலாம். சந்தித்தால் அவர்களுக்கு என் வாழ்த்துக்களை தெரிவியுங்கள்" இதைச் சொன்னபோது ஜான் கென்னடியின் முகத்தில் ஒரு கோணலான புன்னகை.

சாந்தினி பிரமோத்தின் கைகளை இறுகப் பற்றினாள்.



பிரமோத் அவளைப் பார்த்து திரும்பி "பைத்தியம் இதெல்லாம் இந்த விளையாட்டிற்கு முன்னேற்பாடுகளாக பயமுறுத்துவதற்காக சொல்லப்படுபவை. இதெற்கெல்லாமா பயப்படுவது"

அவன் பேச்சை அடக்கிக் கொண்டு ஜான் கென்னடியின் குரல் மறுபடி ஒலித்தது.

"இப்பொழுது இந்த இடத்திலிருந்து 6வது மாடிக்கு போவதற்கு இரண்டு வழிகள் குறிக்கப்பட்டுள்ளன. ஒரு வழியில் ஏ-குரூப்பும் இன்னொரு வழியில் பி-குரூப்பும் இறங்கலாம். ஒரே ஒரு எச்சரிக்கை. இறங்கும் வழியில் அவர்களை எதிர் கொள்ள நான்கு வேட்டை நாய்கள் இருக்கின்றன. இந்த நாய்கள் கொடூரமானவை. ஒரு முறை கவ்விப்பிடித்தால் இரண்டு கிலோ சதையை பறித்து விடும். இந்த நாய்கள் சங்கிலிகளில் கட்டப்பட்டிருக்கின்றன. அதனால் உங்களைத் துரத்தப் போவதில்லை. அந்த நாய்களை நெருங்காமல் இறங்க வேண்டியது உங்களுடைய சாமார்த்தியம். இங்கிருந்து ஆறாவது மாடிக்கு போய்ச்சேரும் வரை நீங்கள் தனித்தனியே செயல்படலாம். ஆறாவது மாடியிலிருந்து இந்த மாளிகைப் பற்றி அங்கங்கே உங்களுக்கு சின்ன சின்ன தகவல்கள் கொடுப்பதற்காக இரண்டு குரூப்களுக்கும் தனித்தனியே வழிகாட்டிகள் அதாவது கைடுகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். உங்கள் வழிகாட்டிகளை சந்தியுங்கள்" ஜான் கென்னடி இப்படி சொன்னதும் அவருடைய இரு புறமும் இரண்டு இளைஞர்கள் வந்து நின்றார்கள். அவர்கள் இருவரும் அந்தந்த குரூப்பிற்குரிய சீருடைகளையே அணிந்திருந்தார்கள்.

ஜான் கென்னடி தனக்கு வலது புறம் இருந்த இளைஞனை தோளில் தட்டி ஓரடி முன்னால் நகர்த்தினார்.

"இவன் பெயர் தங்கமணி. இவன் குரூப்-ஏவிற்கு வழிகாட்டி."

இடது புறம் இருந்தவனை முன்னே நகர்த்தி -

"இவன் பெயர் கைலாஷ். இவன் பி-குரூப்பிற்கு வழிகாட்டி. இந்த இருவரும் அவசரம் ஆபத்து என்றால் இந்த மாளிகையிலிருந்து வெளியேறுவதற்கான வழிமுறைகளை சொல்லித் தருவார்கள். தவிர, ஒவ்வொரு தளத்திலும் அபாய மணி ஒலிப்பதற்கான சுவிட்சுகள் உண்டு. அவற்றை இயக்கவும் இவர்கள் உதவுவார்கள். மற்றபடி உங்கள் குழுவில் இருப்பவர்கள் விளையாட்டில் செய்ய வேண்டிய வேலைகளை இவர்கள் செய்ய மாட்டார்கள். எந்த விதத்திலும் அந்த உதவிகளை இவர்களிடம் எதிர்பார்க்காதீர்கள். இவர்கள் வழிகாட்டிகள் அவ்வளவுதான்.

மீண்டும் சொல்கிறேன். இந்த அச்சமாளிகையில் ...கள் உயிர்களை பறிப்பதற்கான எந்த கருவியோ எந்த மிருகமோ இல்லை. ஆனால் உங்களை பயமுறுத்துவதற்காக எல்லா வழிமுறைகளும் இங்கே கடைப்பிடிக்கப்படுகின்றன. இரண்டு கால்களில் நடந்து விளையாட்டை ஆரம்பிக்கும் நீங்கள் விளையாட்டின் முடிவில் ஒருவேளை ஸ்ட்ரெச்சரில் சுமந்து செல்லப் படலாம். உடனடியாக இதய பிரிவிற்கு அழைத்துப் போகப்படலாம். அவ்வளவுதானே தவிர உயிரோடு இந்த மாளிகையிலிருந்து நீங்கள் வெளியேறலாம் என்பதை அழுத்தம் திருத்தமாக மீண்டும் சொல்கிறேன். இரண்டு குழுவிற்கும் அச்ச மாளிகையின் ஒவ்வொரு பகுதியும் எங்கெங்கே இருக்கிறது என்பதை குறிப்பிடும் வரைபடம் கொடுக்கப்படும். விளையாட்டிற்கு நேரம் நெருங்கி விட்டது. உங்கள் இரண்டு குழுவிற்கும் நல்வாழ்த்துக்கள்! வணக்கம்."

ஏழாவது மாடி என்பதால் மிகப்பெரிய திறந்தவெளியில் நிற்கும் ஒரு அனுபவம் கிடைத்தது. காற்று அள்ளிக் கொண்டு போனது. தூரத்து சாலைகளில் பொம்மைகளாக வாகனங்கள் நகர்ந்து கொண்டிருந்தன.

ஒரு புறம் இருட்டோடு கலந்து தன்னுடைய எல்லைகளை இழந்து கொண்டிருந்தது மலை. கீழே மரங்களின் உச்சிகள் ஒன்றோடு ஒன்று கலந்து தத்தம் சுய உருவங்களை இழந்து மொத்தமாக ஒரு பெரிய



★ நீங்க வீடு/இடம்வாங்கப் போறீங்களா?
★ கட்டுமானத்துறையில் ஈடுபட்டுள்ளவரா?
★ கட்டுமானத்துறையில் ஆர்வமுள்ளவரா?
★ பொறியியல் துறை மாணவரா?

அப்ப நீங்க அவசியம

பில்டர்ஸ் வேர்ல்டு

மாத இதழ்

வாங்குங்கள்!

விலை ரூ10/-

VP விவேக் பப்ளிகேஷன்ஸ் வெளியீடு

Exclusive for Construction & Real Estate

அகில உலக திரைப்படக் கல்வி அஞ்சல் வழி பயிற்சி

இன்டர் நேஷனல் பிலிம் இன்ஸ்டிடியூட்
GOVERNMENT REGISTERED
NO.1167/89/MS/C/C
தபால்பெட்டி எண்: 2504, அமைந்தகரை,
சென்னை - 600 029.

கருப்பு படுதா விரித்து பூமியையே மறைத்தாற்போல இருந்தது. இருளும் அந்த சூழ்நிலையும் சேர்ந்து மெலிதான ஒரு அச்சத்தை அவர்களுக்குள் ஏற்படுத்த பார்த்தது.

இரண்டு குழுக்களிடமும் இரண்டு வரைபடங்கள் கொடுக்கப்பட்டன. ஆறாவது தளத்தில் எந்த அறையில் அந்த வெள்ளி நாணயங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன என்பதும் இரண்டு குழுக்களிடமும் சொல்லப்பட்டது. மிகச் சரியாக ஏழரை மணிக்கு ஒரு விசில் சத்தம் ஒலித்ததும், இரண்டு குழுக்களும் அவர்களுக்குரிய ஏறிகளில் அவசர அவசரமாக நுழைந்தார்கள்.




மொட்டை மாடியிலிருந்து ஏ-குரூப்பிற்கான கதவை திறந்ததும் மிக மங்கலான வெளிச்சத்தில் சுருண்டு இறங்கும் படிக்கட்டு தெரிந்தது. ஆறு பேரும் உள்ளே வந்ததும், கதவு தானாக மூடிக் கொண்டது.

மறைவான ஒரு ஸ்பீக்கரிலிருந்து ஜான் கென்னடியின் குரல் ஒலித்தது.

"இந்த படிக்கட்டில் எரிந்து கொண்டிருக்கும் மின்சார விளக்கு இன்னும் பத்து நொடிகளில் அணையப்போகிறது. அப்புறம் இருட்டில் நீங்கள் படி இறங்க வேண்டும். உங்களுக்கு உதவுவதற்காக ஒரே ஒரு மெழுகுவர்த்தியும் இரண்டு தீக்குச்சிகள் கொண்ட ஒரு தீப்பெட்டியும் முதல் படியில் வைக்கப்பட்டிருக்கிறது. நாய்கள் ஜாக்கிரதை." குரல் ஓய்ந்தது.

மாயன் குனிந்து முதல் படியிலிருந்து மெழுகுவர்த்தியையும் தீக்குச்சியையும் அள்ளிக் கொண்டார். மின்சார விளக்குகள் அணையும் முன் படிக்கட்டுகளை கவனித்தார். ஒவ்வொரு நான்கு படிகளின் முடிவிலும் ஒரு வேட்டை நாய் கட்டப்பட்டிருந்தது. அது கட்டப்



பட்டிருந்த விதத்தில் அது கழுத்தை எவ்வளவுதான் முயற்சி செய்து இழுத்தாலும் படிக்கட்டின் பாதி அளவிற்குத்தான் அதால் எட்டிப் பிடிக்க முடிந்தது.

நாயை இடறாமல் எதிர்புறமாக சுவரோடு ஒன்றி இறங்க வேண்டும் என்று மாயன் புரிந்து கொண்டார். விளக்கு அணைந்தது.

"எல்லோரும் தயவு செய்து என் கையை பிடித்துக் கொண்டு என் பின்னாலேயே வாருங்கள். இடை இடையில் நாய்கள் குறுக்கிடுகின்றன. ஒரு சமயம் இடது பக்கம் ஒரு சமயம் வலது பக்கம் என்று நாய் கட்டப்பட்டிருக்கிறது. நாம் கவனமாக நாயின் கூரான பற்களுக்கு நம் உடல் கிடைக்காத படி நகர்ந்து இறங்கி விட்டால் விரைந்து இறங்கி விடலாம். சிறுவர்கள் ரயில் விடுவதுபோல ஒருவர் பின் ஒருவராக ஒரே ஒழுங்கு முறையாக நாம் இறங்க ஆரம்பிப்போம். எக்காரணம் கொண்டும் இந்த அமைப்பு கலைய வேண்டாம்" ஒரு உத்தரவு போல் சொல்லிவிட்டு மாயன் மெழுகுவர்த்தியை முதல் தீக்குச்சிக்கொண்டு ஏற்றினார்.

படிகளில் இறங்க ஆரம்பித்ததும், நான்கு நாய்களும் ஒருசேர குரைக்க ஆரம்பித்தன. மெழுகுவர்த்தி வெளிச்சம், நீளம் நீளமான நிழல்கள், நாய்களின் குரைப்புகள் எல்லாமாக சேர்ந்து ரத்தவேகம் அதிகரித்தது.

அவர்கள் கவனமாக படி இறங்க ஆரம்பித்தார்கள். மூன்றாவது படி இறங்கும் முன்பாகவே திடீரென்று எங்கிருந்தோ செலுத்தப்பட்ட ஒரு காற்று மெழுகுவர்த்தியை அணைத்தது. முற்றிலும் இருள் சூழ்ந்து கொள்ள அவர்களை அறியாமலேயே எல்லோருடைய தொண்டையிலிருந்தும் பயக்குரல்கள் வீறிட்டன.

இன்னும் ஒரே ஒரு குச்சிதான் இருக்கிறது. அதையும் கொளுத்திவிட்டால் அது ஒரு வேளை அணைந்து விட்டால் அதற்கப்புறம் கடைசிவரை

இருட்டில்தான் போக வேண்டும். அதனால் இந்த காற்று பகுதியை தாண்டும் வரை விளக்கை ஏற்ற வேண்டாம் என்று மாயன் முடிவு செய்தார்.

"எல்லோரும் கவனமாக இடது சுவரோடு தேய்த்து இறங்குங்கள்" என்று சொல்லிவிட்டு சுருண்டு இறங்கும் படிகளில் இடதுபுறமாக தேய்த்து அடுத்த நான்கு படிகளை இறங்கினார்.

நின்றார்.

"இப்பொழுது வலது புறமாக சுவரை தேய்த்து இறங்க வேண்டும். இடது பக்கம் நாயிருக்கிறது. கவனம்" என்று சொல்லிவிட்டு தன்னுடைய பாதையை வளைத்து படிகட்டில் வலது புறமாக அவர் நகர்ந்தார்.

சாந்தினி நாய் தன்னுடைய காலை கவ்விவிடும் என்று பயந்துகொண்டே இடதுபுறமாக தேய்த்து இறங்கியபோது 'விஷ்க்' என்று காற்றில் ஒரு ஒலி.

படபடவென்று இறக்கைகளை அடித்துக் கொண்டு இருட்டில் ஏதோ ஒரு பறவை அவளை உரசினாற்போல் சென்றது.

சாந்தினி பயத்தில் துள்ளி குதித்தாள். பாலன்ஸ் தவறினால் பற்றிக் கொண்டிருக்கும் அத்தனைப்பேரையும் அது சாய்த்து விடும் என்று பிரமோத்திற்கு புரிந்தது. எனவே சட்டென்று திரும்பி அவளை அணைத்துப் பிடித்தான்.

"ப்ளீஸ் சாந்தினி, பயப்படாதே."

"பிரமோத்... பிரமோத்...வவ்வாலோ ஏதோ ஒன்று என் காதை உரசிக் கொண்டு பறந்தது."

"இல்லை சாந்தினி. இங்கு வவ்வால் கிடையாது. வேறு எந்த ஆபத்தான மிருகங்களும் கிடையாது. எல்லாமே செயற்கை முறையில் நம்மை பயமுறுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்டிருப்பவை. தயவு செய்து அவசரப்பட்டு துள்ளிக் குதித்துவிடாதே. நாயின் மீது விழுந்தாலும் ஆபத்து. தவறி படிக்கட்டிலிருந்து வெளியே சரிந்தாலும் ஆபத்து."



மீண்டும் மெழுகுவர்த்திக் கொளுத்தப்பட்டபொழுது அவர்கள் முதல் இரண்டு நாய்களை கவனமாக கடந்துவிட்டிருப்பது தெரிந்தது.

"இன்னும் எட்டே படிக்கட்டுகள்தான்" என்று மாயன் சொல்லி முடிக்கும் முன் கூரையிலிருந்து திடீரென்று ஒரு பந்து விழுந்தது. விழுந்து மாயனின் கையிலிருந்த மெழுகுவர்த்தியை தட்டி விட்டது.

தட்டும்பொழுதுதான் தெரிந்தது அது பந்து அல்ல, ஒரு மண்டை ஓடு என்று.

ஆறு பேரும் திடுக்கிட்டு தன்னிச்சையாக ஒருவரோடு ஒருவர் ஒன்றிக் கொண்டனர்.

இருட்டிலும் அந்த மண்டை ஓட்டின் கண்கள், மூக்கு ஓட்டை, வாய் திறப்பு ஆகிய பகுதிகளில் தீறப்பட்டிருந்த ஃப்ளோரோசெண்ட் பெயிண்ட் காரணமாக மண்டை ஓடு ஒளிர்ந்தது.

மாயன் சிரித்தார்.

"பயப்படாதீர்கள். இதெல்லாம் மலிவான பயமுறுத்தல்கள். இதையெல்லாம் நாம் சுலபமாக கடந்து விட முடியும். ஒருபேய் சினிமா பார்ப்பது போல் நினைத்துக் கொண்டு கவனமாக இறங்குங்கள். நம்மிடம் இப்பொழுது மெழுகுவர்த்தி கிடையாது. வெளிச்சம் கிடையாது. ஒவ்வொரு விரலும் நமக்கு கண் போல. தயவு செய்து குழுவில் இருந்து யாரும் பிரிந்து விடாமல் கவனமாக இறங்குங்கள்."

அடுத்த படிக்கட்டுகளை அவர்கள் ஒவ்வொன்றாக இறங்கி இருட்டிலேயே துழாவி கதவை கண்டுபிடித்து திறந்தபொழுது

'வெல்கம் டு சிக்ஸ்த் ஃப்ளோர். ஆறாவது மாடிக்கு நல்வரவு' என்ற குரல் ஒலித்தது.

அவர்கள் ஆறு பேரும் ஆறாவது மாடிக்குள் நுழைந்தவுடன் அங்கிருந்த கூரையிலிருந்த சிறு விளக்குகள் விழித்துக் கொண்டன.

மாயன் அவசரமாக மேப்பைத் திறந்து பார்த்தார்.

"மொத்தம் இங்கே எட்டு அறைகள். அதில் ஏழாவது அறையில்தான் நமக்குத் தேவையான வெள்ளி நாணயங்கள் இருக்கின்றன. முதல் கட்டத்தில் வெகு சுலபமாக நாம் கடந்துவிட்டோம். அதேபோல ஒவ்வொரு கட்டத்திலும் தெளிவாக ஒன்றாக இருந்தால் நிச்சயமாக கடந்து விட முடியும். இப்பொழுது எல்லோரும் ஏழாவது அறைக்கு ஓடுவதைவிட இரண்டு பேர் இங்கேயே இருப்போம். நான்கு பேர் முதலில் போய் பார்ப்போம். கமான்" என்று கிளம்பினார்.

குமரன், மாயன், அழகப்பன், பிரமோத் நால்வரும் ஏழாவது அறையை நோக்கி ஓட ஆரம்பித்தனர்.

அதே சமயம் பி-குருப்பிற்கான கதவு திறந்து அவர்கள் ஆறுபேரும் வெளிப்பட்டார்கள். தங்களை ஏ-குருப் முந்தி விட்டதைக் கண்டு பரப்பரப்பாகி அவர்களும் ஏழாவது அறையை நோக்கி ஓட ஆரம்பித்தார்கள்.

ஏழாவது அறையின் கதவை மாயன் திறந்தார். திறந்த வேகத்திலேயே திடுக்கிட்டு நின்றார்.

அறையின் மையத்தில் ஜான்கென்னடி கீழே மல்லாந்து விழுந்து கிடந்தார். அவர் வயிற்றில் ஒரு கத்தி செருகி நின்றது.



7

நான்கு பேரும் அடி அடியாக முன்னேறி அறையின் மையத்தில் விழுந்து கிடந்த ஜான் கென்னடியை நெருங்கினார்கள்.

அதே சமயத்தில் கதவைத் திறந்து மற்ற குழுவின் ஆறு பேரும் புயல் போல் அறைக்குள் நுழைந்தார்கள்.

மறைவிலிருக்கும் ஸ்பீக்கர் ஒலித்தது.

"உங்கள் குழுவின் பெண் உறுப்பினர் ஜான்



கென்னடியுடன் கை குலுக்கினால் உங்களுக்குத் தேவையான பரிசு கிடைக்கும்."

மாயன் அதிர்ந்து நின்றார்.

இந்துமதியையும், சாந்தினியையும் விட்டு விட்டு ஆண்கள் மட்டும் ஓடி வந்ததை நினைத்து சற்றே வெட்கப்பட்டார்.

இரண்டாவது குழுவினர் நெருங்கி வந்தனர். அவர்களுள் பெண் உறுப்பினராக இருந்த சிந்தூரி தரையில் விழுந்து கிடந்த ஜான் கென்னடியைப் பார்த்ததும் அதிர்ந்து பின் வாங்கினாள்.

"சிந்தூரி, கமான். அவருடன் கை குடு" என்று மோகன் அவளை ஊக்குவித்தார்.

"ஐய்யோ, நான் மாட்டேன்" என்று அவள் மேலும் ஓடி பின்வாங்கினாள்.

மாயன் சரேரென்று வெளிப்பட்டு காரிடாரின் முடிவில் நின்று கொண்டிருந்த இரண்டு பெண்களையும் உடனே ஓடிவரச் சொல்லி சைகை செய்தார்.

சாந்தினியும், இந்துமதியும் ஓடிவந்து அறைக்குள் நுழையும் முன் மோகன் வறபுறுத்தி, வறபுறுத்தி சிந்தூரியை ஒருவாறு பணியச் செய்தார்.

சிந்தூரி, இறந்து கிடக்கும் பிணம் போல காணப்பட்ட ஜான்கென்னடியின் கையை கண்களை மூடிக் கொண்டே பிடித்துக் குலுக்கினாள்.

குலுக்கிய வேகத்தில் ஜான் கென்னடி சரேலென்று எழுந்து உட்கார்ந்தார். சிந்தூரியின் அலறல் கூரைகளை அதிரடித்தது.

ஜான் கென்னடி சிரித்து, "நான் இன்னும் உயிரோடுதான் இருக்கிறேன் அம்மா!" என்று சொல்லி "வாழ்த்துக்கள்" என்று தன் சட்டைப் பையில் இருந்து முதல் வெள்ளி நாணயத்தை எடுத்து அவளிடம் நீட்டினார். இது ஐம்பதாயிரம் ரூபாய்க்கு சமம்.

திடுக்கிட்டு நின்று விட்ட மாயனை குமரன் தோளில் தொட்டான்.

"அங்கிள், இது விளையாட்டு என்பதை மறந்
விட்டீர்களா? அது நிஜ ரத்தம் இல்லை."

மாயனை மற்றவர்கள் குற்றம் சாட்டு
நோக்கத்தோடு பார்க்க...

"ஐ ஆம் சாரி" என்றார் மாயா
"புத்திசாலித்தனமாக நடந்து கொள்வதாக நினைத்
விட்டேன். எக்காரணம் கொண்டும் நம் குழு பிரிய
கூடாது என்று சொல்லி விட்டு நானே அதை மீற
விட்டேன். அதற்கான பாடமும் கற்றுக் கொண்டு
விட்டேன். இனி நாம் ஒன்றாக இருப்போம். ஒன்றாக
செல்வோம். ஒன்றாக வெல்வோம்."

இப்பொழுது சட்டையில் வழியும் ரத்தத்துடன்
ஜான்கென்னடி அவர்களை அழைத்துக் கொண்டு அந்த
அறைக்கு வெளியே வந்தார்.

இரண்டு வழிகாட்டிகளும் வந்து சேர்ந்தார்கள்.

"இங்கிருந்து விளையாட்டு சற்று கடினமாக
இருக்கப் போகிறது. எனவே உங்களுடைய தைரிய
எல்லாவற்றையும் சேகரித்துக் கொள்ளுங்கள்" என்றா
ஜான் கென்னடி.



8

"நாம் இப்போது
இருப்பது ஆறாவது
தளத்தில். அடுத்து
நாம் இறங்கி சே
வேண்டிய இடம் ஐந்
தாவது தளம்" என்
றான் தங்கமணி. ஏ
குரூப்பின் வழிகாட்டி.

"இதற்கு ஒவ்வொரு குரூப்பிற்கும் சென்ற முறை
போல வெவ்வேறு கதவு வழியே அனுமதி உண்டு. நாம்
இப்போது நுழையப்போகிற அறையின் பெயர் 'ஸ்பேஸ்
ரூம்'. இது வானவெளிக்கு ஈடான ஒரு அறை. சந்திர
மண்டலத்தில் இருக்கும்பொழுது மனிதன் பாரம்
குறைந்து காணப்படுவான் என்று நீங்கள்



படித்திருக்கலாம். ஸ்பேஸ் உடை அணிந்து குதித்து
குதித்து நகர்ந்தவர்களை நீங்கள் படங்களில்
பார்த்திருக்கலாம். இந்த அறையும் கிட்டத்தட்ட
அதைப்போலத்தான். என்ன நீங்கள் ஸ்பேஸ் உடை
அணிந்திருக்க மாட்டீர்கள். இதே உடையில் அந்த
அறைக்குள் நுழையலாம். அங்கே புவிஈர்ப்பு சக்தியை
எதிர்த்து கீழே இருந்து மிக பலமான வேகத்தில்
செயற்கை முறையில் காற்று மேல்நோக்க
செலுத்தப்படும். அந்தக்காற்றில் நாம் தரையை
தொடாமல் மிதப்போம். இந்த ஸ்பேஸ் ரூம் மிக அகலமா
இருக்கும். இந்த முனையிலிருந்து கடந்து
மறுமுனைக்குப் போய் சேர வேண்டும்.

மொத்தம் இருபதடி உயரம் உள்ள இந்த அறையில்
மேலே நாம் நுழையும் இடம் இருபதாவது அடியில்
இருக்கும். ஐந்தாவது மாடிக்கான கதவு பத்தடி ஆழத்தில்
இருக்கும். அதைத் தவற விட்டோம் என்றா
நான்காவது மாடிக்கான கதவு இருபதடி ஆழத்தில்
அதாவது இந்த அறையின் தரையோடு ஒட்டி இருக்கும்
நாம் நான்காவது தளம் வரை இறங்கி விட்டோம் என்றா
ஐந்தாவது தளத்தில் இருந்து சேகரிக்க வேண்டிய
வெள்ளி நாணயத்தை இழந்து விடுவோம். ஐந்தாவது
மாடிக்கு போக வேண்டும் என்றால், இந்த அறையில்
இறங்கி போவதற்கு ஏணி போன்ற அமைப்பு எதுவு
கிடையாது. கீழே இருந்து செலுத்தப்படும் இந்
காற்றிலேயே மிதந்து, நகர்ந்து, நடந்து சரியான
கட்டத்தில் எதிர் முனையை நாம் அடைந்து விட
வேண்டும். இன்னொரு விஷயம் என்னவென்றால் கீழே
இருந்து செலுத்தப்படும் காற்று திடீர் திடீர் என்று
நிறுத்தப்படும். அப்படி நிறுத்தப்படும் போது காற்றில்
விசை முற்றிலுமாக அழிந்துபோய் புவிஈர்ப்பு வி
நம்மை தரை நோக்கி இழுக்கும். காற்று இல்லாத போது
அறையின் மையத்தில் இருந்தோமானால் நிச்சயமா
நாம் கடைசி வரை கீழே விழ வேண்டியிருக்கும்
விழுந்தால் எலும்பு முறிந்து விடாது. அடிபடாது
அதற்கான முன்னேற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன

ஆனால் நான்காவது மாடியில் விழுந்துவிடுவோம். ஐந்தாவது தளத்தை இழந்து விடுவோம். ஐந்தாவது தளத்தில் கதவு அருகில் இரண்டு பக்கமும், கைப்பிடிகள் கொடுக்கப்பட்டுள்ளன. எதிர்முனையில் சுவர் வரை போய் விட்டால் இந்த கைப்பிடியை பிடித்துக்கொண்டு காற்று இல்லை என்றாலும் நம்மால் தொங்க முடியும். தொங்கி அந்தக் கதவை திறந்து ஐந்தாவது தளத்திற்குள் நுழைய முடியும். ஏ-குருப்பிற்கு ஒரு ஸ்பேஸ் ரூம். பி-குருப்பிற்கு இதே விதிமுறைகளோடு மறுமுனையில் இன்னொரு ஸ்பேஸ் ரூம். ஐந்தாவது தளத்தில் எந்தக் குருப்பை சேர்ந்தவர்கள் வந்து சேருகிறீர்கள் என்பதை அங்கே பார்ப்போம். குட்லக், டு போத் ஆஃப் யூ."

மாயன் தன் குழுவை அழைத்துக் கொண்டு ஏ-குருப்பிற்கான ஸ்பேஸ் ரூமிற்குள் நுழைந்தார். ஆறு பேரும் கதவை ஒட்டியிருந்த பகுதியில் நின்றார்கள். அந்த அறை வட்ட வடிமாக மிக அகலமாக அமைக்கப்பட்டிருந்தது.

எதிர் முனையில் ஐந்து என்று எண்ணிடப்பட்ட ஒரு ...தவு, ஆழத்தில் நான்கு எண்ணிடப்பட்ட இன்னொரு

...அவர்களுடைய முதுகுக்குப் பின்னால் கதவு ...டியதுமே முழு வேகத்துடன் காற்று உறுமி சீறி மேலே ...ழும் சத்தம் கேட்டது. ராட்சத விசிறிகள் கீழ் தளத்தில் ...ழலும் சத்தம் கேட்டது.

மாயன் தன் குழுவினரைப் பார்த்து திரும்பினார்.

"இப்பொழுது நாம், நமக்குள் ஒரு ...ட்டுப்பாட்டிற்கு வரவேண்டும். அவசியப்பட்டால் ...ருவரைப் பிடித்து இன்னொருவர் தொங்கக்கூடிய ஒரு ...ழ்நிலை இங்கு உருவாகலாம். அதனால் பெண்கள் ...ருவரும் கடைசியில் நின்று கொள்ளுங்கள். முதலில் ...ன், என்னை அடுத்து அழகப்பன், குமரன், பிரமோத்... ...ந்த நான்கு ஆண்களும் ஒருவர் இடுப்பை ஒருவர் ...டித்துக் கொள்கிறோம். கடைசியாக பிரமோத்தின் ...டுப்பை சாந்தினியும், சாந்தினியின் இடுப்பை



இந்துமதியும் பிடித்துக் கொள்ளட்டும். இந்த சங்கிலி அமைப்பை துண்டித்து விடக்கூடாது என்பதில் கவனமாக இருக்க வேண்டும்."

மாயன் சற்று நேரம் காற்று வீசும் அமைப்பையே கவனித்தார்.

மேலே பீய்ச்சப்பட்ட காற்று சட்டென்று நின்றுபோனது. அது மீண்டும் பீய்ச்சத் தொடங்கியதும் மாயன் அந்தக் காற்றில் தைரியமாக அந்தரத்தில் காலெடுத்து வைத்தார்.

கீழே இருந்து வீசும் காற்றின் வேகத்தின் காரணமாக மாயன் அந்தரத்திலேயே நடக்க முடிந்தது. ஆனால் பிடிப்பு எதுவும் இல்லாததால் திசை சரியாக புரிந்து கொள்ள முடியாமல் காற்று அவரை தள்ளத்தள்ள திசை மாறி, தடுமாறி அவர் உருண்டு எழுந்து நடந்தார். அவருடைய இடுப்பை பிடித்தபடி குமாரனும், அழகப்பனும் பின்னாலேயே பிரமோத்தும் அதே காற்றினில் நடந்தனர். மாயன் நடப்பதை விடுத்து வெகுவேகமாக ஓடி எதிர் சுவரை தொடும் நேரம் காற்று சட்டென்று நின்றது.

அந்தரத்தில் யோசித்து யோசித்து காலை எடுத்து வைத்திருந்த இந்துமதி காற்று நின்றதும் தரை நோக்கி இழுக்கப்பட்டாள்.

அந்த வேகத்தில் ஐந்து பேருடைய பாரமும் சங்கிலிக் கோர்வையாக மாயனை பிடித்து இழுத்தபோது மாயன் எதிர் சுவரை அடைந்து அங்கிருந்த கைப்பிடியில் கையை வைத்து விட்டார். ஆனாலும் ஐந்து பேரின் பாரமும் இழுத்த வேகத்தில் அந்த பிடியிலிருந்து அவருடைய கை தவறி வழுக்கி கிட்டத்தட்ட வெளியில் வரும் நிலையில் அடுத்த கையை அவசரமாக வீசி அதே கைப்பிடியை பிடித்தார்.

இப்பொழுது ஆறு பேரும் ஒருவருக்குப் பின் ஒருவராக தரை வரை எட்டுவதுபோல சங்கிலியாக தொங்கினார்கள்.

திடீரென்று மின்விசிறி மீண்டும் இயங்க

ஆரம்பித்து ராட்சஸ வேகத்துடன் காற்று வீசப்பட்டு இந்துமதியையும், சாந்தினியையும் முதலில் தாக்கித் தாக்கியது.

அந்த வேகத்தில் சாந்தினி பிரமோத்தின் இடுப்பிலிருந்து கையை விலக்கி விட்டாள். உடனே பிடிக்கப்படாவிட்டால் எதிர் சுவர் நோக்கி அவள் வீசப்பட்டுவிடுவாள் என்று புரிந்து பிரமோத் முழு வேகத்துடன் திரும்பி அவளைக் கைப்பற்றினான்.

பிரமோத்தின் கையை சாந்தினி கைப் பற்றி இருக்க தழைந்து தளர்ந்து ரிப்பன் போல தொங்கிய அந்த மனிதச் சங்கிலி மீண்டும் உயிர்பெற்றதுபோல சிலிர்த்து எழுந்தது.

அந்த வேகமும் மாயனின் கைப்பிடிப்பை நழுவி இழுப்பதற்கு பிரயத்தனம் செய்தது.

மாயன் இரண்டு கைகளாலும் அந்த கைப்பிடியைப் [illegible]துக் கொண்டார். அவர் இடுப்பைப் பிடித்தபடி அழகப்பன் அப்படியே முன்னேறி அடுத்த கைப்பிடியை அவன் பிடித்தான். அதிலிருந்து அடுத்த கைப்பிடியை பிடிக்க முனைந்த போது அங்கிருந்த விளக்குகள் படபடத்தன.

"கவலைப்படாதீர்கள். இதுவும் ஒரு விளையாட்டுத்தான் " என்று மாயன் கத்திக் கொண்டிருந்தபோதே எல்லா விளக்குகளும் அணைந்து இருள் சூழ்ந்தது.

அதே நேரத்தில் 'கரக்...கரக்...கடக்...கடக்' என்ற விநோதமான சத்தங்களை எழுப்பிக் கொண்டு ராட்சஸ மின்விசிறி படக்கென்று நின்று போனது.

ஒரு ஆழமான கிணறு போல் அமைந்திருந்த அந்த அறையில் திடீரென்று காற்று நிற்கவும், மீண்டும் அந்த மனித சங்கிலி தாறுமாறாக கீழே இழுக்கப்பட்டது.

இருந்தாலும் குமரன் தன்னுடைய பிடியை விட்டுவிடாமல் பிடித்திருக்க, ஐந்தாவது மாடிக் கதவு எங்கே என்று இருட்டில் துழாவிக் கொண்டிருந்தார் மாயன்.



மேலே இருந்து தங்கமணியின் குரல் வந்தது.

"மன்னிக்கவும். திடீரென்று மின்சாரக் கோளாறு. இருபது விநாடிக்குள் ஜெனரேட்டர் இயங்க ஆரம்பித்து விடும். அந்த இருபது விநாடிகள் உங்களுக்கு கூடுதலாக கொடுக்கப்படும்."

அவன் கையிலிருந்த டார்ச்சை இயக்கி அந்த அறைக்குள் வெளிச்சத்தை பாய்ச்சினான்.

ஐந்தாம் எண்ணிட்ட கதவின் அருகில மாயன் தொங்கிக் கொண்டிருக்க, அவரை அடுத்து இன்னொரு கைப்பிடி பிடித்து அழகப்பன் தொங்கிக் கொண்டிருக்க, அவர்களிடம் இருந்து விலகி மூன்றாவது கைப்பிடியைப் பிடித்து குமரன் தொங்கிக் கொண்டிருக்க, குமரனிடமிருந்து வழுக்கி ஆனால், விழுந்து விடாமல் அவன் கையைப் பற்றிய படி இன்னொரு கைப்பிடியைத் தேடித் துழாவிக் கொண்டிருந்தான் பிரமோத்.

பிரமோத்தை பிடித்திருந்த சாந்தினியும், இந்துமதியும் தங்களைச் சுவரோடு தேய்த்து சுருக்கிக் கொண்டு அவன் இழுத்த இழுப்பில் அங்குலம்.... அங்குலமாக மேலேறி அடுத்த கைப்பிடியைப் பிடித்தபோது மீண்டும் கற...கற... என்ற சத்தங்களுடன் சில தீப்பொறிகள் கீழே இருந்து பறந்து வந்தன.

"ஐயோ..."என்று அலறினான் தங்கமணி.

"பயப்படாதீர்கள்" என்று குரல் கொடுத்தார் மாயன். "எல்லாமே... இந்த மாளிகையின் விளையாட்டுத் தான்."

ஆனால் அவர் அப்படி சொல்லிக் கொண்டிருக்கும் பொழுது தங்கமணியின் கையிலிருந்த டார்ச் நழுவி அதல பாதாளத்தில் விழுந்து தொம் என்று மோதி சற்று நேரம் அந்த வெளிச்சம் தரையில் இங்கும் அங்குமாக அரை வட்டங்களைப்போட்டு விட்டு சடாரென்று ஓய்ந்து போனது.

அந்த வெளிச்சம் முற்றிலுமாக இருண்டு போவதற்குள் ஐந்தாவது தளத்தின் கதவை கவனித்து விட்ட மாயன் கதவைத் தள்ளி திறந்து ஐந்தாவது

தளத்திற்குள் நுழைந்தார்.

அவரை அடுத்து அழகப்பனும் விரைந்தான்.

ஐந்தாவது தளத்திலாவது விளக்குகள் எரிந்து கொண்டிருக்கும் என்று நினைத்தவர்களுக்கு ஏமாற்றம் காத்திருந்தது.

எங்கும் கும்மிருட்டு. ஒரு பொட்டு வெளிச்சம் கூட இல்லை. இருபது வினாடிகள், முப்பது வினாடிகள், நாற்பது வினாடிகள் என்று நேரம் ஓடிக் கொண்டிருந்ததே தவிர, ஜெனரேட்டர் இயக்கப்படுவதற்கான அறிகுறியே இல்லை.

"ஏதோ தவறு நடந்துவிட்டது" என்று தங்கமணி [illegible]ணான்.

"இந்த காலஅவகாசத்திற்குள் நிச்சயம் ஜெனரேட்டர்கள் இயங்க ஆரம்பித்திருக்க வேண்டும். அப்படி இயங்காவிட்டால் சிஸ்டத்தில் ஏதோ ஒரு கோளாறு. எல்லோரும் அவரவர் இடத்திலேயே கவனமாக இருங்கள். நான் உதவிக்கு ஏற்பாடு செய்கிறேன்" அவன் இப்படிக் குரல் கொடுத்திருக் கொண்டிருக்கும்பொழுது "வேண்டாம் அவன் பேச்சைக் கேட்காதீர்கள்" என்றார் மாயன்.

"வேண்டுமென்றே நம்மைக் குழப்பி, தாமதப் படுத்தி. இந்த தளத்திலும் வெள்ளி நாணயத்தை நாம் கவர விடாமல் தடுக்கப் பார்க்கிறான். இது எல்லாமே விளையாட்டின் அங்கம்தான். எல்லோரும் என் கையைப் பிடித்து பின்னாலேயே வாருங்கள். ஐந்தாவது தளத்தில், மூன்றாவது அறையில் அந்த வெள்ளி நாணயம் இருக்கிறது என்று ஏற்கனவே வரைபடத்தில் பார்த்து விட்டேன். வரைபடத்தை நினைவு படுத்தி இந்த இருட்டிலேயே என்னால் அந்த அறையை கண்டுபிடித்து விட முடியும். யாரும் கலைந்து விடாமல் ஒருவரோடு ஒருவர் ஒட்டிக் கொண்டு பின்னாலேயே வாருங்கள்."

கதவு திறந்துபிடிக்கப்பட்டிருக்க அந்தக் குழுவின் அங்கத்தினர்கள் ஒவ்வொருவராக அதன் வழியே ஐந்தாவது தளத்திற்குள் இழுக்கப்பட்டார்கள்.



அதே நேரத்தில் பி-குரூப் வந்து சேருவதற்கான கதவு பொருத்தப்பட்டிருந்த இடத்தில் உள்ளே இருந்து அலறல் சத்தம் கேட்டது.

"அங்கேயும் பவர் கட். இருள் சூழ்ந்திருக்கும். அவர்கள் பயத்தில் அலறுகிறார்கள். நாம் அவர்களை இந்த முறை முந்திக் கொள்ளப்போகிறோம்" என்றார் மாயன் பெருமிதமாக.

சாந்தினி, இந்துமதி என்று அத்தனை பேரும் ஐந்தாவது தளத்திற்குள் வந்துவிட்டிருக்க, இப்பொழுது யாரிடமும் டார்ச் கிடையாது. மெழுகுவர்த்தியோ, தீக்குச்சியோ கிடையாது.

கும்மிருட்டில் உத்தேசமாக அந்த அறையை கண்டுபிடித்து போக வேண்டிய சூழ்நிலை.

"பயப்படாதீர்கள்!" என்றான் அழகப்பன். "நமக்கு பிரச்சினை என்றால் அதே பிரச்சினைதான் எதிர் அணியினருக்கும். அங்கிள் சொல்வதைக் கேட்டு அவர் பின்னாலேயே நாம் ஒருவரோடு ஒருவர் கைகோர்த்துக் கொண்டு நடந்தால் ஒருவேளை ஐந்தாவது தளத்தில் இருக்கும் வெள்ளி நாணயத்தை நாம் எடுத்த பிறகு மின்சாரம் மீண்டும் திரும்பலாம். வெளிச்சம் கிடைக்கலாம்."

அவர்கள் முடிவெடுத்தபின் ஒரே குழுவாக ஒருவரோடு ஒருவர் கைகோர்த்தபடி இருட்டில் மெல்ல நடந்தார்கள்.

மாயன் இடது கையை நீட்டி அந்த காரிடாரின் இடது புற சுவரை தொட்ட படி ஒவ்வொரு அடியையும் கவனமாக எடுத்து வைத்து நகர்ந்தார். யார் கையை பற்றி இருக்கிறார்கள் என்று புரியாத அளவிற்கு கும்மிருட்டு.

அழகப்பன் தான் ஒரு மிருதுவான கையைப் பற்றி இருப்பதை உணர்ந்தான்.

"சாந்தினி" என்றான் கிசுகிசுப்பாக.

"உம்" என்று பதில் வந்தது சற்று தள்ளி இருந்த முகத்தில் இருந்து.

அப்படியானால் அவன் பற்றி இருப்பது சாந்தினியின் கையை இல்லையா?

"நீங்கள் சாந்தினியை தேடுகிறீர்களா?" என்று பக்கத்திலேயே இந்துமதியின் குரல் கிசுகிசுப்பாக கேட்டதும் அவளுடைய கையைத்தான் பற்றியிருக்கிறோம் என்று அழகப்பன் உணர்ந்தான்.

"ஐம் சாரி. யார் அடுத்து இருக்கிறார்கள் என்று புரியாத ஒரு குழப்பம்" என்றான்.

இந்துமதி ஏதோ சொல்ல வாயெடுத்தபோது-

"வெயிட்... வெயிட்" என்று தங்கமணியின் குரல் அலறியது.

தடதட வென்று படிகளில் கால்கள் இறங்கி வரும் சத்தம் கேட்டது.

எங்கிருந்தோ ஒரு டார்ச் உயிர்ப்பிக்கப்பட்டு சின்ன வெளிச்சமாக அந்த காரிடாரில் பாய்ந்தது.

மின்சார விசிறி நின்று போனதால் அந்த ஸ்பேஸ் ரூமை நடந்து கடக்க முடியாமல் அவனுக்கு தெரிந்த வழியில் தங்கமணி இறங்கி ஒரு தளம் தாண்டி வந்திருக்கிறான் என்பது மாயனுக்கு புரிந்தது.

தங்கமணி மூச்சிரைக்க வந்து நின்றான்.

"நான் விளையாட்டிற்கு சொல்லவில்லை. நிஜமாகவே அச்சமாளிகையில் மின்சாரம் பழுதாகிவிட்டது. ஜெனரேட்டர்களும் இதுவரை இயக்கப்படவில்லை. அபாய மணி பொத்தானை நான் அழுத்தினால் அதுவும் வேலை செய்யவில்லை. இங்கிருக்கும் இண்டர்காம்கள் மூலமாக தலைவருடன் பேசலாம் என்று முயற்சி செய்தால் அந்த இண்டர்காம் ஃபோனும் உயிரோடு இல்லை. இது வரை இதுபோன்றதொரு நிலைமை இங்கு வந்ததே இல்லை. எனவே இந்த விளையாட்டு இப்பொழுது தொடருமா? என்பதே புரியவில்லை. எந்த இக்கட்டாக இருந்தாலும் உடனடியாக தலைவர் தன்னுடைய அறிவிப்பை வெளியிடுவார். அது எல்லா தளங்களிலும் இருக்கும்



ஸ்பீக்கர்கள் மூலமாக ஒளிபரப்பாகும். ஆனால் இப்பொழுது முழு மின்சாரத் தடை இருப்பதால் அந்த ஸ்பீக்கர்களும் வேலை செய்யவில்லை. அவசரப்படாமல் நாம் சற்று நேரம் இங்கேயே பொறுத்திருப்போம்."

தங்கமணி இப்படிப்பேசிக் கொண்டிருக்கும் பொழுதே அடுத்த குரூப் திறந்து வெளிவர வேண்டிய கதவு திறந்து சிந்தூரியின் குரல் அலறியது.

"அய்யோ, யாராவது உடனே உதவிக்கு வாங்களேன்!"

சத்தம் கேட்டதும் டார்ச் வெளிச்சத்தை அந்தப் பக்கம் திருப்பினான் தங்கமணி.

திறந்த கதவு வழியே அந்த ஸ்பேஸ் ரூமின் கிணறு போன்ற அமைப்பு தெரிந்தது.

தங்கமணி தன்னுடைய டார்ச் வெளிச்சத்தை அந்த கதவு வழியே பாய்ச்சினான்.

எல்லோருமாக மெதுவாக அந்த இடத்தில் கூடி அந்த கதவு வழியே எட்டிப் பார்த்தபொழுது கீழே நாலாவது தளத்தின் அதாவது ஸ்பேஸ் ரூமின் தரையில் கைலாஷ் மல்லாந்து கிடந்தான்.

அவன் நெஞ்சில் ஒரு கத்தி செருகப்பட்டிருந்தது.

தங்கமணியின் டார்ச் வெளிச்சம் அவனைச் சுற்றி வட்டமிட்டதும், கூடியிருந்தவர்கள் அலறினார்கள்.

மாயன் மட்டும் பெரிதாகச் சிரித்தார்.

"தங்கமணி மீண்டும் எங்களை ஏமாற்ற பார்க்கிறீர்களா? ஆறாவது தளத்தில் ஜான்கென்னடியின் வயிற்றில் கத்தி குத்திக் கிடக்கும். இப்பொழுது இங்கே உங்களில் ஒருத்தர் கத்திக்குத்துப் பட்டு கீழே கிடப்பார். இதைப் பார்த்து நாங்களெல்லாம் தடுமாறி நின்று கொண்டிருந்தால் விளையாட்டு நேரம் முடிந்துவிடும்."

"இல்லை சார்... சத்தியமாக இல்லை. நீங்கள் நினைப்பதுபோல் இந்தமாதிரி விளையாட்டு இன்றைக்கு திட்டமிடப்படவில்லை. கைலாஷ் என்ன

ஆனான் என்று உடனே பார்த்து விட்டு வரவேண்டும்" என்று பதறிக்கொண்டே தங்கமணி அந்த அறைக்குள் இருந்த கைப்பிடிகளை பிடித்து இறங்கலானான்.

கீழே கிடந்த கைலாஷைச் சுற்றி அந்தக்குழுவின் ஆண்கள் நின்றிருந்தார்கள்.

தங்கமணி விரைந்து அந்த இடத்தைச் சேர்ந்து, கைலாஷின் நெஞ்சில் தொட்டு விரலை எடுத்து டார்ச் வெளிச்சத்தில் பார்த்தான். அதை மூக்கருகில் வைத்துப் பார்த்தான். அதை மூக்கருகில் வைத்துப் பார்த்ததும் அவன் முகம் எட்டுக் கோணலாகியது.

"அய்யோ! நிஜ ரத்தம்!" என்றான்.

"இல்லை. இது விளையாட்டு" என்றார் மாயன்.

"இல்லை சார்! நான் விளையாடவில்லை!" இந்த முறை தங்கமணியின் குரல் கோபமாக கனத்து ஒலித்தது.

கைலாஷின் நெஞ்சில் கத்தியைப்பாய்ச்சியது யாரென்று தெரியவில்லை.

அவனுடைய மூக்கருகில் மோகன் கைவைத்துப் பார்த்தார். பின்னாலேயே அவனுடைய கையைப் பிடித்து நாடித்துடிப்பு புரஃபசர் ராமநாதன் பார்த்தார்.

எல்லோர் முகங்களில் திடுக்கிடல்.

"இல்லை. கைலாஷ் உயிருடன் இல்லை" என்று சொல்லப்பட்டதும் அந்த உண்மை திடீரென்று வெடித்ததுபோல் எல்லோருக்கும் அச்சம் தொற்றிக் கொண்டது.

பெண்கள் அலறினார்கள். இரண்டு குழுக்களாக பிரிந்து இருந்தவர்கள் இப்பொழுது ஒரே குழுவாக ஐக்கியமாகி ஆளாளுக்கு அலற ஆரம்பித்தார்கள்.

"சத்தம் போடாதீர்கள்" என்று மாயனின் குரல் கணீரென்று ஒலித்ததும் மற்ற குரல்கள் அடங்கின.

"கைலாஷை தூக்கிக் கொண்டு அப்படியே நாலாவது தளத்தில் வெளியே வந்து அவனுக்கு உடனடியாக ஏதாவது முதல் உதவி செய்ய முடியுமா



என்று பாருங்கள்" என்று மாயன் குரல் கொடுத்தார்.

"நாங்கள் அந்த இடத்திற்கு வந்து சேருகிறோம். ஆனால் அதற்கு முன் இந்த விளையாட்டின் விதியைப் பின்பற்ற போகிறோம். வா குமரன்" மாயன் குமரனின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு "இந்துமதி நீயும் வா!" என்று சொல்லி இந்துமதி, சாந்தினி இருவரையும் இழுத்துக் கொண்டு வெகு மெலிதாக அங்கே சிதறி இருந்த வெளிச்சத்தின் அடிப்படையில் மூன்றாவது அறையை நோக்கி ஓடினார்.

மூன்றாவது அறைக்கதவை திறந்தபொழுது அங்கே எந்த எதிர்ப்பும் இல்லாமல் மேஜையின் மத்தியில் கண்ணாடிக் குடுவையில் வெள்ளி நாணயம் காத்திருந்தது.

அதைக் கவிழ்த்து எடுத்து மாயன் தன்னுடைய பாக்கெட்டில் பத்திரப்படுத்தினார். மீண்டும் அவர்கள் பி-குருப்பின் ஸ்பேஸ் ரூமிற்கு ஓடி வந்து சேர்ந்தபொழுது தங்கமணியின் கையிலிருந்த டார்ச் அதன் ஒளி இழந்து மங்கிக் கொண்டிருந்தது.

"இந்த அச்சமாளிகையில் இதுவரை இல்லாத ஒரு புதுப் பிரச்சினை உருவாகியிருக்கிறது. எனவே நாம் எல்லோரும் சேர்ந்து இருப்பதே நல்லது" என்று தங்கமணி குரல் கொடுத்தான்.

"எல்லோரும் இந்தப் பிடிகளைப் பிடித்துக் கொண்டு தயவு செய்து இங்கேயே இறங்கி விடுங்கள். இங்கிருந்து நாம் நாலாவது தளத்திற்கு போய்விடலாம்."

குழுவில் இருந்த மற்றவர்கள், ஒவ்வொருவராக கைப்பிடியைப் பிடித்துக்கொண்டு அலறலும், பயமும், அச்சமுமாகக் கத்திக் கொண்டு இறங்கினார்கள்.

எல்லோருமாக நாலாவது தளத்தில் வந்து சேர்ந்தபொழுது திணறி திணறி, திக்கித்திக்கி வெளிச்சம் கொடுத்துக் கொண்டிருந்த தங்கமணியின் டார்ச் முற்றிலுமாக செத்துப் போனது.



## ௧

"யாரும் பதட்டப் பட வேண்டாம்" என்று உரக்கக் குரல் கொடுத்தார் மாயன்.

"தங்கமணி, இப்போது தெளிவாக இருப்போம். இது விளையாட்டின் ஒரு அங்கம் என்றால் சொல்லிவிடுங்கள். தேவையில்லாமல் எங்களைத் தடுத்து தாமதப்படுத்தி அதில் சந்தோஷம் கொள்ளாதீர்கள்."

தங்கமணி பதிலுக்கு அலறினான்.

"என் சார் மீண்டும் மீண்டும் புரிந்து கொள்ளாமல் பேசுகிறீர்கள். விளையாட்டு என்றால் இரண்டு குழுக்களும் தனித்தனியாகத்தான் இயங்க வேண்டும். அப்பொழுதுதான் வெற்றி பெற முடியும். இரண்டு குழுக்களையும் ஒன்றாக நான் சேர்த்து இருப்பதிலேயே உங்களுக்கு புரியவில்லையா? இது விளையாட்டு இல்லை. இந்த அச்சமாளிகையில் இதுவரை நடக்காத ஏதோ ஒரு அசம்பாவிதம் நடந்திருக்கிறது. என்னுடைய கைலாஷ் இங்கே கத்திக்குத்துப்பட்டு இறந்து கிடக்கிறான்" தங்கமணியின் குரல் கம்பீரமாக ஆரம்பித்தாலும் முடியும் தருவாயில் நடுங்கி, சிலிர்த்து, அதிர்ந்து கிட்டத்தட்ட அழுகையாக தேய்ந்து முடிந்தது.

தங்கமணி அப்படியே தொப்பென்று தரையில் அமர்ந்து தன் தலையில் கைகளை வைத்துக் கொள்வது இருட்டுக்கு பழக்கமான கண்களுக்கு நிழல் உருவமாக தெரிந்தது.

இருட்டில் யார்யார் எங்க இருக்கிறார்கள் என்று புலப்படாமல் சின்ன குழப்பம் அங்கே நிலவியது.

மாயன் மீண்டும் தலைமைப் பொறுப்பை ஏற்றார்.

"எல்லோரும் தயவு செய்து ஒரே பக்கமாக வந்து விடுங்கள்."

கால்கள் நகரும் ஒலி கேட்டது. "அய்யோ, அம்மா"


தற்போது விற்பனையில்...

பரத் சுசீலா

பட்டுக்கோட்டை பிரபாகர்

எழுதிய

சிங்கப்பூர் சதி

அதிரடி நாவல்



மற்றும்

தவிக்க வைக்கும்

சிரிக்க வைக்கும்

திகிலூட்டும்

மூன் லைட்

பக்கங்கள்

படிக்கப் படிக்க படிக்கலாம்

என்ற சின்ன சின்ன அலறல்கள் பெண்களிடமிருந்து எழுந்தது.

எல்லோரும் ஒரு பக்கமாக ஒதுங்கிய பின் மாயன் தங்கமணியின் தோளை தட்டினார்.

"தங்கமணி, இந்த அச்சமாளிகையில் மின்சார தடை வந்தால் அங்கங்கே எமர்ஜென்சி விளக்குகள் கூட வைத்திருக்க மாட்டீர்களா?"

தங்கமணி திமிர்ந்தான்.

"சார் இது அச்சமாளிகை. அச்சமூட்டுவதற்காகவே ஏற்படுத்தப்பட்ட மாளிகை. அதனால் ஒவ்வொரு தளத்திற்கும் ஒரே ஒரு இடத்தில் மட்டும் எமர்ஜென்சி விளக்கு வைக்கப்பட்டிருக்கும். அந்த விளக்குகூட இப்போது எரியவில்லை. யாரோ திட்டமிட்டு மொத்தமாக இங்கிருக்கும் சிஸ்டத்தை கலைத்திருக்கிறார்கள் என்று தோன்றுகிறது."

"சரி தங்கமணி. எங்களைப் பொறுத்தவரையில் அச்சமாளிகையின் வரைபடம் எங்களிடம் இருக்கிறது. ஆனால் நீ இங்கேயே வேலை செய்பவன். இப்பொழுது விளையாட்டு நிறுத்தப்பட்டுவிட்டது என்று நாம் கருதுவோம். எல்லோருமாக கீழே இறங்கி பத்திரமான இடத்திற்கு போக வேண்டும். அதற்கான வழி என்ன?"

தங்கமணி மெல்ல தரையில் கையூன்றி எழுந்தான்,

"கைலாஷ்?" என்றான்.

"கைலாஷை நாம் இப்போது சுமந்து கொண்டு போக முடியாது. இப்பொழுது முதலில் உயிரோடு இருப்பவர்களின் பத்திரம்தான் முக்கியம். நான்காவது தளத்தில் நாம் எல்லோரும் இருக்கிறோம். இங்கிருந்து பாதுகாப்பான இடத்திற்கு செல்வதற்கு வழி என்ன? அதை மட்டும் சொல்."

மாயன் இப்படி பேசிக் கொண்டிருக்கும் போதே ஒரு ஜோடி கால்கள் அதிக சத்தம் எழுப்பாமல் நகர்ந்து நகர்ந்து போவது இருட்டில் ஒலித்தது.

"யார்..யார் அது? தயவு செய்து இருட்டில் இந்தக்



கூட்டத்தில் இருந்து யாரும் கலைந்து தனியே செல்ல வேண்டாம்" என்று மாயன் குரல் கொடுத்துக் கொண்டிருந்தார். ஆனால் எந்த பதிலும் வரவில்லை.

நகர்ந்து செல்லும் காலடிகள் சற்று வேகம் பிடித்து ஓடுவதை போல தெரிந்தது.

மாயன் மற்றவர்கள் இருந்த திசை நோக்கி திரும்பினார். யாருடைய முகமும் புரியாத கும்மிருட்டில் அவருடைய குரல் ஓங்கி ஒலித்தது. "இப்பொழுது இங்கே இருப்பவர்கள் ஒவ்வொருவரும் தங்களுடைய பெயரைச் சொல்ல வேண்டும்."

நீ யார் கேட்பதற்கு? என்று யாரும் எதிர் கேள்வி கேட்காமல் உடனே அவருடைய தலைமை பொறுப்பை ஏற்றுக் கொண்டவர்களாக ஒவ்வொருவராக பெயர் சொல்ல ஆரம்பித்தார்கள்.

"புரஃபசர் ராமநாதன்."

"சாந்தினி."

"நாகப்பா."

"ஏசுவே துணை. ராஜா பீட்டர்."

"அழகப்பன்."

"சிந்தூரி.

"புரஃபசர் மோகன்."

"பிரமோத்."

"இந்துமதி."

"அகமது."

குரல்கள் நின்றுபோயின. மாயன் இன்னும் ஒரு பெயருக்காக காத்திருந்தார். பதில் வரவில்லை என்றதும் "குமரன்" என்றார்.


பதில் வரவில்லை.

"குமரன்" என்று இன்னும் சற்று குரலை உயர்த்திக் கூப்பிட்டார்.

பதில் வரவில்லை.

"குமரன். குமரனைத்தான் காணவில்லை. அந்த முட்டாள் தனியே எங்கே போனான்?"

## 10



குமரன் இருட்டில் மெல்ல நடந்தான். மாயன் சொல்லிக் கொடுத்ததுபோல சுவரின் இடதுபுறம் கையை வைத்தபடி மெல்ல நகர்ந்தான். ஏற்கனவே வரைபடத்தில் பார்த்திருந்த அறையை தன்னுடைய நினைவிற்கு கொண்டு வந்தான்.

இங்கிருந்து ஐந்தாவது கதவு வலதுபுறம் [...]க்கப்பட வேண்டும். ஸ்பேஸ் ரூமில் நடந்த சில கலாட்டாக்கள் மற்ற நண்பர்களை கலக்கியிருக்கலாம். ஆனால் குமரன் தீர்மானமாக இருந்தான். இத்தனை ஆர்ப்பாட்டங்களும் அச்சமாளிகையின் விளையாட்டில் ஒரு பகுதியாகத்தான் இருக்க வேண்டும்.

ஜான் கென்னடி தெளிவாகச் சொன்னாரே. இந்த முறை விளையாட்டுக்கள் கடினமாக இருக்கும் என்று. மற்றவர்கள் ஏமாந்து போனாலும் அவன் ஏமாறத் தயாராக இல்லை.

சென்ற முறை தவற விட்ட பரிசுத் தொகையை இந்த முறையாவது கைப்பற்றி விட வேண்டும் என்று அவன் துடிப்பாக இருந்தான்.

அவனாக தீர்மானித்து கும்மிருட்டில் கைகளால் துழாவி துழாவி கொஞ்சம் கொஞ்சமாக அவன் உத்தேசித்திருந்த அறையை நெருங்கினான்.

'இதோ இந்த அறைதான்' கதவைத் தொட்டான். திறந்தான்.

இருட்டிலேயே பழகிவிட்டதால் அவனுக்கு எந்த வித அச்சமும் இல்லை. இந்த அறையில் வலதுபுறம் மேடான ஒரு அலமாரியில் ஒரு கரடி பொம்மை உட்கார்ந்திருக்கும். அந்த பொம்மையின் கையில் அடுத்த வெள்ளி நாணயம் இருக்கிறது என்பது வரைபடத்தில் சொல்லப்பட்டிருந்தது. அந்த கரடி



பொம்மை இருக்கும் திசையை நோக்கி குமரன் காலெடுத்து வைத்தான்.

சுவரில் துழாவி துழாவி அலமாரியைக் கண்டுபிடித்தபொழுது அவனுடைய இதய துடிப்பு வேகமானது. தான் சரியான பாதையில்தான் வந்திருக்கிறோம் என்ற சந்தோஷம்.

அலமாரியில் கையைச் செலுத்தி அந்த கரடி பொம்மையை தொட்டான். கைகளில் புசு புசு என்று முடி மாட்டியபொழுது இதுதான் கரடி பொம்மை என்று நினைத்து அதை எடுத்தான்.

எடுத்தவுடன் 'பளார்' என்று அவனுடைய கன்னத்தில் ஒரு அறை விழுந்தது.

இதுவும் அச்சமாளிகையின் விளையாட்டாக இருக்கும். பொம்மைக்கு சாவி கொடுத்திருக்கிறார்கள். எடுப்பவர்களை அடிப்பதற்காக.

அவன் பொம்மையை தவறவிடாமல் இறுகப் பிடித்துக் கொண்டான். அவனுடைய கையை யாரோ கடிப்பதுபோல பற்கள் பதிந்ததும் குமரனின் உள்ளத்தில் முதன் முறையாக அச்சம் எட்டிப்பார்த்தது.

'பொம்மை கடிக்குமா? இங்கே நிஜ மிருகங்களால் எந்த ஆபத்தும் இருக்காது என்று ஜான்கென்னடி சொன்னாரே!'

பொம்மையின் கையை பிடித்து பிரித்து வெள்ளி நாணயத்தை எடுத்து விட வேண்டும் என்ற துடிப்போடு பொம்மையைக் கீழேபோட்டு காலால் மிதித்து அழுத்திக் கொண்டு அவன் மண்டியிட்டு உட்கார்ந்தான்.

தொட்டு தடவியதில் அது பொம்மைதான் என்று புரிந்தது. அது கைப் பகுதியைப் பிடித்து விரல்களை பிரித்து அதற்குள் இருந்த நாணயத்தை எடுத்து தன் பாக்கெட்டில் பத்திரப்படுத்திக் கொண்டான்.

எழுந்தவுடன் சட்டென்று அவன் நின்றிருந்த தரை அப்படியே உள் வாங்கியது. தூக்கு மேடையில் கைதிக்கு தண்டனை நிறைவேற்றும் நேரம் மேடைப்பலகை

உள்வாங்கிக் கொள்வதுபோல சட்டென்று அந்த மாத்தரை உள்வாங்கி அவனை கவிழ்த்து உள்ளே இழுத்தது.

குமரன் அவனை அறியாமல் அலறினான். விழுந்து விடாமல் இருக்க தரையைப் பற்றிக் கொண்டான். பற்றிக் கொண்டதும் அந்தக் கையின் மீது கனமான பூட்ஸ் கால்கள் ஓங்கி மிதித்தன.

'விளையாட்டில் இவ்வளவு வக்கிரமும், உக்கிரமும் ...குமா என்ன?' குமரன் கோபமாக "வாட்டிஸ் திஸ் நான்சென்ஸ்?" என்று கத்தினான்.

"விளையாட்டிற்கு ஒரு அளவு இருக்கிறது. யாரது என் கையை மிதிப்பது?" அவன் கேட்டு முடிப்பதற்குள் மேலே இருந்து குனிந்த ஒரு மூச்சுக் காற்று அவன் உச்சந்தலையை தொட்டது. அவனுடைய இரண்டு காதுகளையும் பிடித்து அப்படியே யாரோ உயர்த்தினார்கள்.

வலியில் குமரனுக்கு உயிர் போனது. அவனை அறியாமல் அவன் தொண்டை பிளந்து கூக்குரல் வெளிப்பட்டது.

இருட்டில் துழாவி தன்னுடைய எதிரியை அவன் தாக்கப்பார்த்தபொழுது அவன் மூக்கில் முஷ்டி பாய்ந்தது.

மூக்கு எலும்பு உடைந்து உடனே அந்த இடத்தில் பிசுபிசுப்பு தெரிந்தது. குமரன் திணறினான்.

மாயன் சொன்ன பேச்சை மீறி தனியாக வந்ததற்காக வருத்தப்பட்டான்.

எப்படியாவது இங்கிருந்து தப்பித்து ஓடி தன் குழு நண்பர்களுடன் சேர்ந்துவிட்டால் போதும் என்ற அச்சம் அவனை விரட்டியது. அப்படியே தரையில் தவழ்ந்து தப்பித்துவிட வேண்டும் என்று நகர்ந்தபொழுது திடீரென்று அவனுடைய பேண்டிற்குள் ஏதோ ஒரு பூச்சி ஏறுவதுபோல் இருந்தது. ஒன்றல்ல, இரண்டல்ல, மூன்றல்ல சட்சட் என்று சிலந்தி போன்ற ஆறு எட்டு கால்கள் உள்ள பூச்சிகள் பத்து பதினைந்து உடைக்குள்



ஏறி ஓட ஆரம்பித்தன.

இருட்டு, ஏற்கனவே தாக்குண்ட பயம், இனம் தெரியாத கலக்கம், எந்த பூச்சி என்ன செய்கிறது என்று புரியாத நடுக்கம். குமரன் அடக்க முடியாமல் அலறினான். புரண்டான். ஒரு பூச்சியைத் தட்டினால் இன்னொரு பூச்சி ஏறுவதுபோல இருந்தது.

சுருண்டு, புரண்டு, உருண்டு அலறிக் கொண்டே எழுந்து ஓட பார்த்தபொழுது கதவு இருந்த திசை என்று நினைத்து அவன் ஓடி கான்க்ரீட் சுவரில் முட்டி மோதிய வேகத்தில் முகத்தில் அங்கங்கே ரத்தம் கசிய அப்படியே குப்புற அடித்து விழுந்தான். அவன் முகத்தில் அந்த பூட்ஸ் கால் ஓங்கி மிதித்தது.

இருட்டில் தனக்கு கண் தெரியாத பொழுது வேறு யாருக்கோ துல்லியமாக தெரிவதைப் பார்த்து அவன் திடுக்கிட்டான்.

மிதித்த பூட்ஸ் கால் அப்படியே மடங்கி ஒரு முழங்கால் அவன் முதுகின் நடுமையத்தில் அழுத்தியது.

இது பேயோ, பிசாசோ அல்ல. உயிருள்ள ஒரு மனிதன்தான் என்று குமரன் உணர்ந்தபோது மேலே உட்கார்ந்தவன் குமரனுடைய முகத்தை பின்புறமிருந்து பிடித்து அப்படியே திருகி இழுத்தான்.

அந்தக்கடைசி வினாடியில் குமரன் தன்னுடைய தொண்டை எலும்பு முறிபடுவதை உணர்ந்து உச்சக்குரலில் ஒருமுறை அலறி அடங்கினான்.

## 11



"குமரன்...குமரன்..." என்று கூப்பிட்டுக் கொண்டே மாயன் இங்கும் அங்குமாக நகர்ந்து பார்த்தார்.

இருட்டில் எந்த திசையிலிருந்தும் பதில் வரவில்லை.

மாயனுடைய குரலில் முதன்முறையாக ஒரு

கவலை வந்தது.

"குமாருக்கு அடிகிடிபட்டு எங்காவது விழுந்து கிடக்கிறானா? அல்லது முட்டாள்தனமாக பரிசு நாணயத்தைத் எடுப்பதற்காக தனியாக அவன் அந்த அறைக்கு போயிருக்கிறானா?"

"எதுவாக இருந்தாலும் இந்த இருட்டில் நமக்கு பார்வை எது?" என்றார் புரஃபசர் ராமநாதன்.

"தங்கமணி" அழகப்பனின் குரல் ஓங்கி ஒலித்தது.

"ம்..."

"இந்த மாளிகையில் எத்தனையோ நாட்கள் வழிகாட்டியாக இருந்திருக்கிறீர்கள். இப்படி ஒரு நிலைமை வந்தால் வெளியேறுவதற்கு என்ன வழிமுறைகள் இருக்கின்றன என்று உங்களுக்குக்கூட சொல்லித்தரப்படவில்லையா?"

தங்கமணி சற்று தயங்கி விட்டு, "உண்மை என்னவென்றால இந்த மாளிகையில் இந்த மாதிரி ஒரு நிலைமை வரும் என்று யாரும் எதிர்பார்க்கவேயில்லை. மின்சாரம் துண்டிக்கப்பட்டாலும உடனடியாக இயங்குவதற்காக மிக அற்புதமான ஜெனரேட்டர்கள் இங்கு நிர்மாணிக்கப்பட்டிருந்தன. இந்த நிலைமையில் மின்சாரமும் இல்லாமல் ஜெனரேட்டரும் வேலை செய்யாமல் இப்படி அசம்பாவிதமான இரவை சந்திக்க வேண்டி இருக்கும் என்று எந்த திட்டமும் போட்டுக் கொள்ளவில்லை. தவிர, எமர்ஜென்சி விளக்குகள் கூட எரியாமலிருப்பது எனக்கு ரொம்ப ஆச்சர்யமாக இருக்கிறது. பேட்டரியில் இயங்கும் டார்ச்கள் கூட கைநழுவிப் போய்விட்டன. ஆனால் இந்த நான்காவது தளத்தில் இன்னும் ஒரே ஒரு பேட்டரி விளக்கு இருப்பது எனக்கு ஞாபகத்திற்கு வருகிறது. நீங்கள் எல்லோரும் இங்கேயே இருங்கள். நான் எடுத்து வருகிறேன்."

சில நிமிடங்கள் இருட்டில் எந்த வித அசம்பாவிதமும் இல்லாமல் கடந்தன.

எல்லோரும் நெருக்கமாக நின்றபடி ஒருவருடைய மூச்சை அடுத்தவர் உணர்ந்தபடி குழுமி இருந்தனர்.



திடீரென்று கூரையில் ஒரு வெளிச்சப்புள்ளி. ஒரு டார்ச்சை இயக்கியபடி தங்கமணி அங்கு வந்து சேர்ந்தான்.

"இதில் இருக்கும் பேட்டரி அதிகபட்சம் இன்னும் அரைமணி நேரம்தான் தாக்குபிடிக்கும். அதற்குள் நாம் வெளியேறி விட வேண்டும்."

டார்ச் வட்டம் அங்கு கூடியிருந்த அத்தனை பேர் முகங்களின் மீதும் தயங்கித் தயங்கி நகர்ந்தது.

மாயன் ஒவ்வொரு முகமாக பார்த்துக் கொண்டே வந்தார். குமாரனைத் தவிர மற்ற எல்லோரும் அங்கே கூடியிருந்தனர்.

"இப்பொழுது முதலில் நாம் குமாரனை கண்டுபிடிக்க வேண்டும்" என்றாள் இந்துமதி.

"ஆமாம். அதற்கு அதிகபட்சம் பத்து நிமிடங்கள் நாம் ஒதுக்கலாம். அதன்பின் இந்த பேட்டரி உயிரோடு இருக்கும்பொழுதே நாம் பத்திரமான இடத்திற்கு போய்விடுவது நல்லது" என்றான் தங்கமணி.

"இந்த நான்காவது தளத்திலிருந்து கீழ் தளம் வரை செல்வதற்கு இரண்டு வழிகள் இருக்கின்றன. ஒன்று பாதாள ஏணி அறை. இன்னொன்று பாதாள தண்ணீர் பாதை."

"இரண்டையும் விளக்கமாகச் சொல்லுங்கள்" என்றான் அழகப்பன்.

"சொல்கிறேன். பாதாள ஏணி அறையில் ஸ்பேஸ் ரூமில் பார்த்ததுபோல ஆழமான கிணறுபோன்ற ஒரு அமைப்பு இருக்கும். அது இந்த நான்காவது தளத்திலிருந்து நான்கு மாடிக்குமாக சேர்த்து தரை வரை ஆழமாக இருக்கும். நான்காவது தளத்திலிருந்து மூன்றாவது தளம் வரை இறங்க ஒரு இரும்பு ஏணி சுவரோடு பொருத்தப்பட்டிருக்கும். அதில் ஒருவர் பின் ஒருவராக இறங்கலாம். மூன்றாவது தளத்தின் முடிவில் அந்த இரும்பு ஏணி ஒரு கதவில் கொண்டு விடும். மூன்றாவது தளத்தில் நுழையாமல் கடைசி வரை இறங்க வேண்டும் என்றால் அடுத்த இரும்பு ஏணி இதன்

தொடர்ச்சியாக இல்லாமல் நான்கு அடி தள்ளி வேறொரு இடத்தில் இருக்கும். இந்த ஏணியின் முடிவில் இருந்து மிக சாமர்த்தியமாக அடுத்த ஏணிக்கு கீழே விழாமல் நகர வேண்டும். அப்படி கவனமாக நகர்ந்து விட்டால் அந்த ஏணியில் அடுத்த தளம் வரை அதாவது இரண்டாவது தளம் வரை இறங்கிவிடலாம். மீண்டும் அங்கே ஏணி முடிந்து விடும். அதிலிருந்து நான்கு அடி தள்ளி அடுத்த ஏணி கீழே இறங்கும். ஒவ்வொரு ஏணியின் முடிவில் இருந்தும் அடுத்த தளத்திற்குச் செல்லும் ஏணி சற்று ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கும். ஒரே தொடர்ச்சியாக இருக்காது. கவனமாக ஒவ்வொரு ஏணியின் முடிவில் இருந்தும் அடுத்த ஏணிக்கு மாறி இறங்கிக் கொண்டே போனால் தரை வரை நாம் சென்று விடலாம். இதில் விளையாட்டு ஒழுங்காக நடக்கும்பொழுது ஏணியில் இறங்கும் பொழுதே பயமுறுத்துவதற்காக சில சமயம் ஏணி அப்படியே கையோடு பெயர்த்துக் கொண்டு வரும். கீழே விழுவதுபோல ஒரு போக்குக் காட்டி விட்டு மீண்டும் பொருத்திக் கொள்ளும். அதில் மிரண்டு ஏணியைக் கை விடுபவர்கள் தரையில்தான் போய் சேருவார்கள். அவர்கள் உயிருக்கு ஆபத்து இல்லை என்றாலும் கீழே விழுந்த அதிர்ச்சியில் குறைந்தது அரை மணிநேரத்திற்கு நகர முடியாது. அப்படியே நகரும் அளவிற்கு அவர்கள் உடலில் சக்தி இருந்தாலும் கீழ் தளத்தின் கதவு அரைமணிநேரத்திற்கு திறக்கமுடியாது.

"பரவாயில்லை! இப்பொழுது மின்சாரம் இல்லாததால் இந்த ஏணிகள் குலுங்காது. புரட்டாது. பயமுறுத்தல்களை செய்யாது என்று நான் நினைக்கிறேன்" என்றான் அழகப்பன்.

"இன்னொரு வழி எங்கே இருக்கிறது?" புரஃபஸர் மோகனின் குரல் தங்கமணியை திரும்ப வைத்தது.

"இன்னொரு வழி, பாதாள தண்ணீர் பாதை. அது இதே கட்டிடத்தில், இதே தளத்தின் இன்னொரு பக்கம் இருக்கிறது. அங்கே கதவை திறந்ததும் ஒரு ராட்சஸ பைப் இருக்கும். அது வளைந்து வளைந்து வளைந்து செல்லும். அந்த ராட்சஸ பைப்பிற்குள் எப்போதும்



ஈரமாக இருக்கும் படி தண்ணீர் கசிந்து கொண்டே இருக்கும். அந்த பைப்பிற்குள் ஆட்கள் அப்படியே ஏறி உட்காரலாம். உட்கார்ந்தால் தானாக சறுக்கு மரத்தில் வழுக்கி செல்வதுபோல அதில் வழுக்கிச் செல்லலாம்."

"புரிகிறது" என்றாள் சிந்தூரி. "தண்ணீர் விளையாட்டுக்கள் நிரம்பிய சில தீம் பார்க்குகளில் இதைப்போல நான் பார்த்திருக்கிறேன்."

"கரெக்ட். அதைப்போலத்தான். ஆனால் இதில் ஒரே ஒரு பிரச்சினை என்னவென்றால் அந்த பைப் குழாய்க்குள் சறுக்கு மரத்தில் இறங்குவது போல் இறங்கி விட்டால் மூன்றாவது தளத்தில் ஒரு முறை வெளியே வருவதற்கான திறப்பு இருக்கிறது. அதைத் தவறவிட்டால் ஒன்றாவது தளத்தில்கூட வெளியே வரமுடியாது. அது நேரே இந்த அச்சமாளிகையின் தடாகத்திற்குள் கொண்டு சென்று விட்டுவிடும். தடாகம் என்றால் நீர் நிரம்பிய ஒரு பகுதி இந்த மேப்பில் காட்டப்பட்டிருந்ததே அங்கே. அந்தப் பைப் தடாகத்திற்குள்ளும் அப்படியே செலுத்தப்பட்டிருப்பதால் தடாகத்தை அடைந்ததும் உடனே வெளியே வந்துவிட முடியாது. பைப்பிற்குள்ளேயே நிரம்பி இருக்கும் தண்ணீர் வழியே இருட்டில் நீந்திச் செல்ல வேண்டும். பைப் எங்கெல்லாம் திரும்புகிறதோ அங்கெல்லாம் திரும்பிப் போக வேண்டும். ஒரு இடத்திற்குப் பிறகு ஃபைபர் பைப் முடிந்து கல்லாலும் கான்கிரீட்டாலும் கட்டப்பட்ட ஒரு குகைப்பகுதிக்குள் போய் முடியும். அந்த குகைப் பகுதியும் தண்ணீருக்குள் அமைக்கப்பட்டிருப்பதால் அதன் பின் பயணம் முழுவதும் தண்ணீருக்குள்ளேயே இருக்கும். கிட்டத்தட்ட அரைக்கிலோ மீட்டர் தூரம் தண்ணீருக்குள் விதம் விதமாக வளைந்து வளைந்து அந்த குகையின் குறுகலான பாதை வழியாக நீந்தி வெளியே வரவேண்டியிருக்கும். இந்த பாதையை தேர்ந்தெடுப்பவர்களை மிரட்டுவதற்காக தண்ணீரில் திடீர் திடீரென்று தோன்றி மிரளச் செய்ய நிறைய தண்ணீர் வாழ் பிராணிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன."

"அப்படியென்றால்?"

"முதலைகள், திமிங்கலங்கள், சுறாக்கள், ராட்சஷ ஆமைகள் போன்ற பல செயற்கை பொம்மைகள் இந்த தண்ணீருக்குள் அங்கங்கே தலை தூக்கும். இருட்டில் நம்மை மிரளச் செய்யும். இப்பொழுது விளையாட்டு நின்றுபோய் நாம் நம் உயிருக்காக பயணப்படுவதால் ரகசியங்களை நான் உங்களிடம் உடைத்து விட்டேன். எல்லாமே பொம்மைகள்தான். எதனாலும் எந்த ஆபத்தும் கிடையாது. தவிர, மின்சாரம் இல்லாததால் இந்த பொம்மைகள் இயங்குமா? நம்மை மிரட்டுமா? என்பது கூட எனக்கு சரியாகத் தெரியவில்லை. பொம்மைகள் ஒவ்வொன்றும் பேட்டரியில் இயங்குவதாக இருந்தாலும் அவற்றுக்கான மொத்தமான ஆணைகள் மெயின் ...ர்டுளிலிருந்துதான் கொடுக்கப்படும்."

"அங்கிள், இப்போது குமரனை நாம் கண்டுபிடித்து விட்டால் பயணத்தின் அடுத்தகட்டத்திற்கு நாம் தயாராகி விடுவோம்."

"எஸ். என்னுடைய சந்தேகம் அந்த வெள்ளி நாணயம் வைக்கப்பட்டிருக்கும் அறை" என்றாள் இந்துமதி.

மாயன் முன்னே நடக்க, ஒருவரோடு ஒருவர் கைகோர்த்தபடி மற்றவர்கள் அவரைப் பின் தொடர்ந்தார்கள்.

## 12



"மை காட்" மாயனின் குரல் மிக அதிர்ந்து ஒலித்தது.

டார்ச்சின் விரல் தடிமனுக்கு இருந்த வெளிச்சப்புள்ளி தரையில் கோணலாக கிடந்த குமரனின் முகத்தில் தயங்கியது. நகர்ந்தது.

மாயன் உடனே மண்டியிட்டு அமர்ந்து குமரனின் நாடியைப் பரிசோதித்தார்.



"ஓ நோ!" என்று அவர் குரல் கொடுத்தபொழுது அதில் வியப்பை விட வேதனைதான் அதிகம் இருந்தது.

சந்தினி பிரமோதத்தின் முதுகிற்குப் பின்னே ஒண்டிக் கொண்டாள். அவளுடைய பூ உடல் நடுநடுவென்று நடுங்குவதை பிரமோதத்தால் உணர முடிந்தது.

இந்துமதி அதேபோல அழகப்பனின் கையை இறுகப் பற்றிக் கொண்டாள்.

மோசமான ஒரு சூழ்நிலையாக இருந்தபோதும் அப்படி அவள் உரிமையுடன் அவனுடைய கையை அணைத்தது அழகப்பனுக்குள் ஒரு மெல்லிய கிளர்ச்சியை ஏற்படுத்தியது.

குமரனின் அருகில் மண்டியிட்டு அமர்ந்த மாயன், அவனை மெல்லப் புரட்டினார்.

"குமரன் இறந்து விட்டான்" இதைச் சொல்லும் பொழுது அவர் குரல் உடைந்தது.

சிந்தூரி தங்கமணியைப் பிடித்து உலுக்கினாள்.

"தங்கமணி! உண்மையைச் சொல்லுங்கள். இங்கே குடும்பத்தோடு பல வருடங்களுக்கு முன்பு தற்கொலை செய்து கொண்ட ஒரு குடும்பம் பேயாக பிசாசாக நடமாடுவதாக ஜான் கென்னடி சொன்னாரே. இன்றைக்குத்தான் அந்த நாள் என்று சொன்னாரே, அதெல்லாம் உண்மையா? பொய்யா?"

"ஷட்-அப்" என்றார் மாயன். "ஏற்கனவே இருக்கும் பிரச்சினைகள் போதும். பேய், பிசாசு என்று தேவையில்லாமல் ஒரு அச்சத்தை வேறு நாம் வளர்த்துக் கொள்ள வேண்டாம்."

"குமரன் எதற்காக நம்மிடமிருந்து பிரிந்து வந்தான்? யார் அவனை இப்படிக் கொன்றுபோட்டது? அச்ச விளையாட்டு என்று சொல்லிவிட்டு, எதற்காக இந்த விஷ விளையாட்டு?" சிந்தூரியின் குரல் கீச்சு கீச்சு என்று கோபத்தில், கோபத்தை விட அச்சத்தில் அலறியது.

மாயன் தங்கமணியைப் பார்த்து நிமிர்ந்தார்.

"தங்கமணி இங்கே நீ வேலைக்கு சேர்ந்து எத்தனை நாட்கள் ஆகின்றன?"

"நாட்கள் இல்லை சார். பதினைந்து மாதங்களாக நான் இங்கே இருக்கிறேன். கிட்டத்தட்ட முன்னூறு முறை வெவ்வேறு குழுக்களுடன் இந்த விளையாட்டிற்கு நான் வழிகாட்டியாக இருந்திருக்கிறேன். ஆனால் ஒரு தடவை கூட இந்த அளவிற்கு மோசமான ஒரு நிலைமையை நான் சந்தித்தது இல்லை. மறுபடியும் சொல்கிறேன். இது விளையாட்டில் ஒரு அங்கம் அல்ல. எனக்கு விளக்கம் தெரியாத ஏதோ ஒரு விபரீதமான சக்தி இங்கே இப்பொழுது காரியங்களை நடத்திக் கொண்டிருக்கிறது."

"குமரன், கைலாஷ் இருவரையும் நாம் இப்படியே விட்டுப்போவது என்பது மனித நாகரிகம் இல்லை. ஆனால் எப்பொழுது வேண்டுமானாலும் செத்து விடும் என்ற ஒரு டார்ச்சை வைத்துக் கொண்டு இவர்கள் உடல்களை அப்புறப்படுத்தி நம்முடன் எடுத்துப்போவது என்பது இந்த இரவில் இயலாத ஒரு காரியம். எனவே முதலில் பத்திரமான இடத்திற்கு போய் சேருவது நமக்கு முதல் குறிக்கோளாக இருக்கட்டும். ஆனால், விடிந்தபிறகு பகலில் மீண்டும் இந்த மாளிகைக்குள் தங்கமணியின் உதவியோடு நாம் வந்து இவர்களை மீட்டுப்போவோம்" சொல்லப்படாமலேயே மாயன் அந்த பெரிய குழுவிற்கு தலைவனாகி இருந்தார்.

"சரி... இப்பொழுது நாம் இரண்டு குழுக்களாக பிரிந்தால் நல்லது" என்றான் தங்கமணி.

"மறுபடியுமா?"

"ஆமாம். பாதாள ஏணி வழியாக இறங்குவது என்றாலும் ஒருவர் பின் ஒருவராக இறங்க வேண்டும். அதற்கு வெகுநேரமாகலாம். சிலர் அந்த வழியாகவும் நன்றாக நீச்சல் தெரிந்து மூச்சுப்பிடிக்கக்கூடியவர்கள் பாதாள தண்ணீர் பாதை வழியாகவும் வெளியேறலாம் என்பது என்னுடைய கருத்து. எப்படியும் இரண்டு வழிகளுமே கீழ்தளத்தின் ரெஸ்ட் ரூம் அருகில் கொண்டு



விடும். அதுதான் விளையாட்டின் கடைசி அறை."

"வேண்டாம்" என்றார் மாயன்.

"எங்களுக்கு இருப்பது ஒரே ஒரு வழிகாட்டி. நாம் இரண்டாக பிரிந்தால் நீ யாராவது ஒரு குழுவுடன்தான் வர முடியும். மற்றவர்களுக்கு வழிகாட்டவோ, உதவி செய்யவோ யாரும் இருக்க மாட்டார்கள். எல்லோருமே பாதாள ஏணி வழியாக இறங்கலாம் என்பதுதான் என்னுடைய கருத்து."

" நம் எல்லோருக்கும் நீச்சல் தெரியும்தானே?" அழகப்பனின் குரல் ஒலித்தது.

"எனக்குத் தெரியும்... எனக்குத் தெரியும்" என்று ஒவ்வொரு குரலாக ஒலித்தபோது அந்தக் குழுவில் இருந்த அத்தனை பேருக்குமே நீச்சல் தெரியும் என்பது புரிந்தது.

"ஏணி வழியாக இறங்குவது என்பது சற்று கடினமாக இருக்கும் என்று தங்கமணி சொன்னாரே. நாம் எல்லோரும் ஏன் இந்த தண்ணீர் பாதை வழியாக போகக்கூடாது?"

"ஒரே ஒரு காரணம்தான்" என்றார் மாயன். "ஒரு பைப் வழியே செல்லும்பொழுது மற்றவர்கள் எங்கே இருக்கிறார்கள், எந்த நிலைமையில் இருக்கிறார்கள் என்று பார்ப்பது கடினம். நம்மைப் பற்றி மட்டும்தான் கவனிக்க முடியும். ஆனால் ஏணி அறை வழியே போகும்பொழுது மற்றவர்களையும் நம் பார்வையிலே வைத்திருக்கலாம். குரூப்பாக போவதற்கு இதுதான் உகந்தது."



## 13

மாயன் சொன்னது உடனே ஏற்றுக் கொள்ளப்பட்டது.

தங்கமணி டார்ச் அடித்து முன்னே வழி காட்ட மற்றவர்கள் அவனை பின்தொடர்

வது என்று தீர்மானமாயிற்று.

கீழே இறந்து கிடந்த குமரனை விட்டுப் பிரிவது மாயனுக்கு சற்று சங்கடமாக இருந்தது.

ராணுவத்தில் இருந்து ஓய்வுபெற்ற காரணத்தினால் மரணம் என்பதோ இறந்த உடல்கள் என்பதோ அவருக்கு பழக்கமில்லாத ஒன்று அல்ல. ஆனாலும் அவருக்கு நெருக்கமான குமரன் கொடூரமான முறையில் அங்கு கொல்லப்பட்டு இறந்து கிடந்தது மாயனை அசைத்து விட்டது.

கைலாஷ்,குமரன் இருவரும் இயற்கையாக இறக்காமல் கொலை செய்யப்பட்டு கிடந்ததால் இது நிச்சயம் போலீசிற்கு சொல்லப்பட வேண்டிய ஒரு சம்பவம் என்று மாயனுக்குத் தெரியும். ஆனால் கம்பெனி உடைகளை அணிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக அவர் கொண்டு வந்திருந்த டார்ச், செல்போன் போன்றவற்றை கீழ்தளத்திலேயே வாங்கி வைத்திருந்ததால் கைகள் கட்டப்பட்டது போல் எதுவும் செய்ய இயலாமல் அவர் தவித்தார்.

"மாயன். ப்ளீஸ் கம்" என்று புரஃபசர் ராமநாதனின் குரல் ஒலித்ததும் குமரனை தட்டிக் கொடுத்துவிட்டு மாயன் எழுந்தார்.

"சாரி... குமரன்."

## 14



பாதாள ஏணி அறையின் கதவை நெருங்கினான் தங்க மணி.

டார்ச்சின் வெளிச்சம் மங்கலாகிக்கொண்டே வந்தது.

"இதில் போடப்பட்டிருக்கும் பேட்டரி பலவீனமாகி விட்டதில் இன்னும் சற்று நேரம்தான் இந்த வெளிச்சம் கூட நமக்கு கிடைக்கும். எனவே நாம் கதவைத் திறந்ததும் எல்லோரும் கவனமாக ஏணிகள் எங்கங்கே பொருத்தப்பட்டிருக்கின்



றன என்று பார்த்துக் கொள்ளுங்கள்."

எல்லோரும் தங்கமணியின் பின்னே ஒரு குழுவாக சேர்ந்தனர்.

தங்கமணி டார்ச் வெளிச்சத்தைக் காட்டிக் கொண்டு அந்த அறைக்கதவைத் திறந்தான்.

ஸ்பேஸ் ரூம் போலவே இதுவும் கிணறுபோல ஆழமாக அமைக்கப்பட்ட ஒரு அறையாக இருந்தது.

ஸ்பேஸ் ரூம் இரண்டு தளங்களுக்கு போடப்பட்டிருந்தது. இதுவோ நான்கு தளங்களுக்கு போடப்பட்டிருந்தது.

சுவரில் மேல் தளத்தையும் அதன் கீழ்தளத்தையும் இணைக்கும் ஏணிகள் தனித்தனியே தொடர்ச்சி இல்லாமல் பிரிக்கப்பட்டிருந்தன. எந்த வித வெளிச்சமும் இல்லாமல் இந்த சிறு டார்ச்சின் வெளிச்சம் மிக சொற்பமாகவே அந்த அறையின் முழு பரிணாமத்தையும் காட்ட முடிந்தது.

அங்கே அவர்கள் அத்தனை பேரும் பார்த்த காட்சி அதிர்ச்சியாய் இருந்தது.

அறையின் மையத்தில் கூரையிலிருந்து ஜான் கென்னடி தொங்கிக்கொண்டிருந்தார். தொங்கிக் கொண்டிருந்தார் என்றால் கழுத்தில் சுருக்கு மாட்டப்பட்டு தண்டனை நிறைவேற்றப்பட்ட ஒரு தூக்குக் கைதியைப்போல தூக்கில் தொங்கிக் கொண்டிருந்தார்.

"சார்" என்று குரல் கொடுத்தான் தங்கமணி.

எல்லோருடைய கவனமும் ஜான்கென்னடியின் மீதே பதிந்தது.

"ஏற்கனவே வயிற்றில் கத்திக்குத்தப்பட்டது போல் ஒரு ட்ராமா ஆடினாரே! இது அடுத்த ட்ராமாவா?" என்று புரஃபசர் மோகன் மெல்லிய குரலில் கேட்டார்.

"திடீரென்று அதிர்ச்சியூட்டுவது போல இப்படி தூக்கில் தொங்குவதாக ஒரு காட்சி இந்த விளையாட்டில் உண்டு. ஆனால் சார் தொங்குவதை பார்த்தால் விளையாட்டிற்காக தொங்குவதைப்போல

இல்லை" என்று பதட்டத்துடன் சொன்னான் தங்கமணி.

பலவீனமாகி விட்ட டார்ச் வெளிச்சம் நடுமையத்தில் தொங்கிக் கொண்டிருந்த ஜான் கென்னடியின் பாதத்திலிருந்து உச்சிவரை மீண்டும் மீண்டும் கோடாக பயணித்து அவரை வெளிச்சமிட முயற்சி செய்தது.

ஜான் கென்னடியின் தலை முன்தள்ளி இருந்தது. கழுத்தில் சுருக்கு விழுந்து இழுத்தது போல நாக்கு வெளித்தள்ளி இருந்தது.

"அவர் நாடகமாடுகிறாரா? அல்லது உண்மையில் தொங்குகிறாரா? என்று பார்த்துவிட வேண்டும்" என்றார் மாயன்.

"கூரையில் ஏறி அந்தக் கயிற்றை அறுக்க முடியாது. ஏதாவது நீளமான கம்பு இருந்தால் அதை வைத்து அந்த உடலைத் தள்ளி நம் அருகில் இழுத்து அவரை தொட்டுப் பார்க்கலாம். அப்படி ஒரு இரும்பு கம்பி இருக்கிறது. அதை நான் கொண்டு வருகிறேன்."

டார்ச்சை மாயனிடம் கொடுத்து விட்டு தங்கமணி வந்த பாதையில் விரைந்து ஓடினான்.

அங்கிருந்த அத்தனை பேரும் ஒருவரோடு ஒருவர் தேய்த்துக் கொண்டு ஒன்றாக ஒன்றிப்போய் விட மாட்டோமா? என்பதுபோல அச்சத்துடன் மேலே இருந்து …கிய ஜான்கென்னடியைப் பார்த்தனர்.

இது மட்டும் நாடகமாக இருந்தால் நான் அவரை சும்மா விடப்போவதில்லை." புரஃபசர் மோகனின் குரல் சற்று கோபத்துடன் ஒலித்தது.

சாந்தினி பிரமோத்தை பிடித்துக் கொண்டு அழ ஆரம்பித்தாள்.

"பிரமோத் எதற்காக கலந்து கொண்டோம்? வேறு ஏதாவது பஸ் பிடித்து வேறெங்காவது ஓடிப்போயிருக்க கூடாது? வாழ்க்கையை ஆரம்பிக்கும் முதல் நாளிலேயே இத்தனைப் பிணங்களை நாம் பார்க்க வேண்டுமா?"

பிரமோத் அவளை அணைத்து ஆதரவாக கன்னம் வருடி " எல்லாமே நாடகம் என்று நினைத்துக் கொள்.



நாம் பத்திரமான இடத்திற்கு போய்விடப் போகிறோம். கவலைப்படாதே. இதெல்லாம் ஒரு கெட்ட சொப்பனமாக மறந்துவிடு."

சாந்தினி ஒரு பக்கம் அழுதுகொண்டிருக்க, இந்துமதி நிற்கமுடியாதவள் போல தளர்ந்து அப்படியே தரையில் உட்கார்ந்து விட்டாள்.

அழகப்பன் அவள் அருகில் மண்டியிட்டு அமர்ந்தான். "இந்து என்ன பண்ணுகிறது?"

இந்து என்று அவள் பெயரை அவன் சுருக்கி உரிமையுடன் கூப்பிட்டதை ரசித்தவள்போல அவள் புன்னகைத்தாள்.

"ஒன்றுமில்லை. ஆனால் கால்கள் பலவீனமாகி விட்டன."

"சரி... சற்று நேரம் ஓய்வெடு... கீழே இறங்குவதற்கு அத்தனை சக்தியும் நமக்குத் தேவை."

டார்ச் வெளிச்சம் இன்னும் மங்கலாகியது.

"நண்பர்களே!" மாயனின் குரல் மீண்டும் ஒலித்தது. "டார்ச்சில் இன்னும் சற்று நேரம்தான் வெளிச்சம் கிடைக்கும். இந்த அறையில் இறங்கும்போது ஒரு ஏணியிலிருந்து இன்னொரு ஏணிக்கு மாறுவதற்கெல்லாம் நமக்கு வெளிச்சம் தேவைப்படும். இப்பொழுது ஒரே இடத்தில் உட்கார்ந்திருப்பதற்கு வெளிச்சம் தேவையில்லை. நாம் ஒருவரையொருவர் கை கோர்த்துக் கொண்டு உட்கார்ந்திருக்கலாம். உங்கள் அனுமதியுடன் இந்த டார்ச்சை அணைக்கட்டுமா?"

"அணைத்து விடுங்கள்" என்றார் புரஃபஸர் ராமநாதன்.

'வேண்டாம்' என்று சொல்வதற்காக வாய்திறந்த சிந்தூரி கூட மாயன் சொன்ன கருத்தின் ஆழம் புரிந்து கொண்டு தலையை அசைத்தாள்.

மாயனின் கட்டைவிரல் சுவிட்சை அழுத்தியதும் இத்தனை நேரம் ஒழுகிக்கொண்டிருந்த அந்த வெளிச்சம் கூட நின்று போனது. மீண்டும் கும்மிருட்டு அவர்களைச் சூழ்ந்தது.



## 15

தங்கமணி அவனுக்குத் தெரிந்த பாதையில் இருட்டிலும் வேகமாக நடந்தான். எலும்புக்கூடு போன்ற பொம்மைகளை மேலே இருந்து தொங்கவிடுவதற்காக பயன்படும் ஒரு நீளமான இரும்புக் கம்பி எங்கே வைக்கப்பட்டிருக்கும் என்பது அவனுக்குத் தெரிந்திருந்தது.

அதை நோக்கி அவன் நடந்து கொண்டிருந்தான்.

அந்த காரிடாரின் அடுத்த திருப்பத்தில் க்ளிங் என்ற சத்தத்துடன் அவன் காலில் ஏதோ இடறியது. உருண்டு ஓடும் ஒலி கேட்டது.

உடனடியாக அச்சத்தால் தாக்கப்பட்டு தங்கமணி சுவரோடு தேய்த்து நின்றான். அவன் காலால் இடறிய அந்த உலோகப் பொருள் தரையில் உருண்டு மீண்டும் அவன் காலிலேயே வந்து மோதி நின்றது.

தங்கமணி குனிந்து அதை கையில் எடுத்தான். எடுத்தவுடனேயே அதன் வடிவத்தை வைத்து அது என்ன என்று அவனுக்குப் புரிந்தது.

உடனடியாக அவனுக்கு முகத்தில் ஒரு புன்னகை வந்தது.

அது ஒரு டார்ச். உலோக டார்ச்.

தங்கமணி படபடப்புடன் டார்ச்சின் சுவிட்சை கண்டுபிடித்து அதை இயக்கியவுடன் பளீர் என்ற வெளிச்சம் அந்த பிரதேசத்தில் பாய்ந்தது.

தங்கமணிக்கு உடலெல்லாம் நடுங்கியது.

இது கடவுள் கொடுத்த வரம். இந்த டார்ச்சைப் பார்த்ததும் குழுவில் இருக்கும் அத்தனை பேரும் சந்தோஷத்தில் கூக்குரலிடப்போகிறார்கள். இந்த டார்ச் ஆறு பெரிய பேட்டரிகள் போடக்கூடிய டார்ச். குறைந்த பட்சம் மூன்று மணி நேரத்திற்காவது இதன் வெளிச்சம்



க்குப்பிடிக்கும். அதற்குள் எந்த ஆபத்தும் இல்லாமல் வெகு கவனமாக அவர்கள் கீழ் தளத்தை அடைந்து விட டியும் என்று தங்கமணிக்கு தோன்றியது.

அதற்கு முன் தூக்கில் தொங்கிக்கொண்டிருந்த ரான்கென்னடி உயிருடன் இருக்கிறாரா? அது விளையாட்டுத்தானா? என்று தெரிந்து கொள்ள இரும்பு கம்பியை எடுத்து போகவேண்டியதை நினைத்தான்.

கம்பி இருந்த அறைக்கதவை அவன் திறந்தான்.

திடீரென்று அவனுடைய பின்னங்கழுத்து மயிர்கள் சிலிர்த்திட்டு நின்றன.

பின்னால் ஏதோ ஒரு அசைவு தெரிந்தது. தின்னதாக ஒரு சத்தம் கேட்கவில்லை. என்ன... ஏது? என்று திரும்பிப் பார்க்க வேண்டும் என்று ஒரு உந்து சக்தி கட்டளையிட்டது.

தங்கமணி தலையை திருப்பினான். முற்றிலுமாக அவன் திருப்பும்முன் காற்றில் விஷ்க் என்ற ஒரு சின்ன ஒலியுடன் பின்புறமிருந்து ஒரு நைலான் கயிறு அவன் கழுத்தில் வீசப்பட்டது. உடனடியாக தன்னிச்சையான செய்கையாக தங்கமணி டார்ச்சை கீழே நழுவவிட்டு அந்த கயிறு கழுத்தில் இறுகி விடாமல் அதன் வளையத்தைப் பிடித்தான்.

ஆனால், பின்னால் இருந்து ஒரு சக்தி வாய்ந்த உதை நடு முதுகில் செலுத்தப்பட்டது.

தங்கமணி முன்னால் தூக்கியெறியப்பட்டான். அதே அளவு கயிறு விடுவிக்கப்படாததால், கயிற்றில் இருந்த வட்டமான சுருளில் தங்கமணியின் கழுத்து முன்னோக்கிப் பாய்ந்த வேகத்தில் 'ஸ்ருக்' என்று ஒரு சுருக்கிட்டது. சுருக்கிட்ட வேகத்திலேயே மூச்சு தடைப்பட்டது. மூளை கதறியது. தங்கமணி அப்படியே புரண்டு பின்புறம் திரும்பி தன்னைத் தாக்கியது யார்? என்று பார்த்தான்.


கீழே உருண்டு கிடந்த டார்ச்சின் வெளிச்சம் சுவரிலும், தரையிலும் கூரையிலுமாக வெளிச்சத்தை பரப்பி பின்னால் இருந்த பிரதேசத்தில் பிரகாசமாகி யிருந்தது.

பின்னால் நின்றவனைப் பார்த்ததும் தங்கமணியின் கண்கள் அகலமாக விரிந்தன.

'நீ...நீயா?' என்று கேட்கவேண்டும்போல தொண்டை துடித்தது. ஆனால் ஆக்ஸிஜன் நிராகரிக்கப்பட்டு அவனுடைய மூளை செயலிழந்து நாக்கு வெளித்தள்ளியதில் வார்த்தைகள் உருப்பெறாமல் தங்கமணி தடுமாறினான்.

ஒரு கை குனிந்தது. டார்ச்சை அள்ளியது. டார்ச்சை அணைத்தது. இருள் சூழ்ந்ததும் தங்கமணி பிரண்டு மீன்போல துள்ளி நகரப்பார்த்தபோது அந்த கனமான டார்ச் அவன் மண்டையில் ஓங்கி இறக்கப்பட்டது.

தங்கமணி சொத் என்ற சத்தத்துடன் தரையில் விழுந்தான். அடங்கினான்.




மாயன் திடுக்கிட்டு டார்ச்சை உயிர்ப்பித்தார்.

"ஏதோ ஒரு சத்தம் கேட்கவில்லை?"

எல்லோருடைய முகத்திலும் சத்தம் கேட்டதற்கான அடையாளம் தெரிந்தது.

"என்ன என்று நான் பார்த்துவிட்டு வருகிறேன்" என்று மாயன் டார்ச்சுடன் நகர்ந்தார்.

"அங்கிள், நீங்கள் தனியே போக வேண்டாம். நானும் துணை வருகிறேன்" என்று குரல் வந்தது.

டார்ச்சை அடித்து பார்த்தபோது இரண்டாவது குருப்பை சேர்ந்த அகமது. திடமான உடல் வலுவுடன் அவன் தானாக உதவி செய்ய முன் வந்தது மாயனுக்கு திருப்தியாக இருந்தது.

"சரி வா. அழகப்பன், நாங்கள் இருவரும் திரும்பி வரும்வரை தயவு செய்து இந்த குருப்பிற்கு பொறுப்பெடுத்துக் கொண்டு நீ காவலாக இரு" மாயன்



சொல்லிவிட்டு அகமதுவின் கையைப் பிடித்துக் கொண்டு டார்ச்சின் மிக மங்கலான மெல்லிய வெளிச்சக்கோட்டை பின்பற்றி நடக்க ஆரம்பித்தார்.

காரிடாரின் முடிவில் இடது புறம் திரும்பும் முனையில் டார்ச் வெளிச்சம் பாய்ந்ததும் குப்புறக் கிடந்த கால்கள் தென்பட்டன.

இருவரும் அவசரம் அவசரமாக அந்த இடத்தை அடைந்து குனிந்து பார்த்தனர்.

அகமது சட்டென்று மாயனின் கையைப் பற்றிக் கொண்டான்.

"அங்கிள், எனக்குப் பயமாக இருக்கிறது."

மாயன் மண்டியிட்டு உட்கார்ந்தார். பார்த்தார். திடுக்கிட்டார். "ஓ..ஹ் காட்!" என்றார்.

"நம்மை பத்திரமான இடத்திற்கு அழைத்துப் போவதற்காக நம்முடன் வழிகாட்டியாக வந்த தங்கமணி இப்பொழுது இல்லை."

"அங்கிள், இதற்கு முன் பேய்கள் பிசாசுகள் மீது எனக்கு நம்பிக்கை இல்லாமல் இருந்தது. ஆனால் இன்றைக்கு அடுத்தடுத்து நடக்கும் மரணங்களைப் பார்க்கும்பொழுது என்னை அறியாமல் பேய் இருக்கிறதோ என்ற சந்தேகமே வந்துவிட்டது."

"என்ன உளறுகிறாய் அகமது?"

"உளறவில்லை அங்கிள், இந்த கட்டிடம் கட்டுவதற்கு முன்னால் பல வருடங்களுக்கு முன்பு ஒரு குடும்பமே இங்கு தற்கொலை செய்து கொண்டது என்று ஜான்கென்னடி சார் சொன்னாரே. அந்த குடும்பம் இப்பொழுது இங்கு பழிவாங்க வந்துவிட்டதோ என்று எனக்கு பயமாக இருக்கிறது."

தங்கமணியின் கழுத்தில் நைலான் கயிறு இறுக்கிய அடையாளம் பளீரென்று தெரிந்தது.

"பேயோ, பிசாசோ நைலான் கயிறு போட்டு கழுத்தை இறுக்காது" என்றார் மாயன்.

தங்கமணி என்ன செய்தாலும் இனி எழுந்திருக்க

மாட்டான் என்பதை உறுதி செய்து கொண்டு மாயன அகமதுவை பார்த்து திரும்பினார்.

"இதோ பார். கூட்டத்தில் போய் எல்லோரையும் பயமுறுத்த வேண்டாம். தங்கமணியை கண்டுபிடிக்க முடியவில்லை என்று சொல்லிவிடுவோம். அல்லது அடிபட்டுக் கிடக்கிறான் என்று சொல்லிவிடுவோம். நாம் எப்படியும் தப்பித்து போக வேண்டும் அந்த பாதாள ஏணிகள் வழியே இறங்கி கீழ்தளத்திற்கு போய்விடுவோம். இருக்கும் நிலைமையை பார்த்தால் இந்த டார்ச் இன்னும் பதினைந்து நிமிடங்களைக் கூட தாண்டாது."

அகமது மாயனின் கையை விடவில்லை.

இவ்வளவு திடமிருக்கும் ஒருவன் மனதளவில் மிகவும் பலவீனப்பட்டு கிடப்பது மாயனின் உதடுகளில் ஒரு புன்னகையைக் கொண்டு வந்தது.

போர் முனைகளில் நிறைய பிணங்களைப் பார்த்தவர் என்பதால் அவருக்கு மரணங்கள் ஒரு பொருட்டாக இல்லை. ஆனால் இந்த மரணங்களுக்கு பின்னால் இருந்த மர்மம் அவரை மிகவும் தொந்தரவு செய்தது.

அவர்கள் திரும்பி வந்ததும் "என்ன அங்கிள் ...ன்று?" என்று இந்துமதி கேட்டாள்.

"தங்கமணி இருட்டில் எங்கோ மோதி தடுமாறி கீழே விழுந்திருக்கிறான் அம்மா. அவனால் நகர முடியவில்லை. அவனைப் பற்றிக் கவலைப் பட வேண்டாம் என்றும் கீழ்தளத்திற்குப்போய் சேர்ந்துவிட்டால் அவனுக்கான முதல் உதவிகளை நாம் செய்ய முடியும் என்றும் சொன்னான். நாம் புறப்படுவோம்" என்றார் மாயன்.

பாதாள ஏணி அறையைத் திறந்து வைத்துக் கொண்டார்கள். சர்க்கஸில் கடைசிக்கட்டமாக பார் விளையாடுபவர்கள், பாரைப் பிடித்துக் கொண்டு ஊஞ்சலாடி முடித்தபின் ஏறி நிற்கும் குறுகலான மேடை போல அறையின் சுற்றளவில் மேடை அமைக்கப்பட்டிருந்தது. அதிலிருந்து முதல் ஏணியைப்பிடித்து இறங்க வேண்டும்.



மாயன் மற்றவர்களைப் பார்த்து "இப்பொழுது முதலில் ஒரு ஆள் இறங்கட்டும். அடுத்தது மூன்று பெண்களும் இறங்கிவிடட்டும். கடைசியாக நான் இறங்குகிறேன்."

அவர் இப்படி சொல்லிக்கொண்டிருக்கும்பொழுதே திடீரென்று உச்சக் குரலில் அலறினான் அகமது.

அத்தனை பேருக்கும் தூக்கிவாரிப்போட்டு என்ன...எது? என்ற புரியாமலேயே அந்த அலறலில் கலந்து கொண்டார்கள்.

"ஷட்-அப்" என்று மாயன் உரக்க குரல் கொடுத்ததும்தான் காரணமில்லாமலேயே அலறிக் கொண்டிருக்கும் பெண்கள் தங்கள் வாய்களை அடக்கிக் கொண்டார்கள்.

மாயன் அகமதுவைப் பார்த்து திரும்பி "என்ன அகமது எதற்காக கத்தினாய்?" என்று சற்று மிரட்டலாகவே கேட்டார்.

"அங்கிள், யாரோ என்னுடைய காலைத் தொட்டார்கள். என் கழுத்துக்காலரைப் பிடித்து பின்னால் இழுத்தார்கள். என்னுடைய தலைமுடியை பின்புறம் கிள்ளி பறிக்கப்பார்த்தார்கள். நான் திரும்பும்பொழுது என்னுடைய சட்டைக்குள் புகுந்து ஏதோ ஒரு பெரிய பூச்சி கிறுகிறு என்று மார்பில் ஊறுவதுபோல இருந்தது."

"நீ மிகவும் பயந்திருக்கிறாய் அகமது."

"இல்லை, அங்கிள். நான் சொல்வதெல்லாம் சத்தியம்."

"சரி சட்டையைக் கழற்று. உள்ளே என்ன இருக்கிறது பார்ப்போம்."

அகமது படபடப்பாக தன் சட்டையைக் கழற்றினான். உள்ளே ஒன்றும் இல்லை.

"நா... ஐயோ" என்று மீண்டும் கத்தினான்.

"எதற்காக கத்துகிறாய்?"

"அங்கிள், இப்பொழுது கூட என்னுடைய முதுகில் யாரோ அடித்தார்கள்."

திடீரென்று அகமது கீழே விழுந்தான். யாரோ அவனைப் பிடித்து உலுக்குவது போல புரண்டு புரண்டு துள்ளி துள்ளி குதித்தான். பயத்தில் அலறினான்.

அழகப்பன், புரஃபஸர் மோகன், ராமநாதன் எல்லோருமாக அவனுடைய கைகளையும், கால்களையும் அடக்கி வைக்கவேண்டியிருந்தது. சற்று நேரம் கைகளையும் கால்களையும் உதறிக் கொண்டு இருந்துவிட்டு அவன் ஓய்ந்தான்.

பெண்கள் மூவரும் பீதியின் உச்சத்தில் இருந்தார்கள்.

ஆண்களிலும் பலருக்கு கண்களில் கலவரம் தெரிந்தது.

"அகமது இந்த அச்சமாளிகையில் ஜான்கென்னடி சொன்ன பேய்கள் உலவுவதாக நம்புகிறான். அதனால சின்ன சின்ன அசைவுகளைக்கூட இவனாக கற்பனை செய்து கொண்டு பேய்கள் இருப்பதாக பயப்படுகிறான்" என்றார் மாயன்.

"இல்லை அங்கிள். அவனுடைய கண்களைப் பாருங்கள். அதில் தெரியும் அச்சத்தைப் பாருங்கள். அவன் கற்பனை செய்து கொள்வதாக நான் நினைக்கவில்லை" என்றாள் சிந்தூரி.

சற்று நேரம் அகமதுவையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவன் கொஞ்சம் கொஞ்சமாக இயல்புக்கு திரும்பிய பிறகு மாயன் அவன் தோள்களைப் பிடித்துக் குலுக்கினார்.

"அகமது. டார்ச்சில் இருக்கும் பேட்டரி மிகவும் பலவீனமாகி விட்டது. இன்னமும் நாம் தாமதம் செய்து கொண்டே இருந்தால் நிலைமை விபரீதமாகி விடும். உன்னால் இயலும் என்றால் நாம் இறங்க ஆரம்பிக்கலாம்."

"யெஸ், அங்கிள்" என்று அகமது எழுந்து உட்கார்ந்தான். கைகளையும், கால்களையும் உதறிக் கொண்டு அவனை பிடித்திருந்த மற்ற சக்திகளை விலக்கி



விட்டதைப்போல ஒரு மெல்லிய புன்னகை செய்தான்.

"ஏற்கனவே ஏற்பாடு செய்தபடி முதலில் ஒரு ஆண் இறங்கலாம்" என்றார் மாயன்.

"நான் இறங்குகிறேன். ஏசுவே எங்களை ரட்சியும்" என்று சொல்லிவிட்டு பீட்டர் அந்த முதல் ஏணியை பிடித்து படிகளில் கால்களை வைத்து இறங்க ஆரம்பித்தான். அவன் மூன்று நான்கு படிகள் இறங்கி இருந்த நேரத்தில் டார்ச்சின் வெளிச்சம் மிகவும் மங்கலாகி முழுமையாக மூடாத ஜன்னல் திரைகளின் பிளவினூடே நிலா வெளிச்சம் கசிவது போல மிக மங்கலாக வெளிச்சத்தைக் கொடுத்தது.

"அடுத்தது சிந்தூரி இறங்கட்டும்" என்று மாயன் சொல்லிக் கொண்டிருக்கும்பொழுதே.

திடீரென்று பின்னால் இருந்து அவரை யாரோ உந்தித் தள்ளியதைப்போல சரேலென்று நின்றிருந்த இடத்திலிருந்து நேராக செலுத்தப்பட்டு அந்த குறுகலான ஏணியைத் தாண்டி அந்தரத்தில் மூன்று நான்கு அடிகள் பயணம் செய்து எந்த பிடிப்பும் இல்லாமல் செங்குத்தாக மாயன் விழ ஆரம்பித்தார்.

அப்படி அந்தரத்தில் செலுத்தப்பட்டபொழுதே முதலில் அவருடைய கையிலிருந்த மெல்லிய டார்ச் விடுபட்டு விலகிப் பறந்தது.

எல்லோருமாக சேர்ந்து அலறினார்கள்.

மாயன் சில நொடிகள் பயணம் செய்து கீழே தரையில் தொம் என்று மோதும் சத்தம் கேட்டது.

உடனடியாக விரைந்து கீழ்த்தளம் வரை போய் அவரை கவனிப்பது என்பது இயலாத நிலைமை.

மாயனின் கையிலிருந்து விடுபட்ட டார்ச் எதிலோ மோதி முற்றிலுமாக வெளிச்சம் அணைந்தது. அப்படி அணையும் முன் மேலேயிருந்து தொங்கிக் கொண்டிருந்த ஜான்கென்னடியின் உடல் ஒரே ஒருமுறை காற்றில் திருகியதுபோல் சுழன்று மறுபடி நிலைக்கு வந்தது.

எல்லோரும் உச்சக்குரலில் அலற ஆரம்பிக்க பக்கத்தில் இருந்த அழகப்பனை இறுக பிடித்துக் கொண்டாள் அமுது.

"நான் சொன்னேன். யாரும் நம்பவில்லை. இந்த மாளிகையில் நிச்சயம் அமானுஷ்யமான சில சக்திகள் நடமாடுகின்றன. அவைதான் இப்படி எல்லோரையும் பிடித்து உலுக்குகின்றன. நான் கற்பனை செய்வதாக நினைத்தீர்களே. இப்போது மாயனின் நிலைமையைப் பாருங்கள்."

அழகப்பன் தானாகவே இப்பொழுது பொறுப் பெடுத்துக்கொள்ள வேண்டியிருந்தது.

அலறிக் கொண்டிருந்த எல்லோரையும் பார்த்து "ஷட்-அப்" என்று மிக உரக்கக் குரல் கொடுத்தான்.

அத்தனை குரல்களும் ஒரு சேர அடங்கின. முற்றிலும் ஒரு அமைதி அந்த இடத்தில் சூழ்ந்தது. அழகப்பன் சில அங்குலங்கள் முன் நகர்ந்து அந்த பாதாள அறைக்குள் குனிந்து "மாயன் அங்கிள்... மாயன் அங்கிள்" என்று குரல் கொடுத்தான். "எப்படி இருக்கிறீர்கள் உங்களுக்கொன்றும் பலமாக அடிபடவில்லையே"

அவனுடைய குரல் அந்த பாதாள அறையின் [சுவர்]களில் எதிரொலித்து கீழ் வரை பயணம் செய்து அங்கிருந்த தரையில் மோதி மீண்டு எழும்பி சுவர்களில் மோதித் திரும்பி இரண்டு, மூன்று மடங்காகி அவனிடமே மீண்டும் வந்தது. ஆனால் மாயனிடமிருந்து எந்த பதிலும் வரவில்லை.

"எனக்கென்னவோ பயமாக இருக்கிறது" என்றாள் இந்துமதி.

"இங்கிருந்து கிட்டத்தட்ட மூன்று, நான்கு மாடி மொத்தமாக விழுந்திருக்கிறார். என்னதான் குஷன் போட்டிருந்தாலும் நிச்சயம் கை,கால்களில் அடிபட்டிருக்கும். மயக்கமும் ஆகியிருக்கும். நாம் இப்போது என்ன செய்வது?"

"ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. இன்னமும் நாம் எல்லோரும் ஒரே குரூப்பாக செல்ல வேண்டும் என்று நினைக்க வேண்டாம். இந்த பாதாள ஏணி அறை வழியே



இறங்குவதற்கு மிகவும் தாமதமாகும் என்று எனக்குத் தோன்றுகிறது. மாறாக தண்ணீர் பாதையை நாம் தேர்ந்தெடுத்தால் வேகமாக சறுக்கிச் சென்று தண்ணீருக்குள் நுழைந்து விட்டோம் என்றால் அங்கிருந்து வெளியே வந்து முதல் தளத்தில் நுழைந்து மாயன் அங்கிளுக்கு என்ன ஆகியிருக்கிறது என்பதை பார்க்கலாம். இந்த மின்சாரத் தடை என்பது அச்சமாளிகைக்குள்ளே மட்டுமா? அல்லது வெளியிலுமா என்பதையும் நாம் தெரிந்து கொள்ள வேண்டும். இங்கே இறந்தது போல காணப்படுகிற ஜான்கென்னடி, கைலாஷ், தங்கமணி இவர்களைத் தவிர வேறு எந்தெந்த பணியாளர்கள் இருக்கிறார்கள். அவர்களிடம் உதவி கேட்டு இங்கு இருப்பவர்களை காப்பாற்றப் பார்க்கலாம். ஆகவே இரண்டு குழுக்களாக பிரிந்து நாம் வெவ்வேறு வழியில் போவதுதான் புத்திசாலித்தனம்" என்று அழகப்பன் அழுத்தம் திருத்தமாக சொன்னான்.

ஏணியில் ஏற்கனவே இறங்க ஆரம்பித்திருந்த பீட்டர் "நான் இந்த வழியிலேயே இறங்கிப்போகிறேன்" என்றான்.

"பீட்டருடன் யார் யார் இந்த வழியில் போக விரும்புகிறீர்களோ, அவர்கள் கவனமாக ஏணிப்படிகளில் இறங்கி போங்கள். இருட்டில் கண் தெரியாது என்பதால் உடைகளை கழற்றி முடிச்சிட்டு அதன் மூலம் ஒருவரோடு ஒருவர் தொடர்பு வைத்துக் கொண்டு நீங்கள் இறங்குவது புத்திசாலித்தனம்."

"நீங்கள், நீங்கள் என்று எங்களை ஒதுக்குகிறீர்களே. அப்படியானால் நீங்கள் எந்த வழியில் வரப்போகிறீர்கள்?" என்று கேட்டாள் சிந்தூரி.

"நான் பாதாள தண்ணீர் பாதை வழியே போகிறேன். என்னுடன் வருவதற்கு யார் யார் தயாராக இருக்கிறார்களோ அவர்கள் இந்தப்பக்கம் வரட்டும்."

"நான் பீட்டருடன் போகிறேன்" என்றாள் சிந்தூரி.

"நானும்" என்றார் புரஃபசர் மோகன்.

"என்னையும் சேர்த்துக் கொள்ளுங்கள்" என்றார்

"எனக்கு... எனக்கு... இரண்டு பக்கமுமே பயமாக இருக்கிறது. ஆனால் என் குரூப்போடு சேர்ந்து இருக்கவே நான் விரும்புகிறேன். அதனால் நானும் இந்த பாதாள ஏணி வழியே போய் விடுகிறேன் என்றான் அகமது."

"வெரிகுட். கவனமாக இருங்கள். பிரமோத் நீ என்ன செய்ய முடிவு செய்தாய்?"

"நான் உங்களோடு தண்ணீர் பாதை வழியே வருகிறேன். சீக்கிரமாக தரைக்குப் போய் சேர்ந்து மாயன் அங்கிளை காப்பாற்ற வேண்டும் என்று எனக்குத் துடிப்பாக இருக்கிறது."

"சாந்தினி?"

சாந்தினி பிரமோத்தின் கையைப் பற்றிக் கொண்டாள். "நான் பிரமோத்துடன்தான்."

"இந்துமதி?"

"நானும் உங்களுடன்தான்" என்று அவள் அழகப்பனின் கையைப் பற்றிக் கொண்டாள்.

"பாதாள ஏணி வழியே இறங்குபவர்கள் ஒரு வேளை முதலில் தரையைத் தொட்டுவிட்டால் மாயன் அங்கிள் எப்படி இருக்கிறார்? என்பதை கவனியுங்கள். விரைவில் நாங்களும் அங்கே வந்து சேர்கிறோம். ஏதாவது உதவி கிடைத்தால் அவர்களையும் அழைத்துக் கொண்டு அங்கே வந்து சேர்கிறோம். குட்லக்".

அவர்கள் அந்த இடத்திலேயே இரண்டு குழுக்களாக பிரிந்து வெவ்வேறு வழிகளை தேர்ந்தெடுத்தார்கள்.



## 17

பீட்டர் தன்னுடைய சட்டையைக் கழற்றி அதன் இடது கை முனையை தன்னுடன் கட்டிக் கொண்டு சட்டையின் வலது கை முனையை அவனை அடுத்து



இறங்க ஆரம்பித்திருந்த சிந்தூரியின் காலுடன் கட்டியிருந்தான்.

முதல் ஏணியின் முடிவிற்கு வந்துவிட்டவன் அங்கிருந்து குரல் கொடுத்தான்.

"சிந்தூரி, கவனமாக இறங்கிவாருங்கள். இப்பொழுது நான் அடுத்த ஏணிக்கு மாற வேண்டும். அது இதன் தொடர்ச்சியாக இல்லாமல் தள்ளி இருப்பதால் நீங்கள் கடைசி வரை கீழே வந்துவிட்டால்தான் நான் அடுத்த ஏணிக்கு காலை நீட்டி தொட முடிகிறதா என்று பார்க்க முடியும்."

"எஸ்" என்றாள் சிந்தூரி.

அப்படி அவள் பதில் சொல்லிக்கொண்டிருக்கும் பொழுதே திடீரென்று அந்த ஏணியே மொத்தமாக பிடித்து உலுக்கப்பட்டதுபோல் தடதடவென்று நடுங்கியது. அபாய விளையாட்டின் ஒரு அங்கமாக ஏணி அதிரும் என்றெல்லாம் சொல்லப்பட்டிருந்தாலும் மின்சாரமே இல்லாத காரணத்தால் அப்படிப்பட்ட விபரீதமான விளையாட்டுக்கள் இருக்காது என்றே நினைத்திருந்தாள். இந்த நிலையில் ஏணி பிடித்து குலுக்கப்பட்ட வேகத்தில் சிந்தூரி மிரண்டு அலறி கடைசி படியைத் தாண்டி காலை வைக்கப்பார்த்து அந்தரத்தில் தடுமாறி மொத்தமாக பிடித்துக் கொண்டு நழுவத் தொங்கினாள்.

அடுத்த ஏணியைப் பிடித்து விடும் முயற்சியில் அவன் முதல் ஏணியில் மிகக்குறைவாகவே பிடிப்பை வைத்திருந்த நேரத்தில் அந்த ஏணியும் குலுங்கி, திடீரென்று சிந்தூரி நழுவி அவனுடைய முழு பாரத்தையும் அவன் மணிக்கட்டில் செலுத்தியதில் பீட்டரும் நழுவி வந்து விடப்பார்த்தான்.

முழு முயற்சியுடன் அவன் ஏணியை கெட்டியாக பற்றிக் கொள்ள வழுக்கும் துணியால் முடிச்சிடப் பட்டிருந்த அவனுடைய சட்டை நுனி மணிக்கட்டிலிருந்து அப்படியே நழுவி சிந்தூரியின் பாரம் சட்டென்று அவனிடமிருந்து விடுபட்டு சில நொடிகளுக்குள்

பின்னே சிந்தூரி தரையில் தொம் என்று மோதும் சத்தமும் ஒரே ஒரு முறை அவளுடைய அலறலும் கேட்டு ஓய்ந்தன.

சிந்தூரியை அடுத்து இறங்கிக் கொண்டிருந்த புரஃபசர் ராமநாதன், ஏணிகுலுங்கப்பட்டதில் ஏற்கனவே நெஞ்சு பதைத்திருந்தார்.

சிந்தூரியின் அலறலும் அவள் விழுந்த சத்தமும் அவருடைய இதயத்துடிப்பை எகிற செய்தன.

"பீட்டர்" என்று பயத்துடன் குரல் கொடுத்தார்.

"புரஃபசர் நான் பத்திரமாக இருக்கிறேன். சிந்தூரி தான் நழுவிவிட்டாள். மாயனின் மீது விழுந்தாளா, அல்லது பக்கத்தில் வேறு எங்காவது விழுந்தாளா என்று தெரியவில்லை. என்னுடைய சட்டையும் அவளோடு போய்விட்டது. அடுத்து இறங்குபவர் நீங்கள்தான். ஏணி எப்போது வேண்டுமானாலும் குலுங்கலாம் என்பதால் பிடிப்பை மட்டும் விட்டுவிடாதீர்கள்."

பீட்டர், ஏணியின் கடைசிப் படியில் கைகளைப் பற்றித் தொங்கிக் கொண்டு கால்களை ஊஞ்சல் ஆட்டி அடுத்த ஏணியைத் துழாவி தேடி அதன் முதல் படியில் பிடிப்பு கிடைத்ததும் அந்த ஏணிக்கு மாறினான்.

"ஐயயோ...!" என்று மேலே இருந்து அகமதுவின் அலறல் சத்தம் வந்தது.

எல்லோரும் தத்தம் நிலையில் அப்படியே உறைந்து போயினர்.

"எனக்கு ரொம்ப பயமாக இருக்கிறது. இந்த அறையில் மாயன் விழுந்து கிடக்கிறார். சிந்தூரியும் விழுந்து விட்டாள். ஏற்கனவே ஜான் கென்னடியின் பிணம் வேறு தொங்குகிறது. நான் இறங்கும்பொழுது என் மீது அந்தப்பிணம் விழுந்து விட்டால்... ஐயயோ!"

"அகமது... என்ன முட்டாள் தனமாய் பேசுகிறாய்? ஜான்கென்னடி அறையின் மையத்தில் தொங்குகிறார். நாம் அறையின் ஓரத்தில் சுவர்களில் இறங்கிக் கொண்டிருக்கிறோம். நீ பயப்படுவது மட்டுமல்லாமல்



அலறுவதால் அத்தனை பேரையும் சேர்த்து பயமுறுத்திவிடுகிறாய். நீ மட்டும் அலறாமல் இருந்திருந்தால் சிந்தூரி நிச்சயம் வழுக்கி விழுந்திருக்க மாட்டாள்."

புரஃபசர் ராமநாதனின் குரலும் கடுமையாக ஒலித்தது.

"சரி. இனிமேல் யாரையும் சமாதானப்படுத்திக் கொண்டு ஒரே இடத்தில் நின்று கொண்டிருக்க முடியாது. அவர் அவர் உயிரை அவரவர் பார்த்துக் கொள்ள வேண்டியதுதான்" என்று பீட்டரின் குரல் சற்றே கோபமாக ஒலித்தது.

"அகமது, பேய்களும், பிசாசுகளும் இறைவனின் நம்பிக்கையிருப்பவர்களை ஒன்றும் செய்யாது. இறைவனை நம்பு. தைரியமாக இறங்கு" என்று புரஃபசர் மோகனின் குரல் ஒலித்தது.

## 18



அழகப்பனின் தோளைப் பற்றிக் கொண்டு இந்துமதி. இந்துமதியின் தோளில் கை வைத்து சாந்தினி. சாந்தினியின் தோளில் கைவைத்து பிரமோத் என்று நான்கு பேரும் ஒரு சிறு ரயில் பெட்டியைப்போல நடந்தனர்.

அழகப்பன் தன்னுடைய கையை சுவரில் வைத்து ஒட்டியபடி அந்த காரிடாரில் வழி தேடி மெல்ல நகர்ந்தான்.

ஏற்கனவே வரைபடத்தில் பார்த்திருந்ததை நினைவுகூர்ந்து பாதாள தண்ணீர் பாதை போவதற்கான அறை எந்தப்பக்கம் இருக்கும் என்பதை அவன் கணித்து வைத்திருந்தான். அந்த அறை நோக்கித்தான் இந்தச் சின்ன பயணம்.

கடைசியில் வந்துகொண்டிருந்த பிரமோத்.

சாந்தினியின் தோளில் வைத்திருந்த கையை மெல்ல நகர்த்தி விரலால் அவளுடைய கழுத்தை வருடினான்.

குறுகுறுத்து சாந்தினி மெல்ல நெளிந்தாள்.

பிரமோத் இன்னும் ஒருபடி மேலே போய் இடது கையை அவளுடைய இடுப்பில் வைத்தான்.

சாந்தினி துள்ளினாள். சாந்தினி அப்படிக் குதித்ததும் சட்டென்று இந்துமதி மிரண்டு திரும்பிப்பார்த்து, "என்ன சாந்தினி? என்னாயிற்று?" என்று கேட்டாள்.

அந்த இடத்தில் வெளிச்சம் மட்டும் இருந்திருந்தால் சாந்தினியின் முகம் வெட்கத்தில் தணல் போல சிவந்து போனதை கவனித்திருக்க முடியும்.

"ஒன்றுமில்லை. காலில் ஏதோ இடறியது" என்று சாந்தினி தட்டுத்தடுமாறி பதில் சொன்னபொழுது பிரமோத் குறும்புடன் புன்னகைத்தான்.

சாந்தினி இருட்டில் கையை நீட்டி பிரமோத்தைப் பிடித்து கிள்ளினாள்.

"ஆ...ஹ" என்று குரல் வந்தது அழகப்பனிடம் இருந்து.

"என்ன அழகப்பன்?"

"இருட்டில் யாரோ என்னைப் பிடித்து கிள்ளினார்கள்" என்று அழகப்பன் சொன்னதும் சாந்தினி இன்னும் குன்றிப்போனாள்.

"நான் இல்லை" என்றாள் இந்துமதி குறும்பு புன்னகையுடன்.

"ஐ ஆம் வெரி ஸாரி" என்றாள் சாந்தினி, வெட்கத்தில் நாக்கு தடுமாற.

நான்கு பேருமே அந்த இறுக்கமான சூழ்நிலையிலும் சட்டென்று வாய்விட்டு சிரித்தார்கள்.

சாந்தினி கூச்சத்தில் இருந்து விடுபட்டு "ஏற்கனவே நெஞ்செல்லாம் திடுக் திடுக் என்று அடித்துக் கொண்டிருக்கிறது. விளையாட்டாக கூட நீங்கள்



என்னை சீண்டாதீர்கள்" என்று கொஞ்சம் கெஞ்சலும் கொஞ்சம் மிரட்டலுமாக சொன்னபோது மற்ற மூவரின் சிரிப்பு இன்னும் கூடிப்போனது.

இன்னும் சற்று தூரம் நகர்ந்ததும் அழகப்பன் நின்றான்.

"இப்பொழுது வலதுபக்கம் இருக்கும் அறைதான் நாம் நுழைய வேண்டிய அறை என்று நினைக்கிறேன். இந்த இருட்டில் எதுவும் சரியாக புலப்படாததால் நான் தவறு செய்திருக்கவும் கூடும். எதற்கும் இந்த அறையில் நுழைந்து பார்ப்போம்."

அழகப்பன் அந்தக் கதவைப் பிடித்துத் தள்ள அது உட்பக்கமாக திறந்து கொண்டது.

"எல்லோரும் தரையில் காலைத் தேய்த்து நகர்ந்து வாருங்கள். ஏனென்றால் தண்ணீர் பாதை என்பது தரையிலிருக்கும் ஒரு திறப்பு வழியேதான் இருக்கும். இருட்டில் இடம் தெரியாமல் பள்ளத்தில் காலை வைத்து விடப்போகிறீர்கள்."

நான்கு பேருமாக ஒருவரோடு ஒருவர் உரசிக்கொண்டு மெல்ல அந்த அறைக்குள் வந்து சேர்ந்ததும் தானியங்கி கதவு தானாக. க்ளக் என்ற சத்தத்துடன் மூடிக் கொண்டது.

அழகப்பன் ஒரு திட்டத்துடன் அறையின் ஒவ்வொரு சதுர அடியையும் மெல்ல காலால் தேய்த்து உணர ஆரம்பித்தான். அப்படி அவன் நான்கைந்து அடிகள் நகர்ந்து இருக்கும்பொழுது திடீரென்று அந்த அறையில் ஒரு சின்ன வெளிச்சம் உருவாகி ஆச்சர்யப்படுத்தியது.

கூரை அருகே இருந்த ஒரு மின் விளக்கு மங்கலாக எரியத் துவங்கியதும் நான்கு பேரும் சந்தோஷத்தில் கூச்சலிட்டனர்.

"துண்டிக்கப்பட்ட மின்சாரம் வந்துவிட்டது" என்று கத்தினான் பிரமோத்.

இன்னும் ஒரு விளக்கு இன்னொரு பக்கம்

பிதுக்கிவிட்டு எரிய இப்பொழுது அந்த அறை பவுர்ணமி நிலா வெளிச்சத்தில் பார்ப்பது போல பிரகாசமாக இல்லாவிட்டாலும் துல்லியமாக தெரிந்தது.

"பாதாள ஏணி வழியே இறங்கும் அவர்களுக்கும் வெளிச்சம் வந்துவிட்டதா... என்று பார்த்து விட்டு வருகிறாயா பிரமோத்?"

"எஸ்" என்றான் பிரமோத். கதவைத் திறந்து வெளியேறப் பார்த்தான். கதவை உள்புறமிருந்து திறக்கப்பார்த்தபோதுதான் தெரிந்தது. அதில் உள்ளே கைப்பிடியே இல்லை.

வேறு எவ்வளவோ விதத்தில் கதவைப் பற்றித் திறக்கப்பார்த்தபோது கதவு ஒரு அங்குலம் கூட அசையவில்லை.

"குட் காட்" என்றான் அழகப்பன்.

"இது வெளியில் இருந்து மட்டுமே திறக்கக்கூடிய கதவு. ஒரு முறை இந்த அறைக்குள் வந்து விட்டால் பிறகு மனசு மாறி வெளியே போக முடியாதபடி இந்தக் கதவு அமைக்கப்பட்டிருக்கிறது.

இப்பொழுது அந்த மங்கலான மின் வெளிச்சத்தில் தரைப் பகுதியில் ஒரு வட்ட வடிவமானகதவுதெரிந்தது. அந்த கதவில் ஒரு குமிழ் கைப்பிடி பொருத்தப்பட்டிருந்தது.

"இதுதான் பாதாள தண்ணீர் பாதையின் நுழைவாயில்" என்றான் அழகப்பன்.

"அழகப்பன், இங்கே பாருங்கள்" என்று இந்துமதி திடீரென்று குரல் கொடுத்தாள்.

எல்லோரும் திரும்பிப் பார்த்தார்கள். அந்த அறையில் சுவரோடு பதிக்கப்பட்டிருந்த அலமாரியில் "ஃபார் யூஸ் அண்டர் வாட்டர்' என்று எழுதப்பட்ட ஒரு கதவு தெரிந்தது.

"தண்ணீருக்கு அடியில் பயன்படுத்தக்கூடியது என்று எழுதப்பட்டிருக்கிறது. என்ன என்று பார்."

இந்துமதி அந்தக் கதவைத் திறந்தாள்.



அந்த அலமாரிக்குள் நெற்றியில் பட்டை போல கட்டிக் கொள்ளும் வகையில் மின்விளக்குகள் இருந்தன. நான்கு பேரும் அங்கே அவசரமாகக் கூடினார்கள்.

"இது சுரங்கம், குகை போன்ற பாதைகளில் போகிறவர்கள் கையில் எடுத்துச் செல்லாமல் தலையில் அணிந்து கொண்டு போகிற டார்ச் விளக்கு" என்றான் பிரமோத்.

"அச்சமாளிகையில் எமர்ஜென்சி விளக்குகள் கூட எரியாமல் காலை வாரி விட்ட நிலைமையில், இந்த தலையில் அணியும் டார்ச்சுகள் மட்டும் இயங்கப் போகிறதா என்ன?" என்றாள் சாந்தினி.

அழகப்பன் அதில் ஒரு டார்ச்சை எடுத்தான். அதன் ஸ்விட்சை தட்டியதும் பளீர் என்று வெளிச்சம் பாய்ந்தது.

அங்கே அதைப்போல எட்டு டார்ச்சுகள் இருந்தன.

"கடவுளே, என்ன ஒரு ஆச்சரியமான கருணை, எட்டையும் நாம் எடுத்துக் கொள்வோம். தண்ணீர் பாதையில் போகும்பொழுது, முற்றிலும் இருட்டில்தான் நாம் அவதிப்படப்போகிறோம் என்று நான் நினைத்திருந்தேன். நமக்கு ஒரு புத்தம் புதிய வரமாக மற்றவர்களுக்கு கிடைக்காத ஒரு சலுகையாக ஆளுக்கு இரண்டு டார்ச்சு கிடைக்கிறது."

"இந்த கதவை மட்டும் திறக்க முடிந்தால், கூடுதலாக இருக்கும் டார்ச்சுகளைக் கொண்டு போய் மற்றவர்களிடம் கொடுக்கலாம்" என்றாள் இந்துமதி.

"உண்மைதான். பாதாள ஏணியில் இறங்குபவர்களுக்கு வெளிச்சம் கிடைத்ததா... கிடைக்கவில்லையா என்று தெரியவில்லை. வெளிச்சம் வந்திருந்தால், மாயன் அங்கிள் எப்படி இருக்கிறார் என்று தெரிந்துகொள்ளலாம். ஆனால் இப்பொழுது நாம் இங்கிருந்து வெளியேற முடியாத நிலைமை. ஒரே வழி தண்ணீர் பாதை வழியே போய் அச்சமாளிகையின் நுழைவாயில் வழியே மீண்டும் நுழைவதுதான். எனவே மேற்கொண்டு நேரத்தை வீணடிக்காமல் நாம் புறப்படுவோம். ஒவ்வொருவரும் இரண்டு டார்ச்சுகளை

எடுத்துக் கொள்வோம். ஒன்றை கழுத்தில் அணிவோம். இன்னொன்றை தலையில் நெற்றிப்பட்டையை போல் அணிவோம். முதலில் நெற்றியில் இருக்கும் டார்ச்சை உபயோகிப்போம்.

நான்கு பேரும் அப்படியே அணிந்து கொண்டனர்.

தரையோடு பதிந்திருந்த அந்த வட்டக்கதவை குமிழைத் திருகி அழகப்பன் திறந்தான். திறந்ததும் வெளிச்சத்தில் அந்த பாதை தெரிந்தது. வட்ட வடிமான ஒரு மாபெரும் ராட்சத குழாய் போல அது அமைக்கப்பட்டிருந்தது.

"வெளிச்சம் "சரி. இந்த குழாயில் நாம் பயணப்படும்பொழுது ஆக்ஸிஜனுக்கு என்ன [illegible]வது?" என்றாள் சாந்தினி.

"நல்ல கேள்வி. நிச்சயம் அதற்கும் இங்கே ஏதாவது இருக்கும்."

அவசரம் அவசரமாக அலமாரியின் மற்ற கதவுகளையும் அவர்கள் திறந்து பார்த்தார்கள்.

"இதோ இங்கே" என்று சந்தோஷக் குரல் கொடுத்தான் பிரமோத்.

ஒரு அலமாரிக்குள் நான்கே நான்கு ஆக்ஸிஜன் முகமூடிகள் இருந்தன. அதிக பட்சம் அரைமணி நேரம் இயங்கக் கூடிய ஆக்ஸிஜன் பைகள் அந்த முகமூடியில் பொருத்தப்பட்டிருந்தன. அந்த நான்கையும் அவர்கள் எடுத்துக் கொண்டார்கள். "கூடிய வரை நாம் மூச்சுப் பிடிப்போம். முற்றிலுமாக மூச்சை இழந்து விடுவது போல் இருந்தால் அப்போது இந்த ஆக்ஸிஜன் முகமூடிகளை பயன்படுத்தலாம்" என்றான் அழகப்பன்.

பாதாள தண்ணீர் பாதையில் ராட்ஸத குழாயில் நிரந்தரமாக தண்ணீர் வழுக்கிக் கொண்டு சென்றது. "ஒருவரை ஒருவர் பிரிந்து விடாமல் எல்லோரும் ஒரே வேகத்தில் இறங்கினால் நல்லது. அதனால் இந்த குழாயில் பயணப்படும் போது கை, கால்களையும் எவ்வளவு முடியுமோ அவ்வளவு அகட்டி குழாயின் பக்கங்களில் தேய்த்தபடி நம்முடைய வேகத்தை நாம்



கட்டுப்படுத்த வேண்டும். நான்கு பேரும் ஒரே வேகத்தில் போவது அப்போதுதான் முடியும்" அழகப்பன் சொன்னதும் மற்றவர்கள் தலையசைத்தார்கள்.

"முன்பு வந்தது போலவே முதலில் நான். எனக்கு அடுத்தது இந்துமதி. அவளுக்குப் பின்னால் சாந்தினி. கடைசியாக பிரமோத். ஒரு ஆண் முன்னாலும், ஒரு ஆண் கடைசியிலும் வருவது நமக்கு நல்லது."

பிரமோத் கதவைத் திறந்து பிடிக்க அந்த வரிசையில் அவர்கள் இறங்கினார்கள். கடைசியாக பிரமோத் இறங்கியதும் திறந்து வைத்திருந்த கதவு தானாக மூடிக் கொண்டு க்ளக் என்ற சத்தம் கேட்டது.

"இந்த கதவும் ஒரு பக்கத்தில் இருந்து திறக்கக்கூடியதுதான். உள்ளே நுழைந்துவிட்டால் மறுபடி பின்வாங்க முடியாதபடி அமைக்கப்பட்டிருக்கிறது. பின்வாங்கும் நோக்கமும் நமக்கு இல்லை. குட்லக் எவ்ரிபடி."

அழகப்பன் மெல்ல அந்த குழாயில் தேய்த்து இறங்க ஆரம்பித்தான்.

இந்துமதி இரண்டு பக்கமும் கைகளையும், கால்களையும் அகட்டி பிடித்திருந்தபொழுதும் அவளால் அழகப்பனை போல நிதானமான வேகத்தில் இறங்க முடியவில்லை. குழாயில் வளைந்து திரும்பும்பொழுது அவளை அறியாமல் வழுக்கி விட வேகம் அதிகரித்து அந்த வேகத்தோடு அழகப்பனின் மீது முட்டினாள். அவள் முட்டி மோதிய வேகத்தில் அழகப்பன் இத்தனை நேரம் வைத்திருந்த பிடிப்பு இழந்து அழகப்பனும் வேகமாக இறங்க ஆரம்பித்தான். அவர்கள் இருவரும் கட்டுப்பாடு இல்லாமல் இறங்குவதைப்பார்த்ததும் அவர்களை விட்டுவிடக்கூடாது என்பதற்காக பிரமோத் சாந்தினியை முட்டி "கமான் ஃபாலோ தெம்" என்றான்.

அவளும் சர் என்று வழுக்க சில வினாடிகளுக்குள் அடுத்த தளம் வரை அவர்கள் வந்து விட்டார்கள். அங்கே தானாக குழாய் ஏறி இறங்கியதால் வேகம் மட்டுப் பட்டது.

அவர்களுடைய டார்ச்சின் வெளிச்சம் குழாயின் பளபளப்பான ஈரமாயிருந்த உட்புறத்தில் அங்கங்கே பிரதிபலித்தது. பாதையையே பிரகாசமாக்கியிருந்தது.

அழகப்பன் அந்த மேட்டிலிருந்து நழுவி அடுத்த தளம் நோக்கி வழுக்க ஆரம்பித்தான். மற்ற மூவரும் அவனைப் பின் தொடர்ந்தார்கள்.

அடுத்த தளத்தை நெருங்கிவிட்ட நிலையில் மீண்டும் குழாய் சற்று மேட்டிட்டு இறங்கும் இடத்தில் அடுத்த தளத்திற்கு செல்வதற்காக வைக்கப்பட்டிருந்த கதவு திடீரென்று திறந்தது. அந்தக்கதவு வழியே ஒரு முதலையின் நீளமான முகம் உள்ளே நுழைந்தது. அதன் முக்கோணமான தாடைகள் திறந்து கூறான பற்கள் பளிச்சிட்டன. வழுக்கி இறங்கிக் கொண்டிருந்த நான்கு பேரின் நெஞ்சமும் திடுக்கிட்டு இதய துடிப்பு எகிறியது.

முதலை தன்னுடைய உருட்டையான கண்களை அவர்கள் பக்கம் திரும்பியது. அதன் விழிகள் உருண்டு அவர்களையே நோக்க அதன் வாய் இன்னும் அகலமாக திறந்து உடலை நுழைத்து அது அந்த குழாய்க்குள் பிரவேசித்தது.



பாதாளத் தண்ணீர் பாதைக்கான அறையில் வெளிச்சம் வந்த அதே தருணத்தில் பாதாள ஏணி அறையிலும் மங்கலான விளக்குகள் விழித்துக் கொண்டன.

ஏணியில் இறங்கிக் கொண்டிருந்தவர்கள் அவர்களை அறியாமலேயே சந்தோஷக் கூச்சலிட்டார்கள்.

"மாயன் எப்படி இருக்கிறார் என்று பாருங்கள்" என்று ஒரு சேர குரல் கொடுத்து குனிந்து பார்த்தபோது அவர்களுக்கு ஆச்சரியம் காத்திருந்தது.

"ஜீசஸ்" என்றான் ராஜா பீட்டர்.



"கீழே விழுந்த மாயனையும் காணவில்லை. அதற்கப்புறம் விழுந்த சிந்தூரியையும் காணவில்லையே, என்ன ஆயிற்று அவர்களுக்கு. என்ன ஆயிற்று?"- அகமதுவின் குரல் நடுக்கத்துடன் ஒலித்தது.

"ஒரு நிமிடம்" என்றார் புரஃபசர் ராமநாதன். "சிந்தூரியைத் தவிர புரஃபசர் மோகன், நான், பீட்டர், அகமது, நான்கு பேர் மட்டும்தானே இங்கே இருக்கிறோம். நம் குழுவில் மொத்தம் ஆறு பேர் அல்லவா? இன்னொருத்தரை பற்றி நாம் கவலைப்படாமலேயே இருந்துவிட்டோமே!"

"ஆமாம், நாகப்பா! நாகப்பா எங்கே? அய்யோ மிகப்பெரிய தவறு செய்துவிட்டோம். இருட்டில் ஒருவரையொருவர் பின்தொடரும்பொழுது நாகப்பாவை கவனிக்காமலேயே விட்டுவிட்டோம்" என்று மோகன் சொல்லிக்கொண்டிருக்கும்பொழுதே மேலே இருந்து ஏதோ ஒன்று கீழ்நோக்கி வேகமாக பாய்வதுபோல் இருந்தது.

எல்லோருடைய கவனமும் ஈர்க்கப்பட்டு நிமிர்ந்தபொழுது அவர்கள் நெஞ்சு வெடித்து விடும்போல அந்தக்காட்சி இருந்தது.

உத்திரத்தில் அவர்கள் இப்போதுதான் நினைத்துக் கொண்ட நாகப்பா கால்கள் கட்டப்பட்டு தலைகீழாக தொங்கவிடப்பட்டிருந்தான்.

அகமதுவின் அலறல் அந்தப் பாதாள அறையை அதிரடித்தது.

"வெயிட்" என்றார் புரஃபசர் மோகன். "மின்சாரம் மீண்டும் திரும்பி விட்டதால் ஒருவேளை இந்த விளையாட்டு தொடர ஆரம்பித்து விட்டதோ என்னவோ?"

"முட்டாள் தனமாக பேசாதீர்கள்" என்றார் புரஃபசர் ராமநாதன். "விளையாட்டு என்றால் அச்சமானிகையை சேர்ந்த ஜான்கென்னடியோ, மற்றவர்களோதான் இந்த மாதிரி பயமுறுத்தமுடியும். நம் உறுப்பினர்களிலேயே ஒருத்தரைக் கொண்டு பயமுறுத்துவார்களா என்ன?"

நிமிர்ந்து பார்த்தபோதுதான் தெரிந்தது. முதலில் தொங்கிக் கொண்டிருந்த ஜான் கென்னடியின் உடல் இப்பொழுது அங்கே இல்லை. அந்த இடத்திலிருந்துதான் நாகப்பா தலைகீழாக தொங்கவிடப்பட்டிருந்தான்.

"நாகப்பா... நாகப்பா..." என்று மற்றவர்கள் தொடர்ந்து கூப்பிட்டுப்பார்த்தபொழுதும் நாகப்பாவிடம் இருந்து எந்த அசைவும் இல்லை.

அவனுடைய கண்கள் திறந்திருந்தன. திறந்த இமைகளுனூடே உயிரற்ற விழிகள் இலக்கில்லாமல் வெறித்துக் கொண்டிருந்தன.

"பணத்திற்கு ஆசைப்பட்டு இந்த அச்சமாளிகைக்குள் நாமெல்லாம் வந்துவிட்டோம். ஒருத்தர் கூட உயிரோடு வெளியேறப்போவதில்லை."

"அகமது முதலில் நீ இப்படி புலம்புவதை நிறுத்து."

"பாவம் நாகப்பா. அடுத்த மாதம் அவனுக்குக் [illegible]ணம் நடக்கபோகிறது என்று சொன்னான். புது மனைவிக்கு என்னென்ன வாங்கித் தரலாம் என்ற கனவுகளோடு பரிசுப்பணத்தை எதிர்பார்த்து இங்கே வந்தானோ தெரியவில்லை. இப்பொழுது கல்யாணத்திற்கு இவன் உயிரோடே இல்லை. பரிசு என்றதும்தான் நினைவுக்கு வருகிறது" என்றார் புரொஃபசர் ராமநாதன். "இந்த ஏணிகள் வழியே நாம் இறங்கும்பொழுது எந்த தளத்திற்கு வேண்டுமானாலும் நுழைந்து விடலாம். மின்சாரம் மீண்டும் வந்துவிட்டதால் ஒருவேளை விளையாட்டு தொடர்வதாக இருந்தால் அப்படி கிடைக்கும் பரிசுத்தொகையை நாம் ஏன் இழக்க வேண்டும். அடுத்த தளத்தில் நுழைந்து வெள்ளி நாணயத்தை எடுத்து வரலாமா?"

"வேண்டாம்" என்றான் ராஜா பீட்டர். "ஏசு கிறிஸ்து ஏற்கனவே நம்மை ரட்சித்து இத்தனை நேரம் உயிர் பிச்சை அளித்திருக்கிறார். ஒழுங்காக வெளியேறுவதில் நாம் கவனத்தை செலுத்தினால் அதுதான் நல்லது."

"எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது" என்றார்



புரொஃபசர் மோகன்.

"அப்படியே நீங்கள் மூன்று பேரும் பரிசுக்காக வேறு தளத்தில் இறங்குவதாக இருந்தாலும் நான் தப்பித்து வெளியே போகத்தான் தீர்மானித்திருக்கிறேன்" என்றான் அகமது.

"யாரும் பிரிய வேண்டாம். நாம் நால்வரும் இந்த ஏணியின் வழியே கீழ்தளத்தை அடைவோம்."

இப்பொழுது அங்கு கசிந்த வெளிச்சத்தில் கவனமாக ஒரு ஏணியிலிருந்து இன்னொரு ஏணிக்கு தாவி மாறி அவர்கள் இறங்கலானார்கள்.



20

தண்ணீர் பாதை.

"யாரும் அசைய வேண்டாம்" என்றான் அழகப்பன். குரல் மற்றவர்களைப் பார்த்து ஒலித்ததே தவிர பார்வை அவர்களுடைய பாதையில் குறுக்கிட்டு நகரத்துவங்கியிருந்த முதலையின் மீது பதிந்திருந்தது.

வாயை திறப்பதும் மூடுவதுமாக அந்த முதலை மெல்ல மெல்ல அவர்களை நோக்கி நகர்ந்தது.

சாந்தினி அலறி பிரமோத்தின் முதுகுக்குப் பின்னே ஒண்டிக்கொண்டாள்.

"சாந்தினி, எதற்காக பயப்படுகிறாய்? எப்போது மின்சாரம் மீண்டும் இயங்கத் தொடங்கியதோ, அப்போதே இந்த அச்சமாளிகையின் விளையாட்டும் ஆரம்பித்திருக்கும். தண்ணீர் பாதையில் அங்கங்கே குறுக்கிட்டு மிரட்டுவதற்கு இதைப்போன்ற பயமுறுத் தும் விஷயங்கள் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டு இருக் கும். இது நிச்சயம் உண்மையான முதலை இல்லை."

"எப்...எப்... எப்படிச் சொல்கிறீர்கள்?" சாந்தினியின் குரல் நடுங்கியிருந்தது.

"முதலைகள் தண்ணீரில் இருக்கும் பொழுதுதான்

மிகுந்த சக்தி வாய்ந்தவை. எந்த முதலையாக இருந்தாலும் நாம் தண்ணீருக்கு இறங்கி வர வேண்டும் என்று காத்திருக்குமே தவிர இப்படி இரண்டாவது தளத்திலிருந்து, மூன்றாவது தளத்திலிருந்து படிக்கட்டு ஏறி குழாய்க்குள் நுழையாது."

"யெஸ்" என்றான் அழகப்பன். "நானும் அப்படித் தான் நினைக்கிறேன். இது வெறும் பொம்மைதான். பயப்படாதீர்கள்" சொல்லிவிட்டு அழகப்பன் தன்னுடைய கழுத்தில் இருந்த டார்ச் விளக்கை கழற்றி முதலையின் வாய்க்குள் எறிந்தான்.

கப் என்று அந்த வாய் மூடியது.

இந்துமதி மிரண்டு அழகப்பனை இறுகப் பற்றிக் கொண்டாள்.

"அது பொம்மையானாலும் உண்மையானாலும் வாயை மூடும் பொழுது அந்த பற்கள் நிச்சயம் நம்மைக் குத்திக் கிழித்து விடும், இல்லையா?"

"இல்லை" என்றான் அழகப்பன். "உடலுக்கு எந்த ஆபத்தும் இல்லாமல் உயிருக்கு முழு உத்திரவாதம் கொடுத்துத்தான் இந்த அச்சமாளிகை விளையாட்டுக் கள் அமைக்கப்பெற்றிருக்கின்றன. இந்த பற்கள் கூட பொய்யான பற்களாகத்தான் இருக்கும்" சொல்லிவிட்டு இந்துமதியின் கையைத் தன்னிடம் இருந்து விலக்கி னான் அழகப்பன். விலக்கிவிட்டு அந்த பாதையில் கைகளாலும் கால்களாலும் ஊன்றி சற்று முன்னே நகர்ந்தான்.

"வேண்டாம்... வேண்டாம்..." என்று இந்துமதியும், சாந்தினியும் கத்த கத்த வழுக்கிக் கொண்டு போய் அவனை நேர் எதிரே பார்த்துக் கொண்டிருந்த முதலையின் மூக்கில் கால்களால் மோதினான்.

முதலையின் வாய் உடனே திறந்தது.

அழகப்பனின் காலைக் கவ்வியது. அழகப்பன் அலறவில்லை. மாறாக புன்னகைத்தான். "அத்தனைப் பற்களும் காற்று அடைத்த உயர் ரக பலூன்கள்" என்று சிரித்தான்.



இந்துமதி, சாந்தினி இருவர் முகத்தில் இருந்து மெல்ல மெல்ல இறுக்கம் தளர்ந்து புன்னகை குடி வந்தது.

சாந்தினியையும், இந்துமதியையும் ஒதுக்கிக் கொண்டு, தன் உடலைக் குறுக்கி அவர்களைத் தாண்டி முன்னேறி வந்தான் பிரமோத்.

ரப்பரால் செய்யப்பட்டிருந்த அந்த முதலை பொம்மையை இருவருமாக அழுத்தித் தள்ளி நகர்த்தியபடி எந்த கதவைத் திறந்து அது இந்த குழாய்க்குள் வந்ததோ அந்த கதவு வழியே அதை வெளியே தள்ளினர்.

குழாயில் இப்போது இறங்குவதற்கு வழி கிடைத்ததும் "மீண்டும் பழைய வரிசையிலேயே நாம் போவோம்" என்றான் அழகப்பன்.

அவர்கள் பயணம் தொடர்ந்தது.

இன்னும் இரண்டு வளைவுகள் திரும்பியதும், மீண்டும் பிரேக் அடித்து நெருக்கினான் அழகப்பன்.

காரணம்- குழாயின் மத்தியில் ஸ்பிரிங் வைத்தது போல துள்ளிக் கொண்டிருந்த அந்த மண்டை ஓடு.

"இது பேயோ, பிசாசோ இல்லை" என்று அழகப்பன் சொன்னபோதும் இந்துமதி, சாந்தினி இருவரும் ஒருவரையொருவர் இறுகப் பற்றிக் கொண்டார்கள்.

"முதலையை நகர்த்தியதுபோலவே இந்த மண்டையோட்டையும் நகர்த்துங்கள்" என்றாள் சாந்தினி.

அழகப்பனும், பிரமோத்தும் எவ்வளவோ முயற்சி செய்தும் அந்த மண்டை ஓட்டை நகர்த்த முடியவில்லை. அது இணைக்கப்பட்டிருந்த ஸ்பிரிங் கம்பி மிகுந்த வலுவானதாக இருந்ததால் அதை ஒதுக்க முடிந்ததே தவிர விலக்க முடியவில்லை. அப்படி ஒதுக்கும்பொழுது அந்த இடத்தை கடந்து போகிறவர்கள் யாராக இருந்தாலும் அந்த மண்டை ஓட்டை உரசிக் கொண்டுதான் செல்ல வேண்டும் என்ற நிலைமை.

"இது வெறும் மண்டை ஓடு. பயப்படாமல் ஒவ்வொருத்தராக் கடந்து வந்து விடுங்கள்" என்று பிரமோத் சொன்னான்.

அழகப்பனைத் தாண்டி இந்துமதி கண்களை மூடிக் கொண்டு கடந்து விட்டாள். அடுத்ததாக சாந்தினி. சாந்தினி கண்களை இறுக மூடிக் கொண்டு முகத்தையே கோணலாக்கிக் கொண்டு வேகமாக ...க்கி இறங்கினாள்.

ஆனால் மண்டை ஓட்டை கடக்கும் நேரம் ...ர்த்து அவளை அறியாமல் இமைகள் திறந்து விட்டன. ஒதுக்கி பிடித்திருந்த மண்டை ஓட்டில் அவளை அறியாமல் கை தட்டியதால் விடுக் என்று நிமிர்ந்து அவள் முழங்காலை அடித்தது.

அதே நேரம், மண்டை ஓட்டிற்குள் இருந்து குபு குபு என்று வெள்ளையாக புகை உருவானது. அதன் கண்களுக்கான ஓட்டை, மூக்கு ஓட்டை, வாய் திறப்பு ஒவ்வொரு துளையிலிருந்தும் அந்த புகை பழைய சினிமா படம் போல வெளியேற 'ஹா...ஹா...ஹா..." என்று உரத்த குரலில் சிரிப்பொலியும் கேட்டது.

இத்தனையும் நிச்சயம் நாடகம்தான் என்று மூளைக்குள் பதிவாகியிருந்தபொழுதும் அந்த சூழ்நிலையில் சாந்தினி அந்த திடீர் சிரிப்பினால் மிரண்டு போனாள்.

மண்டை ஓட்டை கடந்து அவளுடைய உடம்பு விடுபட்டபோது அவள் கண்கள் செருகி இருந்தன. எந்த நினைவும் இல்லாமல் அவள் மயக்கமாகி இருந்தாள்.

"மை காட்" என்றான் பிரமோத்.

"கவனத்தோடு இறங்க வேண்டிய பாதை. இங்கே போய் சாந்தினி மயக்கமாகி விட்டாயே. சாந்தினி... சாந்தினி..." என்று உலுக்கினான். சாந்தினியின் விழிகள் திறக்கவில்லை.



## 21



பாதாள ஏணி அறை.

ராஜா பீட்டரும், புரஃபசர் ராமநாதனும் கடைசி கட்ட ஏணிக்கு வந்து சேர்ந்து விட்டார்கள்.

புரஃபசர் மோகனும், அகமதுவும் அதற்கு மேல் மட்டத்தில் இருந்த ஏணியில் இறங்கிக் கொண்டிருந்தார்கள்.

மேலே இருந்து தலைகீழாக தொங்கிய நாகப்பா வின் உடல் திடீரென்று சர்ரென்று மேலே ஏறியது.

ஏறிவிட்டதோ என்று நினைக்கும் நேரத்தில் அதே வேகத்தில் கீழே குபீரென்று விழுந்தது. விழுந்து தரையை மோதும் முன் கயிற்றின் நீளம் பற்றாமல் விலுக்கென்று இழுத்துப் பிடித்ததுபோல் நின்றது. நின்ற வேகத்தில் மீண்டும் மேலே எழும்பியது.

திருவிழாக்களில் ரப்பர் நூலில் கட்டி பந்தை தட்டி தட்டி விளையாடுவது போல நாகப்பாவின் உடல், மேலிருந்து கீழும், கீழிருந்து மேலும் ரப்பர் கயிற்றில் வைத்து விளையாடப்பட்டது போல ஏறி ஏறி இறங்கியது.

அதைப் பார்ப்பவர்களுக்கு தானாகவே அச்சம் ஊறியது.

"இன்னும் இரண்டு படிகள்தான்" என்றான் ராஜா பீட்டர். "அதன் பின் கிட்டத்தட்ட ஆறடி உயரத்திற்கு படிகள் இல்லை. அப்படியே தழைந்து இதில் கடைசிப் படியில் தொங்கி இறங்க வேண்டும். அல்லது குதிக்க வேண்டும். "இப்படி அவன் சொல்லிக் கொண்டிருக்கும் பொழுதே, ஏணியில் ஒரு சின்ன குலுக்கல்.

கடைசிப் படியை நெருங்கி அதைப் பற்றிக்கொண்டு தொங்குவதற்காக அவன் முனைந்த நேரத்தில் அந்த ஏணி பதிக்கப்பட்டிருந்த சுவர் பகுதியே நகர ஆரம்பித்தது.

இட்லி மாவு அரைக்கும் அரவை மிஷின் போல அந்த அறையின் கீழ் பகுதியில் இருந்த சுவர் மட்டும் கிட்டத்தட்ட பதினைந்து அடி உயரத்திற்கு சுழல ஆரம்பித்தது. மேல மட்டம் வரை சுவர் நிலையாக இருக்க கீழே மட்டும் அரவை மிஷினைப்போல சுழல ஆரம்பித்தபொழுது ஏணியில் இருந்த ராஜா பீட்டரும், புரஃபசர் ராமநாதனும் தூக்கி எறியப்படாமல் இருக்க ஏணியை இறுகப் பற்றிக் கொண்டார்கள். மெல்ல சுழல ஆரம்பித்த அந்தப் பகுதி கொஞ்சம் கொஞ்சமாக வேகமெடுத்து ஒரு ராட்சத சக்கரம் போல சுழல ஆரம்பித்தது.

மேல் மட்டத்து ஏணியில் இறங்கிக் கொண்டிருந்த அகமதுவும் புரஃபசர் மோகனும் [illegible]சித்து போய் கீழே பார்த்தனர்.

அவர்களை மேலும் அச்சுறுத்துவதுபோல அந்த அறையில் எரிந்து கொண்டிருந்த மங்கலான விளக்கும் அணைவதும், மீண்டும் எரிவதுமாக போக்குக் காட்டியது.

"அய்யோ! அந்தப் படியில் நான் இறங்க மாட்டேன்" என்று அகமது பயத்தில் வீறிட்டான்.

புரஃபசர் ராமநாதன் தலைசுற்றுவதுபோல உணர்ந்து அப்படியே ஏணியுடன் முகத்தைப் பதித்துக் கொண்டு கண்களை மூடிக் கொண்டார்.

வேகமாக தட்டாமாலை சுழன்ற அந்த சுவர் பகுதி எப்பொழுது வேகம் குறையும் என்று எல்லோரும் பார்த்திருந்தனர்.

மேலே இருந்து தழைவதும், எழும்புவதுமாக இருந்த நாகப்பாவின் உடல் கடைசி முறையாக மேலே போன பொழுது உத்தரத்தில் போய் கால்கள் மோதியது போல உச்சத்தில் நாகப்பா மீண்டும் இறங்காமல் தொங்கலானான்.

அகமது கண்களை மூடிக் கொண்டு ஏணியை இறுக பிடித்தபடி அலற ஆரம்பித்தான்.





22

பாதாள தண்ணீர் பாதை.

அவர்கள் வழுக்கி இறங்குவதற்கு வசதியாக அந்தக் குழாய் பாதையில் கசிந்து கொண்டிருந்த தண்ணீரை கையில் அள்ளி அள்ளி சாந்தினியின் முகத்தில் தெளித்தான் பிரமோத்.

சாந்தினி அதிலும் விழித்துக் கொள்ளாததால் அழகப்பன் அவளை நெருங்கி அப்படியே புரட்டி சாந்தினியின் முகத்தை அந்த தண்ணீர் பாதையில் அழுத்தினான்.

தண்ணீர் மேலும் மேலும் அவள் முகத்தை தழுவிச் சென்றதும், மூச்சு விட இயலாமல் போகும் போலிருந்த ஒரு சூழ்நிலையில் உடல் தன்னிச்சையாக உதறி சாந்தினி சுயநினைவுக்கு வந்தாள். கண்களை மெல்ல திறந்தாள். நான்கு பேரும் அணிந்திருந்த டார்ச் வெளிச்சம் அங்கும் இங்குமாக பிரதிபலிக்க சாந்தினியின் முகத்தில் அதீத அச்சம் தெரிந்தது.

"சாந்தினி டியர்!" பிரமோத் அவள் தோள்களை அணைத்து மெல்ல உலுக்கினான். "ஏன் கண்ணம்மா பயப்படுகிறாய்? நாங்கள் எல்லோரும் உன் பக்கம்தானே இருக்கிறோம்."

சாந்தினி விழிகளை மெல்ல முழுவதும் திறந்தாள். அவள் இருந்த சூழ்நிலையை உடனே புரிந்து கொண்டாள். அவர்கள் உரசிக் கடந்து வந்த கபாலத்தைத் திரும்பிப் பார்த்தாள். அதிலிருந்து பத்தடி தூரத்திற்கு விலகி வந்துவிட்டதில் அவளுடைய அச்சம் விலகியது.

"சாரி" என்றாள்.

"இதில் வருத்தப்படுவதற்கோ, மன்னிப்பு கேட்பதற்கோ எந்த அவசியமும் இல்லை. ஒன்றை மட்டும் மீண்டும் மீண்டும் நான் சொல்கிறேன். மின்சாரம்

திரும்பி வந்ததால் இந்த விளையாட்டு தொடங்கி விட்டது. இதே போல பயமுறுத்துவதற்கு இன்னும் பல விஷயங்கள் குறுக்கிடலாம். எதற்கும் அச்சப்படாதே. இந்த மாளிகையிலிருந்து நாம் அனைவரும் உயிருடன் ஒருவரோடு ஒருவர் கைகோர்த்தபடி வெளியேறப் போகிறோம். தயவு செய்து பயத்தை விட்டுவிட்டு எங்கள் மீது பூரண நம்பிக்கை வைத்து கூடவே வா."

சாந்தினி தலையை மேலும், கீழுமாக அசைத்து ஆமோதித்தாள்.

இந்துமதி சாந்தினியின் கையைப் பிடித்து அழுத்திக் கொடுத்தாள். "அழகப்பனும் சரி, பிரமோத்தும் சரி நமக்கு கிடைத்திருக்கிற மிக நல்ல பார்ட்னர்கள். ர்கள் இருக்கும் வரை எந்த பயமும் வேண்டாம். வா!"

அவர்கள் மீண்டும் அந்த தண்ணீர் பாதையில் ழ்கி இறங்கலானார்கள்.

அடுத்த வளைவில் சலசலவென்று சத்தம் கேட்டது.

"நாம் தண்ணீர் மட்டத்தை நெருங்கிவிட்டோம்" என்றான் அழகப்பன். "ஆனால் இந்த குழாயின் முனை தண்ணீருக்கு மேலே நின்றுவிடவில்லை. அப்படி நின்றிருந்தால் தண்ணீரில் குதித்து நாம் நீந்தி சென்று விடலாம். மாறாக இந்தக் குழாய்ப் பாதை தண்ணீருக்குள் அப்படியே அமிழ்ந்துபோகிறது. எவ்வளவு தூரம் இது தண்ணீருக்குள் இறங்கியிருக்கிறதோ, அது வரை நாம் இந்தப்பாதையிலேதான் போக முடியும். அக்கம் பக்கம் சென்று விட முடியாது. எனவே தண்ணீருக்குள் இறங்குவதற்கு முன் மூச்சை எவ்வளவு முடியுமோ அவ்வளவு இழுத்துக் கொள்ளுங்கள்".

அவர்கள் நால்வரும் அந்த இடத்தில் தங்கள் பயணத்தை நிறுத்தினார்கள்.

அழகப்பன் முதலில் குப்புற படுத்து தவழ்ந்து தண்ணீர் வரை போனான்.

அவனைத் தொடர்ந்து இந்துமதி, பின்னாலேயே சாந்தினி, கடைசியில் பிரமோத். நான்கு பேரும்



தண்ணீருக்குள் ஒருவர் பின் ஒருவராக இறங்கினார்கள்.

இத்தனை நேரம் ஓரளவுக்கு ஒரு பகுதி தண்ணீரில் நனைந்து கொண்டே வந்து கொண்டிருந்த போதும் உடல் முழுவதும் தண்ணீருக்குள் நனையும்பொழுது தண்ணீர் எவ்வளவு சில்லென்று இருந்தது என உணர முடிந்தது.

அந்தக் கட்டத்திலிருந்து அவர்கள் ஒருவருடன் ஒருவர் வாய்திறந்து பேச முடியாது.

நால்வரும் நீச்சலடித்து முன்னேறினார்கள். குழாய் பாதை தண்ணீருக்குள் ஆழமாக இறங்குவது போல் சென்று, பின் இடது, வலது என்று வளைந்து வளைந்து திரும்பியதே தவிர, முடிவிற்கு வருவது போலவே தெரியவில்லை. எவ்வளவு முடியுமோ அவ்வளவு தூரம் மூச்சுப்பிடிப்பது என்று அவர்கள் முடிவு செய்திருந்தார்கள்.

நெஞ்சு வெடித்து விடும் போல ஆன ஒரு சந்தர்ப்பத்தில் குழாய் பகுதி சட்டென்று முடிவிற்கு வந்தது. ஆனால் அப்பொழுதும் சுதந்திரமாக தண்ணீருக்குள் எந்தப்பக்கம் வேண்டுமானாலும் நீச்சலடித்து திசை மாற்றிக் கொள்வதற்கு வசதியில்லாத வகையில் குழாய் பாதை முடிந்த இடத்தில் புதிதாக இன்னும் அகலமாக ஒரு குகைப் பாதை ஆரம்பித்தது. அந்த குகை பாதைக்குள் அவர்கள் நீச்சலடித்து நுழைந்தார்கள்.

குகை பாதை ஒரு கட்டத்தில் மேலே ஏறி வந்தது. அப்படி வந்தபொழுது தண்ணீரின் மட்டத்திற்கு அவர்களால் வர முடிந்தது. தலையை மட்டும் தண்ணீர் மட்டத்திற்கு மேலே உயர்த்தி மூச்சை இழுத்துக் கொள்ள முடிந்ததே தவிர, உடல் முழுவதையும் வெளியேற்றி விட முடியாதபடி குகைப் பாதை அந்த இடத்தில் மிகக்குறுகலான அளவே திறந்திருந்தது.

தண்ணீரின் மட்டத்திற்கு வந்து அவர்கள் ஒருவர் மாற்றி ஒருவராக மூச்சை இழுத்துக் கொண்டனர்.

"ஹா... ஹா..." என்று உரக்க ஒலித்து இந்துமதி

மூச்சை இழுத்து கண்களை திறந்து சுற்றிலும் பார்த்தாள். எங்கு திரும்பினும் தண்ணீர்... தண்ணீர்.

வெகுதூரத்தில் அந்தத் தண்ணீர் கரையில் அடர்ந்திருந்த இருளான மரங்கள். மற்றபடி வேறு எதுவும் பார்வைக்குள் வரவில்லை.

"இந்த குகைப்பாதையில் இன்னும் கொஞ்சம் நீச்சலடித்துப் போனால் ஒருவேளை அந்த பாதையும் ஒரு முடிவுக்கு வந்து நாம் சுதந்திரமாக தண்ணீரில் நீச்சலடிக்க முடியும் என்று நினைக்கிறேன்" என்றாள் இந்துமதி.


மற்றவர்கள் மெல்ல தலையசைத்து தங்கள் மோதிப்பை தெரிவித்தனர். நான்கு பேரும் தேவையான அளவிற்கு மூச்சை இழுத்துக் கொண்டதும் மீண்டும் குகைப்பாதையின் அடுத்த பகுதியில் நுழைந்து நீச்சல் அடிக்க ஆரம்பித்தார்கள்.

குகை பாதை தண்ணீருக்குள் அமிழ்ந்து சற்று தூரம் பயணம் செய்து மீண்டும் வளைந்து திரும்பும் இடத்தில் திடும் என்று ஏதோ வந்து மோதியது.

கண்களைத் திறந்து பார்த்தபொழுது நெற்றியில் அணிந்திருந்த டார்ச் வெளிச்சத்தில் அழகப்பனின் மீது வந்து மோதிய அது ஒரு உடல் என்று தெரிந்தது.

நான்கு பேரும் அடுத்தடுத்து வந்து சேர்ந்தனர். அவர்களின் மீது மோதி தண்ணீரில் இப்படியும் அப்படியுமாக அலைக்கழிக்கப்பட்ட அந்த உடல் பார்த்து நான்கு பேர் விழிகளிலும் ஆச்சர்யம் வந்தது.

அது மீண்டும் ஜான் கென்னடியின் உடல்.



## 23

பாதாள ஏணி அறை.

தட்டாமாலை சுற்றிக்கொண்டிருந்த கீழ்ப் பகுதி ஒரு வழியாக வேகம் குறைந்து நிறுத்தத்திற்கு வந்த பொழுது புரஃபசர்



ராமநாதன் தன் சக்தியை முற்றிலும் இழந்தவர் போல தளர்வாகக் காணப்பட்டார். பீட்டர் அவருக்கு ஆதரவாக அவரை அணைத்துப் பிடித்தபடி "சற்று ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள். அப்புறம் இறங்கலாம்" என்றான்.

புரஃபசர் ராமநாதனின் நெஞ்சு வேகமாக அடித்துக் கொண்டிருந்தது. மூச்சு பல நூறு மீட்டர்கள் ஓடி வந்தவரைப் போல வெகு வேகமாக இயங்கிக் கொண்டிருந்தது. புரஃபசர் ராமநாதன் 'வேண்டாம். இறங்கிவிடுவோம்' என்பதுபோல ஜாடை செய்தார்.

பீட்டர், கடைசிப்படியைப் பற்றித் தொங்கி மெல்ல தன்னை விடுவித்துக் கொண்டான். கிட்டத்தட்ட ஆறடி ஆழத்திற்கு பயணம் செய்து தரையில் மோதினான்.

அடுத்ததாக ராமநாதனும் அதே போல ஏணியில் கடைசிப் படியில் சற்று நேரம் தொங்கி அங்கிருந்து கைகளை விலக்கி விடுபட்டு தரையில் இறங்கினார். இறங்கியவுடன் தளர்ந்து அப்படியே உட்கார்ந்து விட்டார்.

"கமான், நீங்கள் இருவரும் வாருங்கள்" என்று ராஜா பீட்டர் குரல் கொடுத்தான்.

புரஃபசர் மோகனும், அலறிக் கொண்டிருந்த அகமதுவும் அவர்களை குனிந்து பார்த்தார்கள்.

புரஃபசர் மோகன் கால்களை நகர்த்தி கடைசிப் பகுதி ஏணியைப் பற்றினார். அவர் இந்த ஏணிக்கு மாறியபின் அகமது தயங்கி, மிரண்டு, பயந்து ஒரு வழியாக தைரியத்தை வரவழைத்துக் கொண்டு அவனும் கடைசி ஏணிக்கு மாறினான்.

ராஜா பீட்டர் உதவியோடு அகமது கீழ்தளத்திற்குள் குதித்தான்.

புரஃபசர் மோகனும் அதே போல கடைசிப் பகுதியில் குதித்தார். நான்கு பேரும் அந்த தரைப் பகுதியில் சற்று நேரம் உட்கார்ந்து ஆசுவாசப்படுத்திக் கொண்டார்கள். அண்ணாந்து பார்த்தபொழுது உச்சிக்கூரையில் கால்கள் முட்டி தலைகீழாக தொங்கிக் கொண்டிருந்த நாகப்பா அந்த இடத்திலேயே

நிலைபெற்று விட்டாற் போல் தோன்றியது.

ஆசுவாசப்படுத்திக் கொண்டு ராஜா பீட்டர்தான் முதலில் எழுந்தான்.

"நாம் இங்கே இருக்கும் கதவைக் கண்டுபிடித்து வெளியேறி விட்டோமானால் அச்ச மாளிகையை விட்டே வெளியே போய்விடலாம்."

மற்றவர்களுக்கும் சுறுசுறுப்புத் தொற்றிக் கொண்டது. விடுபட்டு வெளியேறி விட வேண்டும் என்ற துடிப்பு அவர்களைச் செலுத்தியது.

கீழ்தளத்தில் வெளியேறுவதற்காக கதவு எங்கே அமைக்கப்பட்டிருக்கிறது அவர்கள் நால்வரும் சுற்றிவரலானார்கள். ஒரு முறை, இரு முறை, மூன்று முறை சுற்றியதும்தான் ராஜா பீட்டரின் கண்களில் கலவரம் வந்தது.

"இங்கே இருக்கும் என்று நாம் நினைத்து வந்த [illegible] எதுவுமே இல்லையே. எப்படி வெளியேறுவது?"

"மை காட்!" என்றார் புரஃபசர் மோகன். "அப்படியானால் இந்த தளத்திலிருந்து வெளியேறுவதற்கு வழியே இல்லை."

"அதெப்படி இல்லாமல் இருக்க முடியும்" என்றார் புரஃபசர் ராமநாதன்.

"மாயன் அங்கிளும், சிந்தூரியும் இங்கேதானே விழுந்தார்கள். அவர்கள் வெளியேறி இருக்கிறார்களே. எப்படியும் ஏதாவது ஒரு வழி இருக்கும்."

"இருக்கலாம். அது பாதாள வழியாகக் கூட இருக்கலாம். ஆனால் நம்மால் கண்டுபிடிக்க முடியவில்லை. இங்கேயே நேரத்தை வீணடித்துக் கொண்டிருப்பதற்கு பதிலாக மீண்டும் ஏணியில் ஏறி இதற்கு அடுத்த தளத்தின் கதவு இருக்கிறதே அதன் வழியாக நாம் வெளியேறி விடலாம்" என்றார் மோகன்.

"மீண்டும் ஏணி ஏறுவதா? ஆறடி தூரத்திற்கு இறங்குவது என்பது சுலபம். படிகளே இல்லாமல் ஆறடி தூரத்திற்கு எப்படி ஏறி ஏணியைப் பிடிக்கப்போகிறோம்"



அமைதுவின் குரல் ஓங்கி ஒலித்தது.

"எப்படியும் ஏறித்தான் ஆக வேண்டும். வெளியேறித்தான் ஆக வேண்டும். ஒரே வழி ஒருவரையொருவர் தோள்களில் சுமந்து உயர்த்திக் கொடுக்க வேண்டும். முதலில் ஒருவர் அந்த ஏணியைப் பற்றி விட்டால் அவருடைய உதவியுடன் ஒவ்வொருவராக ஏறி விடலாம்" என்றார் புரஃபசர் மோகன்.

மோகனும் ராமநாதனும் பீட்டரைப் பிடித்து தூக்கிக் கொடுக்க ராஜா பீட்டர் கையை வீசி வீசி கடைசி ஏணியின் கடைசிப் படியை கைகளில் பற்றினான். எக்கி தன்னை மேலே உயர்த்தி அந்த ஏணியில் ஒரு பிடிப்பை ஏற்படுத்திக் கொண்டான்.



## 24

திங்கள் மீது வந்து மோதிய ஜான் கென்னடியின் உடலை நான்கு பேரும் அப்படி இப்படி நகர்த்தினார்கள். அதை நகர்த்தி விட்டு மேலே பயணத்தை தொடர்ந்தார்கள்.

குகைப் பாதை தண்ணீருக்குள் மேலே எழும்பி ஒரு பெரிய வளைவு போட்டு மீண்டும் தண்ணீருக்குள் இறங்கியது. தண்ணீர் மட்டத்திற்கு மேலே வெளியேறிய இடத்தில் குகைப் பாதையின் மேல் பக்க சுவர் ஜன்னல் போல் அமைக்கப்பட்டிருந்ததால் அவர்கள் சுதந்திரமாக காற்றை சுவாசிக்க முடிந்தது.

தண்ணீரில் சிறை வைக்கப்பட்டதுபோல உணர்ந்தாலும் சுதந்திரக்காற்றை சுவாசிப்பதே ஒரு பெரிய பலமாக இருந்தது.

"ஊப்ஸ்" என்றாள் சாந்தினி.

"ஜான் கென்னடியின் உடலைப்பார்த்து பயந்தாயா சாந்தினி?" பிரமோத் கேட்டான்.

"இது மூன்றாவது தடவை. ஜான் கென்னடி பிணமாகத் தன்னைக் காட்டிக் கொள்வது" என்று சிரித்தாள் சாந்தினி.

"அதைப்பார்த்தால் மெழுகு பொம்மைப்போல தான் எனக்குத் தோன்றியது" என்றாள் இந்துமதி.

"நாம் பிணத்தைப் பார்த்து பயப்படவில்லை என்றாலும், முதலையைப் பார்த்து பயப்பட வேண்டாம் என்றாலும், மண்டை ஓட்டைப் பார்த்துக் கலவரப்பட வேண்டாம் என்று முடிவு எடுத்தாலும் இந்த தண்ணீர் பாதை ஒரு முடிவுக்கு வராமல் நீண்டுகொண்டே போகிறது. எப்போது இந்த பாதையிலிருந்து விடுபடுவோம், எப்போது மேலே வருவோம், எப்போது கரைக்கு நீச்சலடித்துப் போய் சேருவோம். அங்கிருந்து எப்படி அச்சமாளிகைக்கு போவோம். அங்கே மாயன் அங்கிளையும் மற்றவர்களையும் எப்பொழுது எப்படிக் காப்பாற்றப் போகிறோம். இதை நினைத்தாலே எனக்கு பிரமிப்பாக இருக்கிறது" என்றான் அழகப்பன்.

"இந்த அச்சமாளிகையில் இந்த குறிப்பிட்ட பகுதி பேர்ப்பட்ட தைரியசாலிக்கும் ஒரு சவாலாக அமைக்கப்பட்டிருக்கிறது" என்றான் பிரமோத்.

"ஆனாலும் நாம் நம்பிக்கையை இழக்காமல் பயணத்தைத் தொடருவோம். எப்படியும் இந்த குகைப்பாதை ஒரு முடிவுக்கு வந்துதான் சேர வேண்டும். வேண்டுமட்டும் மூச்சை இழுத்துக் கொள்ளுங்கள். அடுத்த முறை அவசியம் என்றால் நாம் கையோடு எடுத்து வந்திருக்கும் ஆக்ஸிஜன் முகமூடிகளைப் பயன்படுத்துங்கள்" அழகப்பன் இப்படிச் சொல்லிவிட்டு மீண்டும் தண்ணீருக்குள் அமிழ்ந்தான்.

மற்ற மூவரும் நெஞ்சு நிறைய மூச்சை இழுத்துக் கொண்டு தண்ணீருக்குள் அமிழ்ந்து அவனைப் பின் தொடர்ந்தார்கள்.

அவர்கள் கிட்டத்தட்ட முப்பது, நாற்பது மீட்டர் அப்படி நீச்சலடித்து பயணம் செய்ததும் குகைப் பாதை ஒருவழியாக முடிவுக்கு வந்தது. நான்கு பேரும்



தண்ணீரில் கூச்சலிட முடியாமல் கைகளை உயர்த்தி தங்களுடைய சந்தோஷத்தை பரிமாறிக் கொண்டார்கள்.

தண்ணீரின் மேல்மட்டத்தை நோக்கி இப்போது அவர்கள் நீச்சலடித்து ஏறத் துவங்கினார்கள்.

திடீரென்று சாந்தினியின் காலைக் கீழே இருந்து எதுவோ பற்றியது. சாந்தினி மிரண்டு காலை உதறினாள். உதற உதற அவள் அப்படியே தண்ணீருக்குள் இழுக்கப்பட்டாள். சாந்தினி தண்ணீருக்குள் இழுக்கப்படுவதை பிரமோத் கவனித்து உடனடியாக மேலே ஏறுவதிலிருந்து திரும்பி தண்ணீருக்குள் அமிழ்ந்தான். அவனுடைய நெற்றியில் கட்டியிருந்த டார்ச் வெளிச்சத்தில் சாந்தினியின் காலைப்பற்றி கீழே இழுப்பவன் தன்னுடைய உடல் முழுவதும் கறுப்பு உடையால் மூடியிருந்தான். முகத்தையும் ஒரு அங்குலம் கூட தெரியாதபடி ஹெல்மெட் போன்ற முகமூடி வைத்து மூடியிருந்தான். அந்த ஹெல்மெட்டிற்குள் ஆக்ஸிஜன் இருக்கும்.

சாந்தினி இழுக்கப்படுவதைப் பார்த்து பிரமோத் இன்னும் வேகமாக இறங்கி அந்த ஆளின் முகத்தில் கால்களால் மோதினான். தண்ணீரின் விசையில் அவனுடைய பலம் பாதிக்கு மேல் வீணானது.

அவன் எவ்வளவுதான் ஓங்கி கால்களை வீசினாலும் எதிரி பெரிய அளவில் தாக்கப்படாமல் நகர்ந்தான்.

இந்த விளையாட்டு வேண்டாம் என்று சாந்தினியை விட்டு விடு என்று அலற வேண்டும் போல பிரமோத்திற்கு தோன்றியது.

ஆனால் சாந்தினி கைகளையும் கால்களையும் உதறி மிகுந்த அச்சத்துடன் தன்னை பிடித்திருந்தவனிடமிருந்து தப்பிக்கப்பார்த்தாள். பிரமோத் இன்னும் சற்று தழைந்து அந்த ஆளின் வயிற்றில் ஓங்கி முட்டினான்.

தன் இரு கைகளாலும் அவனைப் பற்றி சாந்தினியிடமிருந்து உலுக்கி இழுத்தான். ஒரு கட்டத்தில் அந்த ஆளின் இடது கையைப் பிடித்து பிரமோத் முறுக்க அவன்

வேறு வழியின்றி சாந்தினியை பற்றியிருந்த கைகளை விலக்கிக் கொண்டான்.

விடுபட்டதும் சாந்தினி ஸ்பிரிங் போல தண்ணீரின் மேல் மட்டத்தை நோக்கி வேகமாக மேலே எறினாள்.

இப்பொழுது போராட்டம் பிரமோத்திற்கும் முகம் தெரியாத அந்த எதிரிக்கும் இடையில் தொடர்ந்தது.

அவன் பிரமோத்தை அப்படியே இறுகப் பற்றி தண்ணீருக்குள் அழுத்தினான்.

ஏற்கனவே வெகு நேரம் மூச்சு பிடித்திருந்த பிரமோத் மூச்சிற்காக தண்ணீரை விட்டு வெளியேற வேண்டும் என்று தவித்தான். ஆனால் எதிரி வலுவாக அவனைப் பற்றி கீழே இழுக்கவும் பாதுகாப்பாக வைத்திருந்த ஆக்ஸிஜன் முகமூடியை எடுத்து முகத்தில் பொருத்தி சுவாசித்துக் கொண்டு எதிரியுடன் பண்டான்.

சற்று நேரத்தில் அழகப்பனும் வந்து சேர்ந்து அந்த எதிரியின் ஹெல்மெட்டைப் பற்றி உலுக்கி இழுக்கப்பார்த்தான்.

இப்பொழுது பிரமோத், அழகப்பன் இருவரும் ஒரு பக்கம். முகம் தெரியாத எதிரி இன்னொரு பக்கம் என்று போராட்டம் தொடர்ந்தது.

எதிரி சட்டென்று தன்னுடைய உடலிலிருந்து ஒரு சிறு வாளை உருவி எடுத்தான். அந்த வாளைக்காட்டி அவன் பிரமோத்தை வெட்டி விடுவது போல வீசினான்.

'அச்சமாளிகையின் விளையாட்டில் கத்தி கூட உண்டா என்ன?' என்று ஆச்சர்யப்பட்டுக்கொண்டே அழகப்பன் அந்தக் கத்தி விளையாட்டுக்கத்தியாக இருக்கும் என்று நினைத்து பிடித்தான். பிடித்ததும் உள்ளங்கையில் கத்தி ஆழமாகக் கீறி குபுகுபு என்று ரத்தம் வெளியேற ஆரம்பித்தது. அது பொம்மைக் கத்தி அல்ல அசல் கத்தி என்று புரிந்ததும் பிரமோத்தின் விழிகளும் வியப்பால் விரிந்தன.

தங்களைத் தாக்குபவன் விளையாட்டைச் சேர்ந்தவன் அல்ல. அவனுடைய குறிக்கோள் வேறு



ஏதோ விபரீதமானது என்று புரிந்ததும் பிரமோத் இன்னும் வேகமெடுத்து எதிரியுடன் மோதினான். அவனுடைய பலம் அத்தனையையும் பிரயோகித்து எதிரியைப் புரட்டினான். அவனுடைய உடையைப் பிடித்து திருகி மணிக்கட்டைக் கடித்தான்.

எதிரியின் முகத்தில் வேதனை இருந்திருந்தாலும் அவன் அணிந்திருந்த ஹெல்மெட்டைத் தாண்டி அது தெரியவில்லை.

அழகப்பனும் தன்னுடைய பங்கிற்கு அந்த ஹெல்மெட்டை இடது கையால் பற்றி உயர்த்த எதிரி திடீரென்று ஒரு முடிவெடுத்தவன் போல அவர்கள் இருவரையும் உதறி விட்டு வேறு பக்கமாக வேகமாக நீந்தி விலகினான்.

அழகப்பன் ரத்தத்தை வேகமாக இழக்க ஆரம்பித்து அந்தப் பகுதி தண்ணீரே சிகப்பாக ஆரம்பித்ததும், பிரமோத் அழகப்பனை கையால் தட்டி மேலே போகலாம் என்று சைகை செய்தான்.

அவர்கள் இருவரும் மேலே வந்தனர். தண்ணீரின் மட்டத்திற்கு மேலே ஏற்கனவே வந்து சேர்ந்திருந்த இந்துமதியும் சாந்தினியும் அவர்கள் பக்கம் பயத்துடன் பார்த்தார்கள். குறிப்பாக சாந்தினி மிகவும் மிரண்டிருந்தாள். அவளை தண்ணீருக்குள் அமிழ்த்த பார்த்தவன் செயல் அவளிடம் இருந்த கடைசி சொட்டு தைரியத்தையும் உறிஞ்சி எடுத்திருந்தது.

கரையை நோக்கி பிரமோத் கை காட்டி 'அங்கே நீந்துவோம்' என்று சைகை செய்தான்.

நான்கு பேரும் வேகமாக நீச்சலடித்து கரையை நோக்கி நகர்ந்தார்கள். அப்படி நீச்சலடிக்கும் பொழுது வெட்டுப்பட்ட உள்ளங்கையில் இருந்து குபுக் குபுக் என்று ரத்தம் வெளியேற அழகப்பனின் நீச்சல் வேகம் குறைந்து கொண்டே வந்தது.

கரையை நெருங்கியதும் பிரமோத் அழகப்பனை யும் இழுத்துக் கொண்டு கடைசி சில அடிகளை நீச்சலடித்து அவனைக் கரையில் இழுத்துப் போட்டான்.

கரையில் ஏறிய சாந்தினியும், இந்துமதியும் அழகப்பனின் கை வெட்டுப்பட்டிருப்பதை பார்த்து மிரண்டார்கள்.

இந்துமதிதான் முதலில் செயல்பட்டாள். தன்னுடைய சட்டையின் நீளமான இரண்டு பாக்கெட்டுகளையும் சரக் சரக் என்று கிழித்து எடுத்தாள். கிட்டத்தட்ட கைக்குட்டை அளவிற்கு இருந்த அந்த துணியை வைத்து அழகப்பனின் கையில் அழுத்தி ஒரு கட்டுப்போட்டாள்.

அழகப்பன் தளர்ந்த முகத்துடன் மெலிதாக புன்னகைத்தான். அவர்கள் நால்வரும் கரையில் ஏறி ஒதுங்கினார்கள்.

"இந்த அச்சமாளிகையில் விளையாட்டைத் தாண்டி ஏதோ ஒரு விபரீதம் ஆரம்பித்து விட்டது" என்றான் பிரமோத்.

"நிஜமான கத்தி. நிஜமான ரத்தம். இது வெகு பத்தான இடமாகி விட்டது.

"ஆமாம்" என்றான் அழகப்பன்.

"நம்மைத் தாக்கியவர்கள் யாராக இருந்தாலும் மீண்டும் நம்மைத் தேடி வந்தால் நமக்குத்தான் ஆபத்து. நம்முடைய டார்ச்சுகள் எரியும் வரை நம்மை நாமே காட்டிக் கொடுப்பது போல் ஆகிவிடும். எனவே சற்று நேரம் டார்ச்சை அணைத்திருப்போம்."

நான்கு பேரும் தங்களுடைய டார்ச்சுகளை அணைத்தார்கள். உடனடியாக அங்கே இருள் சூழ்ந்தது. அண்ணார்ந்து பார்த்தபொழுது அடர்ந்த மரங்களைத் தாண்டி கருநீல நிறத்தில் வானமும், ஜரிகைத் தூள்களைத் தூவியதுபோல நட்சத்திரங்களும் தெரிந்தன. நிலா இல்லாத வானம்.

அவர்கள் தப்பித்து வெளியே வந்த நீரோடையைத் தவிர அதன் இரண்டு கரைகளிலும் மரங்களும், செடிகளும், கொடிகளும் அடர்ந்த கானகம்தான் தென்பட்டது.

"அச்சமாளிகை எங்கே?" என்றாள் இந்துமதி.



"நாம் நின்றிருக்கும் இடத்திலிருந்து அச்சமாளிகை எங்கே என்று தெரியவில்லை. அதற்கு இந்தப் பக்கம் நடக்க வேண்டுமா? அல்லது அந்தப் பக்கம் நடக்கவேண்டுமா? என்பதே புரியவில்லை. ஒரு பக்கம் அச்சமாளிகையும், இன்னொரு பக்கம் மலைக்குன்றங்களும் இருக்கின்றன. நாம் தவறான திசையில் நடந்தால் மாளிகையிலிருந்து விலகி விலகி வெகுதூரம் போய்விடுவோம். என்னதான் இருட்டாக இருந்தாலும் இன்னும் சில மணி நேரங்களில் எப்படியும் விடிந்து விடும். வானத்திலிருந்து வெளிச்சம் வரும்பொழுது மறைந்து இருக்கும் அத்தனை இரகசியங்களும் வெளியே வந்து விடும்" என்றான் பிரமோத்.

"நீங்கள் இருவரும் மரத்தடியில் ஓய்வெடுங்கள். நானும் சாந்தினியும் இந்த டார்ச்சு வெளிச்சத்தில் இன்னும் சற்று தூரம் பயணம் செய்து ஏதாவது பாதைத் தெரிகிறதா? என்று பார்க்கிறோம்".

"புரிகிறது" என்றான் அழகப்பன். "உங்களுக்கு தனிமை வேண்டும். என்றாய்."

"ச்சீய்..ச்சீய்... அப்படியில்லை" என்று சாந்தினி வெட்கத்தோடு மறுக்கப் பார்த்தபொழுது பிரமோத் அவள் கையில் கை வைத்து "சாந்தினி வா, போகலாம்" என்றான்.

இன்னும் சற்று தூரம் நடந்து விலகி வந்ததும் சாந்தினி பிரமோத்தின் பின்னந்தலையில் செல்லமாகத் தட்டினாள்.

"ஆனாலும் நீங்கள் ரொம்ப மோசம்."

"ஏன்?"

"கொஞ்சம் கூட வெட்கமில்லாமல் இப்படி இரண்டு பேருமாக ஒதுங்க வேண்டும் என்று சொல்லி விட்டீர்களே."

பிரமோத் அவளைப் பார்த்து திரும்பினான். ஈரம் சொட்டும் அவளுடைய கூந்தலை வருடிக்கொடுத்தான்.

"மை டியர் செல்லக்குட்டி. நாம் ஒதுங்கி வந்தது

நமக்காக அல்ல. அழகப்பன், இந்துமதிக்காக..."

புரிந்ததும் சாந்தினியின் உதடுகளில் மெலிதான ஒரு வெட்கப்புன்னகை வந்து அமர்ந்தது.

"விலகி வந்தது இருக்கட்டும். ஆனால் ஒரேடியாக ஒதுங்கிப்போய் நாம் ஒரு பக்கம், அவர்கள் ஒரு பக்கம் என்று காட்டில் அலைந்து கொண்டிருக்க வேண்டாம். இரண்டு பேரும் கூப்பிடும் தூரத்திலேயே இருப்போம்" என்றாள் சாந்தினி.

"எப்பா! பயம் உன்னை விட்டு போகவேயில்லை. முதலிரவு அறைக்குள் கூட யாரையாவது துணைக்கு கூப்பிட்டுக் கொள்வாய்."

"ச்சீ..." என்று சாந்தினி அழகாக வெட்கப்பட்டாள்.



# 25

"வந்து விட்டோம்" என்றான் ராஜா பீட்டர்.

ஏணியின் உச்சிப் படியில் நின்று கொண்டு கைக்கு எட்டிய உயரத்தில் இருந்த கதவை அழுத்தித் திறந்தான். கதவு திறந்ததும் அங்கே ஒரு பிடிப்பை ஏற்படுத்திக் கொண்டு மெல்ல தன் உடலை மேலே உயர்த்தி அந்த தளத்திற்குள் நுழைந்தான். அங்கிருந்து அவன் கைகொடுக்க, ஒவ்வொருவராக மற்ற மூன்று பேரும் அச்சமாளிகையின் அந்த முதல் தளத்திற்குள் கதவைத் திறந்து நுழைந்தார்கள்.

அவர்கள் வெளியேறியதும் கதவு பாதாள ஏணி அறையின் கதவு மூடிக் கொண்டது.

"இங்கே இருந்து கீழ் தளத்திற்கு நாம் எப்படி இறங்க வேண்டும்?" என்றான் அகமது.

ராஜா பீட்டர் மங்கலான வெளிச்சத்தில் முன்னே நடக்க பெரிய நம்பிக்கையுடன் மற்ற மூவரும் அவனைப் பின் தொடர்ந்தார்கள்.



அந்த நான்கு பேரும் காரிடாரில் கவனமாக நடந்தார்கள். காரிடாரின் முடிவில் இருந்த கதவை மெல்ல திறந்தான் ராஜா பீட்டர். அந்த அறையில் மங்கலான வெளிச்சம் இருந்தது. சற்றுத் தள்ளி சுருண்டு இறங்கும் படிகள் தெரிந்தன.

"இதுதான்" என்றார் புரஃபசர் மோகன்.

படிக்கட்டுகளில் அங்கங்கே கட்டப்பட்டிருந்த நாய்கள் உர்.... என்று உருமின.

அகமது பயத்துடன் பின்வாங்கினான். "நான் வரவில்லை... நான் இந்த வழியே வரவில்லை" என்றான்.

"என்ன உளறுகிறாய்... ஏழாவது மாடியிலிருந்து ஏற்கனவே இறங்கிய அனுபவம் இருக்கிறது. வா... போகலாம்" என்றார் புரஃபசர் மோகன்.

"மாட்டேன்... நான் வரவில்லை" அகமது வேகமாக அந்த அறையிலிருந்து வெளிப்பட்டான். காரிடாருக்குள் பாய்ந்தான். அவன் வெளியேறியதும் கதவு மூடிக்கொண்டது.

காரிடாரில் நுழைந்தவுடன் அகமது யார் மீதோ மோதி நின்றான். திடுக்கிட்டு நிமிர்ந்தான்.

"நீ...நீ....நீங்களா?" என்று அவன் குரல் குளறியபோதே வலுவான கை அவனுடைய இடது காதின் பக்கம் வேகமாக இறங்கியது.

அகமது திடுக்கிட்டு பின்னால் இருந்த சுவரில் மோதினான். தற்காப்புக்கு தன்னுடைய கைகளை உயர்த்தியபோது அடுத்த அடி அவனுடைய கழுத்தில் விழுந்தது. அகமது அப்படியே கண்கள் இமைகளுக்குள் செருகிக் கொள்ள மயக்கமாகி கீழே கசங்கி விழுந்தான்.

அறைக்கதவு மூடிக் கொண்டதும் "என்ன இப்படி முட்டாள் தனம் செய்கிறான்" என்று புரஃபசர் மோகன் கதவை உள்ளிருந்து திறக்கப் பார்த்தார்.

"புரஃபசர் சார். அகமதுவை விடுங்கள். அவனால் நமக்கும் சேர்த்து ஆபத்து. நாம் மூவரும் தப்பித்துப் போகப்பார்ப்போம்" என்றான் ராஜா பீட்டர்.

"ஏதோ ஒரு வாசனை வரவில்லை" என்றார் புரொஃபசர் ராமநாதன் மூக்கை சுளித்தபடி.

உண்மையிலேயே அந்த அறையில் திடீரென்று ஒரு வாசம் கசியத் தொடங்கிவிட்டதுபோல் தெரிந்தது. எல்லோரும் கவனிக்கும்பொழுதே சுருண்டு இறங்கிய படிகளில் இருந்து நீல நிறத்தில் புகை ஒன்று சுருண்டு மேலே ஏறுவதுபோல தெரிந்தது.

அந்த அடர்த்தியான புகையில் நுரையீரல்கள் தவித்தன. சுவாசம் தடைபட்டு போய் மூச்சு திணறி பீட்டர் தவித்தான். புகை அடுத்ததாக புரொஃபசர் மோகனையும் அவரை அடுத்து ராமநாதனையும் சூழ்ந்து கொள்ளப் பார்த்தது.

"ஏதோ விஷப்புகை போல் இருக்கிறது. இதை சுவாசித்தால் நாம் அவ்வளவுதான் என்று புரொஃபசர் மோகன் சொல்லிக் கொண்டிருக்கும்பொழுதே அந்த புகையின் தாக்கத்தால் அப்படியே சுருண்டு விழுந்தார்.

ராமநாதன் எப்படியாவது வெளியே ஓடி தப்பித்து விட வேண்டும் என்று மீண்டும் மீண்டும் கதவைத் திறக்க முயற்சி செய்த போது சரேல் என்று கதவு திறந்தது. அந்த மங்கலான வெளிச்சத்தில் உள்ளே நுழைந்த நபரைப் பார்த்ததும் ராமநாதன் அப்படியே மயக்கமாகி கீழே சரிந்தார்.



## 26

நிலா இல்லாத வானம் வெல்வெட் படுதா போல பரந்து கிடந்தது.

பலகோடி மைல்கள் தூரத்தில் இருந்த நட்சத்திரங்கள் அந்த அடர்ந்த மரங்களைத் தாண்டி அழகப்பனை தரிசிக்க முடியாமல் கண்சிமிட்டிக் கொண்டே இருந்தன.

"ரொம்ப வலிக்கிறதா?" அழகப்பனின் கையை தன் மடியில் எடுத்து வைத்துக் கொண்டிருந்தாள் இந்துமதி.



"அப்படியெல்லாம் இல்லை" என்றான் அழகப்பன்.

"வாய்தான் அப்படி சொல்கிறதே தவிர முகத்தில் வேதனை தெரிகிறது."

"இந்து, உண்மையைச் சொல்லட்டுமா?"

"ம்!"

"கையில் காயம் ஏற்பட்டிருப்பது உண்மைதான். நிறைய ரத்தம் வெளியேறியதால் வலி இருப்பதும் உண்மைதான். ஆனால், எல்லாமே உடல் அளவில்தான். இந்த இருட்டு, அச்சமாளிகையில் நமக்கு ஏற்பட்ட அனுபவங்கள், நாம் சந்தித்த குரூரமான நிமிடங்கள் அத்தனையையும் தாண்டி என் மனதின் அடிவாரத்தில் ஒரு சந்தோஷமும் இருக்கிறது."

"அப்படியா?" இந்துமதியின் குரலில் மெலிதான குறும்பு இருந்தது.

அழகப்பன் சட்டென்று அவளை நிமிர்ந்து பார்த்தான்.

"நான் சொல்வது உனக்கு பிதற்றலாக தோன்றலாம் இந்து. ஆனால் இந்த இரவும், இந்த அமைதியும், இந்த தனிமையும் நீண்டு கொண்டே போகாதா? என்று எனக்குள் ஒரு படபடப்பு."

"ஏன் அப்படி?"

"வெளிப்படையாக சொல்வது சற்று தர்மசங்கடமான விஷயம்."

"அப்படி என்ன தர்ம சங்கடம்?"

"இந்து எதுவும் புரியாதவள் போல நீ பேசுவது எனக்கு ஆச்சர்யமாக இருக்கிறது. எனக்கும் ஒரு கல்யாணம் நடந்தது. மனைவி என்று ஒரு உறவு வந்தது. அந்த உறவை நான் சரியாக புரிந்து கொள்ளும் முன்னாலேயே அந்த உறவு அற்றும் போனது. துணை என்ற வார்த்தைக்கே சரியான அர்த்தம் தெரிந்து கொள்ளாமல் என் வாழ்க்கை முடிந்து விடப்போகிறது என்றுதான் நான் நினைத்திருந்தேன், உன்னைப் பார்க்கும் வரை."

அப்படி அவன் சொன்னதும் இந்துமதி மிரண்டு அவனுடைய கையை உதறிவிடுவாள் என்று பயந்தவன் போல அவன் இந்துவை குற்ற உணர்வுடன் நிமிர்ந்து பார்த்தான்.

இருட்டில் பழகி விட்ட கண்களுக்கு இந்துமதியின் மெலிதான புன்னகை அவளுடைய உதடுகளின் வளைவுகளில் இருந்து புரிந்தது.

"சொல்லுங்கள்."

"நான் பேசுவது உனக்கு வேடிக்கையாக இருக்கிறதா?"

"வேடிக்கையாகவும் இல்லை. வேதனையாகவும் இல்லை."

"பின்னே!"

"சந்தோஷமாக இருக்கிறது!"

"என்ன சொல்கிறாய் இந்து?"

"உங்களுடைய உணர்வை நீங்கள் சொல்லிவிட்டீர்கள். என்னுடைய உணர்வை நான் சொல்லாவிட்டால் நியாயமாக இருக்காது. என் அண்ணன், என் அண்ணியிடம் நடந்து கொண்ட விதத்தை எல்லாம் பார்த்து விட்டு கணவன் என்றாலே அவன் ஆண் மகன் என்ற திமிர்தான் முதலில் நிற்கும். ஒரு பெண்ணால் சந்தோஷமாக வாழ்க்கையை நடத்த முடியாது என்று நான் கிட்டத்தட்ட முடிவுக்கு வந்திருந்தேன். என் வாழ்க்கையில் கல்யாணம் என்ற ஒரு சடங்கே இருக்கக்கூடாது என்று தீர்மானமாகக் கூட இருந்தேன், உங்களைப் பார்க்கும் வரை."

இருவரும் ஒருவர் கையை ஒருவர் அழுத்திக் கொடுத்தனர்.

"உங்களுக்கு களைப்பாக இருந்தால், நீங்கள் ஏன் கொஞ்ச நேரம் படுத்துக் கொள்ளக்கூடாது?" இந்துமதி சற்று நகர்ந்து மரத்தின் மீது சாய்ந்து உட்கார்ந்து தன் மடியைக் காட்டினாள்.

அழகப்பன் ஆனந்த திடுக்கிடலோடு அவளைப்



பார்த்தான்.

"நிஜம்தானா? அல்லது இதுவும் அச்சமாளிகையில் ஏதோ ஒரு மோகினிப் பேயின் விளையாட்டா?" என்றான்.

இந்துமதி சிரித்தாள்.

"காதல் என்பது கவிஞனின் பிதற்றல் என்றுதான் வெகுகாலம் நான் நினைத்திருந்தேன். ஆனால் இப்பொழுதுதான் தெரிகிறது. அது மிகவும் ஆழமானது. அடி மனதில் இருக்கும் உணர்வுகளைக் கூட தட்டி உசுப்பக்கூடியது."

"நீங்கள் மட்டுமில்லை, நானும் கூட இந்த இரவு இப்படியேத் தொடரக்கூடாதா... என்று ஆசைப்பட ஆரம்பித்து விட்டேன்."

சற்று நேரம் அந்த இடத்தில் அமைதி நிலவியது. அழகப்பன் சற்றே நகர்ந்து மெல்ல அவளுடைய மடியில் தன் தலையை சாய்த்துக் கொண்டான்.

இந்துமதி அவனுடைய ஈரமான தலையை கோதி விட்டு காது, கழுத்து, தோள், கை என்று மெல்ல வருடிக் கொடுக்க ஆரம்பித்தாள்.

அவர்களிடம் இருந்து பதினைந்து இருபது அடி தள்ளி பிரமோத் மடியில் சாந்தினி படுத்திருந்தாள்.

சாந்தினியின் ஈரமான கூந்தலை பிரமோத் மெல்ல நீவி நீவி அதில் இருந்த தண்ணீரையெல்லாம் எடுத்து விட்டு அவளுடைய முகத்தின் சின்ன சின்ன மேடுகளை, வளைவுகளை விரலால் வருடினான். அப்படி அவனுடைய விரல் நுனி வருடியபோது சாந்தினிக்குள் சிலிர்ப்பு ஏற்பட்டு அவள் உடல் துடிப்பதை அவனால் உணர முடிந்தது.

"பிரமோத், நமக்கு அச்சமாளிகையில் மட்டும் பயமுறுத்தல்கள் இல்லை. வெளியேறினாலும் இருக்கிறது" என்றாள் சாந்தினி.

"என்ன உளறுகிறாய்?"

"மறந்து விட்டீர்களா? என் அப்பாவின் ஆட்கள்

தூரத்துகிறார்களே, என்றுதானே நாம் மாயன் அங்கிளின் காரில் நுழைந்தோம்."

"சாந்தினி, இந்த நேரத்தில் எதற்காக அந்த விபரீத நினைவுகள். அச்சமாளிகைக்குள் நாம் நுழைந்திருப்போம் என்று அவர்கள் கற்பனைக்கூட செய்திருக்க மாட்டார்கள். கிடைத்திருக்கும் இந்த அமைதியான தனிமையை ரசிக்காமல் எதற்காக எப்பொழுதும், எதையாவது நினைத்து பயந்துகொண்டே இருக்கிறாய்?"

சாந்தினி இன்னும் தன்னை சுருக்கிக் கொண்டு பிரமோத்திற்குள் மொத்தமாக அடங்கி விடுவது போல நெருக்கிக் கொண்டாள்.

"குளிர்கிறதா?"

"என், குளிர்ந்தால் என்ன செய்வீர்கள்? உங்களிடம் போர்வை இருக்கிறதா?"

"இருக்கிறது" என்றான் பிரமோத் கண்ணடித்து.

இருட்டில் அவன் கண்ணடித்தது தெரியாவிட்டாலும் அவன் குரலில் ஒளிந்திருந்த ரகசிய குறும்பு அவளுக்கு புரிந்தது.

"உதைப்பேன், ராஸ்கல்" என்று செல்லமாக அவள் முனகினாள்.

பிரமோத் திடீரென்று விறைத்தான்.

"சாந்தினி, உனக்கு ஏதாவது சத்தம் கேட்கிறதா?"

சாந்தினி பேசுவதை நிறுத்திவிட்டு கவனித்துப் பார்த்தாள்.

சட்டென்று மடியிலிருந்து எழுந்து உட்கார்ந்தாள்.

"ஆமாம். உங்களுக்குமா?"

"ஆமாம்."

பிரமோத் உடனே "அழகப்பன்" என்று குரல் கொடுத்தான்.

"சொல்லு பிரமோத். எனக்கும் அந்த சத்தம் கேட்கிறது" என்று அழகப்பனிடமிருந்து குரல் வந்தது.

அழகப்பனுக்கும் இந்துமதிக்கும் ஆரம்ப தடு



..வர்கள் விலகி இனி உலகிற்கு இதை அறிவித்தால் ..இல்லை என்ற தைரியம் வந்தவர்களாக, பிரமோத் ..தினியைப் போலவே நெருக்கமாக அமர்ந்திருந்தார்

அவர்கள் அருகில் இவர்களும் போய் ..கார்ந்தார்கள்.

இருட்டில் சற்று தூரத்தில் கேட்பதாக தோன்றிய ..த சத்தம் கொஞ்சம் கொஞ்சமாகக் கூடிக் கொண்டே ..த்து.

ஒரு தேர்ந்த குதிரையின் சீரான குளம்பொலி ..தம்.

"பயமுறுத்தும் விளையாட்டுக்கள். அதில் ..வற்றிபெற்றால் பரிசுகள் என்று இருந்த நிலைமை ..ாய் இந்த அச்சமாளிகை இப்பொழுது மர்ம ..ளிகையாகி விட்டது" என்றான் அழகப்பன்.

"இங்கே எதிர்பாராத என்னென்னவோ விஷயங்கள் ..க்கின்றன."

அவர்கள் நால்வரும் ஒருவரோடு ஒருவர் நெருங்கி ..மர்ந்து குளம்பொலி சத்தம் இன்னும் நெருங்கி ..ருவதற்காகக் காத்திருந்தார்கள்.

சத்தம் நெருங்கியது. ஓய்ந்தது. குதிரையின் ..னமான மூச்சு சத்தம் கேட்டது. இரண்டு பாதங்கள் ..ரையில் குதித்து இறங்கும் ஒலியும் அதைத் தொடர்ந்து அவர்கள் இருந்த இடம் நோக்கி சருகுகளை மிதித்துக் கொண்டு நடந்து வரும் சத்தமும் கேட்டது.

அழகப்பன் அந்த சத்தம் நெருங்குவதற்காக காத்திருந்து சட்டென்று தன் டார்ச்சை உயிர்ப்பித்து வெளிச்சத்தை அந்தப்பக்கம் திருப்பினான்.

வெளிச்சத்தில் அங்கு வந்து நின்றவரை பார்த்ததும் அவர்கள் நான்கு பேருமே அதிர்ந்து போனார்கள்.

அரச காலத்து உடை. பல அலங்கார ஜரிகை வேலைப்பாடுடன் அமைந்திருந்த அந்த ராஜ உடையில்

கம்பீரமான தோற்றத்தில் நின்றிருந்தவர் - மாயன்! அரண்மனை பெயிண்டிங் உயிர்பெ வந்ததுபோல அவர் அந்த இருட்டில் நின்றார்.

மாயன், தன் இடையில் நீளமாக இருந்த உறை இருந்து வாளை சட்டென்று உருவினார்.

வாள் முனையை தரையில் பதித்து தலை குனி "வணக்கம் மன்னர்களே!" என்றார்.

"மாயன் அங்கிள். என்ன இது விளையாட் இந்துமதிதான் முதலில் எழுந்தாள்.

"மாயன் அங்கிள், உங்களுக்கு ஒன் ஆகவில்லையே. பாதாள ஏணி அறையில் நீங்கள் மே இருந்து விழுந்ததும், நாங்கள் மிகவும் பயந்துவிட்டோ என்றாள் சாந்தினி.

மாயன் 'பகபக' என்று சிரித்தார். அவருடை மிலிட்டரி கிராப் வெளியில் தெரியாத படி தலையி அரைக்கிரீடம் அணிந்திருந்தார்.

"நான் மரணம் இல்லாதவன். என்னை யாரு எதுவும் செய்து விட முடியாது. வாருங்கள், போகலாம்

அழகப்பனின் நெற்றி சுருங்கியது. அவர்களை அங்கே சந்தித்ததும் மாயன் ஏன் ஆச்சர்யப்படவில்லை அவ்வளவு இருட்டில் அவர்கள் அங்கேதா இருப்பார்கள் என்று அவர் எப்படி கண்டுபிடித்தா அவனுக்கு புரியவில்லை.

"காதலர்கள் அமைதியான பத்திரமான இடத்தி இருப்பதுதான் புத்திசாலித்தனம். இது கானக நள்ளிரவு. நரிகளும், பசியெடுத்த நாய்களு பிசாசுகளும். ரத்த வெறி பிடித்தலையும் பேய்களு நடமாடும் இடம். இங்கு நீங்கள் அமர்ந்திருப்ப முட்டாள் தனம். உங்களுக்காக நான் வாகனம் கொண் வந்திருக்கிறேன். நாம் சொர்க்க புரிக்கு போவோம்."

இந்துமதி, அழகப்பனை சந்தேகத்துடன் திரும் பார்த்தாள்.

அழகப்பன் பிரமோத்தை அதே போல பார்த்தான்.



"மாயன் அங்கிள், உங்களுடைய க்வாலிஸ் எங்கே?" என்றான் பிரமோத்.

"வீணாக உரையாடி நேரத்தைக் கடத்துவது புத்திசாலித்தனம் அல்ல" என்றார் மாயன். "கானகத்திற்குள் வழி தெரியாமல் நீங்கள் அல்லல் படுகிறீர்களே என்றுதான் நான் வாகனத்தை எடுத்து வந்தேன். என் குதிரை களைப்பு அறியாதது. வெளிச்சமே இல்லாத போதிலும் பாதையை உணர்ந்து. பயணம் செய்ய பழகியுள்ளது. வாருங்கள்."

மரங்களின் ஊடே தட்டு தடுமாறாமல் மாயன் நேர்த்தியாக நடந்தார். சற்று தூரம் நடந்ததும் மரங்கள் விலகியிருந்த ஒரு பகுதி தெரிந்தது. மற்ற இடங்களில் இல்லாத ஒரு வெளிச்சம் அந்த பிரதேசத்தில் பரவியிருந்தது.

அங்கே, இரண்டு சக்கரங்கள் கொண்ட அரண்மனைக் காலத்து குதிரை வண்டி ஒன்று நின்றிருந்தது. அதன் இருக்கைகள் அலங்காரமாக, அரசர்கள் பயன்படுத்தியதுபோல இருந்தது.

"நான்கு பேரும் ஏறிக்கொள்ளுங்கள்."

அவர்கள் நான்கு பேரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு அந்த வண்டியில் பின்புறம் இருந்த இருக்கையில் எதிரெதிரே அமர்ந்து கொண்டார்கள்.

## 27



மாயன் குதிரை வண்டியில் பின்புறம் ஏறி அமர்ந்திருந்த அந்த நான்கு பேரையும் ஒருமுறை பார்த்தார். புன்னகைத்தார். வெகு லாவகமாக குதித்து ஏறி வண்டியின் முன்புறம் இருந்த குறுகலான இருக்கையில் அமர்ந்து கொண்டார். லகானைப் பிடித்து அவர் இழுத்து கையை உயர்த்திக் காட்டியதும் வண்டி

இழு பட்டது. இழுபட்டவுடனேயே வேகம் பிடித்தது.

பேர் அலைகளில் ஒரு சிறிய ஓடம் போல அந்த குதிரை வண்டி அந்த காட்டுப்பாதையில் மேடுகளிலும், பள்ளங்களிலும் வேகமாக விழுந்து உருண்டு, உருண்டு குலுங்கிச் சென்றது. பின்னால் இருக்கைகளில் உட்கார்ந்திருந்த நான்கு பேரும் தூக்கி எறியப்படாமல் இருக்க ஒருவரையொருவர் பிடித்துக் கொண்டு வண்டியின் பக்கவாட்டில் இருந்த இரும்புக் கம்பிகளை இறுகப்பற்றிக் கொண்டும் தவித்தார்கள்.

மாயன் தன்னுடைய ஒருகாலை நீட்டி குதிரையின் வால் பகுதியை தொட்டவுடன் குதிரை இன்னமும் வேகம் எடுத்தது.

ஒற்றை குதிரைக்கு இவ்வளவு சக்தியா?! என்று ஆச்சர்யப்படும்படி காகித வாகனத்தை இழுத்துப் போவதுபோல வெகு லகுவாக அது வண்டியை இழுத்துச் சென்றது.

உடலில் இருந்த எலும்புகள் ஒன்றுடன் ஒன்று மோதிக் குலுங்க தோளில் இருந்து தலை விடுபட்டு விடும் போல அதிர, அவர்கள் நான்கு பேரும் மிரட்சியுடன் பேச வாய்த்திறக்க முடியாமல் அந்த பயணத்தில் அமைதியாக இருந்தார்கள்.

மாயனிடம் சற்று நிதானமாக போகச்சொல்ல வேண்டும் என்று பிரமோத் ஆசைப்பட்டாலும் வாயைத் திறந்தால் குரல் நடுங்கியது.

குதிரை, அந்த கானகத்தில் வெகு பழக்கமானது போல எந்த மரங்களின் மீதும் மோதாமல் சட்சட் என்று திரும்பி அந்த இருட்டிலும் வெகு பிரமாதமாக வண்டியை இழுத்துக் கொண்டு ஓடியது.

பெட்ரோல் புகையும் டீசல் புகையுமாக நகரத்து வாகனங்களிலேயே பயணப்பட்டு பழகியிருந்த அந்த நான்கு பேருக்கும் சரித்திர காலத்திற்குள் நுழைந்து விட்டதுபோல அந்த குதிரை வண்டி பயணம் வெகு வித்தியாசமாக இருந்தது. மின்சார விளக்குகள் கிடையாது. தூரத்து வானத்தில் ஒளிரும் நட்சத்திரங்கள்



...டும். சுற்றிலும் இயற்கையின் ரகசியங்களாக இருளில் ...டை காக்கப்பட்ட மரங்கள். அவற்றின் ஊடே அரசின் குதிரை வண்டிபோல ஒரு வண்டி. குலுக்கலும், தூக்கலுமாக அதன் பயணம்.

வெகுதூரம் அப்படி பயணம் செய்தபிறகு, பாதை ...சென்று மேடேற ஆரம்பித்தது.

இத்தனை நேரம் வெகு சுலபமாக வண்டியை இழுத்துக் கொண்டிருந்த குதிரை, மேடேறும் பாதையில் தன் வேகத்தைக் குறைத்தது.

அதன் வாயிலிருந்து நுரை தள்ளுவதைப் பார்த்து மாயன் இடது காலால் அதன் முதுகை தட்டி வருடினார்.

குதிரை வேகம் குறைத்து ஒரு வழியாக நிறுத்தத்திற்கு வந்தது.

சூதாட்டத்து சோழிகளைப் போல குலுக்கப்பட்டுக் கொண்டிருந்த நான்கு பயணிகளும் குதிரை வண்டி நிறுத்தத்திற்கு வந்த பின்பும் தைரியமாக பக்கக் கம்பிகளிலிருந்து கையை விலக்க முடியாமல் தவித்தார்கள்.

பயணப்பட்டபோது அவர்கள் மீது வீசிய வேகமான காற்று அவர்களுடைய ஈர உடைகளை முற்றிலுமாக காய வைத்திருந்தது. ஆனாலும் அந்த குளிர் அவர்கள் எலும்புகள் வரை பாய்ந்திருந்ததால் இரண்டு பெண்களின் பற்களும் தடதடவென்று கொட்டித்துக் கொண்டிருந்தன.

"நாம் எங்கே இருக்கிறோம்" என்றான் பிரமோத். குரல் ஒரே சீராக வெளிவராமல் நடுநடுங்கி வெளிப்பட்டது.

இந்த பயணத்தால் சற்றும் களைப்பு ஆகாதவர் போல மாயன் மட்டுமே சிரித்தார்.

"நாம் அச்சமாளிகையிலிருந்து விலகி வந்து இருக்கிறோம்" என்றார் மாயன்.

"விலகியா? ஏன் அங்கிள்." "வெளியேற வேண்டும் என்பதுதானே நம்முடைய குறிக்கோள்."

"குறிக்கோள் எதுவாக இருந்தாலும் இப்பொழுது நீங்கள் நான்கு பேரும் என்னுடைய பாதுகாப்பில் இருக்கிறீர்கள். நான் சொல்கிறபடி நடந்து கொள்ளுங்கள். உங்கள் விளக்குகளை ஏற்றாதீர்கள்" மாயன் இப்படிச் சொல்லிவிட்டு வண்டியிலிருந்து குதித்து இறங்கினார். வண்டியின் அடிப்புறத்திலிருந்து முந்தைய காலத்திய ஒரு லாந்தர் விளக்கை வெளியே எடுத்தார். விநோதமான ஒரு தோல் பெட்டியைத் திறந்து அதில் எதையோ தேய்த்தார். தீப்பொறி பறந்து திரி பற்றிக் கொண்டது. அந்த பிரதேசத்தில் மிக மங்கலான வெளிச்சம் பாய்ந்தது. மாயன் லாந்தரை உயர்த்திக் காட்டினார்.

"குதிரைக்கு சற்று ஓய்வு வேண்டும். நீங்கள் இறங்கலாம்."

"நீங்கள் இன்னும் என் கேள்விக்கு பதில் சொல்லவில்லை" என்றான் பிரமோத்.

"சொல்லிவிட்டேன். அச்சமாளிகை எப்பொழுது போக வேண்டும் என்று நான் சொல்வேன். அதுவரை நீங்கள் ஆனந்தமாக ஓய்வெடுக்க இதோ சொர்க்க மாளிகை" மாயன் சுட்டிக் காட்டிய பகுதியில் சுவர்கள் பொக்கையாக இடிந்து விழுந்த ஒரு சிறு கட்டிடம் இருந்தது.

கற்களால் கட்டப்பட்ட அந்த கட்டிடத்தில் காட்டுப் பகுதியின் பல கொடிகள் பின்னிப் படர்ந்து மேலே ஏறி இருந்தன.

"இங்கேயா?"

"ஆம். இங்கேதான்" என்றார் மாயன்.

அதே நேரத்தில் 'இஷ்க்' என்று ஒரு சிறு ஒலி கேட்டது. திரும்பிப் பார்த்தால் பெரிய பெரிய மரங்களின் பின்னால் இருந்து மூன்று பேர் வெளிப்பட்டார்கள். மூவரும் அரசர் காலத்தில் போர் வீரர்கள் அணிவது போன்ற உடைகளை' அணிந்து இருந்தார்கள். ஒவ்வொருவர் கையிலும் நீளமான போர் வாள் இருந்தது.

அவர்களுடைய முகம் தெரியாத படி இரும்பு



கவசத்தால் மூடப்பட்டிருந்தது.

மாயன் விரைத்தார். பிரமோத், அழகப்பன், சாந்தினி, இந்துமதி நான்கு பேரும் திடுக்கிட்டார்கள். போர் வீரர்கள் மூன்று பேரும் அவர்களை சூழ்ந்து கொள்ள ஆரம்பித்தார்கள்.

மாயன் வெகு சரேலென்று தன்னுடைய வாளை உறையில் இருந்து வெளியே எடுத்தார்.

அங்கே ஒரு வாள் சண்டை துவங்கியது.

பழைய கருப்பு-வெள்ளை திரைப்படத்தை பார்ப்பதை போல அவர்களுடைய வாட்கள் மோதும்போது கிளிங் கிளிங் என்ற சத்தமும் அவ்வப்போது தீப்பொறியும் பறக்க நான்கு பேரும் ஒருவரோடு ஒருவர் நெருக்கி நின்றார்கள்.

இந்த போரின் போது கத்திகள் ஒன்றுடன் ஒன்று மோதி எழுப்பும் ஒலியில் குதிரை அவ்வப்போது மிரண்டு ஒன்றிரண்டு அடிகள் பின்னால் நகர்வதும், முன்னால் நகர்வதுமாக அதுபாட்டிற்கு ஒரு விநோதமான ஒலியை எழுப்பிக் கொண்டிருந்தது.

மாயன் வெகு அனயாசமாக போரிட்டு அடுத்தடுத்து அந்த மூன்று பேரையும் கீழே வீழ்த்தினார்.

அவர்களுடைய முகமூடிகளை பிய்த்து எறிந்தார்.

"இவர்களெல்லாம் யார் தெரிகிறதா?"

"தெரியவில்லை" என்றான் அழகப்பன்.

"எல்லோரும் அச்சமாளிகையின் பணியாளர்கள் தான். ஆனால் இப்பொழுது வந்தது, சும்மா விளையாட்டிற்காக பயமுறுத்திவிட்டு போவதற்கு இல்லை."

"பின்னே?"

"நம்மைத் தாக்கி முடிந்தால் கொலை செய்து இங்கேயே இந்த மண்ணிலேயே புதைத்து விட்டுப் போவதற்காக."

"என்ன சொல்கிறீர்கள் அங்கிள்."

"நம்மை ஆபத்து சூழ்ந்திருக்கிறது என்கிறேன்."

"இன்னும் சற்று விளக்கமாக சொல்ல முடியுமா?"

"முடியும். அதற்குமுன் எனக்கு ஒரு சிறு வேலை இருக்கிறது."

மாயன் அங்கு இருந்த மரத்தில் பின்னிப் படர்ந்திருந்த கொடிகளை அறுத்தார். அந்த உறுதியான கொடிகளால் அவரால் வீழ்த்தப்பட்ட மூன்று பேருடைய கால்களையும் கட்டி அங்கிருந்த பெரிய மரத்துடன் கட்டிப்போட்டார்.

"உட்காருங்கள்" என்றார்.

அந்த நான்கு பேரும் இன்னமும் ரத்தத்தின் வேக வேகம் குறையாமல் கலக்கத்துடன் தரையில் அமர்ந்தார்கள்.

மாயன் தன்னுடைய அரச உடைக்குள் கைவிட்டு ஒரு சிகரெட்டை எடுத்து உதடுகளில் பொருத்தினார். பற்ற வைத்தார்.

அவருடைய உடையும், பேச்சும், லாந்தர் வெளிச்சமும் முந்தைய சரித்திர காலத்துக்கு அந்த சூழ்நிலையை அழைத்துப்போயிருக்க, அவர் உதடுகளில் கவ்வியிருந்த சிகரெட் மட்டும் சற்றும் பொருத்தமில்லாமல் வினோதமாக இருந்தது. ஆனால் அதே சமயம் மாயன் முந்தின காலத்தவர் அல்ல என்கிற ஒரு ஆறுதலும் கிடைத்தது.

## 28



அவர்கள் நான்கு பேரும், ஒருவர் தோளோடு ஒருவர் உரசிக் கொண்டு பாழடைந்த அந்த சுவரில் சாய்ந்து உட்கார்ந்திருந்தார்கள்.

மாயன் மெல்லிய குரலில் பேச ஆரம்பித்தார்.

"இந்த அச்சமாளிகை பற்றி நான் ஏற்கனவே நிறைய கேள்விப்பட்டிருந்தேன். இங்க நடத்தப்படும்



விளையாட்டுக்கள் ஒருவருடைய தைரியத்தை சோதிப்பதற்காக அமைக்கப்பட்டிருக்குமே தவிர, உண்மையான ஆபத்து எதுவும் இல்லை என்று தீர்மானமாக தெரிந்த பிறகுதான் குமரன் கூப்பிட்டதின் பேரில் நானும் இங்கு வந்தேன். ஆனால் நான் தேர்ந்தெடுத்த இந்த தினம் ஒரு விபரீதமான நாளாக மாறிவிட்டது. விளையாட்டுக்கள் விலகி இங்கு விஷமத்தனமான சில காரியங்கள் நடந்துவிட்டன. குமரனை பார்த்ததும் எனக்கு கலக்கமாகி விட்டது. இது நிச்சயம் விளையாட்டு இல்லை என்று புரிந்தது. பாதாள அறை வாசலில் நான் நின்றுகொண்டிருந்த பொழுது வெகு திடீரென்று நான் பின்னாலிருந்து உந்தித் தள்ளப்பட்டேன். அப்படித் தள்ளியது நம் குழுவில இருக்கும் யாரோதான் என்று உடனே எனக்கு புரிந்தது. வெகு உயரமான பகுதியில் இருந்து கீழே விழும் பொழுது என்னென்ன எச்சரிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்று ஏற்கனவே ஆர்மியில் இருந்ததால் எனக்கு தெரியும். நான் தரையில் விழுந்தபொழுது என்னுடைய எலும்புகள் எதுவும் முறியாதபடி பார்த்துக் கொண்டேன். நம் குழுவில் இருக்கும் யாரோதான் என்னைத் தள்ளி இருக்கிறார்கள் என்று தெரிந்த பிறகு பதில் குரல் கொடுத்து நான் உயிருடன் இருப்பதைக் காட்டிக் கொள்ள விரும்பவில்லை.

"அடுத்ததாக சற்று நேரம் கழித்து சிந்தூரியும் அதே பக்கத்தில் விழுந்தபொழுது நான் திடுக்கிட்டேன். என்னைப் போல எந்த முன்னேற்பாடுகளும் செய்து கொள்ளாமல் சிந்தூரி மோசமாக விழுந்தாள். நிறைய அடிபட்டுக் கொண்டாள். இருட்டிலேயே துழாவி துழாவி அந்த தரையில் ஒரு கதவு இருப்பதை நான் கவனித்திருந்தேன். பார்த்தவுடன் புலப்படாத வெகு ரகசியமான அந்த கதவைத் திறந்து நான் வெளியேறினேன். அது அச்சமாளிகையின் ஆரம்ப அறைக்கு கொண்டுபோய் விட்டது. பதுங்கி பதுங்கி நான் நகர்ந்தேன். அந்த அறைக்குள் இருந்து இரண்டு மூன்று குரல்கள் வந்தபொழுது இன்னும்

ஒண்டிக்கொண்டேன். கவனித்துப்பார்த்தபொழுது எனக்கு ஆச்சர்யமும், அதிர்ச்சியும் அங்கே காத்திருந்தன. அந்த அறையில் அச்சமாளிகையின் நான்கைந்து பணியாளர்கள் உட்கார்ந்திருந்தார்கள். அவர்கள் எல்லோருக்கும் மத்தியில் உட்கார்ந்திருந்தது யார் தெரியுமா? கைலாஷ்...!

வழிகாட்டியாக வந்து முதன்முதலாக இறந்தது போல் கிடந்தானே... அந்த கைலாஷ். அவனுடைய உடையில் இன்னமும் இரத்தம் பாக்கி இருந்தது. அவர்கள் பேசியதிலிருந்து கைலாஷ் நாடகமாடியிருக்கிறான் என்று புரிந்தது. நாடகரத்தத்தை ஊற்றிக் கொண்டு ஜான்கென்னடி பயமுறுத்துவது வழக்கம். ஆனால் அப்படியில்லாமல் நிஜமான ரத்தத்தை தன் மீது ஊற்றிக் கொண்டு மூச்சைப் பிடித்து இறந்து விட்டதுபோலவே கைலாஷ் நாடகமாடியிருந்தான். நான் உள்ளே பாய்ந்தேன். அவர்கள் யாரும் என்னை சற்றும் எதிர்பார்த்திராததால் என்னை எதிர்கொள்ளத் தயாராக இல்லை. ராணுவத்து பயிற்சிகள் எனக்கு கை கொடுத்தன. வெகு சீக்கிரத்திலேயே கைலாஷை மடக்கி, அடக்கி அவன் கையிலிருந்த துப்பாக்கியை பிடுங்கி அவன் நெற்றிப் பொட்டில் வைத்தேன்.

"உண்மைகளைக் கூறு" என்று மிரட்டினேன். ...த்தின் உச்சியில் கைலாஷ் உண்மைகளைச் சொன்னான். சில வாரங்களுக்கு முன்னால் அவனுக்கும் அச்சமாளிகையின் முதலாளி ஜான் கென்னடிக்கும் ஏதோ வாக்குவாதம் வந்திருக்கிறது. அது முற்றிப்போய் பெரிய சண்டையாக வலுக்கும்முன் கைலாஷ் மன்னிப்புக் கேட்டுக்கொண்டான். அப்படி செய்யாமல் இருந்திருந்தால் அவனை வேலையிலிருந்தே தூக்கியிருப்பார் ஜான் கென்னடி. அன்றைக்கு நல்ல பிள்ளை போல மன்னிப்பு கேட்டு விட்டாலும் அவர் மீது ஒரு காழ்ப்பை மனதிற்குள் வளர்த்துக் கொண்டான் கைலாஷ். ஜான் கென்னடியின் வளர்ச்சி கண்டு பொறாமை கொண்டிருந்த பழைய எதிரிகளின் ஆதரவும் கிடைத்தது.



ஏற்கனவே இந்த மாளிகையில் நிறைய பணம் புரள்கிறது என்றும், விளையாட்டில் பங்கு கொள்பவர்கள் பெரிய தொகைகளை பரிசாகப் பெறுகிறார்கள் என்றும் அந்த பணியாளர்களுக்குத் தெரியும். இங்கேயே இருந்து இவ்வளவு கஷ்டப்படும் எங்களுக்கு குறைவான சம்பளம். ஒரே இரவு வந்து போகும் போட்டியாளர்களுக்கு இவ்வளவு பெரிய தொகைகளா? என்று ஜான் கென்னடியிடம் சண்டையிட்டிருக்கிறார்கள்.

"உங்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளம் என்பது நீங்கள் செய்யும் வேலைக்காக. வருபவர்களுக்கு கொடுக்கும் பரிசு என்பது அவர்கள் போட்டியில் கலந்து கொள்வதற்காக. இந்த மாளிகையில் வேலைக்கு சேராமல் இருந்திருந்தால் நீங்களும் போட்டியில் கலந்து கொண்டிருக்கலாம். பரிசுகளை வென்றிருக்கலாம்' என்று ஜான் கென்னடி சொன்னதும் அவர்களுக்கு சம்மதமாக இல்லை. காத்திருந்து காத்திருந்து இந்த நாளை அவர்கள் தேர்ந்தெடுத்தார்கள். காரணம் என்றைக்கோ குடும்பத்தோடு தற்கொலை செய்துகொண்ட நான்கு பேர்.

"நான்கு பேரும் இறந்த தினம். இன்றைக்கு அச்ச மாளிகைக்குள் நுழைபவர்கள் யாரும் உயிருடன் திரும்பக்கூடாது. அப்படிச் செய்தால் பேய்கள் அவர்களை அடித்துவிட்டதாக கதை கட்டிவிடலாம். அச்சமாளிகையின் உள்ளே போனவர்கள் உயிரோடு திரும்பவில்லை என்று கேள்விப்பட்டால் இந்த மாளிகையின் பெயர் கெட்டுவிடும். அதற்கப்புறம் இங்கு யாரும் போட்டியில் கலந்து கொள்ள வரப்போவதில்லை. ஜான் கென்னடியின் வெகு காலத்து கனவு சிதைந்து போக வேண்டும்' என்று முடிவு செய்தார்கள்.

"அதற்கும் ஒரு படி மேலே போய் இறந்ததாக நடிக்கும் ஜான்கென்னடியை நிஜமாகவே கொலை செய்வது என்றும் அவர்கள் முடிவு செய்தார்கள். திட்டம் போட்டார்கள். நாம் அச்சமாளிகையில் ஒவ்வொரு பகுதியாக கடந்து கொண்டிருக்கும்பொது முன்கூட்டியே

திட்டமிட்டபடி வேண்டுமென்றே மின்சாரத்தை நிறுத்தினார்கள். எமர்ஜென்சி விளக்குகள் கூட ஒழுங்காக வேலை செய்யாமல் பார்த்துக் கொண்டார்கள்."

"அங்கிள் குறுக்கிடுவதற்கு மன்னிக்கவும்" என்றான் பிரமோத்.

மாயன் நிமிர்ந்து 'என்ன?' என்பதுபோல் பார்த்தார்.

"கைலாஷை சேர்ந்தவர்கள் மொத்தம் எத்தனை பேர்."

"கைலாஷையும் சேர்த்து எட்டுபேர்" என்றார்.

"அவர்கள் வெவ்வேறு கட்டத்தில் குறுக்கிடுவதாக திட்டமிட்டார்கள். இறந்து விட்டான் என நினைத்து நாம் விட்டுவிட்டு வந்தோமே கைலாஷ். நாம் விலகியதும் அவன் எழுந்து விட்டான். நம்மிடமிருந்து விலகி வெள்ளி நாணயத்தை எடுத்து வர குமரன் பேராசை கொண்டு சென்றிருந்த பொழுது அங்கு கைலாஷை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது.

"கைலாஷ் சற்றும் இரக்கமில்லாமல் குமரனை கொன்று விட்டான். அதேபோல இந்த திட்டத்திற்கு ஒத்துக் கொள்ளாத நல்லவனான தங்கமணியையும் கைலாஷ் கொலை செய்து போட்டுவிட்டான். இந்த இருவரைத் தவிர தன்னுடைய அறையில் உட்கார்ந்து அச்சமாளிகை விளையாட்டை டி.வி.கேமராக்கள் வழியாக சந்தோஷமாக பார்த்துக் கொண்டிருந்தாரே ஜான் கென்னடி, அவரையும் கொலை செய்து தூக்கில் தொங்கவிட்டார்கள். அவர் தொங்குவது நாடகமா? உண்மையா? என்று புரியாமல் உங்களைத் தவிக்கவிட்டார்கள். பின்னால் நாகப்பாவும் அந்த குரூரமான மனிதர்களிடம் மாட்டி இறந்துபோனான். அச்சமூட்டுவதற்காக ஒவ்வொரு அறையிலும் வெவ்வேறு இடத்திலிருந்து அவர்களால் பிணங்களை தொங்கவிட முடியும். அந்தக் கருவிகளை அவர்கள் பயன்படுத்திக் கொண்டார்கள். ஜான் கென்னடியின் உடல் கடைசியில் தண்ணீரில் எறியப்பட்டுவிட்டதாக கைலாஷ் சொன்னான்."



கைலாஷின் பணத்திற்கு அடிமையாகி நம் குழுவிலேயே ஒரு கறுப்பு ஆடு புகுந்துவிட்டது."

"யாரைச் சொல்கிறீர்கள்?"

"அகமது! பயத்தின் உச்சியில் அலறிக் கொண்டே இருந்தானே. அந்த அகமது. அவன் உடலில் ஏதோ பூச்சி ஊர்வதாக எல்லாம் சொல்லி நம்மையும் நம்ப வைத்தானே! அந்த அகமது."

"அகமதுவா?"

"ஆமாம். அவனேதான். பாதாள அறையில் பின்னால் இருந்து என்னை உந்தித் தள்ளியதே அகமதுதான். ஒவ்வொரு கட்டத்திலும் மற்றவர்களை பயமுறுத்தியது அவன்தான். கைலாஷையும், அவன் நண்பர்களையும் தாக்கிவிட்டு அவர்களுடைய அடுத்த கட்ட திட்டம் என்ன? என்று நான் கேட்டபொழுது தண்ணீர் பாதை வழியே வந்து சேரும் உங்களை இங்கே இருக்கும் அவனுடைய நணபர்கள் வாள்களால் வீழ்த்தப்போகிறார்கள் என்று சொன்னான். அதே போல இரண்டாவது குரூப்பை சேர்ந்தவர்கள் முதல் தளத்திலிருந்து இறங்குவதற்காக சுருள் படியை பயன்படுத்தும்பொழுது அந்த அறையில் விஷப்புகையை பாய்ச்சி அவர்களை சாகடிக்கவும் திட்டமிட்டிருப்பதாக சொன்னான். கடைசி நொடியில் அந்த அறையிலிருந்து வெளியேறித் தப்பித்து விடும்படி அகமதுவிற்கு சொல்லப்பட்டிருந்தது. அதே போல தப்பித்து வெளியே வந்த அகமது நேரே என்மீது மோதினான். அவனைப்பற்றி உண்மைகள் தெரிந்திருந்ததால் அங்கேயே அவனை அடித்துக் கீழே போட்டேன். அந்த அறைக்கதவை திறந்து உள்ளே நுழைந்து கிட்டத்தட்ட மயக்கமாகி விட்ட மற்றவர்களையும் காப்பாற்றி எடுத்துச் சென்றேன்."

"அங்கிள், இவ்வளவு விஷயங்கள் நடந்திருக்கிறதா?"

"ஆமாம் சாந்தினி. கைலாஷையும், அவன் நண்பர்களையும் கட்டிப்போட்டிருக்கிறேன். சிந்தூரி

எலும்பு முறிந்து சிகிச்சைக்காக எடுத்துச் செல்லப்பட வேண்டிய நிலையில் இருக்கிறான். அவனைப் போலவே என்னிடம் உதை வாங்கிய அசுரதுவும் எலும்பு முறிந்து அசைய முடியாமல் கிடக்கிறான். இந்த அச்சமாளிகையின் விளையாட்டுகளில் ஒன்றாக தண்ணீர் பாதை வழியே வெளியேறி தப்பிப்பவர்களை அழைத்து செல்ல குதிரை வண்டி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதை நான் கவனித்தேன். அந்த உடைகளை அணிந்து கொண்டு நானே இந்த வண்டியில் ஏறி வந்தேன்."

"எங்களை ஏமாற்றுவதற்காகவா?" என்றாள் சாந்தினி.

"இல்லை சாந்தினி, கைலாஷும் அவனுடைய நண்பர்களும் அங்கே என்னால் அடிபட்டு தாக்கப்பட்டது காட்டுப்பகுதியில் ஒளிந்திருக்கும் அவன் நண்பர்களுக்கு தெரியாது என்பதால் இங்கே இந்த குதிரை வண்டியில் வந்தால் என்னை எதிரியாக யாரும் நினைக்கமாட்டார்கள் என்பதால்தான்."

"சரி... ஆனால் நாங்கள் இருக்கும் இடத்திற்கு இருட்டில் நீங்கள் எப்படி மிகச்சரியாக வந்து சேர்ந்தீர்கள் அங்கிள்?"

மாயன் சிரித்தார். "அது நமக்காகவே ஜான் கென்னடி ஏற்படுத்திக் கொடுத்த ஒரு சலுகை. மறந்து விட்டீர்களா? இந்த உடைகளில் சில ட்ரான்ஸ்மீட்டர்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. எங்காவது தொலைந்து போனால் கூட கண்டுபிடிப்பதற்காக என்று சொன்னாரே. அந்த ட்ரான்ஸ்மீட்டர்களின் உதவியை வைத்து நீங்கள் இருக்கும் இடத்தைக் கண்டுபிடிக்கும் கருவியை கைலாஷிடமிருந்து மிரட்டி வாங்கிக் கொண்டு வந்திருந் தேன். ஆனால், இங்கேதான் அந்த பகைவர்கள் ஒளிந் திருப்பார்கள் என்று நான் நினைக்கவில்லை. கைலாஷ், அவனுடைய நண்பர்கள் இருவர் ஆக மூன்று பேரை அச்சமாளிகையிலும் மூன்று பேரை இங்கேயும் அடக்கி விட்டோம். இன்னும் இரண்டு பேர் எங்கேயோ



...க்கிறார்கள். அவர்களையும் சமாளித்து நாம் ...த்தாக வேண்டும்" என்றார் மாயன்.

"அங்கிள் இத்தனை நேரம் இல்லாத பயம் எனக்கு ...ப்பொழுதுதான் வருகிறது."

"ஏன் சாந்தினி... என்ன அச்சம்?"

"அங்கிள் அச்சமாளிகையில் இருந்ததெல்லாம் ...ளையாட்டுத்தான். எப்படியும் உயிருக்கு ஆபத்து ...ல்லை என்று ஒரு நம்பிக்கை இருந்தது. ஆனால் ...ப்போது நம்முடைய உயிருடன் விளையாடுபவர்கள் ...ந்த இருட்டில் எங்கோ ஒளிந்திருக்கிறார்கள் என்று தெரிந்து கொள்ளும்பொழுது உடம்பெல்லாம் ...டுங்குகிறது."

"கவலைப்படாதே. எங்கே மிதித்தால் கண்ணிவெடி உயிரையே பறித்து உடலை சிதறடித்து விடும் என்று தெரியாத போர் முனையில் கூட போய் வெற்றிகரமாக திரும்பி வந்தவன் நான். என்னுடைய உயிரைக் கொடுத் தாவது உங்களுடைய உயிர்களையெல்லாம் காப்பாற்று வேன். என்னை நம்பியிரு. ஏற்கனவே அச்சமாளிகையின் பிரதான அறையிலிருந்து போலீஸிற்கு நான் போன் செய்திருக்கிறேன். எப்படியும் இரண்டு மணி நேரத்தில் அவர்களும் வந்து விடுவார்கள். அதன் பின் எல்லாம் சரியாகி விடும்" மாயன் நம்பிக்கையூட்டும் குரலில் சொன்னார்.

ஆனால் அடுத்த சில மணி நேரங்கள் அவர் கூட எதிர்பார்த்திராத சில ஆபத்துக்களை அவர்கள் சந்திக்க வேண்டியிருக்கும் என்று அவருக்கு அப்போது தெரிந்திருக்கவில்லை.

## 29



இரவு நீண்டது.

"அங்கிள்" இந்துமதியின் குரல் மிருதுவாக கூப்பிட்டது.

"என்னம்மா?"

"நீங்களே

கைலாஸையும், அவன் நண்பர்களையு அச்சமாளிகையிலேயே மடக்கி விட்டதாக சொன்னீர்க இன்னும் மூன்று பேரை இங்கே மடக்கியாயிற்று எதற்காக நாம் காத்திருக்க வேண்டும். உங்களிடமே குதிரை வண்டி இருக்கிறது. அதில் ஏறி நா அச்சமாளிகைக்கு திரும்பி விட்டால் என்ன?"

"என்னுடைய ராணுவ வாழ்க்கையில் யாரும் இப்படியெல்லாம் கேள்விகள் கேட்டு என்னை யோசிக்க வைத்ததில்லை. நீ சொல்கிறபடியே செய்வோம். நான்கு பேரும் அந்த குதிரை வண்டியில் ஏறுங்கள். அப்படி எதிரிகள் நம்மை வழியில் எதிர்கொண்டால் அவர்களை சமாளிப்போம். பிரமோத், அழகப்பன் இருவருக்கும் இரண்டு வாள்களை தரப்போகிறேன். காந்தி பிறந்த மண்ணில் பிறந்தவர்கள் நாம். பொதுவாக அஹிம்சை என்பதையே விரும்புபவர்கள். ஆனால் ஆபத்து என்று வரும்பொழுது அதை எதிர்கொள்ளும் தைரியமும் நமக்கு வேண்டும். அவசியம் என்றால் எந்தக் குற்ற உணர்வும் இல்லாமல் ஆயுதத்தை பயன்படுத்த நமக்குத் துணிச்சல் வேண்டும்."

"யெஸ் அங்கிள்" என்றான் பிரமோத்.

மாயனுடன் வாள் சண்டையிட்டு தோற்றுப்போன மூன்று பேரிடமிருந்து வாள்களை உருவி எடுத்து வந்தார் மாயன். பிரமோத்திடம் ஒன்றும், அழகப்பனிடம் ஒன்றும் கொடுத்துவிட்டு இன்னொரு வாளை இந்துமதியிடம் கொடுத்தார்.

"நீயும் மறத்தமிழ்நாட்டில் பிறந்தவள். அவசியம் என்றால் வாளை பயன்படுத்த தைரியமாக இருக்க வேண்டும். கமான் லெட் அஸ் கோ."

அவர்கள் ஐந்து பேரும் மெல்ல நடந்து குதிரை வண்டி நிறுத்தியிருந்த இடத்திற்கு வந்தார்கள். அவர்களுக்கு அங்கே ஒரு திடுக்கிடலான ஆச்சர்யம் காத்திருந்தது.

"மை காட்" என்றார் மாயன். "எங்கோ ஒளிந்திருக்கிறார்கள் என்று நினைத்தோமே, அந்த



எதிரிகள் நெருங்கி வந்துவிட்டார்கள். வண்டியி இருந்து குதிரையை அவிழ்த்து விட்டிருக்கிறார்க சத்தம் போடாமல் எங்கோ இழுத்து போய்விட்டார்க இப்பொழுது நாம் வண்டியில் திரும்ப முடியா நடந்துதான் போக வேண்டும். அதை விட முக்கிய நம்முடைய எதிரிகள் இங்கேயே பக்கத்தில் எங் இருக்கிறார்கள்."

மாயன் இப்படிச் சொன்னதும் சற்றே ஓய்ந்திரு ரத்த வேகம் எல்லோருக்கும் மீண்டும் எகிறியது.

"குதிரை வெகுதூரம் சென்றிருக்க முடியா இங்கேதான் பக்கத்தில் எங்கேயாவது இருக்க வேண்டு கண்டுபிடிப்போம். அழகப்பன், நீ பெண்களுக் துணையாக இங்கேயே நின்று கொள். நானு பிரமோத்தும் அக்கம் பக்கம் போய்விட்டு வருகிறோம்.

அழகப்பன் மறுத்து எதுவும் சொல்லவில்லை.

மாயன் ராஜ உடை சரக் சரக் என்று சப்திக் வேகமாக நடந்தார். பிரமோத் அந்த கனமான வாளை தூக்கிக் கொண்டு அவர் பின்னே நடந்தான்.

சற்று தூரம் நடந்து பெரிய மரங்களில் இருந் பிரிந்ததும் மாயன் கையை உயர்த்தி பிரமோத்தை நிற்க சொன்னார். காது மடலில் கையை குவித்து வைத் ஏதோ ஒரு ஒலியை உன்னிப்பாக கேட்பதுபோ தெரிந்தது.

சருகுகள் மிதி படும் சத்தம் கேட்டது.

"நான்கு கால்கள். குதிரையாகத்தான் இருக் வேண்டும்" என்றார் மாயன்.

ஆனால் மரத்தின் பின்னாலிருந்து திடீரென்று எதிரில் வெளிப்பட்டது குதிரையில்லை. ஒரு பெரிய கரடி.

மாயனை விட அந்தக் கரடி உயரமாக இருந்தது. ராட்சதன் ஒருவன் எழுந்து வந்தது போல கால்களை இடதும் வலதுமாக வைத்து அது முன்னேறியபோது அடுத்த கணத்தில் மாயன் மீது அது பாய்ந்து தரையோடு

வரை நகக்கி விடும் என்றுதான் தோன்றியது.

மாயன் வாளை உருவிக் கொண்டார்.

கரடி மெலிதாக உறுமியது. இன்னும் ஓரடி எடுத்து வைத்து அவரை நெருங்கியது.

பிரமோத் மிரண்டான். அவன் நின்ற இடத்தில் இருந்து எதுவும் செய்ய இயலாது என்று புரிந்தது. வாளை இறுகப் பற்றினானே தவிர கரடியை நெருங்க முடியாமல் ஸ்தம்பித்து போய் நின்றிருந்தான்.

மாயன் சற்றும் யோசிக்கவில்லை. கரடி அடுத்த அடி எடுத்து வைத்தவுடன் வலியில் சட்டென்று பின்வாங்கியது. மாயன் அவ்வளவு விரைவாக தன்னுடைய வாளை அதன் தொடையில் செலுத்தி இழுத்திருந்தார். ஓரடி பின்வாங்கிய கரடி மீண்டும் அவர் மீது பாயப் பார்த்தது.

மாயன் வாளால் இன்னும் இரண்டு இடங்களில் சீவி கிழித்தார்.

கரடி விநோதமாக அலறியது. பயத்துடன் திரும்பி ஓட ஆரம்பித்தது.

கரடி திரும்பியதும் மாயனும் ஓடிவந்தார்.

"க்விக். இந்த இடத்தை நாம் உடனே காலி செய்து ஆக வேண்டும். இந்தக்காட்டில் மனிதர்களைத் தவிர ஆபத்தான மிருகங்கள் எதுவுமே இருக்காது என்றுதான் சொல்லப்பட்டிருந்தது. இப்பொழுது ஒரு கரடி வந்து நிற்கிறது."

"அங்கிள், அந்த கரடி உண்மையானதா? அல்லது யாராவது வேடம் போட்டுக் கொண்டு வந்திருக்கிறார்களா?"

"எப்படியாக இருந்தாலும் காயப்படுத்தியாயிற்று. நாம் உடனே இந்த இடத்தை விட்டு விலகுவதுதான் புத்திசாலித்தனம்."

அவர்கள் ஐந்துபேரும் ஓட ஆரம்பித்தார்கள்.

காட்டுப் பாதை அடர்ந்திருந்தது. குளிர் காற்று வீசித் தாக்கியது.



அவர்களுடைய டார்ச்சுகளை இயக்கி அந்த வெளிச்சத்தில் புரிபட்ட பாதையில் ஒருவர் பின் ஒருவராக கைகளைக் கோர்த்துக் கொண்டு ஐந்து பேரும் வேகமாக ஓட ஆரம்பித்தார்கள். காட்டுப் பாதை, இருளும், ரகசியமும், மர்மமும், ஒளிந்திருக்கும் மரணமுமாக பின்வாங்கிக் கொண்டே போனது.

இன்னும் சற்று தூரம் ஓடியதும் மூச்சிரைப்பு அதிகமாகி பெண்கள் இருவரும் வேகம் குறைந்தார்கள். தயங்கி தடுமாறி ஒருவழியாக நின்று போனார்கள்.

மாயன் அவர்களை கவனித்து விட்டு அவரும் ஓட்டத்தை நிறுத்தி பின்னால் நடந்து வந்தார்.

"என்னாயிற்று? களைப்பாகி விட்டதா?"

"ஆமாம்... அங்கிள்" சாந்தினியின் குரல் மூச்சுக்காற்றுடன் கலந்து வந்தது. "ஏற்கனவே அச்சமாளிகையில் பயந்து பயந்து தப்பித்து வந்ததில் உடலில் இருந்த சக்தியெல்லாம் காணாமல் போய்விட்டது. மறுபடியும் கரடி வருமா? புலி பாயுமா? என்று காட்டு வழியில் நடுங்கிக் கொண்டு போவது குலை நடுக்கமாக இருக்கிறது. இவ்வளவு பயத்தில் எப்படி வாழ முடியும்?"

மாயன் சிரித்தார். "ஆபத்தில்தான் வாழ்க்கையே அடங்கியிருக்கிறது சாந்தினி. இந்த உலகில் வசிப்பது வேறு. வாழ்வது வேறு. வாழ வேண்டும் என்றால் நிறைய ஆபத்துக்களை சந்திக்க வேண்டும் என்றுதான் விதிமுறைகளை இயற்கை அமைத்திருக்கிறது. மனிதன் தன் புத்திசாலித்தனத்தால் மற்ற எல்லா இனங்களுக்கும் அவனே பேராபத்தாக மாறி விட்டதால் இப்பொழுது பல்கி பெருகி விட்டான். நகரத்து வாழ்க்கையில் தண்ணீர் லாரியோ, அல்லது தண்ணீர் போட்டு பஸ்ஸை ஓட்டும் டிரைவரோதான் ஆபத்து. ஆனால் காட்டு வழியில் இயற்கையின் சூழ்நிலையில் எங்கிருந்து வேண்டுமானாலும், எப்போது வேண்டுமானாலும் எந்த ரூபத்திலும் வேண்டுமானாலும் தலை ஆபத்து எந்த ரூபத்திலும் வேண்டுமானாலும் தலை காட்டும். ஆபத்து இல்லை என்றால் அங்கு சுவாரஸ்யம்

இல்லை, சுவாரஸ்யம் இல்லையென்றால் அங்கு வாழ்க்கை இல்லை. எனக்கு ஜான் கென்னடியைப்போல இந்த ஆபத்தான விளையாட்டுகளில்தான் ஆர்வம் அதிகம். என்னை தாக்க வந்ததே ஒரு காடி. அந்தக் கணத்தில் நான் அதைத் தாக்குவேனா... அது என்னைத் தாக்குமா? என்று புரியாமல் இரண்டு பேருமே ஆபத்தில் இருந்தோமே.... அந்தக் கணத்தில்தான் அது முழுமையான வாழ்க்கையை வாழ்ந்தது."

"நீங்கள் சொல்லும் தத்துவம் எனக்கு புரியவில்லை அங்கிள்" என்றாள் இந்துமதி.

"இப்போது தத்துவம் பேசிக்கொண்டிருக்க நேரம் இல்லை. அச்சமாளிகை அடைவதைப் பார்ப்போம்."

அவர்கள் மேலும் சற்று தூரம் ஓடிய பின்- "அங்கிள்" என்று அவர் கையை பிடித்து திடீரென்று இழுத்தாள் இந்துமதி. நடுங்கிக் கொண்டே முன்னே சுட்டிக் காட்டினாள்.

புதர்களின் ஊடே சற்று மேடிட்டு இருந்த மண் பகுதியில் சரசரவென்று ஒரு நீளமான நாகம் ஊர்ந்து சென்றது.

"அது நம்மைக் கண்டு பயந்து ஓடுகிறது" என்றார் மாயன். "அதன் பாதையில் நாம் குறுக்கிடாதவரை அதனால் நமக்கு எந்த ஆபத்தும் இல்லை."

அவர்கள் அந்த பாம்பு சென்ற பாதையைத் தவிர்த்துவிட்டு சற்று வட்டமிட்டு சுற்றிக் கொண்டு மேலும் பயணத்தைத் தொடர்ந்தார்கள்.

"பல ஜென்மங்களில் அனுபவிக்க வேண்டிய பயத்தையெல்லாம் இந்த ஒரு இரவிலேயே நான் அனுபவித்து விட்டேன்" என்றாள் சாந்தினி.

திடீரென்று அவளுக்கு பின்னால் சரசரவென்று ஒரு சத்தம். என்ன என்று திரும்பிப் பார்த்து உஷாராவதற்கு முன் பின் புறமிருந்து சாந்தினியின் மீது வெகுவேகமாக ஒரு உருவம் பாய்ந்தது.

சாந்தினியின் மீது மோதிய வேகத்தில் இருவருமாக



சேர்ந்து தரையில் விழுந்து உருண்டனர்.

சாந்தினி பயத்தின் உச்சத்தில் அலறக்கூட முடியாமல் விறைத்து போயிருக்க... இந்துமதி அலறினாள்.

அழகப்பன், பிரமோத், மாயன் மூவரும் தங்களுடைய வாட்களை சர்ரக் என்று தூக்க-

"ஹோல்டான்" என்ற சத்தம் தரையிலிருந்து கேட்டது.

சாந்தினியின் மீது பாய்ந்திருந்தவன் அவளை இறுகப் பற்றி அப்படியே தரையோடு தேய்த்து நிமிர்த்தி எழுப்பினான். அவன் கையிலிருந்த ஒரு சிறு துப்பாக்கி சாந்தினியின் வலது காதில் அழுத்தப்பட்டிருந்தது.

"உங்களுடைய வாள்களைத் தூக்கியெறியுங்கள். இல்லையென்றால் இந்த இரவில் இந்த இருட்டில் இவளுடைய மூளை இந்த பிரதேசம் முழுவதும் சிதறடிக்கப்படும்."

மாயன் மெல்ல தன்னுடைய வாளை தரைக்கு நழுவ விட்டார்.

"ஏய்....!" என்று ஆத்திரத்துடன் பிரமோத் உறுமியபோது, மாயன் கைதூக்கி அவனை நிறுத்தினார்.

"பிரமோத், வாளைக் கீழே போடு. அழகப்பன் நீயும்."

வேண்டா வெறுப்பாக அவர்கள் வாள்களை கீழே போட்டார்கள். சாந்தினியை கவ்வ்ந்து பிடித்திருந்தவன் அவர்களை பார்த்து திரும்பினான்.

"போலீசிற்கு போன் செய்து தகவல்கள் கொடுத்திருக்கிறீர்களாமே. மீண்டும் போலீசிற்கு ஃபோன் செய்ய வேண்டும். நீங்கள் கொடுத்த தகவல் தவறு என்றும், இங்கு நடந்ததெல்லாம் விளையாட்டுத்தான் என்றும் சொல்லி முதலில் போலீசை இங்கே வர விடாமல் நிறுத்த வேண்டும்."

"அப்புறம்?" என்றார் மாயன்.

"அப்புறம் என்ன செய்வது என்பதை அப்புறம்

பேசுவோம். யாராவது விபரீதமாக விளையாட நினைத்தால் இந்தப் பெண்ணின் உயிர் நிச்சயம் உங்களுக்குக் கிடைக்காது."

சாந்தினியை பிடித்து இழுத்தபடி அவன் ஒவ்வொரு அடியாக பின்னே நகர்ந்தான்.

சாந்தினி அச்சத்தின் உச்சத்தில் இதயம் வெகு வேகமாக துடித்து அந்தப்பக்கம் இருந்த தசைநார்கள் எல்லாமே இழுத்துக் கொண்டாற் போல் உணர்ந்தாள்.

"கடவுளே... அவளை விட்டு விடு" என்று இந்துமதி அழ ஆரம்பித்தாள்.

"நோ... சென்டிமெண்ட் ப்ளீஸ்" என்றான் சாந்தினியை இறுகப்பற்றியிருந்தவன்.

அவனுக்கு அதிகபட்சம் 27வயது இருக்கலாம். அச்சமாளிகையில் பணியாளர்களுக்கு கொடுக்கப்படும் அதே போன்ற சீருடை அணிந்திருந்தான். அவன் கண்களில் வெறி மிகுந்திருந்தது.

"உன் பெயர் என்ன?" என்றார் மாயன்.

"ஏன்? நன்றி அறிவிப்புக் கூட்டம் போடப்போகிறீர்களா?" அவனுடைய குரல் எகத்தாளமாக ஒலித்தது.

"தைரியசாலிகள் தங்கள் பெயர்களை மறைத்து ஒளிந்து கொள்வதில்லை."

"அவ்வளவுதானே! என் பெயர் வாசுதேவ்."

"வாசு... இந்தப் பெண்ணை கொலை செய்வதால் மட்டும் உங்களுடைய குற்றங்களிலிருந்து நீங்கள் மீண்டு விட முடியும் என்று நினைக்கிறீர்களா?"

"அதற்காகத்தான் சொன்னேன். முதலில் போலீசிற்கு ஃபோன் செய்யுங்கள் என்று."

"இங்கே இருந்தா?

நாம் அச்சமாளிக்கைக்குப் போய் சேர்ந்தவுடன்."

"அதற்குள் போலீஸ் கிளம்பிவிட்டால்? நீ

வந்திருக்கிறேன். அதில் பேசுகிறேன்."

"சரி..." என்றான் வாசுதேவ்.

மாயன் அந்த அரசகாலத்து உடைக்குள் கையை செலுத்தி வெளியே எடுத்தார். வெளியே எடுத்தது செல்ஃபோன் அல்ல. உள்ளங்கைக்குள் அடங்கிப் போகிற ஒரு சிறு ரிவால்வர். ரிவால்வர் எடுக்கப்பட்ட வேகத்திலேயே இயக்கப்பட்டது. 'ட்புக்' என்ற மிக மெல்லிய சத்தத்துடன் தோட்டா விடுபட்டது.

வாசுதேவ் துள்ளி பின்னால் நகர்ந்தான். தோட்டா அவனுடைய முழங்கையில் நுழைந்திருந்தது. சாந்தினியின் முகத்தில் பதித்திருந்த ரிவால்வர் நழுவி கீழே விழுந்தது.

பிரமோத் ஒரே எட்டில் முன்னால் பாய்ந்து அவளை அவனிடமிருந்து பறித்து இழுத்து தன் முதுகுக்குப் பின்னால் நிறுத்திக் கொண்டான்.

வாசுதேவ் முழங்கை எலும்பு துளைக்கப்பட்டதால் வலியின் உச்சத்தில் அலறி கீழே விழுந்தான்.

மாயனின் கால் கீழே விழுந்த அந்த ரிவால்வரை மிதித்தது. அழுத்தியது.

"வாசு... எப்போது அச்சமாளிகைக்குள் நான் போய் எல்லா ஏற்பாடுகளும் செய்தேனோ... அப்போதே என்னுடைய செல்ஃபோன், என்னுடைய ரிவால்வர் எல்லாவற்றையும் எடுத்து வந்துவிட்டேன். என்னிடம் வலுவான டார்ச் கூட இருக்கிறது. எங்கே உன்னுடைய இன்னொரு நண்பன்? அவனாக வந்து சரணடையப்போகிறானா? அல்லது அடுத்த போராட்டத்தில் உயிரிழக்கப்போகிறானா?"

வாசுதேவ் பதில் சொல்ல முடியாமல் வலியில் தவித்துப் புரண்டான்.

"பிரமோத், அவன் மீது எந்த இரக்கமும் காட்டாதே. இரண்டு கால்களையும் கட்டு. அவனை அப்படியே இழுத்து வா. என்ன...? வலி அதிகமானால் அலறுவான்,

பேசவிடாது. பயப்படாதே!"

பிரமோத் ஆத்திரத்துடன் வாசுதேவன் மீது பாய்ந்து மாயன் சொன்னபடி செய்ய ஆரம்பித்தான்.

மாயன் கையை உயர்த்தி சைகை செய்ததும் எல்லோரும் டார்ச் விளக்கை அணைத்து விட்டு அமைதியானார்கள்.

வெகு தூரத்திலிருந்து அந்த சத்தம் கேட்டது. கொஞ்சம் கொஞ்சமாக நெருங்கி வர ஆரம்பித்தது. குதிரையின் குளம்பொலி சத்தம்.

மாயன் தன் குரலை மிகவும் தாழ்த்திக் கொண்டார். "குதிரை வருகிறது. ஆனால் தனியே. வண்டியை இழுத்து வரும் சத்தம் இல்லை. நாம் தேடிக் கொண்டு இருக்கும் அந்த இன்னும் ஒரே ஒரு எதிரி இருக்கிறானே, அவன் குதிரையில் வரக்கூடும். அழகப்பன், நீ வா!"

அழகப்பனும், மாயனும் சட்டென்று தங்கள் வாள்களை எடுத்துக் கொண்டு அந்தப்பகுதியிலிருந்து நகர்ந்தார்கள்.




மாயன் ஒருபுறமும், அழகப்பன் மறு புறமும் வெவ்வேறு மரங்களுக்குப் பின்னால் ஒளிந்திருந்தார்கள். இருவருடைய கைகளிலும் தயாரான நிலையில் அரச வாள்கள்.

குதிரையின் குளம்பொலி சத்தம் கூடிக் கொண்டே வந்தது.

மாயன் அண்ணார்ந்து பார்த்தார். வானத்தில் ஒரேஒரு மேகம் தனியே எங்கே செல்வது என்று புரியாமல் இங்கும் அங்குமாக அலைந்து கொண்டிருந்தது. நட்சத்திரங்கள் பொறுமையுடன் சூரியன் வந்ததும் தூங்கப்போவதற்காக காத்திருந்தன.



குதிரையின் சத்தம் இன்னும் சமீபித்தது. வெகு சரசரென்று குதிரை அவர்கள் இருந்த பகுதியிலிருந்து சற்று தள்ளி வேகமாக கடந்து செல்வது கேட்டது.

மாயன் திரும்பிப் பார்த்தார். அவர் எதிர்பார்த்தபடியே குதிரையின் மீது அரசாங்கத்தின் சீருடை அணிந்த ஒருவன் வேகமாக குதிரையை செலுத்திக் கொண்டிருந்தான். குதிரையைப் பார்த்ததுமே அது வண்டியில் பூட்டி அவர் அழைத்து வந்த குதிரைதான் என்று அவருக்குப் புரிந்தது.

குதிரை வேகம் குறைந்து ஒரு வழியாக நிறுத்தத்திற்கு வந்தது. குதிரையில் அமர்ந்திருந்தவன் தன்னைச் சுற்றிலும் பார்வையை ஓட்டினான். யாரையோ தேடுவது போல் இருந்தது அவன் செய்கை.

"வாசு..." என்று அவன் மெல்ல குரல் கொடுத்த பொழுது 'ஊ...க்' என்று மாயன் தான் அமர்ந்திருந்த இடத்திலிருந்து குரல் கொடுத்தார்.

குதிரை மீது அமர்ந்திருந்தவன் விரைத்தான். குதிரையை மெல்ல திருப்பி அந்தப் பக்கம் நடத்தி வந்தான்.

மாயன் புதரில் ஒளிந்திருந்தார்.

"வாசு..." என்று மீண்டும் அவனிடமிருந்து குரல் வந்தபொழுது வெகு திடீரென்று எங்கிருந்தோ பாய்ந்து ஒரு உருட்டையான கல் அவனுடைய பின் மண்டையை வந்து தாக்கியது.

குதிரையில் அமர்ந்திருந்தவன் திடுக்கிட்டான். ஆனால் உடனே சுதாரித்து குதிரையின் கடிவாளத்தைப் பிடித்து இழுத்தான். குதிரை சீறிப் புறப்பட்டது.

அவர்களிடம் இருந்து வெகு தூரம் விலகி போய்விடக்கூடிய அபாயம் இருந்ததும், மாயன் தன் மறைவிடத்தில் இருந்து எழுந்தார். அவனுடைய பாதையில் குறுக்கிட்டு வாளை வேகமாக வீசினார்.

குதிரையின் கடிவாளம் அந்த வாள் வீசில் அறுந்து போனது. ஓட்டுபவனின் கட்டுப்பாடான உத்தரவுகள்

புரியாமல் குதிரை மிரண்டு துள்ளி ஓட ஆரம்பித்தது. குதிரையின் மீது அமர்ந்திருந்தவன் கடிவாளம் அற்று போனதும் வேறு பிடிப்பு இல்லாமல் குனிந்து குதிரையின் கழுத்தைக் கட்டிக் கொள்ள முனைந்தான்.

மாயன் தன் ரிவால்வரை எடுத்தார். உயர்த்தினார். அந்த இருட்டிலும் குதிரையின் வேகத்தைக் கணித்து ரிவால்வரை பிரயோகித்தார்.

தோட்டா விடுபட்ட சத்தம் கேட்ட அடுத்த நொடியே குதிரையின் மீதிருந்தவன் துள்ளி கீழே விழுந்தான்.

"ஆடு சதையில் தோட்டா பாய்ந்திருக்கிறது. அவனால் அசைய முடியாது. குதிரையிலிருந்து விழுந்த வேகத்தில் இடுப்பு எலும்பு முறிந்திருந்தாலும் முறிந்திருக்கும்" என்றார் மாயன். "வா... அவனையும் இழுத்து வருவோம்."

அவர்கள் டார்ச்சுகளை இயக்கிக் கொண்டு முன்னேறினர்.

"நான்தான்... நான்தான்..." என்று பின்னால் ருந்து குரல் கேட்டது. திரும்பி பார்த்தால் இந்துமதி.

"அங்கிள்... அவன் மீது கல் எறிந்தது நான்தான். வும் தவறாகிவிடவில்லையே."

மாயன் சிரித்தார். "நீ அவசரப்பட்டுவிட்டாய். ஆனாலும் எதுவும் கை மீறிவிடவில்லை. பெண்கள் எல்லோரும் இந்த ராத்திரியில் தைரியசாலிகளாக மாறிக் கொண்டு வருகிறார்களப்பா" என்று சிரித்துக் கொண்டே சொன்னபடி அழகப்பனை முன்னே நடக்க விட்டு பின் தொடர்ந்தார்.

## 31



காலைச் சூரியன் கிழக்கிலிருந்து தன்னுடைய வட்ட முகத்தை உயர்த்தி அந்த பிரதேசத்தை வெளிச்சத்தில் குளிப்பாட்டியது.



தூரத்தில் இருந்து பார்த்தால் இந்திரனின் சபையையே அப்படியே பெயர்த்து எடுத்து வந்து இங்கு பொருத்தியது போல் அவ்வளவு ரம்மியமாக அந்த பிரதேசம் காட்சியளித்தது.

பழைய அரண்மனைகள் போல் வடிவமைக்கப்பட்டிருந்த அச்சமாளிகை இரவில் வைத்திருந்த அத்தனை மர்மங்களையும் இழந்து வெகு ரம்மியமாக சூரிய வெளிச்சத்தில் நனைந்து கொண்டிருந்தது.

பாம்புகளும், பயமுறுத்தல்களுமாக கழிக்கப்பட்ட இரவு இந்த கானகத்தில்தானா என்று ஆச்சர்யப்படும்படி காட்டுப்பகுதியாக இரவு தோன்றியது வனப்பு மிக்க தோட்டப்பகுதியாக இப்போது தோன்றியது.

அச்சமாளிகையில் பெரிய வரவேற்பு ஹாலில் அவர்கள் எல்லோரும் அமர்ந்திருந்தார்கள்.

இதுவரை அந்தப் பகுதிக்கு வந்தே இராத போலீஸ் வேன்களும், ஜீப்களும் அச்சமாளிகையின் வெளியே நின்றிருந்தன. சீருடை அணிந்த காவல் துறையினர் மாளிகையின் உள்ளே பிரவேசித்திருந்தனர்.

இரவில் இருந்து நடந்தது அத்தனையையும் விளக்கமாக சொல்லி முடித்திருந்தார் மாயன்.

அச்சமாளிகையின் வேட்டை நாய்களைப் போலவே, விளையாட்டு உறுப்பினர்களை பயமுறுத்துவதற்காக மட்டுமே பயன்படுத்தப்பட்டு வந்த கரடியை அதன் சங்கிலியிலிருந்து அவிழ்த்து விட்டதும் கைலாஷின் ஐடியாதான் என்று தெரிந்த போது, அநாவசியமாகக் காயப்படுத்தப்பட்ட அந்த மிருகத்திற்காக மாயன் மனதில் ஒரு சுமையை உணர்ந்தார்.

காயப்பட்டிருந்த அகமது மற்றும் சிந்தூரி இருவரையும் அவர்களுடைய வாக்குமூலங்களை

வாங்கிக் கொண்டு ஆம்புலன்சில் ஏற்றி சிகிச்சைக்கு அனுப்பி வைத்தாயிற்று.

தண்ணீரிலிருந்து வெளியே எடுக்கப்பட்ட ஜான்கென்னடி, உத்தரத்திலிருந்து கீழே இறக்கப்பட்டு கயிறு அவிழ்க்கப்பட்ட நாகப்பா, இருட்டு அறையில் இருந்து எடுத்து வரப்பட்டிருந்த குமரன், மற்றும் தங்கமணி என்று அங்கே வெள்ளைத் துணி போர்த்தப்பட்டு, முந்தின நாள் வரை வாழ்ந்தவர்கள் சரித்திரமாகி இருந்தார்கள்.

கைலாஷ் மற்றும் அவனுடைய கூட்டாளிகள் காயப்பட்டு, அடிபட்டு, கைகள் கட்டப்பட்டு தரையில் ந்திருந்தார்கள்.

"இந்த மாளிகையில் விபரீதமான ளையாட்டுக்கள் நடக்கின்றன என்றாலும் எல்லாவற்றுக்கும் முன் அனுமதி பெறப்பட்டிருந்ததால் இதுவரை நாங்கள் குறுக்கிட வேண்டிய அவசியமே இல்லாமல் இருந்தது. ஆனால் சின்ன காரணத்திற்காக பெரிய அளவு இந்த மாளிகையின் அதிபர் ஜான்கென்னடி பழிவாங்கப்பட்டிருக்கிறார். அவரோடு சேர்ந்து அப்பாவிகளான விளையாட்டு உறுப்பினர்களும் பழிவாங்கப்பட்டிருக்கிறார்கள். இதற்காக கைலாஷும் அவனுடைய நண்பர்களும் பதில் சொல்லித்தான் ஆக வேண்டும்" போலீஸ் உயர் அதிகாரி உறுதியான குரலில் சொன்னார்.

அங்கே கூடியிருந்த ஒவ்வொருவருடைய கைப்படவும் வாக்குமூலங்களை எழுதி வாங்கிக் கொண்டிருந்தார்.

சாந்தினி எழுதி நீட்டிய வாக்குமூலத்தைப் படித்ததும் சரக் என்று நிமிர்ந்து பார்த்தார்.

"சாந்தினி நீங்கள்... நீங்கள்...?"

"ஆமாம்... நான் பாஞ்சாலிநாதனின் மகள்."

"உங்களை பிரமோத் என்பவர் கடத்திப் போனதாக உங்கள் அப்பாவிடம் இருந்து ஏற்கனவே ஒரு புகார் இருக்கிறது. இதுதான் பிரமோத்தா? நான் இவரை கைது செய்ய வேண்டியிருக்கும்."

"வெயிட்" என்றாள் சாந்தினி. "பதினெட்டு வயது நிரம்பிய பிறகு நான் ஒரு மேஜர். நான் பள்ளிக் கூடம் போய் வந்து கொண்டிருக்கும் சின்ன பாப்பா இல்லை, என்னைக் கடத்திப்போவதற்கு. என் மனசார விரும்பி முழு ஒப்புதலுடன் நானாகத்தான் பிரமோத்துடன் புறப்பட்டு வந்திருக்கிறேன். கைது செய்யவேண்டும் என்றால் பிரமோத்தை கடத்தி வந்ததற்காக என்னை கைது செய்யுங்கள். உச்சபட்ச தண்டனையாக தூக்கு மேடையில் வேண்டுமானாலும் ஏற்றுங்கள்."

போலீஸ் அதிகாரி என்ன சொல்வது என்று புரியாமல் திகைத்தார்.

"ஆஃபீஸர், சாந்தினி சொல்வது நியாமான வாதம்தான். ஆபத்து நிறைந்த இந்த உலகத்தில் யாருக்கு எந்தக் கணம் முடிவு வரும் என்று ஒரு மர்மமான வாழ்க்கை. இதில் இருக்கும் காலத்தில் நமக்கு விருப்பானவர்களுடன் சந்தோஷமாக இருப்பது என்ன தவறு? பிரமோத் மோசமான பையன் அல்ல. நல்ல இளைஞன். உறுதியானவன். எத்தனையோ ஆபத்தான கட்டங்களில் கூட சுயநலம் இல்லாமல் சாந்தினிக்காக தன் உயிரை விட துணிந்தவன். அவனை விட ஒரு சிறந்த ஜோடி அவளுக்கு கிடைக்கப்போவதில்லை. இதை பாஞ்சாலி நாதனிடம் நீங்கள் சொன்னாலும் சரி, நான் சொல்வது என்றாலும் சரி" என்றார் மாயன்.

"வெல். இது சாந்தினியும் பெற்றவரும் தீர்த்துக் கொள்ள வேண்டிய பிரச்சினை. போலீஸ் இதில் குறுக்கிட முடியாது" என்றார் அதிகாரி, மெலிதாக புன்னகைத்துக் கொண்டு.

"ஆனால் ஒன்று... உங்கள் திருமணத்திற்கு அழைப்பு அனுப்பும் போது என்னை மறந்து

விடாதீர்கள்!"

"ஆபீஸர்!" என்று கூப்பிட்டாள் இந்துமதி. "உங்கள் அட்ரஸைக் கொடுத்து விட்டுப் போங்கள்... உங்களுக்கு இன்னொரு அழைப்பும் வரும்..." -அவள் கன்ன மேடுகள் சிவந்து போனதை மாயன் ரசித்தார்.

"யெஸ், ஆபீஸர்..." என்றான் அழகப்பன், கண்கள் ஒளிர்ந்திட. "நானும், இந்துமதியும் எங்கள் தனித்தனி அடையாளங்களை உதறப் போகிறோம். இனி நான் மிஸ்டர் இந்துமதி... அவள் மிஸஸ் அழகப்பன்!"

எல்லோருடைய முகத்திலும் புன்னகைகள் ...ந்தன.

"எப்படியிருந்தாலும் கல்யாண ரிசப்ஷனை இரண்டு ஜோடிகளும் எங்கே கொண்டாட வேண்டும் என்று நான் தீர்மானித்து விட்டேன் என்றார் மாயன்.

"எங்கே?"

"இந்த அச்ச மாளிகையில்!"

அத்தனை பேரிடமிருந்தும் ஒரு சேர 'ஓ' என்ற சத்தம் விடுபட்டது.

மேலோட்டமாக அவர்கள் புன்னகைத்துப் பேசிய போதும், முந்தைய இரவு அச்சமாளிகை பலி வாங்கி விட்ட குமரன், நாகப்பா போன்ற நண்பர்களைப் பற்றிய துக்கமான நினைவுகள் நெஞ்சின் அடிவாரத்தில் வண்டல் மண்ணாக கனத்தன.

**முற்றும்**

சிந்திக்க வேளையில் சிந்திக்கவே
இல்லை சிந்தி விட்டேன்

என்றும் அன்புடன்
... பாலா.